வெற்றியின் முகவரி
SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

TNPSC MAINS

# TNPSC GROUP - II ASPIRANTS

## September -2022 CURRENT ISSUES

SOCIO ECONOMIC ISSUES | TAMILNADU ADMINISTRATION | SCIENCE & TECHNOLOGY | STATE CURRENT ISSUES | NATIONAL CURRENT ISSUES

சுரேஷ் பாடசாலை


தூத்துக்குடி
162-A, எட்டையபுரம் ரோடு
0461 - 4000970
99445 11344

திருநெல்வேலி
8A/1, இலந்தைகுளம் ரோடு, பாளையங்கோட்டை
0462-2560123
98942 41422

இராமநாதபுரம்
82, புளிகாரத்தெரு, கண்ணன் கோவில் அருகில்
75503 52916
75503 52917

மதுரை
மாஸ்டர் மஹால் பின்புறம் முடக்குச்சாலை, காளவாசல்
0452 - 2383777
98431 10566

விரைவில் சென்னை

# செப்டம்பர் மாத நடப்பு நிகழ்வுகள்

## பொருளடக்கம்

### 01. தேசிய நிகழ்வுகள்

சதுப்பு நிலங்களைக் காப்போம் ........ 06
முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் ........ 07
வளர்ந்த நாடாக மாற வேண்டும் ........ 10
இலங்கையை மீட்டெடுக்க ரூ.23,000 கோடி ........ 12
2029-ம் ஆண்டுக்குள் ஜெர்மனி, ஜப்பானை வீழ்த்தி 3-வது நாடாக இந்தியா மாறும் ........ 12
ஒன்றிய அரசு உடைத்தால் மண் சட்டி ; மாநிலங்கள் உடைத்தால் பொன் சட்டி ........ 12
அபிஜித்சென் ........ 13
ஆர்டிமிஸ் - 1 ........ 13
அனைவருக்கும் கல்வி: முன்மொழிந்த கொள்கை ........ 14
யசஸ்வி தேர்வு ........ 15
கல்வியை மாற்றியமைப்பதற்கான கொள்கை ........ 15
அடிப்படை உரிமையான கல்வி ........ 15
அரசுப்பள்ளிகள் மீது அக்கறை தேவை ........ 16
மும்பை தொடர் குண்டுவெடிப்பு ........ 17
ஒட்டுக்கேட்பும் எல்லையும் ........ 17
இணையவழி மோசடிகளைத் தடுக்க.... செய்யக் கூடாதவையும் செய்ய வேண்டியவையும் ........ 18
மக்கள்தொகை கட்டுப்படுத்த கோரி பொதுநல மனு ........ 19
விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் ........ 20
தாமிரபரணி - நம்பியாறு - கருமேனியாறு ........ 20
5 ஜி தொழில்நுட்பம் ........ 21
உய்கர் இன அழிப்பு ........ 23
புதிய தலைவர் கல்யாண் ........ 24
5வது இடத்துக்கு முன்னேறியது இந்தியா ........ 24
உச்சநீதிமன்ற சர்க்யூட் பெஞ்ச் ........ 24
நவீன இந்தியாவைக் கட்டிய பொறியாளர் ........ 24
மியான்மர் ராணுவ தாக்குதல் ........ 25
திட, திரவக் கழிவு நிர்வாகம் ........ 25
நாட்டின் முதல் இரவு வான் சரணாலயம் லடாக் ........ 25
இ-அடங்கல் முறை ........ 26
தரிசு நிலத்தை சரிசெய்ய ஜி-20 நாடுகள் ஒப்புதல் ........ 26
பெட்ரோனெட் ........ 27
ஜேம்ஸ் வெப் ........ 27
சட்டப்பணிகள் ஆணையத்தின் புதிய தலைவர் நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் ........ 28
ஜன்தன் யோஜனா ........ 28
மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் ஜிஎஸ்எல்வி ராக்கெட்டை மாற்ற முடிவு ........ 29
கிழக்கு லடாக் எல்லையில் படை விலக்கல் ........ 29
பிரிட்டனின் புதிய பிரதமராக லிஸ் ட்ரஸ் ........ 30
வளர்ச்சிக்கு வித்திட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் ........ 30
ஹைட்ரோ கார்பன் ஓஎன்ஜிசி ........ 31
2040 - கரியமில சமநிலை : பிபிசிஎல் இலக்கு ........ 32
இந்தியா - வங்கதேசம் இடையே 7 ஒப்பந்தம் ........ 32

SURESH'

டெல்லியில் ராஜபாதை பெயர் மாற்றம் ............ 33
பருவகால காய்ச்சல் ............ 33
கரோனா சொட்டு மருந்து ............ 35
மக்களின் தலைவர் ............ 35
போரிஸ் ஜான்சன் ............ 36
உக்ரைனில் ரஷ்ய ராணுவம் ............ 37
பருவகால இன்ஃப்ளுயன்ஸா தொற்று ............ 37
இக்கட்டில் இந்திய ஏற்றுமதி ............ 38
இஸ்லாமியப் பெண்களுக்கு நீதி ? ............ 38
பி.எம்.ஸ்ரீ திட்டம் ............ 39
எலிசபெத் மகாராணி ............ 39
குழந்தைத் திருமணங்களைத் தடுக்க சுய உதவிக் குழு ............ 41
பிரிட்டன் அரசர் முடிசூடும் முறை ............ 42
ஒரே நாடு ஒரே உரம் ............ 42
புதிய நாடாளுமன்ற வளாகம் ............ 43
கொர்பசேவ் ............ 43
பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான ஒதுக்கீடு ............ 43
இந்தியாவின் நவீன கவி ............ 44
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் ............ 44
சித்ரா ராமகிருஷ்ணா ............ 45
செண்பகராமன் ............ 45
புற்றுநோய்க்கு எதிரான முதல் தடுப்பூசி ............ 46
குழந்தைகளைக் காப்போம் ............ 47
அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் இகா ஸ்வியாடெக் சாம்பியன் ............ 47
காஷ்மீரின் குர்ஜார் முஸ்லிம் நியமன எம்.பி.யாக அறிவிப்பு ............ 47
2047ல் வளர்ந்த நாடாக மாறுமா இந்தியா? ............ 48
தேவை மொழிப் பல்கலைக்கழகங்களுக்கான சமநீதி ............ 49
ஷாங்காய் மாநாடு ............ 50
வந்தே பாரத் ரயில் ............ 51
லம்பி ஸ்கின் ............ 51
அமெரிக்க ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றார் அல்கராஸ் ............ 51
கிளவுட் கம்ப்யூட்டிங் ............ 51
உயிர்காக்கும் உறுப்பு தானம் ............ 53
ககன்யான் திட்டம் ............ 54
அரசியல் சாசன அமர்வு வழக்கு நேரலை ஒளிபரப்பு ............ 55
குழந்தை பிறப்பு விகிதம் 10 ஆண்டுகளில் 20% சரிவு ............ 55
பெங்களூருவில் ராக்கெட் இன்ஜின் உற்பத்தி மையம் ............ 56
ஆஷா பரேக்குக்கு தாதாசாகேப் பால்கே விருது ............ 56
தேர்தலில் போட்டியிடுவது அடிப்படை உரிமை இல்லை ............ 56
ஞானவாபி மசூதி விவகாரம் ............ 56
நிக்சய் மித்ரா ............ 57
ஜி 20 தலைமை ............ 57
அனைத்துச் சிறார்களுக்கும் தேவை ஊட்டச்சத்து ............ 57
போலிப் பல்கலைக்கழகங்கள் ............ 58
குஜராத்தில் செமிகண்டக்டர் தொழிற்சாலை ............ 58
அத்தியாவசிய மருந்துகள் தேசியப்பட்டியல் ............ 59
சிற்பி திட்டம் ............ 59
பழங்குடியினர் பட்டியலில் நரிக்குறவர், குருவிக்காரர் ............ 60

SURESH'

திரவிடியன் ஸ்டாக்கும் திராவிட மாடலும் ........ 60
பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினர் ........ 60
லக்கிம்பூர் ........ 61
மேக் இன் இந்தியா ........ 61
கட்டாய மதமாற்ற தடைச்சட்ட மசோதா ........ 61
எஸ்சிஓ தலைமைப் பொறுப்பை ஏற்றது இந்தியா ........ 61
10 ஆண்டுகளில் இந்தியா ........ 62
10 ஆண்டுகளில் சுற்றுச்சூழல் ........ 64
10 ஆண்டுகளில் மருத்துவம் ........ 66
குட்பை பெடரா ........ 68
அரசுப் பணியாளர்களின் சொத்து விவரங்கள் ........ 68
கரோனாவை வென்ற இந்தியா ........ 68
ஆறுதலுக்கு சில மாறுதல்கள் ........ 69
தேசிய சரக்கு கையாளுகை கொள்கை ........ 70
கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு ........ 70
இந்தியாவில் மீண்டும் சிவிங்கிப் புலிகள் ........ 71
ஏற்றுமதி – இறக்குமதியை ரூபாயிலேயே மேற்கொள்ளலாம் ........ 73
மாநில பல்கலைக் கழகங்களின் தன்னாட்சி ........ 73
நிலவு வெளிச்சம் ........ 74
தமிழுக்குத் தாய்மொழி எது? ........ 74
நேரடி வரி வசூல் ........ 75
தலைமை வழக்கறிஞர்களுக்கும் வயது வரம்பு ........ 75
ஹைட்ரஜன் ரயில் ........ 75
என் தோழி திட்டம் ........ 75
அமெரிக்க–தலிபான் பரஸ்பரம் கைதிகள் விடுவிப்பு ........ 76
பாஜகவில் இணைந்தார் அமரீந்தர் சிங் ........ 76
உலகத் தூய்மை எரிசக்தி செயலமைப்பு ........ 76
லோக்பால் ........ 76
அரசியல் கட்சிகள் ரொக்க நன்கொடைக்கு வரம்பு ........ 77
மரண தண்டனையை குறைக்கலாம்? ........ 77
மின்னணுக் கழிவு மேலாண்மை ........ 78
போக்சோ விசாரணையில் வரவேற்கத்தக்க மாற்றம் ........ 79
பஜ்ரங் புனியா ........ 79
ஈரானில் பெண்களின் போராட்டம் ........ 79
டாலருக்கு பதில் ரூபாய்–ரூபிளில் வர்த்தகம் ........ 80
செயற்கைக்கோள்கள் ........ 80
குடியரசுத் தலைவர் தேர்தலில் மூன்று குறைபாடுகள் ........ 81
வெறுப்புப் பேச்சுகளைத் தடுக்க சட்டம் ........ 83
கடற்பசு பாதுகாப்பகம் ........ 83
நார்த் சேனலை கடந்து சாதனை ........ 84
கைதிகளுக்கு அனுமதி ........ 84
23 ஆண்டுகளில் முதல் முறை ........ 84
அடையாள எண்கள் ........ 84
துறைமுகங்கள் வரைவு மசோதா ........ 85
விண்மீன் பிறக்கும் முறை ........ 87
பிஎஃப்ஐ ........ 88
P.M.துரித சக்தி திட்டம் ........ 89
ஹிலாரி மான்ட்டல் ........ 89

ஐ.நா. சீர்திருத்தத்துக்குத் தடை ........ 89
நீரில்லாத நாள் ........ 89
ஆபரேஷன் மேக சக்ரா ........ 90
சப்தகோசி அணை திட்டம் ........ 90
க்வாட் நாடுகள் ........ 90
தேர்தல் ஆணையத்தின் பிடி இறுகட்டும் ........ 90
வையத் தலைமை கொள்வோம் ........ 91
ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு திட்டம் ........ 91
பூமியில் 20 ஆயிரம் லட்சம் கோடி எறும்புகள் ........ 91
முடிவுக்கு வருகிறதா கோவிட்-19? ........ 92
தில்லி – டாக்கா நட்புறவு! ........ 92
காமன்வெல்த் வரலாற்றில் நிலைக்குமா? ........ 93
முப்படை தலைமை தளபதி அனில் சவுகான் ........ 94
புதிய அட்டர்னி ஜெனரலாக ஆர்.வெங்கடரமணி ........ 94
கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டம் ........ 94
தேசிய விளையாட்டுப் போட்டி ........ 94
காலனி மனப்பான்மையை களைதல் ........ 94
பிஎஃப்ஐ உட்பட 9 அமைப்புகளுக்கு 5 ஆண்டுகள் தடை ........ 95
மோசடி பத்திர பதிவு ரத்து ........ 96
பாதுகாப்பான கருக்கலைப்பு செய்து கொள்ள உரிமை ........ 96
சிம்கார்டு வாங்க போலி ஆவணங்களை வழங்கினால் ஓராண்டு சிறை ........ 96
மாற்றம் ஏற்றம் தரும் ........ 96

02. மாநில நிகழ்வுகள்

தமிழகத்தில் சதுப்பு நிலங்களைக் காப்போம் ........ 98
அரசு பள்ளிகள் மீது அக்கறை தேவை ........ 98
புதுமைப்பெண் திட்டம் ........ 98
தேசியக் குற்றவியல் ஆவணக் காப்பகம் (என்சிஆர்பி) ........ 99
தனியார் உயர்கல்வி : நெறிப்படுத்துமா அரசு ........ 101
இலவசங்கள் : தமிழ் மரபு சொல்வது என்ன ? ........ 102
இடஒதுக்கீடு ........ 103
பசுமைப் பட்டாசு ஆய்வுக்கூடம் ........ 105
முஸ்லிம் உள் இடஒதுக்கீடு ........ 105
போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு ........ 106
10 ஆண்டுகளில் தமிழ்நாடு ........ 106
மதுரையில் டைடல் பூங்கா ........ 108
சூழலியல் அபாயம் ........ 108
தமிழகம் – மேகாலயா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ........ 108
10 உயர்கல்வி நிறுவனங்கள் ........ 108
இணையவழி விளையாட்டுகளைத் தடை செய்ய அவசர சட்டம் ........ 109
முதல்வரின் புத்தாய்வு திட்டம் ........ 110
சில்லறைப் பணவீக்கம் ........ 110
தென்மண்டல கவுன்சில் கூட்டம் ........ 111
ஏற்றம் தரும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ........ 111
முதல் மகளிர் காவல் நிலையம் ........ 112
போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு ........ 112
நூற்றாண்டில் பசிப்பிணி போக்கிய பாதை ........ 113
தனியார் பள்ளிகளுக்கு தனி இயக்குனரகம் ........ 113
புதிய மின்கட்டணம் ........ 114

SURESH'

# 01 தேசிய நிகழ்வுகள்

## சதுப்பு நிலங்களைக் காப்போம்

### சதுப்புநிலம்

- சதுப்பு நிலம் என்பது, கடல் மட்டத்தை விட குறைவான ஆழம் கொண்ட நீர்நிலையாகும். நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், மண் அரிப்பைத் தடுக்கவும், புயல், சூறாவளி போன்ற இயற்கைச் சீற்றங்களை மட்டுப்படுத்தவும் சதுப்பு நிலங்களின் பங்களிப்பு இன்றியமையாதது. இவை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பெரிதும் துணைபுரிகின்றன.
- பூமியின் மொத்தப் பரப்பளவில் 6% சதுப்பு நிலங்களாக உள்ளன. இன்று உலகில் 2000-க்கும் மேற்பட்ட இடங்கள் சதுப்பு நிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- உலக அளவில் ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும், அமேசானை ஒட்டிய பிரேசில் பகுதிகளிலும், 1,112 சதுப்பு நிலப் பகுதிகள் காணப்படுகின்றன.

### நகரங்களின் நுரையீரல்

- இந்தியாவில் 27,403 சதுப்பு நிலங்கள் உள்ளன. இந்நிலங்கள் பூமியில் வாழும் பல்வேறு உயிரினங்களின் பாதுகாப்பைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் 'நகரங்களின் நுரையீரல்கள்' என்று இவை அழைக்கப்படுகின்றன.
- சதுப்பு நிலங்களின் மேலாண்மையை சிறப்பாக பேணும் பகுதிகளுக்கு ராம்சர் சர்வதேச அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது.

### ராம்சர் பிரகடனம்

- சதுப்பு நிலங்களைப் பாதுகாத்து நிலங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும், புவி வெப்பமயமாகி அனல் கக்கி, வரும் இன்றைய சூழ்நிலையில் உலக அளவில் சதுப்பு நிலம் தொடர்பான பிரச்சனைகளை நாடுகள் பகிர்ந்து கொள்வதற்கும், பிரச்சனைகளை விவாதித்துத் தீர்வு காண்பதற்கும் தேவையான கொள்கைகளை இந்த ராம்சர் பிரகடனம் வழங்குகிறது.
- ராம்சர் பிரகடனம் அல்லது ஈர நிலங்களுக்கான உடன்படிக்கை என்பது, ஈரநிலங்களின் பயன்பாடு, அவற்றின் பாதுகாப்பிற்காக சர்வதேச அளவில் ஏற்படுத்தப்பட்ட ஒரு உடன்படிக்கையாகும்.
- 1971-ஆம் ஆண்டில் ஈரானில் உள்ள ராம்சர் நகரத்தில் இதற்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது. அதனாலேயே, அந்நகரின் பெயரைத் தழுவியே 'ராம்சர் பிரகடனம்' என்ற பெயர் ஏற்படுத்தப்பட்டது.
- உலக நாடுகளிடையே இயற்கை வளங்களைப் பாதுகாத்து, சதுப்பு நிலங்களின் செழுமையையும், வளமையையும் பேணுதலே இந்த உடன்படிக்கையின் குறிக்கோளாகும்.
- சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களை, குறிப்பாக, பறவைகளின் புகலிடங்களை ராம்சர் பிரகடனம் அடையாளப்படுத்தி உலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்துகிறது.
- உலக மக்கள் அப்பகுதிகளைக் கண்டறிந்து அங்கெல்லாம் சுற்றுலா மேற்கொள்ளவும், அந்நாடுகளில் சுற்றுலாத்துறை மேம்பாடடையவும் நாடுகளிடையேயான அந்நிய செலாவணி அதிகரிக்கவும் இது உதவுகிறது.

### பாதுகாப்பு

- சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அவற்றை பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக அறிவிக்க வேண்டும்; அப்பகுதிகளில் நகரக் கழிவுகளைக் கொட்டுவதை தடை செய்ய வேண்டும்; சதுப்பு நிலப்பகுதிகள் நிலத்தில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் சொந்தமானதால் அங்கு தொழிற்சாலைகளை அமைக்க அனுமதிக்கக் கூடாது; ஈர நிலப்பகுதிகளில் தற்போது உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.
- சதுப்பு நிலங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 2-ஆம் தேதி சர்வதேச சதுப்பு நில நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

- ஈரநிலமும், நீரும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கவொண்ணாதவை. உயிரினங்களின் வாழ்விற்கு இவை இன்றியமையாதவை.

## முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல்

- இந்திய கடற்படைக்கான புதிய கொடியையும் அறிமுகம் செய்கிறார். கடற்படை கொடியில், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வடிவமைக்கப்பட்ட சிவப்புப் பட்டைகள் நீக்கப்படுகிறது.
- புதிய வெள்ளைக்கொடியில், தேசியக்கொடி, அசோக சின்னம் மற்றும் நங்கூரம் ஆகியவை இடம் பெற்றிருக்கும்.
- 1950-ஆண்டு முதல் தற்போது வரை கடற்படை கொடியில் 4-வது முறையாக மாற்றம் செய்யப்படுகிறது.
- இந்திய கடற்படையில் ஏற்கெனவே ஐஎன்எஸ் விக்ராந்த் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் இருந்தது.
- இங்கிலாந்திடம் இருந்து வாங்கப்பட்ட இந்த கப்பல், இந்திய கடற்படையில் கடந்த 1971-ம் ஆண்டு நடந்த பாகிஸ்தான் போரில் இந்த கப்பல் முக்கிய பங்காற்றியது.
- இந்த புதிய ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பல், கடந்த 2013-ம் ஆண்டு கடலில் இறக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. கப்பலில் அனைத்து பணிகளும் முடிவடைந்ததால், சமீபத்தில் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

### விக்ராந்த் – பெயர்க் காரணம்

- பிரிட்டிஷ் கடற்படையிடம் இருந்து 1961இல் இந்தியக் கடற்படை சேவையில் சேர்க்கப்பட இந்தியாவின் முதல் விமானம் தாங்கிக் போர்க்கப்பலின் பெயர்.
- இது வங்கதேசம் உருவாகக் காரணமாக இருந்த பாகிஸ்தானுடனான 1971போரில் அந்தக் கப்பல் முக்கியப் பங்கு வகித்தது.
- பழைய விக்ராந்த் வங்காள விரிகுடாவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து சீ ஹாவ்க் போர் விமானங்கள், அலிஸ் கண்காணிப்பு விமானங்கள் ஆகிய இரண்டு விமானப் படைப் பிரிவுகள் இயக்கப்பட்டன.
- அவை அந்தப் போரில் துறைமுகங்கள், வணிகக் கப்பல்கள் உள்ளிட்ட இலக்குகளின் மீதான தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்டன.
- கடல்வழியாகப் பாகிஸ்தான் படைகள் தப்பிச் செல்வதையும் அவை தடுத்தன. 1997 இல் அந்தக் கப்பல் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டது.
- இந்தியக் கடற்படைக்குப் பழைய விக்ராந்த் அளித்த பங்களிப்பைச் சிறப்பிக்கும் விதமாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தியாவின் முதல் விமானம் தாங்கிப் போர்க் கப்பலுக்கு ஐஎன்எஸ் விக்ராந்த் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இதில் 'ஐஎன்எஸ்' என்பது  இந்தியக் கடற்படையைக் குறிக்கும் சுருக்கப் பெயர் இந்தியக் கடற்படை சேவையில் இணைக்கப்படுவதற்கு முன் ஐஏசி-1 என்கிற குறியீட்டுப் பெயரில் அது அழைக்கப்பட்டது.

### ஐஎன்எஸ் விக்ராந்த்

- இந்திய கடற்படையில் ஏற்கனவே இருந்த ஐஎன்எஸ் விக்ராந்த் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் கடந்த 1997-ம் ஆண்டு பணியில் இருந்து விடுவிக்கப்பட்டது. இதன் நினைவாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலுக்கு ஐஎன்எஸ் விக்ராந்த் என பெயரிடப்பட்டது.
- கேரளாவின் கொச்சியில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் தயாரிக்கப்பட்டது.
- ஐஎன்எஸ் விக்ராந்த் எனும் விமானம் தாங்கிப் போர்க் கப்பலின் சாதனைப் பயணம் 2009 இல் தொடங்கியது.
- 2009 இல், அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.
- ஏறக்குறைய 2000-க்கும் அதிகமான பொறியாளர்களின் 13 ஆண்டு காலக் கடும் உழைப்பில் விக்ராந்த் குழு வடிவம் பெற்றுள்ளது.
- அந்தக் கப்பலைப் பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.மொத்தம் ரூ.20,000 கோடி செலவில் இந்த கப்பல் தயாரிக்கப்பட்டுள்ளது.
- கடற்படைக்கு புதிய கொடியையும் அறிமுகம் செய்து வைத்தார். ஆங்கிலேயர் காலத்தில் வடிவமைக்கப்பட்ட கடற்படை கொடியில், இருந்த புனித ஜார்ஜின் சிவப்பு பட்டை நீக்கப்பட்டு, சத்ரபதி சிவாஜி மகாராஜின் ராயல் முத்திரை இணைக்கப்பட்டுள்ளது.

- தற்போதைய தேஜஸ் போர் விமானத்தை மேம்படுத்தி தேஜஸ் 2.0 போர் விமானத்தை தயாரிக்க மத்திய அரசு அண்மையில் அனுமதி வழங்கியது.
- வரும் 2030-ம் ஆண்டில் தேஜஸ் 2.0 போர் விமானங்களின் உற்பத்தி தொடங்கப்படும்.
- அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் இந்தியாவிடம் இருந்து ஆயுதங்களை கொள்முதல் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன.
- இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆயுத உதிரி பாகங்களில் சுமார் 50% அமெரிக்க நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றன.
- இந்திய போர்க்கப்பல் கட்டுமானதுறை அபாரமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானந்தாங்கி போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் கடந்த 2-ம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- கடந்த 2019-ம் ஆண்டில் செயற்கைக் கோள்களை தாக்கி அழிக்கும் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.
- இதன்மூலம் செயற்கைக்கோளை அழிக்கும் வல்லமை படைத்த அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் வரிசையில் 4-வதாக இந்தியாவும் இணைந்திருக்கிறது.

### விக்ராந்த்தின் சிறப்புகள்

### ஐஎன்எஸ் விக்ராந்தின் சிறப்பு

- புதிய ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க்கப்பல், 262 மீட்டர் நீளம், 59 மீட்டர் உயரம், 62 மீட்டர் அகலம் கொண்டதாகும். இதன் மொத்த எடை 40 ஆயிரம் டன்கள்.
- கப்பலின் அதிகபட்ச வேகம் 28 நாட்ஸ் ஆகும். மொத்தம் 14 அடுக்குகள் கொண்ட இந்த கப்பலில் 2,300 அறைகள் உள்ளன. கடற்படை அதிகாரிகள், வீரர்கள் என 1,700 பேர் கப்பலில் இருப்பார்கள்.
- 34 போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் இதில் இடம்பெற்றிருக்கிறது.
- முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கிப் போர்க்கப்பல் இது.
- இந்தியாவின் கடற்படை வரலாற்றில் இதுவரை கட்டப்பட்டத்தில் இதுவே மிகப்பெரியது. மிகவும் சிக்கலானதும்கூட.
- இந்தக் கப்பலின் அதிகபட்ச வேகம் 28 நாட்ஸ், அதாவது 50 கி.மீ 7,500 கடல் மைல்களைக் கடக்கும் திறன் இதற்கு உண்டு.
- 23,000 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள விக்ராந்தின் எடை 44,000 டன்; நீளம் 262 மீட்டர்; அகலம் 62 மீட்டர்.
- இரண்டு கால்பந்து மைதானங்களை விடப் பெரியது. இந்தக் கப்பலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் இரும்பின் அளவு மூன்று ஈபிள் கோபுரங்களுக்குச் சமமானது.
- அதில் பயன்படுத்தப்படும் மின்னாற்றலால், கொச்சி நகரத்தின் பாதியை ஒளிரச் செய்ய முடியும். 14 அடுக்கு தளங்களைக் கொண்ட இந்தக் கப்பலில் 2,300 அறைகள் உள்ளன.
- அவற்றில் பெண் அதிகாரிகளுக்கு எனச் சிறப்பு அறைகளும் உண்டு. இந்தக் கப்பலில் சுமார் 1,700 வீரர், வீராங்கனைகள் தங்க முடியும்.
- இரண்டு அறுவைசிகிச்சை அறைகளுடன், ஒரு முழுமையான மருத்துவ வளாகம் இந்தக் கப்பலின் உள்ளே இருக்கிறது. கப்பலில் இருக்கும் சமையலறை மூலம் குறைந்தபட்சம் 2,000 பேரின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

### இந்தியத் தயாரிப்பு

- விக்ராந்த்தில் இருக்கும் 76%-க்கும் அதிகமான பொருட்களும் கருவிகளும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டவை. இந்தக் கப்பலில் 21,500 டன் அளவுக்குச் சிறப்புத் தரம் கொண்ட எஃகு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

### தேஜஸ் 2.0 போர் விமானம்

- மத்திய அரசின் இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனம் தேஜஸ் எம்.கே.1 ரக போர் விமானங்களை தயாரித்து வருகிறது. மொத்தம் 123 தேஜஸ் போர் விமானங்களை தயாரிக்க விமானப்படை ஒப்பந்தம் வழங்கி உள்ளது. இதில் 30 விமானங்கள், விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- அடுத்த கட்டமாக தேஜஸ் 2.0 திட்டத்தை செயல்படுத்த மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) மற்றும் இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது.
- தற்போது விமானப்படையில் சேர்க்கப்பட்டுள்ள தேஜஸ் மார்க் 1 ரக விமானம் 3 டன் எடை கொண்டதாகும். தேஜஸ் மார்க் 2 விமானம் 4 டன் எடை கொண்டதாக இருக்கும். இதில் அதிநவீன ஆயுதங்கள், ரேடார்கள் பொருத்தப்பட உள்ளன.

### 36 விமானங்கள்

### ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பலில் இடம் பெற்றுள்ள விமானங்கள்

| | | |
|---|---|---|
| மிக்-29கே ரக விமானங்கள் | - | 26 |
| காமோவ் - 31 ரக ஹெலிகாப்டர்கள் | - | 4 |
| எம்.எச்.60 ஆர் ஹெலிகாப்டர்கள் | - | 4 |
| உள்நாட்டு தயாரிப்பு இலகு ரக ஹெலிகாப்டர்கள் | - | 2 |

### ஐ.என்.எஸ். விக்ராந்தின் முழு விபரம்

| | | |
|---|---|---|
| நீளம் | - | 262 மீட்டர் |
| உயரம் | - | 59 மீட்டர் |
| அகலம் | - | 62 மீட்டர் |
| எடை | - | 40,000 டன் |
| அதிகபட்ச வேகம் | - | 28 கடல் மைல் |
| அடுக்குகள் | - | 14 |
| அறைகள் | - | 2,300 |
| கடற்படை அதிகாரிகள் வீரர்கள் | - | 1,700 |
| போர்விமானங்கள், ஹெலிகாப்டர்கள் | - | 36 |

### சர்வதேச விமானப் பயிற்சி மையம்

- கோவில்பட்டி அருகே தோணுகால் கிராமத்தில் விரைவில் சர்வதேச விமானப் பயிற்சி மையம் அமைய உள்ளது என டிட்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.
- இந்த இடம் விமானப் பயிற்சிக்கு மிகவும் உகந்தது. பயிற்சி மையம் அமைக்க தேவையான சுமார் 35 ஏக்கர் நிலம் உள்ளது. தூத்துக்குடி, மதுரை, திருவனந்தபுரம் விமான நிலையங்கள் அருகேயே இருப்பதால் விமானப் பயிற்சிக்கு ஏதுவாக இருக்கும்.
- =- இதுபோன்ற சிறப்பு அம்சங்கள் உள்ளதால் இங்கு சர்வதேச விமானப் பயிற்சி நிலையம் அமைய உள்ளது. சர்வதேச விமானப் பயிற்சியாளர்கள் விமானத்தை இயக்க இங்கு பயிற்சி அளிப்பார்கள். இதற்கான ஒப்பந்தங்கள் விரைவில் கையெழுத்தாகும்.
- இந்தியாவில் ஆண்டுதோறும் 1,500 விமான ஓட்டிகள் தேவைப்படும் நிலையில் 600 பேர் தான் இங்கிருந்து வருகின்றனர். மற்ற அனைவரும் வெளிநாட்டை சேர்ந்தவர்கள். ஓராண்டு காலத்துக்குள் விமானப் பயிற்சி மையம் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கிறோம்.
- இப்பகுதியில் விமானப் பயிற்சி மையம் அமையப்பெற்றால் தமிழகம் மட்டும் இன்றி இந்தியா முழுவதும் இருந்து பயிற்சி பெற மாணவர்கள் வருவார்கள்.
- அவர்களுக்கு குறைந்தது 10 மாதம் முதல் 18 மாதங்கள் வரை பயிற்சி வழங்கப்படும்.

### சிறு, குறு நிறுவன பங்களிப்பு

- ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பலில் முழுக்க, முழுக்க உள்நாட்டு உதிரி பாகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 100-க்கும் மேற்பட்ட இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தயாரிப்புகள் இந்த போர்க்கப்பலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**2,300 அறைகள்**

- இந்த கப்பல் அதிகபட்சமாக மணிக்கு 28 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது.
- 7,500 நாட்டிக்கல் மைல் தூரம் வரை தொடர்ந்து செல்லும் திறன் படைத்தது.
- 43,000 டன் எடையுள்ள இந்த கப்பலில், பயன்படுத்தப்பட்டுள்ள மின் வயர்களின் மொத்த நீளம் 2,500 கி.மீ.
- இதில் மொத்தம் 2,300 அறைகள் உள்ளன. கடற்படையின் பெண் அதிகாரிகள் தங்குவதற்கு சிறப்பு அறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- மருத்துவமனை, தீவிர சிகிச்சை பிரிவு, தனிமைப்படுத்தப்படும் அறைகள் ஆகியவையும் இதில் உள்ளன. இந்த கப்பலில் அதிநவீன அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

**தாராகிரி போர்க்கப்பல்**

- இந்திய கடற்படையின் 'புராஜெக்ட் 17ஏ' திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மூன்றாவது போர்க்கப்பலான 'தாராகிரி'.
- மும்பையில் உள்ள மஸகான் கப்பல் கட்டும் நிறுவனம் (எம்டிஎல்) சார்பில் ஒருங்கிணைந்த கட்டுமான முறையின் கீழ் இந்தக் கப்பல் கட்டப்பட்டுள்ளது.
- தாராகிரி போர்க் கப்பலின் அடித்தளம் கடந்த 2020-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ஆம் தேதி அமைக்கப்பட்டு கப்பல் கட்டும் பணி தொடங்கப்பட்டது.
- தற்போது முதல்கட்ட கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில், வெள்ளோட்டத்துக்காக கப்பல் கடலில் இறக்கப்பட்டுள்ளது.
- அதன் பிறகு, இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, வரும் 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட முதல் போர்க் கப்பலான 'நீலகிரி' கடந்த 2019-ஆம் ஆண்டு செப்டம்பர் 28-ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்தக் கப்பலின் கடல் பயணச் சோதனை வரும் 2024-ஆம் ஆண்டு முதல் பாதியில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழான இரண்டாவது போர்க்கப்பல் 'உதயகிரி' கட்டி முடிக்கப்பட்டு, கடந்த மே 17-ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்தக் கப்பலின் கடல் பயணச் சோதனை 2024-ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**சிறந்த உயிரியல் பூங்காவாக டார்ஜிலிங் உயிரியல் பூங்கா தேர்வு**

- நாட்டில் 150-க்கும் மேற்பட்ட உயிரியல் பூங்காக்கள் உள்ளன. பூங்காக்களின் இயக்குநர்களுக்கான மாநாடு ஒடிஸா மாநிலம் புவனேசுவரத்தில் நடைபெற்றது.
- மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் பகுதியில் அமைந்துள்ள பத்மஜா நாயுடு இமாலயன் உயிரியல் பூங்கா முதலிடத்தைப் பெற்றது.
- சென்னை வண்டலூரில் உள்ள அண்ணா உயிரியல் பூங்கா 2-ஆவது இடத்தையும், கர்நாடகத்தின் மைசூரில் அமைந்துள்ள ஸ்ரீசாமராஜேந்திரா உயிரியல் தோட்டம் 3-ஆவது இடத்தையும் பெற்றன.
- கொல்கத்தாவில் அமைந்துள்ள அலிப்பூர் உயிரியல் தோட்டம் பட்டியலில் 4-ஆவது இடத்தில் உள்ளது.
- 1958-ம் ஆண்டு நிறுவப்பட்ட டார்ஜிலிங் உயிரியல் பூங்கா, கிழக்கு இமயமலையில் காணப்படும் பனிச்சிறுத்தை சிவப்பு பாண்டா கரடி போன்ற அழிவு நிலையை எதிர்நோக்கியுள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது.

## வளர்ந்த நாடாக மாற வேண்டும்

- ஜனநாயகம், சமூக நல்லிணக்கம், வளம் இந்த மூன்றும்தான் இந்தியாவின் 75-வது சுதந்திர தினத்திலும் உலக நாடுகள் வியந்து பார்க்கும் அடிப்படை பண்புகள்.
- நம்மைப் போன்று காலனிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்ற பல நாடுகள் இன்று ஜனநாயகத்தை தக்க வைக்க முடியாமல் தள்ளாட்டத்தில் உள்ளன. நமது அண்டை நாடான பாகிஸ்தானே இதற்கு உதாரணம்.

## பொருளாதாரம்

- சுதந்திரத்தின் தொடக்கத்தில் சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பொருளாதார சீரமைப்பு நடவடிக்கைகள், 1991-க்குப் பிறகு உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கலை நோக்கி வேகமாக நகரத் தொடங்கியது.
- அடுத்தடுத்து வந்த அரசுகள் கொண்டு வந்த திட்டங்களின் விளைவு, நடுத்தர வர்க்கத்தினரிடையே வேகமாக வளர்ச்சியை தூண்டியதுடன், 50 கோடி பேரை வறுமையின் பிடியிலிருந்து மீட்டெடுத்துள்ளது.
- கடந்த மூன்று தசாப்தங்களின் வளர்ச்சி வேகம் அடுத்து வரும் 25 ஆண்டுகளுக்கும் தொடருமானால் இந்தியா 100-வது ஆண்டு சுதந்திர தினத்தில் அடியெடுத்து வைக்கும்போது பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டிருக்கும்.
- லட்சியவாதியான நேரு அக்கறையுடன் கூடிய சோஷலிச சமுதாயத்தை அமைக்க விரும்பினார். ஆனால், அதிகாரத்துவ வர்க்கம் உரிமம் பெற்று தொழில் தொடங்கும் 'லைசென்ஸ் ராஜ்' கொள்கை நடைமுறையையே அவருக்கு உருவாக்கித் தந்தது. இது நமது பொருளாதார சுதந்திரத்தைப் பறித்தது.
- அவருக்குப் பின் வறுமையை ஒழிப்போம் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கட்டிலில் ஏறிய இந்திராகாந்தியால் அந்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை.
- தனிநபர் தவறு செய்தால் அது அவரது குடும்பத்தை மட்டுமே பாதிக்கும். ஆட்சியாளர்கள் தவறு செய்வார்களேயானால் அது ஒட்டுமொத்த தேசத்துக்கும் மிகப்பெரும் சோகமான முடிவையே தரும். 1991-க்கு முன் தவறவிட்ட வாய்ப்புகளில் இந்தியா 2 தலைமுறைகளை தியாகம் செய்துள்ளது.

## பிரமிப்பான ஐடி துறை

- தற்போது நாம் வேகமாக வளரும் பொருளாதாரமாக உருவெடுத்துள்ளதற்கு தகவல் தொழில்நுட்பத் துறையின் (ஐடி) பங்கு மிக முக்கியமானது.
- இந்த வளர்ச்சிக்கு இரண்டு காரணங்கள்தான் அடிப்படை. இதர பொருள்களைப்போல் அல்லாமல் மென்பொருள் சேவை என்பது நேரடியாக வாடிக்கையாளரின் கனிணியை சென்றடைவது.
- இதனால், அரசின் உரிம நடைமுறை கட்டுப்பாடுகள் அதற்கு கிடையாது. இரண்டாவது நாஸ்காம் அமைப்புக்கும் சில அரசு அதிகாரிகளுக்கும் இடையே காணப்படும் ஒத்துழைப்பு.

## சிறுபான்மை உரிமை நிலைநாட்டில்

- மனிதர்களின் சராசரி ஆயுள் காலம் 32-லிருந்து 70 ஆண்டாக அதிகரித்துள்ளது.
- கல்வியறிவு 12%-லிருந்து 78% ஆக மேம்பட்டுள்ளது.
- ஏழ்மை நிலை 70%-லிருந்து 21 ஆக குறைந்துள்ளது.
- 90% மக்கள் மின்சார வசதியை பெற்றுள்ளது என சாதனை பட்டியல் நீளும்.
- இந்த வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து நாம் வீறுநடை போட முடியும். மற்ற நாடுகளைப் போல நிச்சயமற்ற தன்மை இங்கு காணப்படவில்லை.
- இந்தியாவின் வளர்ச்சி நிலையானதாகவும், கணிக்கக்கூடிய வகையிலும் அமைந்துள்ளது அதற்கு சான்று. அந்நிய முதலீடுகள் தொடர்ச்சியாக குவிந்து வருகின்றன.
- தன்னார்வ அமைப்புகளின் புள்ளிவிவரங்களின்படி, அரசு தொடக்கப் பள்ளிகளில் 4 ஆசிரியர்களில் ஒருவர் பணிக்கே வருவதில்லை.
- ஆசிரியர் தகுதித் தேர்வில் 10% குறைவான ஆசிரியர்களே தேர்ச்சி பெறுகின்றனர்.
- மேற்கு வங்கத்தில் பார்த்தா சட்டர்ஜியின் சமீபத்திய ஊழலே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. இதேபோன்ற மோசமான சூழ்நிலையைத்தான் அரசு ஆரம்ப சுகாதார மைய புள்ளிவிவரங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

## விடை தெரியா கேள்விகள்?

- சாமானிய மக்கள் நீதி கிடைக்க 15 ஆண்டுகள் ஏன் காத்திருக்க வேண்டும்? மூவரில் ஒருவர் விசாரணைக் கைதியாக ஏன் சிறையில் அடைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு சென்று குறைகளை தெரிவிக்க நாம் ஏன் பயப்பட வேண்டும்?

- இந்தியாவின் எம்பி, எம்எல்ஏக்.களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஏன் குற்றப் பின்னணி கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
- திறமையான அதிகாரிகள் ஒரே நாளில் முக்கியத்துவம் இல்லாத துறைக்கு ஏன் தூக்கியடிக்கப்பட வேண்டும்?
- 75வது சுதந்திர தின கொண்டாட்ட மகிழ்ச்சியிலும் தொடரும் விடை தெரியா கேள்விகள் இவை.

## இலங்கையை மீட்டெடுக்க ரூ.23,000 கோடி

- கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை, சர்வதேச செலாவணி நிதியத்திடம் (ஐஎம்எஃப்) உதவி கோரி இருந்தது. இந்நிலையில், இலங்கைக்கு நிதி உதவி வழங்க ஐஎம்எஃப் ஒப்புதல் தெரிவித்துள்ளது.
- திவால் நிலைக்கு உள்ளாகி இருக்கும் நாட்டை மீட்டெடுக்க ஐஎம்எஃப் நிதி உதவி வழங்கும் போது பல்வேறு நிபந்தனைகளை விதிக்கும்.
- வரி விதிப்பு முதல் நிதி ஒதுக்கீடு வரையில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்ள அந்நாட்டை ஐஎம்எஃப் வலியுறுத்தும். இதற்கு அந்நாடு சம்மதம் தெரிவிக்கும்பட்சத்தில் மட்டுமே நிதி உதவி வழங்கப்படும்.
- வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றங்களை அடுத்து இலங்கைக்கு ஐஎம்எஃப் நிதி உதவி வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளது.

## 2029-ம் ஆண்டுக்குள் ஜெர்மனி, ஜப்பானை வீழ்த்தி 3-வது நாடாக இந்தியா மாறும்

- உலக நாடுகளின் பொருளாதார நிலை குறித்த ஆய்வறிக்கையை சர்வதேச நிதி அமைப்பான ஐஎம்எப் அறிக்கை வெளியிட்டது.
- வரும் 2027ம் ஆண்டில் ஜெர்மனியையும், 2029-ம் ஆண்டில் ஜப்பானையும் பின்னுக்குத் தள்ளி, உலகின் 3வது மிகப்பெரிய பொருளாதார பலமிக்க நாடு என்ற பெருமையை இந்தியா பெறும்.
- உலகளவில் சீனாவின் பொருளாதாரம் தற்போது தள்ளாட்டம் கண்டு வருகிறது. உலகின் 3வது மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறுவதற்கு, இந்த நிலை மிகவும் சாதகமாக அமைந்துள்ளது.
- மேலும், செல்போன் ஜாம்பவன் நிறுவனமான ஆப்பிள், தனது ஐபோன்-14 மாடல் தயாரிப்பு தொழிற்சாலையை இந்தியாவில் நிறுவ முடிவு செய்திருப்பதும், இந்தியாவுக்கு மேலும் சாதகமான சூழலை உருவாக்கி இருக்கிறது.

## ஒன்றிய அரசு உடைத்தால் மண் சட்டி ; மாநிலங்கள் உடைத்தால் பொன் சட்டி

### ஒரு நாடு வல்லரசாக வேண்டும்

- அந்நாட்டு மக்களின் வறுமை ஒழிய வேண்டும்.
- வாழ்க்கையும், பொருளாதாரமும் மேம்பட வேண்டும்.
- அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை அடைய வேண்டும்.
- மக்களின் நோயற்ற வாழ்க்கை உறுதிப்படுத்த வேண்டும்.
- அனைவருக்கும் உயர்தர மருத்துவத்தை வழங்க வேண்டும்.

### 12.5 கோடி பேருக்கு வேலை போச்சு

- பிரதமர் மோடியின் 8 ஆண்டு ஆட்சியில், கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லா திண்டாட்டம் 7.9 சதவீதம் அதிகமாகி இருக்கிறது.
- 12.5 கோடி பேர் வேலைவாய்ப்பு பறிக்கப்பட்டு உள்ளது. கிராமங்களில் 57 சதவீதம், நகரங்களில் 80 சதவீதம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.
- நாட்டு மக்களிடையே வறுமையும், பஞ்சமும் தலைவிரித்தாடும்போது, குறிப்பிட்ட சில தொழிலதிபர்களின் சொத்து பலமடங்கு கூடியிருக்கிறது.
- பெரு நிறுவனங்களின் காவலனாக ஒன்றிய பாஜ அரசு செயல்பட்டு வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. இதை உறுதிப்படுத்தும் விதமாக கார்ப்பரேட் வரி 40 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக குறைக்கப்பட்டு இருக்கிறது.
- நாட்டில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்புவரையில் கூட, 142 தொழிலதிபர்களின் மொத்த சொத்து மதிப்பு ரூ.23 லட்சம் கோடியாக இருந்தது. ஆனால், கடந்த 2 ஆண்டுகளில் இது ரூ.53 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

## அபிஜித்சென்

- வேளாண்மை, கிராமப் பொருளாதாரம், வறுமை, சமத்துவமின்மை, வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் என இந்தியாவை நீண்ட காலம் பாதித்து வரும் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.
- இந்தத் துறைகள் சார்ந்து குறிப்பிடத்தக்க ஆய்வுகளையும் பங்களிப்பையும் தந்த வேளாண் பொருளாதார நிபுணர் அபிஜித்சென்

### பொருளியல் ஆர்வம்

- பொருளாதார வளர்ச்சிக்குத் தடையான வேளாண் நெருக்கடிகள் என்கிற தலைப்பில் அவர் மேற்கொண்ட முனைவர் பட்ட ஆய்விலிருந்து, முதன்மையான ஒரு விவசாயப் பொருளாதார நிபுணராக அபிஜித் பரிணமித்தார்.
- விவசாயப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு முக்கியமானது மட்டுமல்ல, வறுமையைக் கையாள்வதற்கும் அவசியமானது, விவசாய பிரச்சினையின் வேர் இந்திய விவசாயத்தின் கட்டமைப்பில் உள்ளது என்பதால், தற்போதுள்ள விவசாயக் கட்டமைப்பில் அரசின் தலையீடு இல்லாமல் விவசாயப் பிரச்சினையின் தன்மைகள் மாற வாய்ப்பில்லை என்றார் அபிஜித்.

### கற்பித்தலும் கொள்கை வகுப்பும்

- அபிஜித்தின் நாற்பதாண்டுகளுக்கு மேலாக கற்பித்தல் பணியில் சஸெக்ஸ், ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், எஸெக்ஸ் பல்கலைக் கழகங்களில் பொருளாதாரம் கற்பித்ததும் அடங்கும்.
- ஆராய்ச்சி, கல்விப்புலம் தாண்டி கொள்கை வகுப்பிலும் அபிஜித்தின் பங்கு அளப்பறியது. மத்திய வேளாண் அமைச்சகத்தின் அங்கமான, வேளாண் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலையைப் பரிந்துரைக்கும் 'விவசாயச் செலவுகள் – விலைகள் குழு'வின் (CACP) தலைவராக 1997இல் ஐக்கிய முன்னணி அரசு அபிஜித்தை நியமித்தது.
- பொது விநியோகத் திட்டத்தின் தீவிர ஆதரவாளரான அபிஜித், அத்திட்டத்தில் நாடு முழுவதும் அரிசி, கோதுமையைக் கொண்டுசெல்லத் தீவிரமாகப் பரிந்துரைத்தார்.
- 14ஆவது நிதிக் குழுவிலும் அபிஜித் இடம்பெற்றிருந்தார்.
- வறுமை, சமத்துவமின்மை, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருக்கும் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கு அவருடைய அறிவும் வழிகாட்டலும் அதிகம் தேவைப்படும்.

## ஆர்டிமிஸ் - 1

- மனிதன் தங்கி வாழ வழிசெய்யும் நிரந்தரத் தங்குமிட உருவாக்கத்தின் தொடக்கம், செவ்வாய்க் கோளுக்கு மனிதப் பயணம் மேற்கொள்வதற்கான முதல் அடி, நிலவின் கனிமங்களை வெட்டியெடுத்துப் பயன்படுத்தும் விண்வெளி வணிகத்தின் ஆரம்ப முயற்சியென வர்ணிக்கப்படும் நாசாவின் ஆர்டிமிஸ்-1, நிலவு பயணத் திட்டம்.
- ப்ளோரிடா மாகாணத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து ஆர்டிமிஸ்-1 திட்டத்துக்கான ஓரையன் விண்கலம் ஏவப்பட உள்ளது.
- எல்லா வான்பொருட்களும் நகர்ந்துகொண்டே இருக்கும். எனவே, நிலவும் விண்கலமும் ஒரே நேரத்தில் ஒரே புள்ளியில் சந்திக்கும் வகையில் செலுத்தப்பட வேண்டும். பூமியிலிருந்து ஏவப்படும் இடமும் நிலவின் நிலையும் குறிப்பிட்ட கோணத்தில் இருக்கும்போது ஏவூர்தியைச் செலுத்தினால் மட்டுமே நிலவில் சரியான இடத்தை அடைய முடியும். இந்தப் பயணம் 39 நாட்கள் நீடிக்கும்.

### வாழ்வா? சாவா?

- இரண்டு கைகளை வேகமாக உரசினால் உராய்வின் காரணமாக வெப்பம் உருவாகும். அதேபோல மணிக்கு 40,000 கி.மீ வேகத்தில் திரும்பும் விண்கலம் பூமியைச் சுற்றியுள்ள காற்றில் உராய்ந்து தீப்பந்தமாக மாறிவிடும்.
- ஓரையன் விண்கலத்தைச் சுற்றி தீயைத் தாங்கும் பொருள் கொண்டு காப்பு செய்யப்பட்டுள்ளது. விண்கலத்தில் உள்ள பாராசூட்டுகள் அடுத்தடுத்து இயங்கி வேகத்தை மணிக்கு 32 கி.மீ என்ற அளவுக்குக் குறைக்கிறதா எனவும் சோதனை செய்யப்படவுள்ளது.

### சோதனையோட்டம்

- மனிதர்கள் நிலவுப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள ஆர்டிமிஸ் திட்டத்தின் சோதனை போராட்டம்தான் ஆர்டிமிஸ்-1. இதன்பிறகு வரும் 2024 இல் மனிதர்களை ஏந்திய ஆர்டிமிஸ்-2 நிலவைச் சுற்றிவரும்.

- பின்னர் விண்வெளி வீரர், கறுப்பின விண்வெளி வீரர் உள்ளிட்ட மூன்று பேரை ஆர்டிமிஸ்-3 ஏந்திச்சென்று நிலவில் தரையிறங்கும்.
- ஆர்டிமிஸ் 1 இல் மனிதர்கள் யாரும் பயணம் செய்யவில்லை என்றாலும், மனித உருக்கொண்ட மூன்று பொம்மைகள் ஏந்திச் செல்லப்பட உள்ளன.
- இவை மனிதத் திசுவுடன் ஒப்பிடும்படியான ஒருவகை ஞெகிழிப் பொருட்களால் செய்யப்பட்டவை.
- புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள விண்வெளி வீரர்கள் அணியும் பாதுகாப்பு உடையை இவற்றில் ஒரு பொம்மை அணிந்திருக்கும். விண்வெளிக்குச் செல்லும்போது கூடுதல் விசை ஏற்படும், அதிர்வுகள் ஏற்படும்.
- மனிதர்கள் செல்லும்போது இவற்றைத் தாங்குவது எப்படியென இந்தப் பொம்மையைக் கொண்டு ஆய்வு நடத்தி அறியப்படும்.
- மற்ற இரண்டு பொம்மைகளில் ஒன்று கதிர்வீச்சுக் கவசத்துடனும் மற்றொரு பொம்மை கதிர்வீச்சுக் கவசம் இன்றியும் இருக்கும்.
- இரண்டு பொம்மைகளிலும் ஏற்படும் கதிர்வீச்சுப் பாதிப்பை அளவீடு செய்து, விண்வெளி வீரர்கள் விண்வெளிப் பயணத்தில் சந்திக்கும் சவால்கள் குறித்து ஆய்வு நடத்தப்படும். இதன் அடிப்படையில்தான் அடுத்தடுத்த விண்வெளிப் பயணங்கள் அமையும்.

### பெருங்கனவின் தொடக்கம்

- நிலவின் தென்துருவத்தில் பனியாக உள்ள நீரைப் பயன்படுத்தி மனிதர்கள் தங்கி வேலைசெய்யும்படியான நிரந்தர நிலவுக் குடியிருப்பை ஏற்படுத்துவது.
- நிலவில் பயணம் செய்ய நிலவு வாகனம் தயாரித்துப் பரிசோதனை செய்வது.
- நிலவை வட்டமடிக்கும்படி செயற்கைக்கோள்களைச் செலுத்தி, அங்கே இணைய வசதியை ஏற்படுத்துவது.
- நிலவில் விரவியுள்ள அருங்கனிமங்களை வெட்டியெடுத்துப் பூமிக்குக் கொண்டுவருவது. அதன்மூலம் விண்வெளி வணிகத்தை ஏற்படுத்துவது.
- நிலவில் ஏவுதளம் அமைத்துச் செவ்வாய்க் கோளுக்கு மனிதர்களைக் கொண்ட விண்கலத்தை அனுப்புவது எனப் பல கனவுகள் கொண்ட திட்டம்தான் ஆர்டிமிஸ்.

## அனைவருக்கும் கல்வி: முன்மொழிந்த கொள்கை

- ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது அறிவிக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை 1986 கல்வி வழங்கலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் கல்வியைக் கொண்டு சேர்ப்பதில் முதன்மை கவனம் செலுத்தியது.
- 14 வயதுக்குள் உள்ள அனைவரையும் பள்ளிக்குக் கொண்டுவருவதற்கு பல்வேறு திட்டங்கள் இதில் முன்வைக்கப்பட்டன.
- பள்ளிக்கு வர முடியாத சிறுவர்களுக்கு முறைசாராக் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன.
- நவோதயா பள்ளிக்கும் தொலைதூரப் பகுதிகளில் தொடக்கப் பள்ளிகளும் தொடங்கப்படுவதற்கு இந்த கல்விக் கொள்கை காரணமாக அமைந்தது.
- பெண்கள், பட்டியலினத்தவர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், மாற்றுத் திறனாளிகள், ஏழைகளுக்கு கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு இந்தக் கல்விக் கொள்கை அதிக முக்கியத்துவம் அளித்தது.
- பட்டியலினத்தவர்கள், பழங்குடியினர்களிலிருந்து அதிக எண்ணிக்கையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளையும் இந்தத் திட்டம் வலியுறுத்தியது.
- பெண்களுக்கான பாலினரீதியான கட்டுப்பாடுகள் உடைக்கப்பட்டு, பல்வேறு தொழில்களைச் செய்யத் தகுதியானவர்களாக அவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் பெண்களுக்குத் தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் இந்தக் கல்விக் கொள்கை கூறியது.
- கல்விக் கொள்கை 1986-ஐப் பின்பற்றி தொடக்கப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான ஆபரேஷன், பிளாக்போர்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு தொடக்கப் பள்ளியிலும் குறைந்தபட்சம் இரண்டு ஆசிரியர்கள், இரண்டு வகுப்பறைகள், கல்விக்கான கருவிகள், கழிப்பறை வசதிகளை ஏற்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கம்.

- தேசியக் கல்விக் கொள்கை 1986 செயல்படுத்தப்படுவதை ஆராய்வதற்காக ராமமூர்த்தி கமிட்டி (1990), ஜனார்த்தன ரெட்டி கமிட்டி (1991) ஆகிய இரண்டு ஆணையங்கள் அமைக்கப்பட்டன.
- கல்விக் கொள்கை 1986-இன் நோக்கங்களை சரியாக நிறைவேற்றுவதற்கான திட்டங்களை அவை பரிந்துரைத்தன. இந்த இரண்டு ஆணையங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1992-இல் நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது தேசிய கல்விக் கொள்கையில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## யசஸ்வி தேர்வு

- மத்திய சமூக நீதி அமைச்சகம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான 'பிம் யசஸ்வி' (PM Young Achievers Scholarship Award Scheme for Vibrant India - YASASVI) எனும் கல்வி உதவித் தொகை திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.
- அதன்படி 9 - 11ம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, பொருளாதாரத்தில் பின் தங்கிய, சீர்மரபினர் பிரிவு மாணவர்களுக்கு, நுழைவுத் தேர்வு தேர்ச்சி அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படும்.
- ஆங்கிலம், இந்தி ஆகிய 2 மொழிகளில் மட்டுமே தேர்வு நடத்தப்படும் என்று தேசிய தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்துள்ளது.
- ஆங்கிலம், இந்தியில் மட்டுமே யசஸ்வி தேர்வு நடத்தப்படுகிறது. இந்தியை மறைமுகமாக திணிக்கும் இந்த பாரபட்சமான முறையை மத்திய அரசு கைவிட வேண்டும். அரசியலமைப்பு சட்டத்தின் 8வது அட்டவணையில் உள்ள 22 மொழிகளிலும் இத்தேர்வை நடத்தி சமூக நீதியை உறுதிசெய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## கல்வியை மாற்றியமைப்பதற்கான கொள்கை

- புதிய தேசிய கல்விக் கொள்கையை வடிவமைப்பதற்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கி.கஸ்தூரிரங்கன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- அந்தக்குழு 2019இல் 484 பக்கங்கள் கொண்ட தேசிய கல்விக் கொள்கை வரைவைச் சமர்பித்தது.
- 2020 ஜுலை 29 அன்று மத்திய கேபினெட் கல்விக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது.
- தொடக்கக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி, தொழிற்பயிற்சிக் கல்வி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி ஆகியவற்றின் பல்வேறு மாற்றங்களுக்கு இந்தக் கல்விக் கொள்கை வித்திடுகிறது.
- பள்ளிக் கல்வி அமைப்பு 10+2 ஆண்டுகள் என்பதற்குப் பதிலாக, 5+3+3+4 ஆண்டுகளாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- பள்ளியில் மூன்று மொழிகளைக் கற்பிக்க வேண்டும்; சமஸ்கிருதம், அயல்நாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று இந்தக் கல்விக் கொள்கை கூறுகிறது.
- பள்ளிக் கல்வி முடித்தவர்களில் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வோரின் விகிதத்தை 2035க்குள் 50% ஆக அதிகரிப்பது இந்தக் கல்விக் கொள்கையின் நோக்கங்களில் ஒன்று.
- பட்டப்படிப்புக் காலம் நான்கு ஆண்டுகளாக மாற்றப்படும். இடையில் எந்த ஆண்டில் வேண்டுமானாலும் உரிய சான்றிதழுடன் வெளியேறலாம்.

## அடிப்படை உரிமையான கல்வி

- இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பத்தாண்டுகளுக்குள் 14 வயதுவரை உள்ள அனைவருக்கும் கட்டாய இலவசக்கல்வி அளிப்பதற்கு இந்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அரசமைப்பின் கூறு 45 இல் கூறப்பட்டுள்ளது.
- இதற்கான பயணத்தில் 2002 இல் அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 86 ஆம் திருத்தம் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.
- இந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக இந்திய அரசமைப்பின்படி 6 வயது முதல் 14 வயதிலான குழந்தைகளுக்குக் கல்வி என்பது அடிப்படை உரிமை ஆக்கப்பட்டது.
- அதே நேரம் இதை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு தனிச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் 86 ஆம் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.
- அதன்படி, 2005இல் கல்வி உரிமைச் சட்டத்துக்கான வரைவு தயாரிக்கப்பட்டது. இதையடுத்து கல்வி உரிமைச் சட்டம் என்றழைக்கப்படும் இலவச - கட்டாய கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் 2009 ஆம் ஆண்டில் நிறைவேறியது.

- இந்தச் சட்டத்தின் மூலம் 6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகள் தமது அருகமைப் பள்ளிகளில் சேர்க்கப்படுவதையும் அவர்கள் வயதுக்குரிய கல்வியை நிறைவுசெய்வதையும் உறுதிப்படுத்துவது அரசின் கடமையானது.
- அரசுப் பள்ளிகளில் இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்குக் கல்விக் கட்டணமோ பிற கட்டணங்களோ வசூலிக்கப்படக்கூடாது.
- கல்விக் கட்டணம் செலுத்த முடியாத காரணத்தால் எந்தக் குழந்தையும் கல்வியை இழந்துவிடக்கூடாது என்பதை உறுதி செய்வதும் அரசின் கடமை.
- எனவே, தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடங்களைப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு வழங்குவதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.
- இந்த ஒதுக்கீட்டின் மூலம் தனியார் பள்ளிகளில் சேர்க்கப்படும் குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை அரசு செலுத்திவிடும்.
- சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களுக்கு இந்த 25% ஒதுக்கீடு விதி பொருந்தாது என்று 2014 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- அரசமைப்புச் சட்டத்தின்படி கல்வியை அடிப்படை உரிமையாக ஆக்கி, அதற்கான சட்டத்தை நிறைவேற்றி பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட பிறகும் இந்தியக் குழந்தைகள் அனைவரும் தமது வயதுக்குரிய கல்வியைப் பெற்றிருப்பது இன்னும் முழுமையாக உறுதி செய்யப்படவில்லை.

## அரசுப்பள்ளிகள் மீது அக்கறை தேவை

- நம் நாடு சுதந்திரம் அடைந்த போது 12% பேர்தான் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தனர். ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போதும் இந்திய அளவிலும், மாநிலங்கள் அளவிலும் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.
- அந்த வகையில் தற்போது 74.04% பேர் (ஆண்கள் 82.14 சதவீதம், பெண்கள் 65.46 சதவீதம்) எழுத்தறிவு பெற்றவர்களாக உள்ளனர்.
- இதற்கு, மக்களிடையே எழுத்தறிவு பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டதும், அதிக அளவில் அமைக்கப்பட்டுள்ள அரசுப் பள்ளிகளும்தான் காரணங்களாகும்.
- முழுமையான எழுத்தறிவை எட்டுவதில் இன்றும் பல்வேறு இடப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலை மாற பள்ளிகளைத் தரம் உயர்த்தவும், குடிநீர், கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.
- முதல் வகுப்பில் சேர்க்கை பெறும் 100 சிறார்களில் 94 பேர்தான் ஐந்தாம் வகுப்பை முடிக்கின்றனர்.
- நடுநிலைப் பள்ளிகளில் முதல் வகுப்பில் சேர்க்கை பெறும் 100 பேரில் 86 பேர்தான் எட்டாம் வகுப்பை முடிக்கின்றனர்.
- உயர்நிலைப் பள்ளிகளில் முதல் வகுப்பில் சேர்க்கை பெறும் 100 பேரில் 82 பேர்தான் பத்தாம் வகுப்பை முடிக்கின்றனர்.
- இந்த எண்ணிக்கை மேல்நிலைப் பள்ளிகளில் 68 ஆக உள்ளது என புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.
- கடந்த இரண்டு ஆண்டுகளாக கரோனாவால் ஏற்பட்ட வேலையின்மை, பொருளாதாரச் சிக்கல் போன்றவற்றால் தனியார் பள்ளிகளைக் காட்டிலும் அரசுப் பள்ளிகளில் சேர்க்கை அதிகரித்துள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் அனைத்து வகுப்புகளிலும் மாணவ, மாணவியர் சேர்க்கை 7.5% அதிகரித்துள்ளது.
- தமிழகத்தில் 2,500 அரசுப் பள்ளிகளில் கழிவறை வசதிகள் கூட இல்லை. 20 பேருக்கு ஒரு சிறுநீர் கழிவறையும், 50 பேருக்கு ஒரு மலக்கழிவறையும் இருக்க வேண்டும் என ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.
- கரோனா பெருந்தொற்றால் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்தாலும் எதிர்வரும் காலங்களில் சேர்க்கையை அதிகரிக்கவும், சேர்க்கை பெற்றவர்களைத் தக்க வைக்கவும் அடிப்படை வசதிகளை செய்து தருவது காலத்தின் கட்டாயமாகும்.
- அடுத்ததாக, பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரண்டாம் வகுப்பை முடிக்கும் மாணவர்கள் தொடர்ந்து கல்லூரியில் சேருவதை விடுத்து, தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் சேருவது அதிகரித்து வருகிறது.

- உயர்நிலைப் பள்ளியைக் காட்டிலும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

## மும்பை தொடர் குண்டுவெடிப்பு

- 1993-ம் ஆண்டு மும்பையில் வெவ்வேறு இடங்களில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. இதில் 257 பேர் உயிரிழந்தனர். 1,400 பேர் படுகாயமடைந்தனர்.
- மும்பையின் நிழல் உலக தாதா தாவூத் இப்ராஹிம் இதற்கு மூளையாக செயல்பட்டது தெரியவந்தது. டைகர் மேமன், யாகூப் மேமன் ஆகிய இருவரும் இத்திட்டத்தை செயல்படுத்தினர்.
- 2015-ல் யாகூப்மேமன் தூக்கிலிடப்பட்டார். ஆனால், தாவூத் மற்றும் டைகர் ஆகிய இருவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.
- டி கம்பெனி என்ற பெயரில் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து சர்வதேச அளவில் தீவிரவாத குழுவை நடத்தி வரும் தாவூத் இப்ராஹிமை சர்வதேச தீவிரவாதி என ஐ.நா.சபை அறிவித்துள்ளது.
- ஆயுத கடத்தல், போதைப்பொருள் கடத்தல், தீவிரவாத தாக்குதல் நடத்துதல், சட்டவிரோத பணப்பரிவர்த்தனை, அல்காய்தா, லஷ்கர்-இ-தொய்பா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு நிதி திரட்டுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாக என்ஐஏ குற்றம் சாட்டி உள்ளது.

## ஒட்டுக்கேட்பும் எல்லையும்

- 'பறக்கும் குதிரை', 'ட்ரோஜன்' வைரஸ் என்றெல்லாம் அழைக்கப்படும் 'பெகாஸஸ்' என்கிற ஒட்டுக்கேட்கும் மென்பொருளை மத்திய அரசோ, அரசு தொடர்பான நிறுவனங்களோ வாங்கியதா என்பது முதல் கேள்வி.
- அதைப் பயன்படுத்தி தனி நபர்கள் பலருடைய தனிப்பட்ட உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதா என்பது இரண்டாவது கேள்வி. 'இந்த கேள்விகளுக்கு பாதுகாப்பு காரணங்களால் பதிலளிக்க முடியவில்லை' என்பதுதான் அப்போதும், இப்போதும் மத்திய அரசின் அணுகுமுறையாக இருந்து வருகிறது.

### ரவீந்திரன் குழு

- உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஆர்.வி.ரவீந்திரனின் தலைமையில் 'பெகாஸஸ்' குறித்து விசாரிக்க உச்சநீதிமன்றம் ஒரு குழுவை அமைத்தது.
- சோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 29 அறிதிறன்பேசிகளில் ஐந்தில் வித்தியாசமான மென்பொருள் ஒன்று நுழைந்திருப்பதாகவும், அது பெகாஸஸ் என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்றும் நீதிபதி ரவீந்திரன் குழு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்தது.
- பெகாஸஸ் ஒட்டுக்கேட்கும் மென்பொருள் இந்தியாவில் அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தப்பட்டதா என்கிற கேள்விக்கு, 'இல்லை' என்று தெரிவிக்க முடியவில்லை என்பதும் நீதிபதி ரவீந்திரன் தலைமையிலான குழுவின் பதில்.

### பெகாஸஸ்

- நாட்டின் பாதுகாப்புக்காகவும், பயங்கரவாத அமைப்புகளை எதிர்கொள்ளவும் ஒட்டுக்கேட்பு மென்பொருள்களை பயன்படுத்துவது சட்டவிரோதமல்ல என்பது இந்தியா மட்டுமல்லாமல், பல்வேறு நாட்டு அரசுகளும் முன்வைக்கும் கருத்து.
- பெகாஸஸ் மென்பொருளின் தயாரிப்பாளர்களும், விற்பனையாளர்களுமான இஸ்ரேல் ராணுவத்துடன் தொடர்புள்ள 'என்எஸ்ஓ' என்கிற நிறுவனம் இதுகுறித்து கருத்துத் தெரிவித்திருக்கிறது.
- பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டும்தான் 'பெகாஸஸ்' ஒட்டுக்கேட்பு மென்பொருளைத் தாங்கள் தயாரித்து பிற நாடுகளுக்கு வழங்குகிறோம்.
- பெகாஸஸ் ஒட்டுக்கேட்பு மென்பொருள் இந்தியாவுக்கு மட்டுமல்ல 34 நாடுகளுக்கு இஸ்ரேலின் 'என்எஸ்ஓ' குழுமத்தால் வழங்கப்பட்டிருக்கிறது.
- அதில் பல்வேறு நாடுகளிலும் பயங்கரவாதிகள் மட்டுமல்லாமல், அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் உள்ளிட்டவர்களின் அறிதிறன் பேசிகளில் நுழைக்கப்பட்டிருக்கிறது.
- அலைக்கற்றை மூலம் குறிப்பிட்ட அறிதிறன் பேசிகளில் நுழைய முடியும் என்பதால்தான், 'பெகாஸஸ்' 'பறக்கும் குதிரை' என்றும், 'ட்ரோஜன் வைரஸ்' என்றும் அழைக்கப்படுகிறது.

- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஃபர்பிடன் ஸ்டோரிஸ் என்கிற பத்திரிக்கை, 'பெகாஸஸ்' குறித்து முதலில் தகவல் வெளியிட்டது. சர்வதேச அளவில் 'பெகாஸஸ்' ஒட்டுக்கேட்பு மென்பொருள் நுழைந்திருக்கும் அரை லட்சம் கைப்பேசி எண்கள் தங்களுக்குக் கிடைத்திருப்பதாகத் தெரிவித்தது.
- அதைத் தொடர்ந்து, 'அம்னஸ்டி இனடர்நேஷனல்' அமைப்பும் பெகாஸஸ் ஒற்றுவலை உலகத்தை அறிவித்தது.
- அதைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள ஓர் இணைய இதழ் உள்பட, உலகத்திலுள்ள 17 முக்கிய பத்திரிக்கைகள் நடத்திய விசாரணையில், 'பெகாஸஸ்' வலையில் யாரெல்லாம் சிக்கியிருக்கிறார்கள் என்கிற புள்ளிவிவரங்கள் கசிந்தன.
- இந்தியாவில் 300-க்கும் அதிகமானோர் 'பெகாஸஸ்' ஒட்டுக்கேட்பு மென்பொருள் வலையில் சிக்கியிருக்கிறார்கள். அதில் அரசியல் கட்சித் தலைவர்கள், மூத்த அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் என்று பலரும் காணப்படுகிறார்கள்.
- இது குறித்த உண்மைத்தன்மை நிரூபிக்கப்படவில்லை என்றாலும், அந்த ஐயப்பாட்டை மத்திய அரசு அகற்றவில்லை என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

## இணையவழி மோசடிகளைத் தடுக்க.... செய்யக் கூடாதவையும் செய்ய வேண்டியவையும்

**செய்யக்கூடாதவை...**

- குறுஞ்செய்தி, மின்னஞ்சலில் வரும் அறிமுகமில்லாத 'லிங்க்' களை ஆராயாமல் தொடரக்கூடாது.
- வங்கி ஏடிஎம் அட்டை எண், பணப் பரிமாற்றத்துக்கான ரகசிய எண் (ஓடிபி) உள்ளிட்ட ரகசிய தகவல்கள் எதையும் அறிமுகம் இல்லாத நபரிடம் பகிரக்கூடாது.
- 'வங்கியில் இருந்து பேசுகிறோம்' என முகாந்திரம் இல்லாத கைப்பேசி எண்ணில் இருந்து வரும் அழைப்புகளை நம்பக்கூடாது.
- இணையவழி பணப்பரிவர்த்தனைக்கான ஓடிபி ரகசிய எண்ணும், யுபிஐ எண்ணும், பணத்தை அனுப்புவதற்கு மட்டுமே தேவை. மற்றவரிடமிருந்து பணத்தைப் பெறுவதற்கு அவை தேவையில்லை. எக்காரணத்தைக் கொண்டும் அந்த எண்களை மற்றவர்களிடம் தெரிவிக்கக் கூடாது.
- ஏடிஎம் அட்டையை அடையாளம் தெரியாத நபர்களிடம் வழங்கக்கூடாது. அந்த அட்டைகளில் ரகசிய எண்ணை எழுதிவைக்கக் கூடாது.
- ஏடிஎம்-களில் பணம் எடுக்க மூன்றாம் நபரின் உதவியை நாடக்கூடாது.
- குறுஞ்செய்தி, மின்னஞ்சல் வாயிலாக வரும் 'லிங்க்' கள் மூலமாக எந்தவொரு செயலியையும் பதிவிறக்கம் செய்யக்கூடாது.
- கைப்பேசி திரையை மற்றவர்களுக்குப் பகிரும் வகையிலான செயலிகளைப் பதிவிறக்கம் செய்யக்கூடாது.
- பணத்தை அனுப்புவதற்கு மட்டுமே 'க்யூஆர் கோட்' அவசியம். மற்றவரிடம் இருந்து பணத்தைப் பெறுவதற்கு க்யூஆர் கோடை ஸ்கேன் செய்ய வேண்டிய அவசியமில்லை.
- கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி, நண்பர்களின் விவரங்கள் உள்ளிட்டவற்றை சமூக வலைதளங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் வெளிப்படையாகப் பகிர்தல் கூடாது.
- 'பரிசு பெற்றுள்ளீர்கள்', 'வேலை கிடைத்துவிட்டது' என்பன போன்ற குறுஞ்செய்திகளையும், மின்னஞ்சல்களையும் ஒருபோதும் நம்பக்கூடாது.
- வேலை வேண்டுமெனில் இவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்று கூறும் நபர்களை நம்பி ஏமாறக்கூடாது.
- பாதுகாப்பில்லாத வலைதளங்கள் வாயிலாகப் பணப் பரிவர்த்தனையை மேற்கொள்ளக்கூடாது.
- வங்கி அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டு வரும் நபர்களின் அடையாள அட்டையை உறுதி செய்யாமல் எந்தவிதப் பணப் பரிவர்த்தனையையும் மேற்கொள்ளக்கூடாது.
- அரசு சேவைகளையும், மானியங்களையும் பெறுவதற்குப் பணம் செலுத்த வேண்டும் என்று வரும் அழைப்புகளையும் குறுஞ்செய்திகளையும் நம்பக்கூடாது.
- வீட்டில் இருந்தே வேலை என்று வரும் குறுஞ்செய்திகளையும் மின்னஞ்சல்களையும் நம்பக்கூடாது.
- வேலை உள்ளிட்டவை சார்ந்த இணையவழி ஒப்பந்தங்களில் வழக்குரைஞரின் ஆலோசனையின்றி கையொப்பமிடக்கூடாது.

- வங்கிக்கடன் உள்ளிட்டவற்றைப் பெறுவதற்குப் பணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

### செய்ய வேண்டியவை...

- கேஒய்சி விவரங்களைப் புதுப்பித்தல் தொடர்பான குறுஞ்செய்திகளின் உண்மைத்தன்மையை வங்கி அதிகாரிகளிடம் ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும்.
- பணமோசடி முயற்சி குறித்து அருகில் உள்ள இணையவழி குற்றத் தடுப்பு காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும்.
- இணையவழி பணப் பரிவர்த்தனையின் போது வங்கிக் கணக்கு எண், யுபிஐ எண் உள்ளிட்டவற்றைச் சரிபார்த்துக் கொள்வது அவசியம்.
- உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து பணம் மோசடி செய்யப்பட்டிருப்பது தெரியவந்தால், உடனடியாக வங்கியைத் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும். விரைந்து வங்கிக் கணக்கை முடக்குவதன் வாயிலாக கூடுதல் நிதியிழப்பைத் தடுக்க முடியும்.
- கைப்பேசியின் சிம் கார்டு தொலைந்துவிட்டால், உடனடியாக சம்பந்தப்பட்ட தொலைத்தொடர்பு நிறுவனத்தைத் தொடர்புகொண்டு அந்த எண்ணை முடக்க வேண்டும்.
- இணையவழியில் பொருள்களை வாங்கும்போது, விற்பனையாளரின் நம்பகத்தன்மையை உறுதி செய்து கொள்வது அவசியம். நம்பகமில்லா விற்பனையாளரிடம் முன்பணம் செலுத்தக்கூடாது.
- வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனத்தை நேரடியாகத் தொடர்பு கொண்டு வேலைவாய்ப்பு குறித்த தகவல்களை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
- பாதுகாப்பான வலைதளங்களில் இருந்து மட்டுமே பொருள்களை வாங்க வேண்டும்.
- பாதுகாப்பான ‘வைஃபை’ இணைய வசதியை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

## மக்கள்தொகை கட்டுப்படுத்த கோரி பொதுநல மனு

### வேலைவாய்ப்பின்மை, வறுமை

- நாளுக்குநாள் பெருகி வரும் மக்கள்தொகை பல்வேறு சிக்கல்களுக்கு வழிவகுத்துள்ளது.
- இயற்கை வளங்கள் குறிப்பிட்ட வரம்புக்குள் இருக்கும் நிலையில் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் தொகை அதிகரித்து வருவது கடும் பாதிப்புகளை உருவாக்கும்.
- குறிப்பாக, உணவு விநியோகம், சுகாதார பராமரிப்பு ஆகியவற்றில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதுமட்டுமின்றி, வேலை வாய்ப்பின்மை, வறுமை பெருகவும் இது முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

### வாழ்வாதார, கல்வி உரிமை

- பல கோடி இந்தியர்களின் வாழ்க்கைத் தரத்தை மோசமாக பாதிக்கும் இப்பிரச்சினை ஒரு கட்டத்தில் தாங்க முடியாத நிலைக்கு சென்றுவிடும். எனவே இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- இப்பிரச்சினைக்கு தீர்வு காணாத வரை அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள வாழ்வாதார உரிமை, கல்விக்கான உரிமைகளை பெறுவது கேள்விக் குறியாகவே தொடரும்.
- எனவே, மக்கள்தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பான விதி, ஒழுங்காற்று நெறிமுறை மற்றும் வழிகாட்டுதல்களை மத்திய அரசு உருவாக்க வேண்டும்.

### 70,000 குழந்தைகள் பிறப்பு

- தற்போது இந்தியாவின் மக்கள் தொகை 139 கோடியை நெருங்கியுள்ளது. இது மொத்த உலகமக்கள் தொகையில் 17.8 சதவீதமாகும். ஆனால், உலகளவில் இந்தியா 2 சதவீத வேளாண் நிலங்களையும், 4 சதவீத குடிநீரை மட்டுமே உள்ளடக்கியுள்ளது.
- அமெரிக்காவில் ஒரு நாளைக்கு 10,000 குழந்தைகள் மட்டுமே பிறக்கும் நிலையில், இந்தியாவில் ஒரு நாளைக்கு 70,000 குழந்தைகள் பிறக்கிறது.

### குடும்பக் கட்டுப்பாடு

- குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தேசிய அளவில் செயல்படுத்திய முதல் நாடு இந்தியா.

- 1952இல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்து.
- நாளடைவில் இனப்பெருக்க நலன் தாய் – சேய் நலன், பிரசவ கால மரணங்களைக் குறைப்பது போன்றவற்றிலும் அக்கறை செலுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டது.
- குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு ஆரம்பத்தில் எதிர்பார்த்த அளவுக்கு வரவேற்பு இல்லை. ஆனால், காலப்போக்கில் ‘சிறு குடும்பம், சீரான வாழ்வு’ என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்பதைக் குடும்பநலக் கணக்கெடுப்புகள் உணர்த்தின.
- மக்கள்தொகைப் பெருக்கத்துக்குக் காரணமானவையாக குழந்தைத் திருமணம், இரண்டு குழந்தைகளுக்கு இடையில் போதிய இடைவெளி இல்லாமல் இருப்பது, கருத்தடை சாதனங்களைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை உள்ளிட்ட விஷயங்கள் கண்டறியப்பட்டு, அவற்றைச் சீராக்கத் தேசிய அளவிலான கொள்கைகள் வகுக்கப்பட்டன.
- திருமணமான பெண்கள் மத்தியில் கருத்தடை குறித்த விழிப்புணர்வு அதிகரித்தது. ‘நாம் இருவர், நமக்கு இருவர்’ என்கிற கருத்தை வலியுறுத்தி பல்வேறு தளங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் அரசால் முன்னெடுக்கப்பட்டன.
- நீடித்த கருத்தடை, தற்காலிகக் கருத்தடை ஆகிய இரண்டு வடிவங்களில் கருத்தடை சாதனங்களும் முறைகளும் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.
- பெண்கள் பயன்படுத்தக்கூடிய கருத்தடை மாத்திரைகளும் ஆண்களுக்கான ஆணுறைகளும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன.
- உடலுக்குள் செலுத்தும் வகையிலான ‘காப்பர் டி’, ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்கான கருத்தடைக்க உதவுகிறது.
- நிரந்தர அல்லது நீடித்த கருத்தடைக்கான அறுவை சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு மக்கள்தொகைப் பெருக்கம் வெகுவாகக் குறைந்ததுடன் பெண்களின் பேறுகால நலன் மேம்பட்டது.
- கருத்தடை அறுவைசிகிச்சை பெண்ணைவிட ஆணுக்குதான் எளிது. ஆனால் அதற்கு ஆண்கள் தயங்குவதால் பெண்களே கருத்தடை அறுவைசிகிச்சைக்க அதிகமாக உட்படுத்தப்படுகிறார்கள் என்கிறது தேசியக் குடும்பநலக் கணக்கெடுப்பு. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களில் இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

## விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர்

- சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் 1961 இல் விண்வெளியை அடைந்த முதல் மனிதர் என்னும் பெருமையைப் பெற்றார்.
- இது நடந்து 23 ஆண்டுகள் கழித்து, விண்வெளிக்கு மனிதரை அனுப்பும் முயற்சியில் இந்தியா வெற்றிபெற்றது.
- இந்தியாவின் தடத்தை விண்வெளியில் பதித்தவர் ராகேஷ் சர்மா.
- சோவியத் ஒன்றியத்தின் உதவியுடன் 1984 ஏப்ரல் 2 அன்று அவர் விண்வெளிப் பயணம் மேற்கொண்டார். விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் எனும் பெருமைக்குச் சொந்தக்காரராகத் திகழ்கிறார் ராகேஷ் சர்மா. அதற்குப் பிறகு இப்போதுவரை இந்தியக் குடிநபர் எவரும் விண்வெளிக்குச் செல்லவில்லை.
- ராகேஷ் சர்மா சோயுஸ்டி-11 விண்கலத்தின் மூலம் விண்வெளிக்குச் சென்றபோது அவருடைய வயது 35. விண்வெளியிலிருந்த சால்யுட் – 7 விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் தங்கிப் புவி அறிவியல், உயிரி மருத்துவம், உலோகவியல் ஆகியவை சார்ந்து அவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.
- நிறப்பிரிகை கேமராவைக் கொண்டு இந்தியாவை அவர் எடுத்த ஒளிப்படங்கள் மதிப்புமிக்கவை. விண்வெளியில் 13 ஆய்வுகளை அவர் மேற்கொண்டார்.
- ராகேஷ் சர்மா விண்வெளியில் 7 நாட்கள் 21 மணி 40 நிமிடங்கள் இருந்தார். விண்வெளியிலிருந்தபோது ராகேஷ் சர்மாவுடன் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி தொலைபேசியில் உரையாடியது வரலாற்றுப் புகழ்பெற்ற நிகழ்வு.
- ‘இந்தியா எப்படிக் காட்சியளிக்கிறது’ எனப் பிரதமர் அவரிடம் கேட்டார். அதற்கு ராகேஷ் சர்மா ‘சாரே ஜஹான்சே அச்சா’ என்று பதிலுரைத்தார்.
- உலகில் இந்தியாவே சிறந்ததாகக் காட்சியளிக்கிறது என்பது அதன் அர்த்தம்.

## தாமிரபரணி - நம்பியாறு - கருமேனியாறு

- திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டம் கடந்த 2008-ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத் தொடரில் அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதியால் அறிவிக்கப்பட்டது.

- இத்திட்டத்தின்படி தாமிரபரணி ஆற்றிலிருந்து கடலில் உபரியாக கலக்கும் 13,578 மில்லியன் கன அடி வெள்ளநீரில் இருந்து, கன்னடியன் அணைக்கட்டு வழியாக 2,765 மில்லியன் கனஅடி நீரை கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளுடன் இணைக்கும் திட்டத்துக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.
- இத்திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 67,075 கி.மீ., தூத்துக்குடி மாவட்டத்தில் 8.10 கி.மீ நீளம் என மொத்தம் 75.175 கி.மீ நீளத்துக்கு வெள்ளநீர் கால்வாய் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்துவதால் 17,002 ஹெக்டேர் புதிய பாசனப் பரப்பு உட்பட 23,040 ஹெக்டேர் நிலங்கள் (56,933 ஏக்கர்) பாசன உறுதி பெறும்.

### புதிய கொடி

பிரதமர் மோடி மேலும், கூறுகையில், "இந்தியாவில் சத்ரபதி வீர சிவாஜி மிக வலுவான கடற்படையை உருவாக்கி வைத்திருந்தார். அது எதிரிகளை ஓட்டம் பிடிக்க வைத்தது. ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்தபோது, இந்திய கப்பல்கள் மற்றும் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகத்தை கண்டு மிரண்டனர். அதனால் இந்திய கடற்சார் பலத்தை முறியடிக்க அவர்கள் முடிவு செய்தனர். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் சட்டங்களை இயற்றி இந்திய கப்பல்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதித்தனர். இந்திய கடற்படை கொடியில் இதுநாள் வரை இருந்துவந்த அந்த அடிமைத்தனத்தின் அடையாளம் தற்போது நீக்கப்பட்டுள்ளது. இந்திய கடற்படை, தற்போது புதிய கொடியை பெற்றுள்ளது. புதிய கடற்படை கொடி இனி கடலிலும் வானிலும் பறக்கும்" என்றார்.

## 5 ஜி தொழில்நுட்பம்

- இருபத்தொன்றாம் நூற்றாண்டில் மிகப் பெரும் வளர்ச்சி கண்டு வருகிறது. தொலைத் தொடர்புத்துறை, முதல் தலைமுறையில் தொடங்கி, தற்போது நான்காம் தலைமுறை (4ஜி) அலைக்கற்றில் பயன்பாட்டில் உள்ளது. விரைவில் ஐந்தாம் தலைமுறை (5ஜி) அலைக்கற்றை பயன்பாட்டுக்கு வரவுள்ளது.
- 5ஜி அலைக்கற்றை ஏலத்தை மத்திய அரசு அண்மையில் நடத்தியது.
- அலைக்கற்றையானது ரிலையன்ஸ் ஜியோ, பார்தி ஏர்டெல், வோடஃபோன்-ஐடியா, அதானி ஆகிய நிறுவனங்களுக்கு ரூ.1,50,173 கோடிக்கு ஏலம் விடப்பட்டது.
- தொழிலதிபர் முகேஷ் அம்பானிக்கு சொந்தமாக ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம், ரூ.88,078 கோடி மதிப்பிலான அலைக்கற்றையைப் பெற்றது.
- பார்தி ஏர்டெல் நிறுவனமானது ரூ.43,084 கோடி மதிப்பிலான அலைக்கற்றைகளை ஏலத்தில் எடுத்தது.
- வோடஃபோன்-ஐடியா நிறுவனம் ரூ.18,784 கோடிக்கும்,
- அதானி நிறுவனம் ரூ.212 கோடிக்கும் அலைக்கற்றைகளை வாங்கியுள்ளன.
- தீபாவளி முதல் சென்னை, தில்லி, மும்பை, கொல்கத்தா ஆகிய நகரங்களில் 5 ஜி சேவையை வழங்கவுள்ளதாக ஜியோ நிறுவனம் அறிவித்துள்ளது.
- அதே வேளையில் 6ஜி குறித்த பேச்சுகளும் தொடங்கி விட்டன. நாட்டில் 6ஜி தொழில்நுட்பம் 2030-ம் ஆண்டுக்குள் அறிமுகப்படுத்தப்படும் எனப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் தெரிவித்தார்.

### சாதகங்கள்

### அதிவேகம்

- கைப்பேசி உள்ளிட்டவற்றின் செயல்திறன் 4ஜி-யை காட்டிலும் 5ஜி தொழில்நுட்பத்தில் வேகமாக இருக்கும்.
- படங்கள், காணொலிகள், இசைத் தொகுப்புகள் உள்ளிட்டவற்றை சில விநாடிகளில் பதிவிறக்கம் செய்துவிட முடியும்.
- இணையசேவை வேகமாகக் கிடைக்கும் என்பதால், தானியங்கி இயந்திரங்கள், ரோபோக்கள் உள்ளிட்டவற்றின் செயல்பாடும் மேம்படும்.

### அதிக அலைவரிசை

- 5ஜி அலைக்கற்றையின் அலைவரிசை (பேண்ட்விட்த்) அதிகமாக இருப்பதால், அதிகப்படியான தரவுகளைக் குறைந்த நேரத்தில் பகிர முடியும். அதனால் இணைய சேவையின் வேகம் அதிகரிக்கும்.

### புத்தாக்கம் மேம்படும்

- ட்ரோன்கள், சென்சார் சார்ந்த பயன்பாடுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

- தற்போதைய நிலையில் 5ஜி அலைக்கற்றையின் வருகை, தொழில் நுட்பம் சார்ந்த புத்தாக்கச் சூழலை மேலும் வலுப்படுத்தும்.
- மக்கள் சந்தித்து வரும் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் எளிதில் காணப்படும்.

**அதிக தரவுக் கையாளுகை**

- 4ஜி அலைக்கற்றையுடன் ஒப்பிடுகையில் 5ஜி அலைக்கற்றையானது சுமார் 100 மடங்கு அதிக தரவுகளைக் கையாளும் திறன் கொண்டது.
- அதன் காரணமாக கைப்பேசி, மடிக்கணினி, கணினி உள்ளிட்டவற்றின் செயல்பாடு மேம்படும். இணையசேவையின் திறனும் மேம்படும்.

**விரைவான தரவுப்பகிர்வு**

- செயற்கை நுண்ணறிவு, மெய்நிகர் தொழில்நுட்பம் உள்ளிட்டவை 4ஜியை காட்டிலும் 5ஜி-யில் மிகச் சிறப்பாகச் செயல்படும்.
- இணையத்தில் தரவுகளைத் தேடுவதும் மிக சுலபமாகும். அதில் எந்தவித தாமதமும் ஏற்படாது.
- 5ஜி தொழில்நுட்பத்தின் மூலமாக தரவுகளை ஓரிடத்தில் இருந்து, மற்றோர் இடத்துக்கு மிக வேகமாகப் பகிரமுடியும்.

**தொலைத்தொடர்பு கோபுரத்தின் தேவை குறையும்**

- 4ஜி அலைக்கற்றை தொலைத்தொடர்பு கோபுரங்களை அடிப்படையாகக் கொண்டவை. குறிப்பிட்ட வெவ்வேறு நிறுவனங்களின் கோபுரங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது, இணைய சேவையின் வேகத்தைக் குறைத்துவிடுகிறது.
- 5ஜி அலைக்கற்றைக் கருவிகளைத் தெருவிளக்கு கம்பங்களிலேயே பொருத்திவிட முடியும். அதனால், இணையசேவையின் வேகம் அதிகரிக்கும்.

**பாதகங்கள்**

**குறைந்த தொலைவு**

- 4ஜி அலைக்கற்றையுடன் ஒப்பிடுகையில் 5ஜி அலைக்கற்றை குறைந்த தொலைவுக்கே பயணிக்கும். கட்டடங்கள், மரங்கள், மழை உள்ளிட்டவை 5ஜி அலைக்கற்றையின் வேகத்தைக் குறைக்க வாய்ப்புள்ளது.
- அதன் காரணமாக 5ஜி அலைக்கற்றையை வழங்கும் கருவிகளை அதிக இடங்களில் பொருத்த வேண்டிய சூழல் ஏற்படும்.

**பேட்டரி வலுவிழப்பு**

- கைப்பேசி உள்ளிட்டவற்றின் பேட்டரி திறனை 5ஜி அலைக்கற்றை வேகமாக குறைத்து விடுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.
- அதன் காரணமாக பேட்டரியின் ஆயுள் காலம் குறைவதோடு கைப்பேசியை அடிக்கடி மாற்ற வேண்டிய சூழல் ஏற்படலாம் என்றும் கூறுகின்றனர்.
- அதனால் 5ஜி தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு பேட்டரியின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் கைப்பேசி நிறுவனங்கள் ஈடுபட வேண்டியது அவசியம் என்றும் நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

**இணையவழி குற்றங்கள்**

- 5ஜி அலைக்கற்றையின் அலைவரிசை அதிகமாக இருப்பதால், அதில் இருந்து தரவுகளை எளிதில் திருட முடியும். அதன் காரணமாக இணையவழி குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.
- 5ஜி அலைக்கற்றையின் வாயிலாக ஒரே நேரத்தில் பல்வேறு கருவிகளைத் தொடர்புகொள்ள முடியும் என்பதால், அவற்றில் இருந்து தரவுகளைத் திருடுவதும் எளிதாகும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.
- அத்தகைய தரவுத் திருட்டைத் தடுப்பதற்கான பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கூடுதல் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**பதிவேற்ற வேகம் குறைவு**

- 5ஜி அலைக்கற்றையைப் பயன்படுத்தி பல்வேறு தரவுகளைக் குறைந்த நேரத்தில் பதிவிறக்கம் செய்துவிட முடியும் என்றாலும், தரவுகளை இணையத்தில் பதிவேற்றம் செய்வதற்கு நீண்ட நேரம் ஆகும். விநாடிக்கு 100 மெகாபைட் (எம்.பி.) என்ற அளவிலேயே பதிவேற்ற வேகம் இருக்கும்.

### அதீத செலவினம்

- 5ஜி அலைக்கற்றைக் கருவிகளை அதிக அளவில் பொருத்த வேண்டியிருப்பதால், தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கான முதலீடும் செலவினமும் அதிகரிக்கும்.
- 5ஜி கருவிகளின் பராமரிப்புச் செலவும் அதிகமாக இருக்கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். வாடிக்கையாளர்களும் 5ஜி சேவையைப் பெற 5ஜி தொழில்நுட்பம் செயல்படும் புதிய அறிதிறன்பேசியை வாங்க வேண்டும்.

### சமச்சீரற்ற வளர்ச்சி

- 5ஜி தொழில்நுட்பம் தொடக்கத்தில் நகரங்களில் மட்டுமே பயன்பாட்டுக்கு வரவுள்ளது. அத்தொழில்நுட்பம் நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களையும் சென்றடைய இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
- இத்தகைய சூழல் ஊரக-நகர்ப்புறப் பகுதிகளுக்கு இடையேயான இடைவெளியை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## உய்கர் இன அழிப்பு

- சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்கர் இன முஸ்லிம்கள் மீதான மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை, சீனாவுக்கு சர்வதேச அளவில் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.
- ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்கர், கசக்ஸ், கிர்கிஸ் உள்ளிட்ட இனச் சிறுபான்மையினர் 2.6 கோடி பேர் வசிக்கின்றனர். இவர்களில் 1.2 கோடி பேர் உய்கர் முஸ்லிம்கள்.
- சீனாவில் உள்நாட்டு போரின் முடிவில் ஜின்ஜியாங் மாகாணம் சீன அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அப்போது ஜின்ஜியாங் மக்கள் தொகையில் 75 சதவீதம் பேர் உய்கர் இன மக்கள்.
- சீனாவின் பெரும்பான்மை சமூகமான ஹான் சீனர்கள் வெறும் 7 சதவீதமே இருந்தனர்.
- ஜின்ஜியாங்கில் பெரும்பான்மையாக உள்ள தாங்கள் பெய்ஜிங்கிலிருந்து சீனர்களால் ஆளப்படுவதை உய்கர் இன மக்கள் விரும்பவில்லை. எனவே, அவர்களில் ஒரு தரப்பினர் 'கிழக்கு துர்கிஸ்தான்' என்ற பெயரில் தனி நாடு கோரிக்கையை வலியுறுத்தத் தொடங்கினர்.
- இதனால் இரு இன மக்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் நடைபெற்று வந்தது. பின்னர், படிப்படியாக ஹான் சீனர்கள் ஜின் ஜியாங்கில் குடியேற்றம் செய்யப்பட, இப்போது உய்கர் இன மக்கள் எண்ணிக்கை 45% ஆகக் குறைந்து விட்டது. ஹான் சீனர்களின் எண்ணிக்கை 42% ஆக அதிகரித்து விட்டது.
- 2013-இல் பெய்ஜிங்கில் உய்கர் இனத்தைச் சேர்ந்த மூவர் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.
- 38 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவத்துக்கு கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கம் பொறுப்பேற்றது. இந்தத் தாக்குதலையடுத்து உய்கர் இன மக்கள் மீதான அடக்குமுறையைத் தீவிரப்படுத்த ஆரம்பித்தது சீனா.
- உய்கர் இன மக்கள் சுமார் 10 லட்சம் பேர் படிப்படியாக அங்கு அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். ஆரம்பத்தில் தடுப்பு முகாம்களே அமைக்கப்படவில்லை எனக் கூறிய சீனா, அவற்றின் செயற்கைக்கோள் புகைப்படங்கள் வெளியான பின்னர் ஒப்புக்கொண்டது.
- பிரிவினைவாத, பயங்கரவாத சிந்தனைகளிலிருந்து திசைதிருப்பும் வகையில் உய்கர் இன மக்களுக்கு அங்கே கல்விப் பயிற்சி அளிக்கப்படுவதாக சீனா குறியது.
- ஆனால், உய்கர் மக்களின் அடையாளங்களை அழித்து, கம்யூனிஸ்ட் கட்சியின் விசுவாசிகளாக அவர்களை மாற்ற சீனா கட்டாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாயின.
- உய்கர் உள்ளிட்ட முஸ்லிம் குழுக்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்திருப்பது மனித குலத்துக்கு எதிரான குற்றமாகும் என்றும், இது தொடர்பாக உலக நாடுகள் வினையாற்ற வேண்டும் எனவும், தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கையை வைத்து ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் சீனாவுக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்படலாம். பொதுச்சபை தீர்மானம் வெறும் கண்டனத்தை மட்டும் தெரிவிக்க முடியுமே தவிர, சீனாவுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதற்கு அதிகாரம் இல்லை.
- ஒருமதச் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த 10 லட்சம் பேரை தடுப்பு முகாம்களில் அடைத்து வைப்பதை நாகரிக சமுதாயம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. சீனா தன்னை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய நேரம் இது.

SURESH

## புதிய தலைவர் கல்யாண்

- இந்திய கால்பந்து கூட்டமைப்பு (ஏ.ஐ.எப்.எப்.) தலைவராக பிரபுல் படேல் (65), இருந்தார். இவரது 12 ஆண்டு பதவிக்காலம் முடிந்த நிலையில், சுப்ரீம் கோர்ட் பிரபுல் படேலை நீக்கியது.
- ஏ.ஐ.எப்.எப்.,வை நிர்வகிக்க, 3 பேர் கொண்ட குழுவை (சி.ஓ.ஏ.) நியமித்தது.
- இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பி.பா), இந்திய கால்பந்து கூட்டமைப்புக்கு தடை விதித்தது.
- பிபா நெருக்கடி காரணமாக சி.ஓ.ஏ., கலைக்கப்பட, இந்தியா மீதான தடை நீக்கப்பட்டது.
- தவிர, மாநில சங்க உறுப்பினர்களை கொண்டு தேர்தல் முடிவு செய்யப்பட்டது. இந்திய அணியின் முன்னாள் கேப்டனும், சிக்கிமை சேர்ந்தவருமான பாய்ச்சங் பூட்டியா (45), முன்னாள் வீரரும், கோல்கட்டா பா,ஜ., கட்சியின் கல்யாண் சவுபே, டில்லி மாநில சங்கத் தலைவர் ஷாஜி பிரபாகரன், முன்னாள் வீர் லிங்டோ (மேகாலயா) உள்ளிட்டோர் தலைவர் பதவிக்கு மனுதாக்கல் செய்தனர்.
- நேற்று தேர்தல் நடந்தது. 34 மாநில சங்க உறுப்பினர்கள் ஓட்டளித்தனர்.

### புதிய தலைவர்

- கல்யாண் சவுபே, 33-1 என்ற கணக்கில் அமோக வெற்றி பெற்று புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.
- துணை தலைவராக கர்நாடக காங்., எம்.எல்.ஏ., மன்வேந்திரா சிங், பொருளாளராக கிபா அஜய் (அருணாச்சல பிரதேசம்) தேர்வு செய்யப்பட்டனர். செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்கு 14 பேர், போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

### முதல் வீரர்

- இதையடுத்து 85 ஆண்டுகள் இந்திய கால்பந்து வரலாற்றில் முதன்முறையாக வீரர் ஒருவர் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். கோல் கிப்பர் கல்யாண் சவுபே, சர்வதேச போட்டிகளில் பங்கேற்றது இல்லை. 17, 20 வயதுக்குட்பட்ட அணிகளில் விளையாடினார்.

## 5வது இடத்துக்கு முன்னேறியது இந்தியா

- 2021-ம் ஆண்டின் கடைசி 3 மாதங்களில், இந்தியப் பொருளாதாரம் பிரிட்டனைவிட வளர்ச்சி அடைந்ததாகவும், இதனால் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் 6வது இடத்தில் இருந்த இந்தியா, பிரிட்டனைப் பின்னுக்குத் தள்ளி 5-வது இடத்துக்கு முன்னேறியதாகவும் ப்ளூம்பெர்க் நிறுவனம் தெரிவித்துள்ளது.
- 10 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா இந்தப் பட்டியலில் 11-வது இடத்தில் இருந்தது.
- 2022-ல் இந்தியாவின் ஜிடிபி 3.5 டிரில்லியன் டாலாராகவும், பிரிட்டனின் ஜிடிபி 3.4 டிரில்லியன் டாலராகவும் உள்ளது.

### பிரெக்ஸிட்டுக்கு பிந்தைய பிரிட்டன்

- பிரிட்டன் கடந்த இரண்டு ஆண்டுகளாக பொருளாதார ரீதியாக கடும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. 2019-ல் பிரிட்டன் பிரதமராகப் பதவியேற்ற போரிஸ் ஜான்சன், 2020-ல் பிரெக்ஸிட்டை நிறைவேற்றியதால், ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறியது. இதையடுத்து, டாலருக்கு நிகரான பிரிட்டனின் நாணய மதிப்பு சரியத் தொடங்கியது.

## உச்சநீதிமன்ற சர்க்யூட் பெஞ்ச்

- தமிழகத்தை மையமாகக் கொண்டு கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி ஆகிய 6 தென் மாநிலங்களுக்கும் பொதுவாக சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் சர்க்யூட் பெஞ்சை (அமர்வு) அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது.
- திமுக எம்பியும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன், சென்னை மட்டுமின்றி நாட்டின் 4 திசைகளிலும் மும்பை, டெல்லி மற்றும் கோல்கட்டா ஆகிய இடங்களில் உச்ச நீதிமன்றத்தின் சர்க்யூட் - பெஞ்ச்களை அமைக்க வேண்டுமென நாடாளுமன்றத்தில் தனிநபர் மசோதா கொண்டு வந்தும், அந்த கோரிக்கைக்கு இன்னும் பலன் கிடைக்கவில்லை.

## நவீன இந்தியாவைக் கட்டிய பொறியாளர்

- இந்தியாவில் 'பொறியாளர்கள் தினம்' மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யா பிறந்தநாளில் கொண்டாடப்படுகிறது. பொறியாளராகவும் அறிஞராகவும் அரசியல்வாதியாகவும் அவர் தனி முத்திரையைப் பதித்திருக்கிறார்.
- மைசூரில், படித்த நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். கட்டிடப் பொறியியல் படிப்பை முடித்து, பொதுப்பணித் துறையில் வேலைக்குச் சேர்ந்தார். இந்திய நீர்ப்பாசன ஆணையத்துக்கு அழைக்கப்பட்டு, சிக்கலான நீர்ப்பாசனத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தினார்.

- விவசாயிகளுக்குப் பாசன நீர் வழங்கவும் தண்ணீர் வீணாகாமல் இருக்கவும் தடுப்பணைகளை அமைத்தார்.
- தானியங்கி வெள்ளி மதகை உருவாக்கி, அதற்குக் காப்புரிமையும் பெற்றார்.
- 1903இல் புனேவுக்கு, அருகே உள்ள கடக்வசாலா நீர்த்தேக்கத்தில் அவர் வடிவமைத்த வெள்ள மதகு நிறுவப்பட்டது. அதன் வெற்றியைத் தொடர்ந்து, இந்தியாவின் பல்வேறு நீர்த்தேக்கங்களிலும் வெள்ள மதகுகள் அமைக்கப்பட்டன.
- மைசூரின் தலைமைப் பொறியாளராக 1909-இல் நியமிக்கப்பட்டார். ஹைதராபாத்தை வெள்ளத்திலிருந்து காப்பாற்றுவதற்குத் தடுப்பு முறையை அமைத்ததால், மக்களிடம் இவருடைய செல்வாக்கு அதிகரித்தது.
- காவிரி ஆற்றின் குறுக்கே கிருஷ்ணராஜ் சாகர் அணையைக் கட்டவும், மைசூருக்கு அருகில் உள்ள சிவசமுத்திரத்தில் நீர்மின் உற்பத்தி ஆலை அமைவதற்கும் காரணமாக இருந்தார். சந்தன எண்ணெய் ஆலை, பத்ராவதி எஃகு ஆலை, சோப்பு ஆலை, உலோகத் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை, மைசூர் பல்கலைக்கழகம், பெங்களூரு பாலிடெக்னிக் உள்பட இன்னும் பலவற்றை அமைத்தார். இதன் மூலம் சிறந்த பொறியாளர், சிறந்த நிர்வாகியாகப் பெயர் பெற்றார்.
- பீஹாரில் கங்கை நதி மீது கட்டப்பட்ட மோகமா பாலத்துக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை 90 வயதிலும் வழங்கினார். 101 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த விஸ்வேஸ்வரய்யாவின் புகழை இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களும் அணைகளும் தொழிற்சாலைகளும் சொல்லிக்கொண்டிருக்கின்றன!

## மியான்மர் ராணுவ தாக்குதல்

- இந்தியாவின் அண்டை நாடான மியான்மரில் 5.44 கோடி மக்கள் வசிக்கின்றனர். அந்த நாட்டு மக்கள் தொகையில் 90 சதவீதம் பேர் புத்தமரதத்தை பின்பற்றுகின்றனர். பாமர் என்ற இன மக்கள் 70 சதவீதம் பேர் வசிக்கின்றனர்.
- அந்த நாட்டின் ராக்சைன் மாகாணத்தில் சுமார் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட அரக்கனீஸ் இன மக்கள் வசிக்கின்றனர்.
- கடந்த 2009-ம் ஆண்டில் 'அரக்கன் ஆர்மி' என்ற பெயரில் தனி ராணுவத்தை உருவாக்கி ராக்சைன் மாகாணத்தின் பெரும் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.
- இந்த சூழலில் கடந்த சில வாரங்களாக மியான்மர் ராணுவ வீரர்களுக்கும் அரக்கன் ராணுவ வீரர்களுக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது. இதன்காரணமாக மியான்மரில் இருந்து இந்தியாவின் மிசோரம் மாநிலத்தில் பலர் அகதிகளாக தஞ்சமடைந்து வருகின்றனர்.

## திட, திரவக் கழிவு நிர்வாகம்

- தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர் நீதிபதி ஏ.கே.கோயல் தீர்ப்பில் கூறியுள்ளதாவது
- மாசு இல்லாத சுற்றுச்சூழலை அளிக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் உள்ளது. 2022 - 23-ம் நிதியாண்டு பட்ஜெட் ஒதுக்கீட்டின்போது நகர்ப்புற வளர்ச்சி பெற்ற நகரசபை நிர்வாக விவகாரத் துறையின் கீழ் மேற்கு வங்க அரசு ரூ.12,818.99 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.
- ஆனால் அந்தத் தொகையை சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுப்பதற்கும், திட மற்றும் திரவக் கழிவு நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்த மேற்கு வங்க அரசு தவறியுள்ளது.
- அந்த நிதியைப் பயன்படுத்தி திடக்கழிவு மேலாண்மை வசதிகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அதைச் செய்ய மேற்கு வங்க அரசு தவறியுள்ளது.
- ரூ.3,500 கோடி அபராதத்தை மாநில அரசுக்கு விதிக்கிறோம். இந்த நிதியை மேற்கு வங்க அரசு தனி நிதியாக அடுத்த 2 மாதங்களுக்குள் டெபாசிட் செய்ய வேண்டும். இந்த நிதியை செலுத்தத் தவறும்போது கூடுலான அபராதம் விதிக்கும் நிலை ஏற்படும்.

## நாட்டின் முதல் இரவு வான் சரணாலயம் லடாக்

- லடாக்கில் அமையும் இரவு வான் சரணாலயம், சாங்தாங் வனவிலங்கு சரணாலயத்தின் ஒரு பகுதியாக லடாக்கில் உள்ள ஹான்லேயில் அமைக்கப்படும். இது இந்தியாவில் வானியல் சுற்றுலாவை அதிகரிக்கும், மேலும் இது ஆப்டிகல், இன்ஃப்ரா-ரெட் மற்றும் காமா-ரே தொலைநோக்கிகளுக்கான உலகின் மிக உயர்ந்த தளங்களில் ஒன்றாக இருக்கும்.

### அறிஞர் கருத்து

- செல்வப் பகிர்மானம் ஒருவருக்குப் பயனைத் தரும் அதே நேரத்தில், மற்ற எவருக்கும் பயனிழப்பை ஏற்படுத்தக்கூடாது என ஓர் உன்னதச் செல்வப் பகிர்மானம் குறித்துப் பொருளாதார அறிஞர் வில் பரேதோ வரையறுத்துள்ளார்.

- சுதிப்தோ முண்டல் என்ற இந்தியப் பொருளியல் வல்லுநர், அனுபவம், அனுமானங்கள் அடிப்படையில் இலவசங்களைத் தகுதிவாய்ந்த, தகுதியற்ற இலவசங்கள் என்று பிரித்து, உணவுப் பாதுகாப்பு, முதன்மை–இடைநிலைக் கல்வி, மருத்துவம், குடிநீர்–சுகாதாரம் ஆகியவற்றுக்கான செலவுகளைத் தகுதிவாய்ந்த செலவுகளாகவும், மற்ற செலவுகள் தகுதியற்ற செலவுகளாகவும் கருதப்பட வேண்டும் என்கிறார்.
- தகுதியற்ற செலவுகள் சமூகத்தில் விளைவிக்கும் பயனைவிட அதிகமாக இழப்பை ஏற்படுத்துவதாகவும், மக்கள் உழைப்பதற்கு ஊக்கம் அளிக்காததாகவும், உற்பத்தியை ஊக்குவிக்காததாகவும், விலை நிலவரங்களில் விரும்பத்தகாத மாற்றங்களை ஏற்படுத்துபவையாகவும், பொதுக்கடனை அதிகரித்து, நிகழ்காலத்தில் மட்டுமின்றி எதிர்காலச் சந்ததியினருக்கும் கடன் சுமையை அதிகரிப்பதாகவும் கருதப்படுகின்றன.
- பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஏழைகளே அதிகம் பயன்பெறுவர் என்பது தெரிந்ததே. ஏழைகளை இனங்காண முடியாத காரணத்தினால், பொது விநியோகம் ஏழை–பணக்காரர் என்ற அனைவருக்குமான திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.
- வாங்கும் சக்தி படைத்தவருக்குச் செல்லும் செலவு தகுதியற்ற செலவே. ஏழை–பணக்காரர்களுக்குக் கிடைக்கும் பயன்களின் அளவு என்ன என்று தெரிந்தால், பணக்காரர்களைத் தவிர்த்து, ஏழைகளுக்கு இன்னும் அதிகப் பயனளிக்குமாறு இத்திட்டத்தை மாற்ற முடியும்.
- ஆனால், இது அனைவருக்குமான திட்டம் என்பதால், திட்டத்தினால் பயன்பெறுபவர், இத்திட்டம் இல்லாவிடினும் நன்றாகவே வாழ்பவர் என்று பிரித்தறிவது மிகக் கடினமாகும்.
- மேலும், பல்வேறு வகைப்பட்ட நலன் அல்லது இலவசத் திட்டங்களை ஒருசேர நடைமுறைப்படுத்தும்போது, எந்தக் குறிப்பிட்ட திட்டம் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை அறிவதும் கடினம்.

**கட்சிகளின் நிலைப்பாடும் முரண்பாடும்**

- இலவசங்கள் கொடுப்பது பொருளாதார ரீதியாகச் சாத்தியமல்ல என்று தெரிந்திருந்தும் அரசியல் கட்சிகள் இலவசங்களைத் தொடர்ந்து அதிகரிக்கவே செய்கின்றன.
- ஏனென்றால், களத்தில் உள்ள மற்ற கட்சிகளின் இலவசங்கள் பற்றிய நிலைப்பாடு தெளிவுறத் தெரியாதபட்சத்தில், ஒரு கட்சி பெருவாரியான வாக்குகளைப் பெறுவதற்கான மிகச் சிறந்த அரசியல் உத்தி, தேர்தல் அறிக்கையில் இலவசங்களை அறிவிப்பதே ஆகும்.

**பூனைக்கு மணி**

- இலவசங்களைப் பொறுத்தவரை மேற்சொன்ன கோட்பாடுகளின் அடிப்படையிலேயே பெருவாரியான கட்சிகள் செயல்படுவதால், ஏறக்குறைய அனைத்து அரசியல் கட்சிகளும் இலவசங்கள் என்ற ஒரு வட்டத்துக்குள் சிக்கி கடைசியில், பூனைக்கு யாரும் மணி கட்ட முடியாமலே போய்விடுகிறது.
- மேற்கண்ட கோட்பாடுகள் மூலம் நாம் அறிய வேண்டியது என்னவெனில், பெருவாரியான கட்சிகளிடம் தகுதியற்ற இலவசங்களுக்கு எதிரான ஒருமித்த கருத்தைக் கொண்டுவந்தாலொழிய இலவசங்களை ஒழிப்பது சாத்தியமன்று.
- எனவே, அரசியல் கட்சிகளிடம் ஒருமித்த கருத்தைக் கொண்டுவரத் தேவையான முயற்சிகளைச் சீரிய முறையில் மேற்கொள்வது சிறந்த பயனைத் தரும்.
- இலவசங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலமும், வசதி படைத்தவர்கள் இலவசங்களை விட்டுக்கொடுப்பதற்கான சூழலை ஏற்படுத்துவதன் மூலமும், இலவசங்கள் தேவைப்படும் மக்களைப் பஞ்சாயத்துகள், சட்டமன்ற–நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், அரசு சாரா நிறுவனங்கள் – பொதுமக்களின் ஒத்துழைப்புடன் அடையாளம் காணுவதன் மூலமும், தரவுகள் சார்ந்த ஆதாரத்துடன்கூடிய ஆராய்ச்சிகளின் அடிப்படையில் எடுக்கப்படும் கொள்கை முடிவுகள் மூலமும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதன் மூலமும் தகுதியற்ற இலவசங்களை வெகுவாகக் குறைக்க முடியும்.

## இ-அடங்கல் முறை

- அடங்கல் வழங்குவதற்கு கணினி முறையில் இ–அடங்கல் கொடுக்கப்பட உள்ளது. ஏற்கெனவே, வருவாய்த்துறை மூலம் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ள சர்வே எண்ணில் உள்ளவாறு இ–அடங்கல் கொடுக்கும் முறை வரப்போகிறது. இதனை வைத்து விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய முடியும்.

## தரிசு நிலத்தை சரிசெய்ய ஜி-20 நாடுகள் ஒப்புதல்

- தரிசு நிலத்தை மீட்பதற்கான ஐ.நா. அமைப்பு (யுஎன்சிசிடி) சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், உலகளவில் உள்ள நிலப்பகுதியில் 40 சதவீதம் தரிசு நிலமாக கிடக்கிறது என தெரிவித்துள்ளது.

- இதன் காரணமாக 50 சதவீத மக்கள் பாதிப்படைகின்றனர். மேலும், இது உலகளாவிய மொத்த உற்பத்தி மதிப்பில் (4.4 லட்சம் கோடி அமெரிக்க டாலர்) சுமார் பாதியளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.
- 2050-ம் ஆண்டு வரை வர்த்தக தொழில்கள் தொடர்ந்து நடந்தால், தென் அமெரிக்கா கண்டம் அளவுக்கு தரிசு நிலத்தின் அளவு கூடுதலாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- உலகளவில் உள்ள மொத்த நிலப்பகுதியில் 40 சதவீதத்துக்கு மேல் விவசாய நிலங்கள் உள்ளன. மொத்த விவசாய நிலத்தில், 52 சதவீதம் தரிசு நிலமாக உள்ளன.

### காடுகள் அழிப்பு

- 80 சதவீத காடுகள் அழிந்ததற்கு விவசாயம் காரணமாக உள்ளது. கடந்த 2013-ம் ஆண்டு முதல் 2019-ம் ஆண்டு வரை விவசாயத்துக்காக சட்ட விதிமுறைகளை மீறி 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட வெப்பமண்டல காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.
- நிலப்பயன்பாடு மாற்றம் மற்றும் தரிசு நிலம் காரணமாக கார்பன் வெளியேற்றம் அளவும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

### 100 கோடி ஹெக்டேர்

- உலகம் முழுவதும் உள்ள தரிசு நிலங்களில் 100 கோடி ஹெக்டேர் தரிசு நிலங்களை 2030-ம் ஆண்டுக்குள் சரிசெய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2040-ம் ஆண்டுக்குள் தரிசுநில அளவை 50 சதவீதம் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள மொத்தநிலப்பகுதி 32.87 கோடி ஹெக்டேர். இதில் தரிசு நிலம் 9.64 கோடி ஹெக்டேர். 2030-ம் ஆண்டுக்குள் 2.6 கோடி ஹெக்டேர் தரிசு நிலங்களை மீட்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- ஐ.நா.பருவநிலை மாற்ற விதிமுறைகள் மற்றும் ரியோடிஜெனிரோ மாநாட்டு தீர்மானங்களின்படி, ஐ.நா.வின் 2021-2030-ம் ஆண்டு கால சுற்றுச்சூழல் மீட்பு நடவடிக்கைகளை அமல்படுத்தவும், நமது உலகளாவிய பருவநிலை இலக்குகளில் முன்னேற்றம் ஏற்படவும் நமது கூட்டு முயற்சிகள் உதவ வேண்டும்.

## பெட்ரோனெட்

- பெட்ரோனெட் நிறுவனமானது திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்கிறது. குஜராத் மாநிலம் தஹேஜ் மற்றும் கேரள மாநிலம் கொச்சியில் இதற்கான கட்டமைப்பை இந்நிறுவனம் கொண்டிருக்கிறது.
- 2021-22 நிதி ஆண்டில் இந்நிறுவனத்தின் வருவாய் ரூ.43,169 கோடியாகவும் நிகர லாபம் ரூ.3,352 கோடியாகவும் உள்ளது.

## ஜேம்ஸ் வெப்

- சூரிய குடும்பத்துக்கு அப்பால் உள்ள கிரகங்களை நாசா விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இந்த கிரகங்கள் 'எக்ஸோ பிளானட்' என அழைக்கப்படுகின்றன.
- 'எச்ஐபி65426 பி' என பெயரிடப்பட்ட சூரிய குடும்பத்துக்கு வெளியே உள்ள கிரகத்தை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி மூலம் படம்பிடித்து அதை அமெரிக்காவின் நாசா மையம் வெளியிட்டுள்ளது.
- 'எச்ஐபி65426 பி' கிரகம் பூமியை விட வயது குறைந்தது, ஆனால் அளவில் பெரிதாக உள்ளது. வியாழன் கிரகத்தை விட சுமார் 6 முதல் 12 மடங்கு பெரியது.
- இதன் வயது சுமார் 1.5 முதல் 2 கோடி ஆண்டுகள் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பூமியின் வயது 450 கோடி ஆண்டுகள். விஞ்ஞானிகளின் இந்த கணிப்புகள், கிரகங்களின் அளவு மற்றும் வயதை துல்லியமாக கணக்கிட உதவும் என நாசா கூறுகிறது.
- சூரிய குடும்பத்துக்கு அப்பால் சுற்றிக்கொண்டிருக்கும், வாயுக்கள் நிரம்பியுள்ள இந்த கிரகங்களை 4 விதமான ஒளிஃபில்டர்கள் மூலம் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி படம் பிடித்துள்ளது.
- விண்ணில் நட்சத்திரங்களை விட அதிக கிரகங்கள் உள்ளன என்பதை நாசாவின் கெப்லர் விண்வெளி தொலைநோக்கி ஏற்கனவே காட்டியுள்ளது.
- சூரிய குடும்பத்துக்குள்ளும், அப்பாலும் உள்ள கிரகங்களில் சில நட்சத்திரத்தை சுற்றிக் கொண்டிருக்கின்றன. சில தானாக மிதந்தபடி அண்டத்தை சுற்றிக் கொண்டிருக்கின்றன.

- கிரகங்களில் இரும்பு, கார்பன் தவிர சிலவற்றில் தண்ணீர் அல்லது பனிக்கட்டி அதிகளவில் இருக்கலாம் என நாசா மதிப்பிட்டுள்ளது.
- சூரிய குடும்பத்துக்கு அப்பால் கிரகங்கள் இருப்பது 1990-ம் ஆண்டுகளில் உறுதி செய்யப்பட்டாலும், அவை தற்போதுதான் நேரடியாக படம்பிடிக்கப்பட்டுள்ளன.
- தற்போது படம் பிடிக்கப்பட்டுள்ள எச்ஐபி 65426 பி கிரகம் அது சுற்றிக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தை விட 10,000 மடங்குக்கு மேல் மங்கலானது.
- நட்சத்திரங்களில் இருந்து வெளியேறும் ஒளி, அதனை சுற்றிக் கொண்டிருக்கும் கிரகங்களில் இருந்து வெளிப்படும் ஒளி மற்றும் வெப்ப கதிரியக்கத்தை மிஞ்சி விடுகிறது.
- இதனால் இந்த கிரகங்களில் இருந்து வெளிப்படும் பிரதிபலிப்பை படம்பிடிப்பது வானியல் நிபுணர்களுக்கு மிகவும் சிக்கலானதாக உள்ளது.
- ஆனால் இந்த பிரதிபலிப்பையும் படம் பிடிப்பதில் வெப் தொலை நோக்கி வெற்றிகரமாக செயல்படுகிறது.

## சட்டப்பணிகள் ஆணையத்தின் புதிய தலைவர் நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்

- சமூகத்தில் உள்ள விளிம்புநிலை மக்களுக்கு இலவச சட்ட சேவைகளை வழங்கும் நோக்கில் தேசிய சட்டப்பணிகள் ஆணையம் கடந்த 1987-ஆம் ஆண்டில் நாடாளுமன்ற சட்டத்தின் மூலமாக நிறுவப்பட்டது.
- உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியே அந்த ஆணையத்துக்கு வழிகாட்டித் தலைவராக செயல்படுவார். ஆணையத்தின் நிர்வாகத் தலைவராக 2-ஆவது மூத்த நீதிபதி செயல்படுவார்.
- அதன்படி, தற்போது அந்தப் பதவிக்கு டி.ஒய்.சந்திரசூட் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மும்பை உயர்நீதிமன்றத்தில் தனது வழக்குரைஞர் பணியைத் தொடங்கிய சந்திரசூட், 1998-ஆம் ஆண்டில் மூத்த வழக்குரைஞர் ஆனார். மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

## ஜன்தன் யோஜனா

- பல ஆண்டுகளாக அரசின் மானியங்களும், நல உதவித் திட்டங்களும் முழுமையாக சேர வேண்டியவர்களை சென்றடையாமல் மடைமாற்றம் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததை எப்படி தடுப்பது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தது இந்தியாவின் நிதி மேலாண்மை அமைப்புகள்.
- 2014-இல் நரேந்திர மோடி அரசு பதவிக்கு வந்தவுடன் முன்னெடுத்த முயற்சிகளில் முக்கியமானது அனைவருக்கும் வங்கிக் கணக்குத் திட்டம்.
- 1969-இல் இந்திராகாந்தி அம்மையார் 14 தனியார் வங்கிகளை தேசியமயமாக்கியபோது, சாமானியனுக்கும் வங்கிச் சேவையின் பலன் சென்றடைய வேண்டும் என்று தனது நாடாளுமன்ற உரையில் குறிப்பிட்டதை இப்போது நினைவுகூரத் தோன்றுகிறது.
- 2015 ஆகஸ்ட் மாதம் வெறும் 17.9 கோடியாக இருந்த சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கை, இப்போது 46.25 கோடியாக உயர்ந்திருக்கிறது.
- பெரும்பாலான வங்கிக் கணக்குகள் செயல்படாத கணக்குகளாக அரசுத்துறை வங்கி ஊழியர்களுக்கு சுமையாகப் போகின்றன என்கிற விமர்சனங்கள் பொய்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.
- செயல்படாத வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிவேகமாகக் குறைந்து கொண்டிருக்கின்றன.
- குடும்பங்களின் வருவாய் அதிகரிக்க அதிகரிக்க, பிரதமரின் அனைவருக்கும் வங்கிக் கணக்குத்திட்டம் மேலும் விரிவடையும்.
- அதன் மூலம் அடித்தட்டு மக்களை வங்கிகள் உள்ளிட்ட நிதிச் சேவை நிறுவனங்கள் விரைவாகச் சென்றடைய முடியும். சாமானிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அதைவிடச் சிறந்த வழி எதுவும் இல்லை.
- அனைவருக்கும் வங்கிக் கணக்குத் திட்டம், எதிர்பாராத பல பலன்களையும் வழங்கியிருக்கிறது. குறிப்பாக மகளிர் மேம்பாட்டில் அதன் பங்களிப்பு மிக அதிகம். 2015-இல் 15% மட்டுமே இருந்த மகளிரின் சேமிப்புக் கணக்குகள், இப்போது 56%-க்கும் அதிகமாகியிருக்கின்றன.
- பல்வேறு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடனுதவிக்கு அது வலுகோலியிருக்கிறது. மகளிர் தொழில்முனைவோருக்கு முத்ரா கடன் சென்றடைய உதவியாக இருக்கிறது.

- கிராமப்புறங்களிலும், சிறு நகரங்களிலும் சுயதொழிலில் ஈடுபடுவோருக்கும், இளம் தொழில்முனைவோருக்கும் ஜன்தன் திட்டம் வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்பதையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.
- அனைவருக்கும் வங்கிக் கணக்குத் திட்டமும், ஆதார் அடையாள அட்டையும், பிரதமர் மோடி அரசின் எண்ம பணப்பரிமாற்ற முனைப்பும் கிராமப்புற இந்தியாவில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

## மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் ஜிஎஸ்எல்வி ராக்கெட்டை மாற்ற முடிவு

- உலகச் சந்தையை ஈர்க்கும் நோக்கில் மீண்டும் பயன்படுத்தக்கூடிய ராக்கெட்டை வடிவமைத்து உருவாக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- தற்போது ஒரு கிலோ எடையுள்ள செயற்கைக்கோளை விண்வெளியின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த சுமார் 10 ஆயிரம் (அமெரிக்க) டாலர்கள் செலவாகிறது.
- இந்த செலவை 1,000 டாலர்களாக குறைத்தால் செயற்கைக் கோள் தயாரிப்பு மிக குறைந்த செலவில் சாத்தியமாகும். இதற்கு ஒரே வழி மீண்டும் பயன்படுத்தக்கூடிய ராக்கெட்டை உருவாக்குவதுதான்.
- இஸ்ரோவின் ஜிஎஸ்எல்வி எம்கே 3-ஐ மீண்டும் பயன்படுத்தக்கூடிய ராக்கெட்டாக மாற்ற திட்டமிட்டு இருக்கிறோம்.
- விண்ணில் ஏவப்பட்ட ராக்கெட்டை மீண்டும் பூமியில் தரையிறக்க ரெட்ரோ-உந்துசக்தி இருக்க வேண்டும். இந்தத் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தொழில்துறை, புதிய தொழில் முனைவோர்களுடன் இணைந்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய ராக்கெட்டை உருவாக்க முடிவு செய்துள்ளோம்.

### தரைப்படை வீரர்களை பாதுகாக்கும் ஏவுகணை

- ஆயுதப்படை வீரர்கள் தரை மார்க்கமாக செல்லும்போது, அவர்களின் மீது ஏவுகணைகள், டிரோன்கள் உள்ளிட்ட ஆயுதங்களின் மூலம் எதிரிகள் வான்வெளி தாக்குதல் நடத்துவதை முறியடிக்கக்கூடிய அதிநவீன ஏவுகணையை இந்தியா தயாரித்துள்ளது.
- எதிரிகளின் ஆயுதங்களை தன்னிச்சையாக கண்டறிந்து, அதை தேடிச் சென்று தாக்கி அழிப்பதே இந்த ஏவுகணையின் சிறப்பு அம்சம்.
- இதன் காரணமாகவே இதற்கு, உடனடி தாக்குதல் ஏவுகணை என பெயரிடப்பட்டுள்ளது.
- ஒடிசா மாநிலம், சந்திப்பூர் கடற்கரையில் உள்ள ஏவுகணை ஏவுதளத்தில் இருந்து நேற்று ஏவி சோதனை செய்யப்பட்டது.

## கிழக்கு லடாக் எல்லையில் படை விலக்கல்

### ஒருமித்த முடிவு

- கிழக்கு லடாக்கின் கோக்ரா – ஹாட்ஸ்பிரிங்ஸ் (பிபி15) பகுதியில் இருந்து படைகளைத் திரும்பப் பெறுவதென இருதரப்பு ராணுவ உயரதிகாரிகளின் 16-ஆவது சுற்று பேச்சுவார்த்தையில் ஒருமித்த முடிவு எட்டப்பட்டது.

### ஏற்கனவே 2 இடங்களில் படை விலக்கல்

- பாங்காங் ஏரியின் வடக்கு, தெற்கு கரைகளில் இருந்தும் கோக்ரா பகுதியின் பேட்ரோலிங் பாய்ண்ட் 17-இல் இருந்தும் கடந்த ஆண்டு இரு நாடுகளின் படைகள் விலக்கப்பட்டன.
- கிழக்கு லடாக் எல்லையில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய-சீன வீரர்களிடையே கடந்த 2020-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் பயங்கர மோதல் ஏற்பட்டது. இதில் இருதரப்பிலும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன.

### பிரம்மோஸ் ஏவுகணை ஏற்றுமதி

- கடந்த பல ஆண்டுகளாக ஆயுதங்களை அதிகம் இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இருந்த இந்தியா இப்போது ஆயுத ஏற்றுமதியில் ஆதிக்கம் செலுத்த தொடங்கி உள்ளது.
- இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணைகளை வாங்க பிலிப்பைன்ஸ் கடந்த ஜனவரியில் ரூ.2,983 கோடிக்கு ஒப்பந்தம் செய்தது.
- இந்தியாவிடம் இருந்து தேஜஸ் போர் விமானங்களை வாங்க மலேசியா விருப்பம் தெரிவித்திருக்கிறது. இருநாடுகளுக்கும் இடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சர்வதேச அளவில் தேஜஸ் போர் விமானங்களை வாங்க ஆர்வம் அதிகரித்து வருகிறது.

SURESH'

- அமெரிக்க விமானிகளுக்கு பயிற்சி அளிக்க தேஜஸ் போர் விமானங்களை பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.
- இந்திய விமானப்படையில் பழமையான போர் விமானங்களை நீக்கிவிட்டு 123 தேஜஸ் போர் விமானங்களை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது.
- இதுவரை 30 தேஜஸ் போர் விமானங்கள் விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

## பிரிட்டனின் புதிய பிரதமராக லிஸ் ட்ரஸ்

- 2019-ம் ஆண்டில் பிரிட்டனில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் தொழிலாளர் கட்சிக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது.
- இதில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. அந்த கட்சியின் தலைவர் போரிஸ் ஜான்சன் பிரதமராக பதவியேற்றார்.
- கட்சி விதிகளின்படி 20 எம்.பி.க்களின் ஆதரவு பெற்றவர்கள் பிரதமர் பதவிக்கான போட்டியில் பங்கேற்க முடியும். இதன்படி, 11 பேர் பிரதமர் பதவிக்கு போட்டியிட்டனர்.
- இதில் 3 பேர் கடைசி நேரத்தில் போட்டியில் இருந்து விலகினர். 8 பேர் களத்தில் இருந்தனர்.
- ஐந்து சுற்றுகளாக நடந்த உட்கட்சி தேர்தலில் கன்சர்வேட்டிவ் எம்.பி.க்கள் வாக்களித்தனர். குறைவான வாக்குகளை பெற்றவர்கள் ஒவ்வொரு சுற்றிலும் அடுத்தடுத்து வெறியேற்றப்பட்டனர்.
- லிஸ் ட்ரஸ் 57.4 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். ரிஷி கணக்குக்கு 42.6 சதவீத வாக்குகள் கிடைத்தன.
- அதிக வாக்குகளை பெற்ற லிஸ் ட்ரஸ், பிரிட்டனின் புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். ராணி எலிசபெத் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

## வளர்ச்சிக்கு வித்திட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள்

- 1928இல் சோவியத் ஒன்றியத்தின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை அந்நாட்டு அதிபர் ஜோசப் ஸ்டாலின் செயல்படுத்தினார். இதனால் ஈர்க்கப்பட்ட இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, சுதந்திரத்திற்குப் பிறகு 1951 இல் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இதற்காக ‘இந்தியத் திட்டக்குழு’ உருவாக்கப்பட்டது. முதல் தலைவர் அப்போதைய பிரதமர் நேரு. நாட்டின் வளங்களைக் கணக்கிட்டு, குறைவாக இருக்கும் வளங்களைப் பெருக்கி, சமச்சீரான வகையில் அவற்றைப் பயன்படுத்தத் திட்டமிடுவதே திட்டக்குழுவின் தலையாய நோக்கம். 1951 முதல் 2012 வரை 12 ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.
- முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் உணவு உற்பத்தியில் தன்னிறைவைப் பெறும் நோக்கில் வடிவமைக்கப்பட்டு இருந்தது.
- 1956இல் நடைமுறைக்கு வந்த இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தொழில்துறை வளர்ச்சிக்கு வித்திட்டது. கிராமப்புற இந்தியாவைச் சீரமைக்கவும் அது உதவியது.
- இந்தியா-பாகிஸ்தானின் போரினாலும், கடுமையான வறட்சியாலும் தடைப்பட்ட வேளாண் உற்பத்தி, மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தினால் பெருக்கப்பட்டது.
- அணைகளும் சிமெண்ட் ஆலைகளும் அந்தக் காலகட்டத்தில் அதிகம் நிறுவப்பட்டன. பஞ்சாபில் கோதுமை அதிக அளவில் உற்பத்தி செய்யும் போக்கு அப்போதே தொடங்கியது.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் உயர்த்தியது. செல்வமும் பொருளாதார ஆற்றலும் நாட்டில் சில இடங்களில் மட்டும் குவிவதைத் தடுத்து, அவற்றைத் தேசமெங்கும் பரவலாக்குவதற்கு அது முயன்றது.
- ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தியது. வறுமையையும், வேலை இல்லாத் திண்டாட்டத்தையும் அகற்றி, சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கு ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் பெருமளவில் உதவியது.
- ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் மக்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கியது. இந்தியாவின் பொருளாதாரத்தைச் சரிவிலிருந்து மீட்பதற்கு எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் உதவியது.
- நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை 9 சதவீத அளவுக்கு உயர்த்தும் நோக்கில் 12 ஆம் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2017இல் நரேந்திர மோடியின் ஆட்சியில் ‘இந்திய திட்டக்குழு’ கலைக்கப்பட்டு ‘நிதி ஆயோக்’ உருவாக்கப்பட்டது.

## ஹைட்ரோ கார்பன் ஓஎன்ஜிசி

- காவிரிப் படுகையில் 1985-லிருந்து ஓஎன்ஜிசி செயல்பட்டுவருகிறது. 1500-2800 மீட்டர் வரையிலான ஆழத்துக்குச் சுமார் 750 இடங்களில் 300-க்கும் மேற்பட்ட உற்பத்திக் கிணறுகளில் கச்சா எண்ணெயும் இயற்கை எரிவாயுவும் எடுத்து வருகிறது.
- அவற்றில் ஒரு கிணறுகூட மீத்தேன் கிணறோ ஷேல் கிணறோ இல்லை. எல்லாமே சாதாரண முறையில் தோண்டப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளே. தோண்டியதும் முதற்கட்டச் சோதனைகளின்போதே உற்பத்தி வாய்ப்பு இல்லை என்று தெரியவரும் கிணறுகள் மூடப்பட்டு, நிலம் மீண்டும் விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்றப்பட்டு நில உரிமையாளர்களிடம் திருப்பி அளிக்கப்படும் நிலையே இன்றும் தொடர்கிறது.
- உலக சராசரியில் மூன்று கிணறு தோண்டினால் ஒன்றுதான் உற்பத்திக் கிணறாக அமையும்; ஓஎன்ஜிசி-யின் சராசரி 2.5.

### மீத்தேன்

- மீத்தேன் திட்டம் என்பது COAL BED METHANF (CBM) எனப்படும் நிலக்கரிப் படுகையிலிருந்து உறிஞ்சி எடுக்கப்படும் எரிவாயு சம்பந்தப்பட்டது. இதற்கும் ஓஎன்ஜிசி எடுக்கின்ற எரிவாயுவுக்கும் சம்பந்தம் இல்லை.
- பல்லாயிரக்கணக்கான இயற்கைப் பேரழிவுகளால் பூமிக்குள் புதையுண்ட தாவரங்கள், கடல்வாழ் உயிரினங்கள்தாம் பூமியின் அழுத்தம் காரணமாக நிலக்கரியாகவோ பெட்ரோலியப் பொருட்களாகவோ மாறுகின்றன.
- நிலக்கரி என்பது தாவர அடிப்படை கச்சா எண்ணெயும் இயற்கை எரிவாயுவும் கடல்வாழ் உயிரினங்களின் அடிப்படை. மீத்தேன் திட்ட எரிவாயு, நிலக்கரிப் படுகைகளில் இருந்து எடுக்கப்படுவதால் அதுவும் தாவர அடிப்படையிலானதே.
- நிலக்கரி மடிப்புகளிலிருந்து உறிஞ்சப்படுவது மீத்தேன் திட்ட எரிவாயு. பொதுவாக, நிலக்கரிப் படுகை என்பது மூலப் படுகையாகவும், நீர்த்தேக்கப் பாறையாகவும் செயல்படும் தனித்துவமான பெட்ரோலிய அமைப்பு.
- நிலக்கரிப் படுகைக்குள் தக்கவைக்கப்பட்டுள்ள எரிவாயுவை உறிஞ்சி எடுத்து உற்பத்தி செய்யப்படுவது நிலக்கரிப் படுகை மீத்தேன் எனப்படும்.
- நிலக்கரிப் படுகையில் உறிஞ்சப்பட்ட எரிவாயு முக்கியமாகத் தாவர அடிப்படை கொண்டது. இது கடல் உயிரின அடிப்படை கொண்ட பெட்ரோலிய அமைப்பிலிருந்து வரும் இயற்கை எரிவாயுவுக்கு மாறானது.
- இவ்வகை எரிவாயு, செயல்பாட்டில் உள்ள அல்லது கைவிடப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. பல சமயங்களில், நிலக்கரிக்குள் இருக்கும் மீத்தேன் வெளிப்படுவதற்கு நிலத்தடி நீரை வெளியேற்றி வெளிப்புற அழுத்தத்தைக் குறைக்கும் நடவடிக்கை தேவைப்படுகிறது.
- இதனைச் சுட்டிக்காட்டித்தான், காவிரி மண்டலத்தின் நிலத்தடி நீரையெல்லாம் உறிஞ்சி எடுத்து வீணாக்கி, ஓஎன்ஜிசி இந்தப் பகுதியையே பாலைவனம் ஆக்கப்போகிறது என்கிற அச்சம் பரப்பப்பட்டது.
- இந்த மீத்தேன் நிலக்கரியின் மேற்பரப்பில் உறிஞ்சப்படுகிறது. வணிகரீதியான உற்பத்திக்கு முன் அதிக அளவு நீர் நீக்கம் தேவைப்படுகிறது.
- நிலக்கரி மடிப்புகளின் ஊடுருவலை மேம்படுத்த சில நேரம் நீர் விரிசல் எனச் சொல்லப்படும் ஹைடிராலிக் ஃப்ராக்சரிங் தேவைப்படலாம்.
- இவை எல்லாம்தான் இந்தத் திட்டத்திற்கான எதிர்ப்புக் காரணிகளாகச் சொல்லப்பட்டு, வழக்கமான ஓஎன்ஜிசி பணிகளின் மீதும் சந்தேகம் கொள்ள வைத்துவிட்டது.

### ஷேல்

- பூமியின் மேற்பரப்பு முதல் மையப்பகுதி வரை வண்டல் பாறை, சுக்கான் பாறை, கால்சியம் பாறை, களிமண் பாறை, கருங்கல் பாறை, கிரானைட் பாறை, ஷேல் பாறை என்று பல்வேறு பாறை அடுக்குகளால் ஆனது.
- பூமியின் பல்வேறு வகைப் பாறை அடுக்குகளில் ஷேல் மிகமிகக் குறைந்த ஊடுருவல் திறன் கொண்ட பாறையாகும்.
- இது அதிக கரிம உள்ளடக்கத்துடன் ஒருங்கிணைந்த களிமண் அளவிலான துகள்களைக் கொண்டுள்ளது.
- இதன் அதிகப்படி அடர்த்தி காரணமாக, இதற்கு மேலும் கீழும் உள்ள அடுக்குகளுக்கு ஒரு தடுப்புச் சுவர்போல் செயல்படுகிறது.
- இது மட்டும் ஆங்காங்கே இல்லாவிட்டால் நிலத்தடி நீர் தானாகவே கீழே போய்விடும். ஆயிரக்கணக்கான அடிகளுக்குக் கீழ் அழுத்தத்துடன் இருக்கும் எண்ணெயும் எரிவாயுவும் சுய அழுத்தம் காரணமாகத் தாமாகவே பூமிப்பரப்புக்கு வந்துவிடும். ஓஎன்ஜிசி, துரப்பணப் பணி தேவைப்பட்டிருக்காது.

- ஆனால், சில ஷேல் பாறை அடுக்குகள் மிக அதிக அளவில் எண்ணெய் எரிவாயு வளத்தைத் தன்னகத்தே கொண்டவை. அவற்றை உற்பத்தி செய்ய கிடைமட்டக் கிணறுகள் தோண்ட வேண்டும்.
- குறைந்தபட்சம் நீர்விரிசல் முறை தேவை. பல வேளைகளில் பல அடுக்கு நீர்விரிசல் முறைகள் பெரிய அளவில் செய்துதான் ஷேல் பாறைகளிலிருந்து எண்ணெய் எரிவாயு உற்பத்தியை மேற்கொள்ள இயலும்.
- ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் பீப்பாய் கச்சா எண்ணெய் 130 டாலர் அளவிலிருந்து திடீரென்று 40 டாலர் அளவுக்குக் குறைந்ததற்குக் காரணம், ரஷ்யப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க அமெரிக்கா தன்னகத்தே மூடி வைத்திருந்த ஷேல் பாறை எண்ணெய் உற்பத்தியை முழு அளவில் திறந்ததுதான்.
- நான்கைந்து மாதங்களுக்கு முன் ஷேல் உற்பத்தியை ஓரளவுக்கு மட்டுப்படுத்தியிருப்பதுதான் பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை 65-70 டாலர் அளவுக்கு வந்ததற்குக் காரணம்.

**ஓஎன்ஜிசி**

- இந்தியாவின் பல்வேறு இடங்களில் ஐந்து ஆண்டுகளையும் நூற்றுக்கணக்கான கோடிகளையும் செலவழித்து சோதனைகள் மேற்கொண்டு, இந்தியாவில் எங்குமே ஷேல் உற்பத்தி பொருளாதார ரீதியாகச் சாத்தியம் இல்லை என்று கண்டறிந்து, இந்திய அரசுக்கு நவம்பர் 2019 இல் ஓஎன்ஜிசி நிறுவனம் அறிவித்துவிட்டது.
- இந்தியாவில் மேற்கு வங்கம், மத்தியப்பிரதேசம், ஜார்க்கண்ட் ஆகிய இடங்களில் மட்டுமே நிலக்கரிப் படுகை மீத்தேன் எடுக்கப்படுகிறது.
- தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கம்பெனி லிமிடெட் நிறுவனத்துக்குச் சோதனைக்குத் தரப்பட்டிருந்த நிலக்கரிப் படுகை மீத்தேன் பிளாக் பகுதி 2015 ஜூலை 27 அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
- காவிரிப் படுகையில் மீத்தேன் திட்டங்களோ ஷேல் எண்ணெயோ, நிலக்கரிப் படுகை மீத்தேனோ எடுக்கும் திட்டம் ஏதும் இல்லை என்று 2017 ஜனவரி 19 அன்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகத்திடமிருந்து பசுமைத் தீர்ப்பாயத்திற்குக் கடிதம் தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 2040 - கரியமில சமநிலை : பிபிசிஎல் இலக்கு

- நிறுவனத்தின் செயல்பாடுகள் மூலம் காற்றில் கரியமில வாயு கலப்பதை வெகுவாகக் குறைத்து, வரும் 2040-ஆம் ஆண்டுக்குள் கரியமில சமநிலையை எட்ட இலக்கு நிர்ணயித்துள்ளோம்.
- அதற்காக, தற்போது 50 மெகாவாட்டாக உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனை 2025-ஆம் ஆண்டுக்குள் 1 ஜிகாவாட்டாகவும் 2040-ஆம் ஆண்டுக்குள் 10 ஜிகாவாட்டாகவும் அதிகரிக்க முடிவு செய்துள்ளது.
- முன்னதாக, வரும் 2046-ஆம் ஆண்டுகள் கரியமில சமநிலையை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளதாக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனும் (ஐஓசி) 2040-ஆம் ஆண்டுக்குள் அந்த நிலையை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளதாக கெயில் இந்தியாவும் அறிவித்திருந்தன.
- உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ப பூமியை வெப்பமாக வைத்திருப்பதற்கு, கரியமில வாயு போன்ற பசுமை வாயுக்கள் உதவுகின்றன.
- இந்த வாயுக்களின் அளவு அதிகமானதால் புவியின் சராசரி வெப்பம் அதிகரித்து, பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது. அதன் விளைவாக கனமழை வெள்ளம், உஷ்ண அலை, வறட்சி, காட்டுத்தீ போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுகின்றன.
- அதனைத் தடுப்பதற்காக காற்றில் கலக்கும் கரியமில வாயுவின் அளவையும், காற்றிலிருந்து பிரித்தெடுக்கப்படும் கரியமில வாயுவின் அளவையும் சமமாக்க உலகின் பல்வேறு நாடுகளும் பல்வேறு கால இலக்குகளை நிர்ணயித்துள்ளன.
- இந்தியாவும் 2070-க்குள் இந்த சமநிலையை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த நிலையில் அதற்கு முன்னதாகவே அந்த நிலையை அடைய பிபிசிஎல் முடிவு செய்துள்ளது.

## இந்தியா - வங்கதேசம் இடையே 7 ஒப்பந்தம்

- போக்குவரத்து இணைப்பு, எரிசக்தி, நீர்வளம், வர்த்தகம், முதலீடு, எல்லை மேலாண்மை மற்றும் பாதுகாப்பு, வளர்ச்சியில் கூட்டுறவு, பிராந்திய மற்றும் பல்நோக்கு விஷயங்கள் தொடர்பாக இருதரப்பு குழுவினரும் இரு தலைவர்கள் முன்னிலையில் 7 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

**குஷியாரா நதிநீர் ஒப்பந்தம்**

- இந்தியா – வங்கதேச எல்லை வழியாக 54 நதிகள் ஓடுகின்றன. இவை இருநாட்டு மக்களுக்கும் வாழ்வாதாரமாக உள்ளன.

- குஷியாரா நதி நீரை பகிர்ந்து கொள்வது தொடர்பாக முக்கிய ஒப்பந்தத்தில் நாங்கள் கையெழுத்திட்டுள்ளோம்.

## டெல்லியில் ராஜபாதை பெயர் மாற்றம்

- ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் டெல்லியில் நேதாஜி சிலை முதல் குடியரசுத் தலைவர் மாளிகை வரையிலான சாலைக்கு ‘கிங்ஸ்வே’ என்று பெயர் சூட்டப்பட்டது. இதனை இந்தியில் ‘ராஜபாதை’ என்று அழைத்தனர்.
- டெல்லி ராஜபாதை இனிமேல் கர்த்தவ்யபாத் என்று அழைக்கப்படும். இதற்கு, ‘கடமையை செய்யும் பாதை’ என்று அர்த்தம்.

### ரேஸ் கோர்ஸ் சாலை

- டெல்லியில் பிரதமர் இல்லம் அமைந்துள்ள சாலை, ரேஸ் கோர்ஸ் சாலை என்று அழைக்கப்பட்டது. கடந்த 2016-ம் ஆண்டில் இந்த சாலை, லோக் கல்யாண் சாலை என்று மாற்றப்பட்டது.

### நேதாஜி ஹாலோகிராம் சிலை

- டெல்லி இந்தியா கேட் பகுதியில் பிரிட்டிஷ் மன்னர் 5-ம் ஜார்ஜின் சிலை நிறுவப்பட்டிருந்தது.
- அந்த சிலை கடந்த 1968-ம் ஆண்டு அகற்றப்பட்டது. கடந்த ஜனவரியில் அங்கு 28 அடி உயரத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் ஹாலோகிராம் சிலை நிறுவப்பட்டது.

### ஆங்கிலேயர் பாடல் நீக்கம்

- குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்கும் வீரர்கள் தங்களது முகாமுக்கு திரும்பி செல்லும் பாசறை திரும்பும் அணிவகுப்பு ஜனவரி 29-ம் தேதி நடத்தப்படுவது வழக்கம்.
- இந்த நிகழ்ச்சியில் ஆங்கிலேயர்களின் ‘அபைட்வுத் மீ’ பாடல் இசைக்கப்படும். கடந்த குடியரசு தின விழாவில் இந்த பாடல் நீக்கப்பட்டு, லதா மங்கேஷ்கர் பாடிய ‘ஆயே மேரே வதன் கே லோகோ’ என்ற பாடல் இசைக்கப்பட்டது.
- அந்தமான்-நிகோபர் தீவில் ஆங்கிலேயர்கள் பெயரில் இருந்த 3 தீவுகளுக்கு கடந்த 2018-ம் ஆண்டில் சுபாஷ் சந்திரபோஸ் உட்பட 3 இந்திய தலைவர்களின் பெயர் சூட்டப்பட்டது.
- இந்திய கடற்படை கொடியில் ஆங்கிலேயர் காலத்தில் வடிவமைக்கப்பட்ட சிவப்பு பட்டைகள் இருந்தன. அவை நீக்கப்பட்டு சத்ரபதி சிவாஜியின் சின்னம் பொறிக்கப்பட்ட புதிய கொடி கடந்த 2-ம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.

## பருவகால காய்ச்சல்

- பருவ காலம் மாறும்போது அதுவரை உறங்கிக் கிடந்த பாக்டீரியாக்களும் வைரஸ்களும் விழித்தெழுந்து, உருமாறி, வீரியம் பெற்று, மக்களைத் தாக்கப் புறப்படுவதுதான் இந்த மாதிரியான காய்ச்சலுக்கு அடிப்படைக் காரணம்.

### ஃபுளூ காய்ச்சல்

- இப்போது பரவுகிற காய்ச்சல் வகைகளில் இன்ஃபுளூயன்சா எனும் ஃபுளூ காய்ச்சல்தான் அதிகமாகக் காணப்படுகிறது. இது இன்ஃபுளூயன்சா உள்ளிட்ட பலதரப்பட்ட வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது.
- கடுமையான காய்ச்சல், தலைவலி, உடல்வலி, தும்மல், மூக்கு ஒழுகுதல், சளி, இருமல், தொண்டை வலி போன்றவை இதன் முக்கிய அறிகுறிகள். பாரசிட்டமால் மாத்திரையும் ஹிஸ்டமின் எதிர்ப்பு மருந்துகளும் பலனளிக்கும்.
- இவற்றை மருத்துவரின் அறிவுரைப்படி எடுத்துக்கொள்ள வேண்டும். உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி சரியாக இருந்தால், 90% பேருக்கு ஒரு வாரத்தில் இது தானாகவே சரியாகி விடும். சிலருக்கு மட்டுமே நிமோனியா எனும் தீவிர நுரையீரல் நோயை ஏற்படுத்தும்.
- பருவ மழைக் காலத்தில் குழந்தைகளுக்குக் காய்ச்சல், சளி போன்ற தொந்தரவுகள் அடிக்கடி ஏற்படும் என்பதால், பெற்றோர்கள் கூடுதல் விழிப்புணர்வுடன் குழந்தைகளைக் கண்காணிக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.
- நோய் எதிர்ப்பாற்றல் குறைவான உள்ளவர்கள், தீவிர சுவாசப் பிரச்சினை கொண்டவர்கள், முதியோர்களுக்கு இந்தக் காய்ச்சல் கூடுதல் சிரமத்தை ஏற்படுத்தும் என்பதால், பொதுமக்களும் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம்.
- ஃபுளூ அறிகுறிகள், காய்ச்சல், சளி, தலைவலி உள்ள மாணவர்களைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என்று பெற்றோர்களுக்கு அறிவுறுத்தும்படி ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- காய்ச்சல், தலைவலி, வறட்டு இருமல், தொண்டைவலி, மூக்கடைப்பு, உடல்வலி, உடல்சோர்வு உள்ளிட்ட அறிகுறிகளுடன் வரும் ஃப்ளூ காய்ச்சல் 3 முதல் 5 நாட்களுக்குள் சரியாகிவிடும்.
- ஆனால், கரோனா பெருந்தொற்றுக்குப்பின் உருவாகியுள்ள இந்த அசாதாரணச் சூழலில், எந்தவொரு அறிகுறியையும் எளிதாகக் கடந்துவிடக் கூடாது. பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருப்பதை உறுதிசெய்து காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு முன்னெடுக்க வேண்டும்.

### பன்றிக் காய்ச்சல்

- இன்ஃப்ளூயன்சா ஏ எனும் வைரஸால் இது வருகிறது. இதில் ஃப்ளூ காய்ச்சல் அறிகுறிகளோடு வாந்தியும் வயிற்றுப்போக்கும் காணப்படும்.
- இதுவும் பெரும்பாலானோருக்கு ஃப்ளூ காய்ச்சலைப் போலவே எளிதாகக் கடந்துவிடக்கூடியதுதான் என்றாலும், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், முதியோர்கள், இதய நோய், சர்க்கரை நோய் போன்ற இணை நோயுள்ளவர்கள், கர்ப்பிணிகள், தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள், புற்றுநோயாளிகள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்கள் ஆகியோருக்கு நுரையீரல் செயல்பாட்டுத் திறன் குறைகிறது. அதனால் நிமோனியா ஆபத்து அதிகரிக்கிறது.
- இவர்கள் தொண்டைச் சளிப் பரிசோதனை செய்து, பன்றிக் காய்ச்சலை உறுதி செய்து ஒசெல்டாமிவிர்(Oseltamivir) மாத்திரையை மருத்துவரின் அறிவுரைப்படி எடுத்துக்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் உள்நோயாளியாகவும் சிகிச்சை பெறலாம்.

### நிமோனியா காய்ச்சல்

- இன்ஃப்ளூயன்சா வைரஸ் மட்டுமல்லாமல், நியூமோகாக்கஸ் எனும் பாக்டீரியா நுரையீரலைக் கடுமையாகப் பாதிப்பதாலும் நிமோனியா ஏற்படலாம்.
- பெரும்பாலும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளையும், முதியோரையும் தான் இது அதிகமாகப் பாதிக்கும்.
- இந்த நோயுள்ள குழந்தை சாப்பிடாது. கடுமையான காய்ச்சல், இருமல், சளி, வேகமாக மூச்சுவிடுதல், மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகளும் தோன்றும். குழந்தை எந்நேரமும் உறக்கத்திலேயே இருக்கும் அல்லது அழுது கொண்டிருக்கும்; மிகவும் சோர்வாகக் காணப்படும். சிறுநீர் பிரியாது. இந்தக் குழந்தைகளை அவசரப் பிரிவில் அனுமதித்துச் சிகிச்சை வழங்க வேண்டும்.

### டைபாய்டு காய்ச்சல்

- இதுவும் ஒரு பாக்டீரியா நோய்தான். இந்தக் கிருமிகள் மாசடைந்த குடிநீர் – உணவு மூலம் பரவுகின்றன. முதலில் காய்ச்சல், தலைவலி, உடல்வலியுடன் நோய் தொடங்கும்.
- ஒவ்வொரு நாளும் காய்ச்சல் படிப்படியாக அதிகரிக்கும். இரவில் காய்ச்சல் கூடும். பசி குறையும். குமுட்டல், வாந்தி, வயிற்றுவலி, சோர்வு எனப் பல தொல்லைகள் துணைக்கு வரும். நோயின் ஆரம்பத்திலேயே சிகிச்சை பெற்றால் விரைவில் குணமாகும்.

### எது டெங்கு?

- கொசுக்கடி மூலம் ‘டெங்கு’ (Dengue) எனும் வைரஸ் நமக்குப் பரவும்போது டெங்கு காய்ச்சல் வருகிறது. திடீரென்று கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, உடல் வலி, தசை வலி, மூட்டு வலி, களைப்பு ஆகிய அறிகுறிகளோடு இது ஆரம்பிக்கும்.
- கண்ணுக்குப் பின்புறம் கடுமையாக வலிப்பதும் எலும்புகளை முறித்துப் போட்டதுபோல வலிப்பதும், இந்த நோய்க்கே உரித்தான அறிகுறிகள். அத்தோடு உடலில் அரிப்பும், சிவப்புப் புள்ளிகளும் தோன்றும். விரல்களால் முன்கையைப் பிடித்தால் அங்கே விரல் தடம் விழும்.

### என்ன செய்ய வேண்டும்?

- காய்ச்சல் பாதிப்பு உள்ளவர்கள் நிறைய நீராகாரங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக, காய்கறி சூப், பழச்சாறுகள் நீரிழப்பைத் தவிர்க்க உதவும். எந்த ஒரு காய்ச்சலுக்கும் சுய சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம் காப்பதுதான் முக்கிய தடுப்பரண்கள்.
- காய்ச்சல் பாதிப்பு உள்ளவரிடமிருந்து விலகியிருக்க வேண்டும். கை, கால், முகத்தை அடிக்கடி சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். சளி, இருமல் இருப்பவர்கள் இருமும் போதும், தும்மும்போதும் வாயைக் கைக்குட்டையால் மூடிக்கொள்ள வேண்டும்.

- தெருக்களிலும் பொது இடங்களிலும் எச்சில்/சளியைத் துப்பக்கூடாது. கரோனாவுக்கு மட்டுமல்ல, ஃப்ளூ மற்றும் பன்றிக் காய்ச்சலால் பரவுவதைத் தடுக்க வேண்டுமானாலும் முகக்கவசம் கட்டாயம்.

### தடுப்பூசி உதவும்

- இன்ஃப்ளூயன்சா வைரஸுக்கு எதிராகத் தடுப்பூசி இருக்கிறது. மருத்துவரின் பரிந்துரையின் பேரில் குழந்தைகள் – முதியோர்கள் வருடத்துக்கு ஒரு முறை மழைக்காலம் ஆரம்பிக்கும் முன்பு இதைச் செலுத்திக் கொள்ளலாம்.
- நிமோனியாவைத் தடுக்கவும் பிசிவி (PCV தடுப்பூசி இருக்கிறது. இதை எல்லோரும் செலுத்திக் கொள்ளலாம். கரோனா தடுப்பூசியுடன் இதையும் சேர்த்தே செலுத்திக் கொள்ளலாம்.

### அரசு என்ன செய்ய வேண்டும்?

- நாட்டில் தெருக்களைச் சுத்தமாகப் பராமரிப்பதிலும் சுற்றுச்சூழல் சுத்தம் காப்பதிலும் இன்னும் அலட்சியம் காணப்படுகிறது.
- கரோனா முதல் அலையில் தெருக்களைச் சுத்தம் செய்ய பல முன்னெடுப்புகளை அரசு எடுத்தது போல், இப்போதும் எடுக்க வேண்டியது அவசியம்.
- கொசு ஒழிப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்த வேண்டும். சுத்தமான குடிநீரை உறுதிப்படுத்த வேண்டும். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் ஃப்ளூ காய்ச்சலுக்கு மருந்துகள் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
- முக்கியமாக முதியோர்கள், சர்க்கரை நோயுள்ளவர்கள், இதயம், சிறுநீரகம், நுரையீரல் தொடர்பில் இணை நோயுள்ளவர்களுக்கு வீடு தேடி மருந்துகள் கொடுத்தால், காய்ச்சல் பரவுவதை இன்னும் எளிதாகத் தடுக்கலாம்.
- அரசு மருத்துவமனைகளில் நிமோனியா தடுப்பூசிக்கு இப்போது தட்டுப்பாடு இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இதையும் அரசு உடனே சரிசெய்ய வேண்டும்.

## கரோனா சொட்டு மருந்து

- கரோனா வைரஸுக்கு தடுப்பு மருந்தாக, மூக்கு வழியாக விடும் சொட்டு மருந்தை தயாரிக்கும் பணியில் ஹைதராபாத்தை சேர்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் ஈடுபட்டு வந்தது.
- பாரத் பயோடெக் நிறுவனத்தின் கரோனா தடுப்பு சொட்டு மருந்தை 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவசர கால அடிப்படையில் பயன்படுத்த மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.
- அமெரிக்காவின் வாஷிங்டன் மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்த சொட்டு மருந்தை பாரத் பயோடெக் நிறுவனம் தயாரிக்கிறது.

## மக்களின் தலைவர்

- 'சுயராஜ்யம் என் பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்' என்ற முழக்கமே இன்றுவரை பால கங்காதர திலகரை, நம் கண்முன் நிறுத்துகிறது.
- மகாராஷ்டிரத்தில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த திலகர், ஆங்கிலேய அரசு இந்தியர்களைக் காரணமின்றி சிறையில் தள்ளியதால், அவர்களுக்காக வாதாடுவதற்குச் சட்டம் படித்தார்.
- இந்திய வளங்கள் ஆங்கிலேயரால் எப்படிச் சுரண்டப்படுகின்றன என்பதை விளக்கிய தாதாபாய் நௌரோஜியின் நூல், திலகரை விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட வைத்தது.
- நண்பர்களுடன் இணைந்து மராத்தியில் 'கேசரி' ஆங்கிலத்தில் 'மராட்டா' ஆகிய பத்திரிகைகளை 1881 இல் ஆரம்பித்தார் திலகர்.
- இரண்டு பத்திரிகைகளிலும் அவர் எழுதிய தலையங்கங்களும் கட்டுரைகளும் மக்களை விடுதலைப் போராட்டத்தில் உணர்வுபூர்வமாக ஈடுபடவைத்தன.
- காங்கிரஸில் 1889 இல் திலகர் இணைந்தார். விவேகானந்தருடன் நெருங்கிப் பழகியபோது ஆன்மிகம், கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் அவரது கவனம் திரும்பியது.
- ஆங்கிலேயர் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்குக் காரணம் திலகர் எழுதிய தலையங்கங்கள்தாம் என்று கருதிய ஆங்கிலேய அரசு அவரை 12 மாதங்கள் சிறையில் அடைத்தது. இதன் மூலம் மக்களிடம் திலகரின் செல்வாக்கு பெருமளவு அதிகரித்தது.
- பிரபுல்ல சாக்கி, குதிராம் போஸ் ஆகியோரை ஆதரித்துக் கட்டுரைகள் எழுதியதற்காக 1908–1914 வரை 6 ஆண்டுகளைச் சிறையில் கழித்தார் திலகர். அன்னி பெசன்ட்டுடன் இணைந்து அகில இந்திய ஹோம் ரூல் இயக்கத்தின் நிறுவனர்களில் ஒருவராக இருந்தார்.

- ஒற்றுமையையும் தேசிய உணர்வையும் உருவாக்க நினைத்து, விநாயக சதுர்த்தி ஊர்வலத்தை அவர் கோலாகலமாக நடத்தினார்.
- இந்தச் செயல் மாற்று மதத்தினரை அவரிடமிருந்து அந்நியப்படுத்தியது. பெண்கள், சாதி போன்ற சமூகக் கருத்துகளில் பழமைவாதத்தையே திலகர் பிரதிபலித்தார்.
- ஜாலியன்வாலாபாக் படுகொலைகளால் திலகரின் மனமும் உடலும் பாதிப்படைந்தன. என்ன நடந்தாலும் போராட்டத்தை நிறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட திலகர், 1920 இல் நிரந்தர ஓய்வு நிலைக்குச் சென்றார்.

## போரிஸ் ஜான்சன்

### போரிஸின் அரசியல் பயணம்

- 2007 இல் லண்டன் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் அரசியல் பாதை ஏறுமுகம் கண்டது. முன்னாள் பிரதமர் தெரசா மே உடனான போரிஸின் கருத்தியல் வேறுபாடு, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான பிரெக்ஸிட்டுக்கு ஆதரவான அவரது தீவிரப் பிரச்சாரம் போன்றவை பிரிட்டிஷார் மத்தியில் அவரைப் பிரபலமாக்கின.
- போரிஸ் மற்ற பிரிட்டன் பிரதமர்களிலிருந்து சற்றுத் தனித்து வெளிப்பட்டார்.

### பிரெக்ஸிட் தந்த வெற்றி

- பிரெக்ஸிட்டை நிறைவேற்ற முடியாத காரணத்தால் 2019இல் அப்போது பிரதமராக இருந்த தெரசா மே பதவி விலகினார். இதனைத் தொடர்ந்து, வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த போரிஸ் ஜான்சன் பிரதமராகப் பதவியேற்றார்.
- 2019 இறுதியில் நடந்த மறுதேர்தலில் அவர் மிகப்பெரும் வெற்றி பெற்றார். 'பிரெக்ஸிட்டை நிறைவேற்றுவேன்' என்பது அவரது முதன்மை வாக்குறுதியாக இருந்தது.
- அதுவே அந்தத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் அவரை வெற்றிபெற வைத்தது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் 2020 இல் வெளியேறியது.
- இதனைத் தொடர்ந்து, பிரிட்டன் பொருளாதாரத்தை வலுப்படுத்தத் தவறிவிட்டார் என்பதே போரிஸ் மீதான பொதுவான குற்றச்சாட்டு.
- பிரெக்ஸிட்டுக்குப் பிறகு, டாலருக்கு நிகரான பவுண்டின் மதிப்பு தொடர்ந்து சரிந்துக் கொண்டிருக்கிறது. இங்கிலாந்தின் வளத்தை அதிகரிப்பது, ஐரோப்பாவுடனான வர்த்தகத்தைக் குறைத்துச் சுதந்திர வர்த்தகத்தை முன்னெடுப்பது, அகதிகளின் வருகையைக் குறைத்தல், வடக்கு நகரங்களை ரயில் பாதைகளின் மூலம் லண்டனுடன் இணைப்பது போன்ற வாக்குறுதிகளைப் போரிஸ் முழுமையாக நிறைவேற்றவில்லை.
- பொருளாதாரம் சார்ந்து அவரிடம் வலுவான திட்டங்கள் இல்லாத காரணத்தால், மக்களும் அவர் மீது அதிருப்தியில் இருந்தனர். இதனால் கன்சர்வேட்டிங் கட்சி இடைத்தேர்தல்களில் தோல்வியைத் தழுவியது.

### பொருளாதாரத் தடுமாற்றம்

- போரிஸ் ஜான்சனின் ஆட்சிக் காலத்தில் பிரிட்டனின் பொருளாதாரம் பெரும் தடுமாற்றத்துக்கு உள்ளானது. 40 ஆண்டுகளில் இல்லாத விலையேற்றம், 300 ஆண்டுகளில் இல்லாத பொருளாதார மந்தநிலை பிரிட்டிஷாரைக் கதிகலங்க வைத்துள்ளது.
- அவரது மூன்றாண்டு ஆட்சிக்காலத்தில் பிரிட்டனில் மின்சாரக் கட்டணம், எரிவாயு சிலிண்டர் விலை 80% உயர்ந்தது. கரோனோவுக்குப் பிறகு பிரிட்டனின் ஏற்றுமதியும் வேலைவாய்ப்பும் தொடர்ந்து தேக்க நிலையிலேயே இருந்து வருகிறது.
- கரோனா, ரஷ்யா–உக்ரைன் போர் என சாதகமற்ற புறக்காரணிகள் பொருளாதாரச் சரிவுக்குக் காரணமாக இருந்தாலும், நாட்டின் பிரதமராக அவற்றைத் தீர்ப்பதற்கான திட்டமோ, தொலைநோக்குப் பார்வையோ போரிஸிடம் இல்லை.

### ரஷ்யா–உக்ரைன் போர்

- கரோனாவை பிரிட்டன் எப்படிக் கையாளப் போகிறது என்று உலக நாடுகள் உற்றுக் நோக்கிக் கொண்டிருந்த நேரத்தில், ஆரம்பம் முதலே போரிஸின் அறிவிப்புகளில் பல குழப்பங்கள் நீடித்தன.
- 187 லட்சம் பேர் கரோனாவால் பிரிட்டனில் பலியாகினர். போரிஸ் ஜான்சன் கரோனாவைக் கையாண்ட விதம், பிரிட்டனின் வரலாற்றில் மிக மோசமான பொது சுகாதாரத் தோல்விகளில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

- கரோனா கட்டுப்பாடுகளை மீறி, போரிஸ் தனது பிறந்தநாள் விருந்தில் கலந்து கொண்ட நிகழ்வு அவருக்கு அவப்பெயரைப் பெற்றுத்தந்தது.
- அரசு விதிமுறைகளை மீறியதற்காக அபராதம் விதிக்கப்பட்ட முதல் பிரிட்டன் பிரதமர் போரிஸ்தான். தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, நாடாளுமன்றத்தில் மன்னிப்பும் கேட்டார்.
- போரிஸின் தீவிர உக்ரைன் ஆதரவுப் போக்கு, அவர் மீது ரஷ்யா பொருளாதாரத் தடைவிதிக்கக் காரணமானது. உக்ரைனுக்கு நேரில் சென்று அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கியைச் சந்தித்து ஆதரவு தெரிவித்தார்.
- 'பிரிட்டனை வழிநடத்தாமல் உக்ரைன் விவகாரத்தில் போரிஸ் அதிகம் மூக்கை நுழைக்கிறார்' என்று விமர்சனங்கள் எழுந்த போதும், இறுதிவரை உக்ரைனுக்கு நட்புக்கரம் நீட்டித் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார்.

## உக்ரைனில் ரஷ்ய ராணுவம்

- சோவியத் யூனியனில் இருந்து கடந்த 1991-ம் ஆண்டில் உக்ரைன் தனியாகப் பிரிந்தது. அதன்பிறகும் ரஷ்யாவுடன் அந்த நாடு நட்பு பாராட்டி வந்தது. கடந்த 2014-ம் ஆண்டில் அப்போதைய உக்ரைன் அதிபர் விக்டர் யானுகோவிச்சுக்கு எதிராக புரட்சி வெடித்தது. அவரது ஆட்சி அகற்றப்பட்டது.
- இதைத் தொடர்ந்து உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது. அங்கு பெரும்பான்மையாக வாழும் ரஷ்யர்களின் விருப்பத்தின்படியே கிரிமியா ரஷ்யாவுடன் இணைந்திருப்பதாக அதிபர் விளாடிமிர் புதின் விளக்கம் அளித்தார்.
- கிழக்கு உக்ரைனின் டோன்ஸ்க், லுகான்ஸ்க் மாகாணங்களில் ரஷ்யர்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர்.
- அப்பகுதியை சேர்ந்த கிளர்ச்சிக் குழுக்கள் உக்ரைன் அரசுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டன.

### மறைமுக 3-ம் உலகப்போர்

- இந்த சூழலில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோவில் இணைய உக்ரைன் முயற்சி மேற்கொண்டது. இதன் காரணமாக கடந்த பிப்ரவரி 24-ம் தேதி உக்ரைன் மீது ரஷ்ய ராணுவம் தாக்குதலை தொடங்கியது.
- உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஆயுதங்களை வாரி வழங்கி வருகின்றன.
- அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஓரணியாகவும் ரஷ்யா எதிராணியாகவும் போரில் ஈடுபட்டுள்ளன. சுருக்கமாக சொல்வதென்றால் மறைமுகமாக 3-ம் உலகப் போர் நடைபெற்று கொண்டிருக்கிறது.
- இந்தியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் நடுநிலை வகித்து வருகின்றன.

## பருவகால இன்ஃப்ளுயன்ஸா தொற்று

- காய்ச்சல், சளி, தொண்டையில் ஏற்படும் கிருமித் தொற்று உள்ளிட்டவற்றை கரோனாவின் அறிகுறிகளாக மட்டும் கருதக் கூடாது. மாற்றாக , அவை பருவ கால இன்ஃ ப்ளுயன்ஸா தொற்றாக இருக்கக்கூடும்.
- எனவே, அவற்றுக்கு உரிய வழிகாட்டுதலின்படி மருத்துவக் கண்காணிப்பை அளிக்க வேண்டும். ஃப்ளு வைரஸ்களால் பரவும் இன்ஃப்ளுயன்ஸா காய்ச்சல், நேரடியாக நுரையீரலை பாதிக்கக் கூடியது.
- இருமல், தொண்டை அலர்ஜி, காய்ச்சல், உடல் சோர்வு, உடல் வலி, தலைவலி, சளி., வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்பட்டால் அவற்றை அலட்சியப்படுத்தாமல் அரசு மருத்துவமனைகளிலோ அல்லது தனியார் மருத்துவமனைகளிலோ பரிசோதனை செய்ய வேண்டும்.
- மிதமான பாதிப்புகள் இருந்தால், அவர்களுக்கு அதற்கான மருந்துகளை மட்டும் அளிக்கலாம். ஆன்ட்டி வைரஸ் மருந்துகளோ அல்லது மருத்துவப் பரிசோதனைகளோ தேவையில்லை.
- 65 வயதுக்கு மேற்பட்டவர்கள், 5 வயதுக்கு குறைவான குழந்தைகள், சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், இதய பாதிப்பு, சிறுநீரகம், கல்லீரல் பாதிப்புகள், நாள் பட்ட நுரையீரல் மற்றும் நரம்பு சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்பவர்கள், கர்ப்பிணிகள், புற்றுநோயாளிகள், உடல் பருமன் உள்ளவர்களுக்கு ஓசல்டா மிவிர் எனப்படும் ஆன்ட்டி வைரல் மருந்துகளை வழங்க வேண்டும்.
- அவர்களையும் தனிமைப்படுத்தி மருத்துவக் கண்காணிப்புக்குட்படுத்துதல் அவசியம்.
- மூன்றாவதாக தீவிர பாதிப்புக்குள்ளானவர்களை அதீத கவனத்துடன் கையாள வேண்டும். மூச்சுத் திணறல், ரத்த அழுத்தம் குறைதல், சீரற்ற இதயத்துடிப்பு, வலிப்பு, சிறுநீர் அளவு குறைதல் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு உள்ளானோரை ஆர்டிபிசிஆர் பரிசோதனைக்குட்படுத்த வேண்டும்.

- ஓசல்டாமிவிர் உள்ளிட்ட மருந்துகளுடன் மருத்துவமனையில் அனுமதித்து அவர்களுக்கு சிகிச்சையளிக்க வேண்டும்.

## இக்கட்டில் இந்திய ஏற்றுமதி

- பொறியியல் பொருள்கள், ரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற முக்கிய துறைகளில் இந்தியப் பொருள்களுக்கான தேவை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் குறைந்துள்ளது.
- உலகளாவிய பணவீக்கம், ரஷியா–உக்ரைன் போர், சீனா – தைவான் இடையிலான பதற்றம், விநியோகப் பிரச்சனைகள் ஆகியவை உலகளவில் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கின்றன. இது, இந்தியப் பொருள்களுக்கான தேவையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட்டமைப்பான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (ஓஇசிடி), 2022 இன் இரண்டாவது காலாண்டில் (ஏப்ரல் – ஜூன்) ஜி–20 நாடுகளிடையேயான வர்த்தக வளர்ச்சி, மதிப்பு அடிப்படையில் கணிசமாக குறைந்துள்ளது எனவும் கூறியுள்ளது.
- ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டு இறக்குமதி அதிகரிப்பதால் வர்த்தக பற்றாக்குறை மேலும் அதிகமாகும். இது டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பிலும் பாதிப்பை ஏற்படுத்தும். வேலை வாய்ப்புகளையும் அது பாதிக்கும்.

## இஸ்லாமியப் பெண்களுக்கு நீதி ?

- இந்தூரில் வழக்கறிஞராக இருந்த அகமது கானை 1932 இல் மணந்தார் ஷா பானு.
- இவர்களுக்கு ஐந்து குழந்தைகள். இவர்களுக்கு மணமாகி 14 ஆண்டுகள் கழித்து வேறொரு பெண்ணை அகமது கான் மணந்துகொண்டார்.
- இண்டு மனைவியரோடு ஒரே வீட்டில் வசித்துவந்த அகமது, 1975 இல் ஷா பானுவை வீட்டை விட்டு வெளியேற்றினார்.
- அப்போ ஷா பானுவுக்கு 62 வயது. வீட்டை விட்டு வெளியேற்றிய மனைவி வாழ்க்கை நடத்த சொற்ப பணத்தை அளித்துவந்தவர், அதை நிறுத்திவிட்ட நிலையில் தனக்குக் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் வேண்டும் என்று 1978 இல் ஷா பானு வழக்குத் தொடுத்தார்.
- ஷா பானு வழக்குத் தொடுத்த சில மாதங்களில் அவரை முத்தலாக் முறைப்படி விவாகரத்து செய்தார் அகமது கான்.
- இஸ்லாம் மதத்தின் தனிச் சட்டப்படி விவாகரத்தான மனைவிக்கு ‘இத்தா’ எனப்படும் குறிப்பிட்ட காலம்வரையில் பணம் கொடுத்தால் போதுமானது என்றும் தன் மனைவிக்குத் தான் இழப்பீட்டுத் தொகை ஏதும் வழங்கத் தேவையில்லை எனவும் அகமது கான் வாதிட்டார்.
- இதை எதிர்த்து மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தை அணுகினார் ஷா பாணு. திருமணம், வாரிசுரிமை உள்ளிட்ட மதச் சட்டங்களுக்குள் நீதிமன்றம் எந்த அளவுக்குத் தலையிடலாம் என்பதை இந்த வழக்கு விவாதப் பொருளாக்கியது.
- உயர் நீதிமன்றத்தில் ஷா பானுவுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வர உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார் அகமது கான்.
- இந்த வழக்கை முதலில் விசாரித்த நீதிபதிகள் குழு, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 125 (ஜீவனாம்சம்) அனைத்து மதத்தினருக்கும் பொதுவானதுதான் என்பதை உறுதிசெய்தது.
- இதையடுத்து அகமது கானின் கோரிக்கையின் பேரில் இவ்வழக்கை மீண்டும் விசாரித்த நீதிபதிகள் குழு, இஸ்லாமியப் பெண்களின் ஜீவனாம்ச உரிமையை உறுதிசெய்யும் தீர்ப்பை 1985 இல் வழங்கியது.
- இஸ்லாம் பெண்களின் திருமணம், விவாகரத்து உரிமையைப் பாதுகாக்கும் வகையில் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்புக்கு எதிராகவும் ஆதரவாகவும் விமர்சனங்கள் எழுந்தன.
- 1986 இல் அப்போதைய பிரதமர் ராஜிவ் காந்தி தலைமையிலான அரசு இஸ்லாம் பெண்களின் விவாகரத்து உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியது.
- அரசு நிறைவேற்றிய இந்தச் சட்டம் உச்சநீதிமன்ற தீர்ப்பு பெண்களுகு;கு வழங்கிய ஜீவனாம்ச உரிமையை நீர்த்துப்போகச் செய்தது.
- இந்தச் சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் உச்சநீதிமன்றம் விவாகரத்து செய்யப்பட்ட இஸ்லாமிய பெண்கள் எஞ்சிய வாழ்க்கை முழுமைக்கும் கணவனிடமிருந்து ஜீவனாம்சம் பெறும் உரிமையை உறுதிசெய்தது.

### மரபின் நீட்சி

- ‘மானியங்களாக வழங்கப்படும் இலவசங்கள், பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை, அத்தகைய மானியங்கள், உற்பத்தியைப் பாதித்து, மறைமுகச் செலவை அதிகரிக்கின்றன’ என்று பேசியுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் குழு உறுப்பினர் ஆசிமா கோயல்.

- இந்தியாவின் பெரும் பணக்காரர்களுக்குச் சில ஆண்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்ட பெரும் தொகையைவிட, இந்த மக்கள் நலத் திட்டங்களுக்கான தொகை மிகமிகக் குறைவு என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் நல்லது.

## பி.எம்.ஸ்ரீ திட்டம்

- 'முன்னேறும் இந்தியாவுக்கான பிரதமரின் பள்ளிகள்' என்ற திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். இது சுருக்கமாக 'பி.எம்.ஸ்ரீ திட்டம்' என அழைக்கப்படுகிறது.
- வளரும் இந்தியாவுக்கான பிரதமரின் பள்ளிகள் (பிஎம்ஸ்ரீ பள்ளிகள்), தேசிய கல்விக் கொள்கை 2020 - இன் அனைத்து அம்சங்களையும் கொண்டதாகவும் மற்ற பள்ளிகளுகு;கு முன்மாதிரியாகவும் விளங்கும்.
- இத்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 14,500 பள்ளிகள் மேம்படுத்தப்பட உள்ளன. இதற்காக அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.27,360 கோடி செலவிடப்படும்.
- பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகள் மேம்படுத்தப்படும்.
- மேம்பாட்டுக்கான நிதி, பள்ளிகளுக்கு நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். அவர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் 40 சதவீதத்தை எதற்கு பயன்படுத்த வேண்டும் என்பதை பள்ளி முதல்வர்கள் தலைமையிலான குழுக்கள் முடிவு செய்யலாம்.
- பி.எம்.ஸ்ரீ பள்ளிகள், தேசிய கல்விக் கொள்கை 2020 இல் கூறியபடி, அதிக அளவிலான செய்முறை பயிற்சிகள் மற்றும் முழுமையான கல்வி முறையை பின்பற்றும். பொம்மைகள் மூலம் விளையாட்டு அடிப்படையிலான கல்வி, கேள்வி கேட்கும் முறை, கண்டுபிடிப்பு சார்ந்த முறை, ஜாலியாக கற்கும் முறைகள் இத்திட்டத்தில் பயன்படுத்தப்படும்.
- முதல் கட்டமாக, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டும்.
- இரண்டாம் கட்டத்தில், பரிந்துரைக்கப்பட்ட அளவுகோல் அடிப்படையில், பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் அடையாளம் காணப்பட்டு தகுதியான பள்ளிகள் தேர்வு செய்யப்படும்.
- நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பள்ளிகளுக்கு, நேரடி ஆய்வுகள் மூலம் சான்று அளிக்கப்படும்.
- நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஒரு வார்டுக்கு அதிகபட்சம் 2 பள்ளிகள் தேர்வு செய்யப்படும்.
- இந்தப் பள்ளிகள், பசுமை பள்ளிகளாகவும், சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாகவும், ஊட்டச்சத்து தோட்டங்கள், கழிவு மேலாண்மை வசதிகள் உள்ளதாகவும், மழை நீர் சேமிப்பு வசதியுடனும் மேம்படுத்தப்படும்.

## எலிசபெத் மகாராணி

- கோடைக்கால ஓய்வுக்காக பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து புறப்பட்டு ஸ்காட்லாந்திலுள்ளபால்மரால் அரண்மனையில் அரசி எலிசபெத் தங்கியிருந்தார்.
- 70 ஆண்டுகள்: கடந்த 1952-இல் அரியணை ஏறிய இரண்டாம் எலிசபெத் சாதனை அளவாக 70 ஆண்டுகள் அரசியாக இருந்தார். எலிசபெத்தின் மறைவையடுத்து, பிரிட்டன் அரச வம்ச சட்டத்தின்படி பட்டத்து இளவரசரான சார்லஸ் உடனடியாக அடுத்த அரசரானார்.

### பிரிட்டனின் வயதான மனிதர்

- ராணி இரண்டாம் எலிசபெத் மறைவுக்குப் பின், பிரிட்டனின் அடுத்த மன்னராக அவரது மூத்த மகன் மூன்றாம் சார்லஸ், (73), பதவியேற்கிறார்.
- பிரிட்டன் வரலாற்றில் அதிக வயதில் மன்னராவது இவர் தான்.
- இதற்கு முன், நான்காம் வில்லியம்ஸ் 1830இல் தன் 64 வயதில் மன்னராக முடிசூடியிருந்தார்.

### சார்லசின் பின்னணி

- 1948 நவம்பர் 14 : சார்லஸ் லண்டன் பர்கிங் ஹாம் அரண்மணையில் பிறந்தார்.
- இவர், மன்னர் பிலிப் – ராணி இரண்டாம் எலிசபெத் தம்பதியின் மூத்த மகன்.
- இளம் வயதில், போலோ விளையாட்டில் பங்கேற்றார். பலமுறை குதிரையில் இருந்து கீழே விழுந்து காயமடைந்தார்.
- கேம்பிரிட்ஜ் பல்கலையில் எம்.ஏ படிப்பை முடித்தார்.
- அரசு குடும்பத்தில் இருந்து முதன்முறையாக பல்கலைக்கு சென்று படித்தார்.

- இதற்கு முன், அரச குடும்பத்தினர் வீட்டிலேயே கல்வி கற்றனர்.
- 1968 : வேல்ஸ் இளவரசரானார்.
- 1971 – 1976 : பிரிட்டன் விமானப்படை, கப்பல்படையில் பணியாற்றினார்.
- 1976 : தி பிரின்ஸ்டிராஸ்ட் என்ற தொண்டு நிறுவனத்தை துவங்கினார்.
- இது ஆதரவற்ற இளைஞர்கள் கல்வி பயில்வதற்கு உதவுகிறது.
- 1977 : முதன்முறையாக டயானாவை சந்தித்தார்
- 1981 ஜுன் 21 : வில்லியம்ஸ் பிறந்தார். அடுத்து இவர் தான் மன்னர் ஆவார்.
- 1984 செப் 15 : ஹாரி பிறந்தார்.
- 1996 : டயானாவுடன் விவாகரத்து ஆனது
- 1997 ஆகஸ்டு 31 : கார் விபத்தில் டயானா உயிரிழந்தார்.
- 2005 : கமீலாவை திருமணம் செய்தார்.
- 2018 : சார்லசை, 54 நாடுகளைச் சார்ந்த காமன்வெல்த் நாடுகளின் தலைவராக, ராணி இரண்டாம் எலிசபெத் நியமித்தார்.
- பல புத்தகங்களை எழுதியுள்ளார்.
- ராணி உள்ளிட்ட அரச குடும்பத்தின் பல்வேறு அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தினார்.
- பிரிட்டன் தவிர ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து உட்பட 15 காமன்வெல்த் நாடுகளின் மன்னராகவும் இருப்பார்.
- பருவநிலை மாற்றத்தை தடுக்கும் விதமாக பாரம்பரிய விவசாயத்தை ஊக்குவித்தார்.
- பிரிட்டன் அரச குடும்பத்துக்கு சொந்தமான ‘டச் ஆப் கார்னிவல்’ எஸ்டேட்டின் மேனேஜராக இருந்த இவர், அங்கு பாரம்பரிய விவசாயத்தை ஊக்குவித்தார்.
- இதற்காக விருதுகளையும் பெற்றுள்ளார்.
- ஓமியோபதி உள்ளிட்ட மாற்று மருத்துவத்தை ஆதரித்தார்.

### மறக்க முடியாத இந்திய பயணங்கள்

- கடந்த 1952-ல் இங்கிலாந்து ராணியாக முடிசூடிய இரண்டாம் எலிசபெத், 15 ஆண்டுகள் கழித்து 1961ம் ஆண்டு முதல் முறையாக தனது கணவர் இளவரசர் பிலிப்புடன் இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது, தாஜ்மஹால் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை அவர் சுற்றிப் பார்த்தார். ராஜபாதையில் குடியரசு தின விழாவிலும் பங்கேற்றார்.
- பின்னர் 1983ல் மீண்டும் தனது கணவர் பிலிப்புடன் இந்தியா வந்தார். அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியையும், அன்னை தெரசாவையும் எலிசபெத் சந்தித்தார்.
- 3வது முறையாக 1997-ல் இந்தியா தனது 50வது சுதந்திர தினத்தை கொண்டாடிய வேளையில் எலிசபெத் இந்தியா வந்தார். அப்போது, சென்னை தரமணியில் உள்ள எம்ஜி ஆர் பிலிம் சிட்டியில் நடிகர் கமலஹாசனின் மருதநாயகம் பட விழாவில் பங்கேற்றார்.

### கோஹினூர் வைரம் யாருக்கு?

- இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட போது, உலகின் அரிதினும் அரிதான கோஹினூர் வைரம் பல கைகள் மாறி, இங்கிலாந்து ராணி வசம் சென்றது.
- ராணி எலிசபெத் அந்த வைரத்தை தனது கிரீடத்தில் பதித்துள்ளார்.
- விலைமதிக்க முடியாத இந்த வைரத்துடன் உள்ள கிரீடம், மன்னர் 3ம் சார்லசின் மனைவியும் இங்கிலாந்தின் புதிய ராணியுமான கமீலாவுக்கு இனி சொந்தமாகப் போகிறது.
- எலிசபெத் ராணியாக தனது 70ம் ஆண்டு கொண்டாட்டத்தின் போது, கமீலா அடுத்த ராணியாக பதவி வகிப்பார் என அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

### இங்கிலாந்து மட்டுமல்ல 15 நாடுகளுக்கு மகாராணி

- இங்கிலாந்து உட்பட 15 நாடுகள் ராணி எலிசபெத்தின் ஆளுமையின் கீழ் இருந்துள்ளன.

- அந்நாடுகளின் தலைவராகவும், மகாராணி என்ற பதவியையும் அவர் வகித்துள்ளார்.
- மேலும், 600 தொண்டு நிறுவனங்களில் புரவலராகவும் இருந்துள்ளார். ராணி எலிசபெத் ஆளுமையின் கீழ் இருந்த நாடுகள்.

| | | | |
|---|---|---|---|
| – | ஆஸ்திரேலியா | – | நியூசிலாந்து |
| – | ஜமைக்கா | – | கனடா |
| – | பஹாமஸ் | – | ஆன்டிகுவா |
| – | பார்புடா | – | பிலைஸ் |
| – | பப்புவா நியூ கினியா | – | செயின்ட் கிட்ஸ் அன்ட் நெவிஸ் |
| – | செயின்ட் லூசியா | – | செயின்ட் வின்சென்ட் |
| – | சாலமன் தீவுகள் | – | துவாலு |
| – | இங்கிலாந்து | | |

**சர்ச்சில் முதல் லிஸ் வரை 15 பிரதமர்களை கண்டவர்**

- எலிசபெத் தனது பதவிக்காலத்தில் 15 இங்கிலாந்து பிரதமர்களை கண்டுள்ளார்.
- கடந்த 1952 - 1955 வரை பதவி வகித்த வின்ஸ்டன் சர்ச்சில் எலிசபெத் பதவிக்காலத்தில் பொறுப்பேற்ற முதல் பிரதமர்.
- கடைசியாக தற்போதைய பிரதமர் லிஸ் டிரஸ்சை கடந்த செவ்வாய்கிழமை பிரதமராக எலிசபெத் நியமித்தார். இதுதான், எலிசபெத் பங்கேற்ற கடைசி நிகழ்ச்சியும் கூட.

**உலகப்போரில் பங்கேற்றவர்**

- ராணி 2ம் எலிசபெத் அரண்மனையில் வாழ்ந்து வெறும் சொகுசு வாழ்க்கையை மட்டும் அனுபவித்தவர் அல்ல.
- 2ம் உலகப் போரில் பிரிட்டன் ராணுவத்தில் சேர்ந்து நாட்டிற்காக சேவை புரிந்தவர்.
- இங்கிலாந்து மன்னர் பரம்பரையில் ராணுவ சேவையாற்றிய ஒரே ராணி எலிசபெத் மட்டுமே.
- அதுவும் 18வது வயதிலேயே ராணுவத்தில் இருந்துள்ளார்.
- அப்போது, டிரக்குகளின் டயர்களை கழற்றி மாட்டுவது உள்ளிட்ட சில மெக்கானிக் வேலைகளையும் கற்று தேர்ந்தவர். தனது 14வது வதியலேயே துப்பாக்கி சுட கற்றுக் கொண்டவர்.
- 1976-ம் ஆண்டு மன்னர் பரம்பரையில் முதல் முறையாக இமெயில் அனுப்பியவர் என்ற பெருமைக்குரியவர் எலிசபெத்.

**பாஸ்போர்ட் இல்லாதவர்**

- பாஸ்போர்ட் இல்லாமல் உலகின் எந்த நாட்டிற்கும் செல்லக்கூடிய அதிகாரம் படைத்தவர் ராணி எலிசபெத்.
- இங்கிலாந்து மன்னர் குடும்பத்தில் மற்ற அனைவருக்கும் பாஸ்போர்ட் தேவை.
- ஆனால், பாஸ்போர்ட்டில் அதிகாரப் பூர்வ கையெழுத்திடுபவரான எலிசபெத்துக்கு பாஸ்போர்ட் தேவையில்லை
- அதே போல, இங்கிலாந்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டக் கூடிய அதிகாரமும் ராணிக்கு உண்டு.
- இங்கிலாந்து கரன்சியிலும் ராணி எலிசபெத் புகைப்படம் இடம் பெற்றிருக்கும்.
- இனி மன்னர் 3ம் சார்லஸ் புகைப்படம் அச்சடிக்கப்பட்டு புதிய கரன்சிகள் வெளியிடப்படும்.
- பழைய கரன்சிகளும் புழக்கத்தில் இருக்கும்.
- அதே போல, தேசிய கீதத்திலும் ராணியை குறிக்கும் அவள் என்ற வார்த்தை சார்லசை குறிக்கும் வரையில் அவர் என மாற்றம் செய்யப்படும்.

## குழந்தைத் திருமணங்களைத் தடுக்க சுய உதவிக் குழு

- நாட்டிலேயே குழந்தைத் திருமணங்களும் பதின்பருவ கர்ப்பங்களும் மேற்கு வங்கத்தில்தான் அதிக அளவில் காணப்படுகின்றன.

- சுயஉதவிக் குழு உறுப்பினர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரின் வாழ்க்கையை பாதிக்கக்கூடிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் குழந்தைகள், தாய்மார்கள் ஆகியோரின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் இலக்கையும் கொண்டுள்ளது.
- குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்கான திட்டத்துக்கு யுனிசெஃப் அமைப்பு தொழில்நுட்ப ஆதரவை வழங்க உள்ளது.

## பிரிட்டன் அரசர் முடிசூடும் முறை

### புதிய அரசரை அறிவிப்போர்

- பதவியில் உள்ள அரசரோ அரசியோ மறைந்தபிறகு புதிய அரசரை அசெஷன் கவுன்சில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும்.

### அறிவிப்பிக்குப் பிறகு

- நாடாளுமன்றம் உடனடியாக கூட்டப்பட்டு, புதிய அரசருக்குக் கட்டுப்பட்டு நடப்போம் என மூத்த எம்பிக்கள் வாக்குறுதி அளிப்பர்.
- பின்னர் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீண்டும் உறுதிமொழி ஏற்க வேண்டும்.

### முடிசூட்டல் எப்போது?

- பல மாதங்கள் கழித்தே புதிய அரசரின் முடிசூட்டு விழா நடைபெறும்.
- மறைந்த அரசிக்கு மரியாதை செலுத்தவும், விழாவை நடத்த அதிகாரிகளுக்குப் போதிய அவகாசம் அளிக்கும் வகையிலும் இந்தத் தாமதம் ஏற்படுகிறது.

### பணநோட்டுகளில் அரசி எலிசபெத்

- தற்போது புதிய அரசராக மூன்றாம் சார்லஸ் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது படத்தைப் பணநோட்டுகளில் அச்சடிக்கும் வழக்கம் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

## ஒரே நாடு ஒரே உரம்

- பாரதிய ஜனுர்வாரக் பரியோஜனா – பிஎம்பிஜேபி விவசாயிகளுக்கு குறித்த நேரத்தில் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதும், போக்குவரத்துக்கான மானிய சுமையைக் குறைப்பதும்தான் இந்தத் திட்டத்தின் நோக்கங்கள்.
- முன்பு உர ஊட்டச்சத்து மானியம் (நியூட்ரியன்ட் பேஸ்டு சப்சிடி) யூரியா, பாஸ்பரஸ், பொட்டாஷ் என்று வகைப்படுத்தப்பட்டிருந்தது. முந்தைய மானியக் கொள்கையில் எந்த வித மாற்றமும் இல்லை. ஆனால், அனைத்து உரங்களும் பாரத் என்கிற ஒரே இலச்சினையில்தான் விற்பனை செய்யப்படும். அவற்றை உற்பத்தி செய்யும் தனியார் உர நிறுவனங்களின் இலச்சினைகள் பைகளில் இடம் பெறாது.
- உரப் பைகளின் மீது மூன்றில் ஒரு பங்க இடத்தில் தயாரிப்பு நிறுவனத்தின் வணிகப் பெயர், இலச்சினை, பொருள் தொடர்பான விவரக் குறிப்புகள் இடம்பெற அனுமதிக்கப்படுகிறது.
- மூன்றில் இரண்டு பங்கு இடத்தில் பாரத் என்கிற வணிகப் பெயரும் பிஎம் பிஜேபி திட்டத்தின் இலச்சினையும் இடம்பெற வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் 'பாரத் என்பிமே', 'பாரத் எம்ஓபி', 'பாரத் டிஏபி', 'பாரத் யூரியா' என்கிற பெயர்களில் தான் ரசாயன உரங்கள் அறியப்படும்.
- யூரியாவின் சில்லறை விற்பனை விலையில் 89%, டிஏபி எனப்படும் டை அமோனியம் பாஸ்பேட்டுக்கு 65%, என்பிகே உரத்துக்கு 55%, எம்ஓபி உரத்துக்கு 31% அளவில் மத்திய அரசால் மானியம் வழங்கப்படுகிறது. தயாரிப்புச்செலவு என்னவாக இருந்தாலும், 45 கிலோ யூரியா உரப்பையை ரூ.242க்கு விவசாயி வாங்கும்போது உரத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு மானியமாக 89% வழங்கப்படுகிறது. யூரியாவின் விலை அதிகரிக்காமல் இருப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை இது.
- ராஜஸ்தானில் உற்பத்தியாகும் 'சம்பல்' உர நிறுவனம் உத்தர பிரதேசத்திலும் உத்தர பிரதேச நிறுவனங்கள் ராஜஸ்தானிலும் தங்களது உரங்களை விற்பனை செய்கின்றன. பல்வேறு வணிகப் பெயர்களில் தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் உரங்கள், மாநிலம் விட்டு மாநிலம் சென்று சந்தைப்படுத்தப்படுகின்றன.
- இந்தியாவின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு உரங்களை எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவுக்கும் சேர்த்து அரசு மானியம் வழங்க வேண்டிய நிலைமை உள்ளது. தேவையில்லாத ஆரோக்கியமற்ற போட்டியை தவிர்ப்பதும், உர தயாரிப்பு நிறுவனங்கள் அவரவர் பகுதிகளிலேயே விற்பனை செய்ய வழிகோலுவதும், உரத் தயாரிப்பு இல்லாத மாநிலங்களில் உரத் தயாரிப்பு நிறுவனங்கள் உருவாக வழிகோலுவதும் ஒரே நாடு ஒரே திட்டம் திட்டத்தின் நோக்கங்கள்.

## புதிய நாடாளுமன்ற வளாகம்

- ஆங்கிலேயர் கால சுவடுகளை நீக்கும் வகையில் டெல்லியில் புதிய நாடாளுமன்றம் கட்ட முடிவு செய்யப்பட்டது. புதிய நாடாளமன்ற கட்டிடத்துக்கு கடந்த 2020 டிசம்பர் 10-ந்தேதி பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். 64,500 சதுர மீட்டர் பரப்பளவில், 4 மாடிகளுடன் முக்கோண வடிவில் புதிய நாடாளுமன்றம் கட்டப்படுகிறது.
- பிரதமர் இல்லம், குடியரசு துணைத்தலைவர் இல்லம், மத்திய செயலகம், மத்திய கருத்தரங்கு மையம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகம் 51 அமைச்சகங்களின் அலுவலகங்கள் உள்ளிட்டவை நாடாளுமன்ற வளாகத்தில் கட்டப்படுகின்றன.

### கடமை பாதை

- 3கி.மீ தொலைவு கொண்ட ராஜபாதை புனரமைக்கப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் கிங்ஸ் வே என்று பெயர் சூட்டப்பட்ட இந்த பாதை, இந்தியில் 'ராஜ பாதை' என்று அழைக்கப்பட்டது. இதை 'கர்த்தவ்ய பாத்' (கடமை பாதை) என மத்திய அரசு அண்மையில் மாற்றியது.

## கொர்பசேவ்

- சோவியத் ஒன்றியத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார் என்கிற அளவிலும் வலதுசாரிகளுக்கு அவர் மிகவும் பிடித்தமானவர், சோஷலிச முகாமை அடகு வைத்துவிட்டார், அழித்துவிட்டார் என்கிற அளவில் இடதுசாரிகளால் பெரிதும் விமர்சிக்கப்பட்டவர்.
- சோவியத் ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்புக்கு வந்தவர்களில் 1917 புரட்சிக்குப் பின் பிறந்தவர்களில் முதலும் கடைசியுமானவர் கொர்பசேவ்.

### பனிப்போரின் விளைவுகள்

- சோஷலிசக் கட்டுமானம் என்கிற வரலாற்றில் முற்றிலும் புதிய பரீட்சையை மேற்கொண்டிருந்த சோவியத் ஒன்றியத்தால், உலகெங்கும் பொருளாதாரச் சுரண்டலை நடத்திய அமெரிக்காவுடன் ஆயுதப் போட்டியை வெற்றிகரமாக நடத்த முடியவில்லை. அது சோவியத்தின் கஜானாவைக் காலிசெய்து கொண்டிருந்தது.
- புரட்சிக்காலத்திலும் போர்க்காலத்திலும் நடைமுறையிலிருந்த கருத்துச் சுதந்திரக் கட்டுப்பாடு, நிரந்தரமான அரசியல் நடைமுறையாகவே சோவியத் நாட்டில் மாறியிருந்தது. இந்தத் தேக்கநிலைக்கும் சிறை வாசத்துக்கும் முடிவுகட்டுவதற்கான முயற்சியை எடுத்தார்.
- கொர்பசேவ், அவர் செய்த நல்ல காரியமும் அதுதான், சோவியத் வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் அவரை வீசியெறிந்த தவறான காரியமும் அதுதான்.

### பெரஸ்ட்ரொய்கா – கிளாஸ்னாஸ்ட்

- பெரஸ்ட்ரொய்கா (பொருளாதாரச் சீர்திருத்தம்), கிளாஸ்னாஸ்ட் (கருத்துச் சுதந்திர வெளிப்பாட்டு முயற்சி) என்கிற இரண்டும் கொர்பசேவால் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், அவர் கொண்டுவந்த நோக்கத்துக்கு நேரெதிராகவே அவை முடிந்தன.
- சோவியத் ஒன்றியத்தைக் கொர்பசேவ் பலிகொடுத்துவிட்டார். கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்தை அவர் பலவீனப்படுத்திவிட்டார் என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சிலர் 1991 ஆகஸ்டில் கொர்பசேவுக்கு எதிராக மேற்கொண்டது.
- அந்தக் கிளர்ச்சியின் விளைவால் ஆட்சி போரீஸ் யெல்த்சினின் கைக்கு வந்தது. அவர் சோவியத் ஒன்றியத்துக்கு அதிகாரபூர்வமாக முற்றுப்புள்ளி வைத்து, செங்கொடியைக் கிரெம்ளினிலிருந்து இறக்கிவிட்டார்.
- யெல்த்சின் காலத்தில் நாட்டின் பொருளாதார வளங்கள் எல்லாம் சில தனிப்பட்ட முதலாளிகளின் கைகளுக்குள் சென்றன. புடினின் காலத்தில் இப்போது பழைய ரஷ்யப் பேரரசு மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. சோவியத் வீழ்ச்சிக்காகக் கொர்பசேவை மன்னிக்கவே தயாராக இல்லாதவர் புடின்.

## பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான ஒதுக்கீடு

- அடிப்படை கவலைகள் : EWS ஒதுக்கீட்டை உச்சநீதிமன்றம் ஆய்வு செய்த நிலையில், மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கரநாராயணன் வரைவு சட்ட சிக்கல்களைத் தயாரித்தார்.
- 103வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், முற்றிலும் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க முடியாது என்ற இந்திரா சகானி தீர்ப்பின் அடிப்படையை நீக்குகிறதா?
- EWS இடஒதுக்கீட்டின் வரம்பிலிருந்து SEBC, OBC, SC, ST ஆகியவற்றைத் தவிர்த்து அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை மீறுகிறதா?

- தற்போதுள்ள இடஒதுக்கீட்டிற்கு புனிதம் அளிப்பதன் மூலம் அது சமத்துவக் குறியீட்டையும் அரசியலமைப்புத் திட்டத்தையும் மீறுகிறதா?
- ஏற்கனவே உள்ள இடஒதுக்கீடு வரம்பு எல்லையை EWS-க்கு 10% வழங்குவதன் மூலம் 50% ஒதுக்கீட்டை மீறுகிறதா?
- தனியார் உதவி பெறாத நிறுவனங்களுக்கு ஒதுக்கீட்டை விதிப்பது அடிப்படை கட்டமைப்பை மீறுகிறதா?

## இந்தியாவின் நவீன கவி

- இந்தியாவின் தேசியக் கவியாக இன்றைக்கும் திகழ்பவர் ரவீந்திரநாத் தாகூர்.
- இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் அவர்தான்.
- கீதாஞ்சலி கவிதைத் தொகுப்புக்காக 1913இல் நோபல் அவருக்கு அளிக்கப்பட்டது.
- அவரது ஜன கண மன பாடல் 1950, ஜனவரி 24இல் நாட்டுப்பண்ணாக இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது
- அதுபோல் தாகூரின் 'அமர் சோனார் பங்களா' என்னும் பாடல் 1971இல் வங்கதேசத்தின் நாட்டுப்பண்ணாக அறிவிக்கப்பட்டது.
- அவர் எழுதிய கீதாஞ்சலி நூலை அவரே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- மீண்டும் தாகூர் லண்டன் சென்றிருந்தபோது, தனது கீதாஞ்சலி மொழிபெயர்ப்பை அவரது நண்பரும் ஓவியருமான வில்லியம் ரோதென்ஸ்டினுக்கு அளித்துள்ளார்.
- அவர் வழியாக அந்த நூல் இங்கிலாந்து இலக்கிய வட்டத்தில் பரவலாக வாசிக்கப்பட்டுப் கவனம் பெற்றது.
- தாகூருக்கு நோபல் பரிசு கிடைக்க இது காரணமாக அமைந்ததால் நோபல் பரிசையே ரோதென்ஸ்டினுக்குச் சமர்ப்பணம் செய்தார்.
- இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் அளித்த நைட்ஹுட் பட்டத்தை ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் திருப்பி அளித்தார்.
- காந்தியின் கருத்துக்கள் மீது முரண்பாடு இருந்தாலும், அவரது போராட்டத்துக்கு ஆதரவாக நின்றிருக்கிறார்.
- தமிழ்க் கவி பாரதியார், தாகூரின் கவிதைகளால் ஈர்க்கப்பட்டவர்.
- தாகூரின் கட்டுரைகளை பாரதி தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
- இந்தியக் கவிதை மரபில் மேற்கின் நவீனத்தைத் தொடங்கிவைத்தவர் என தாகூர் கருதப்படுகிறார்.
- தாகூர் நிறுவிய சாந்திநிகேதன், இன்று விஸ்வபாரதி பல்கலைக்கழகமாக மேற்கு வங்கத்தில் செயல்பட்டு வருகிறது.

## உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

- முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடப்புக் கணக்கு பற்றாக்குறையும், அந்நியச் செலாவணி இல்லாமையுமாக இருந்த இந்தியா, இப்போது உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக உயர்ந்திருக்கிறது.
- தொலைநோக்குப் பார்வையுடன், அன்றைய பிரதமர் பி.வி.நரசிம்ம ராவ் பொருளாதார சீர்திருத்தத்தையும் தாராளமயக் கொள்கையையும் அறிவித்து, இந்தியாவில் உலகமயச் சூழலுக்கு இட்டுச் சென்றவர்கள் காரணம் இப்போது புரிகிறது.
- உலக அளவில் மிகப் பெரும் பொருளாதார மதிப்பு கொண்ட நாடாக அமெரிக்காவும், அதைத் தொடர்ந்து சீனா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளும் இருந்து வருகின்றன.
- ஐந்தாவது இடத்தை நாம் எட்டியிருக்கிறோம்.
- சர்வதேச நிதியத்தின் தரவுகளின் அடிப்படையில் புளூம்பெர்க் ஊடக நிறுவனம், பிரிட்டனைப் பின்னுக்குத் தள்ளி ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கிறது.
- டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ 80 என்கிற அளவில் குறைந்திருக்கிறது என்றாலும், அதற்கு சர்வதேச பொருளாதாரம் முக்கியமான காரணம்.
- ஏனைய நாடுகளின் செலாவணிகளுடன் ஒப்பிடும்போது இந்திய ரூபாயின் மதிப்பு குறைவு மிகவும் மோசமாக இல்லை என்ற ஆறுதல் அடையலாம்.
- பிரிட்டனின் 3.2 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தைக் கடந்து இந்தியப் பொருளாதாரம் 3.5 டிரில்லியன் டாலராக உயர்ந்திருக்கிறது.

- ஐந்தாண்டுகளுக்கு முன்பே 2016இல் நாம் இந்த நிலையை எட்டியிருக்கக் கூடும்.
- அப்போது 2.34 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக பிரிட்டனும் 2.29 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக இந்தியாவும் இருந்தன.
- உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரம் என்பது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கலாம்.
- ஆனால் அதன் பயன் அடித்தட்டு மக்களை சென்றடையாமல் போனால், அந்த வளர்ச்சி நிரந்தரமானதாக இருக்காது.
- வேளாண் சீர்திருத்தச் சட்டங்களும், நிலம் கையகப்படுத்தும் சட்டமும் நிறைவேற்றப்படாத வரை இந்தியாவின் எதிர்பார்ப்பு நிறைவேறாது.

## சித்ரா ராமகிருஷ்ணா

- கடந்த 2013 முதல் 2016ஆம் ஆண்டு வரை என்எஸ்இ நிர்வாக இயக்குநராகவும் தலைமை செயல் அதிகாரியாகவும் சித்ரா ராமகிருஷ்ணா பதவி வகித்தார்.
- அப்போது என்எஸ்இ அதிகாரிகளுடன் கூட்டுச்சேர்ந்து கோ – லொகேஷன் என்ற வசதி மூலம் சில பங்குச் சந்தை தரகர்கள் முறைகேட்டில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.
- இந்த கோ – லொகேஷன் வசதி மூலம், என்எஸ்இ கணினி சேமிப்பகத்தை பங்குச்சந்தை தரகர்கள் தொடர்பு கொண்டு பங்கு விவரங்களை முன்கூட்டியே அறிந்து முறைகேட்டில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.
- இந்த முறை கேடு வாயிலான பெரும் லாபம் ஈட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.
- குற்றப் பத்திரிக்கையில் இடம்பெற்றுள்ளவர்கள் உள்பட என்எஸ்இயின் மூத்த அதிகாரிகள், சட்ட விரோதமாக தொலைபேசிகளை ஒட்டுக்கேட்க ஐசெக் சர்வீசஸ் நிறுவனத்தை அனுமதித்தாக அமலாக்கத் துறை குற்றஞ்சாட்டியுள்ளது.
- அதன் மூலம் என்எஸ்இக்கு அந்த அதிகாரிகள் நிதி இழப்பை ஏற்படுத்தியதாகவும் அமலாக்கத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## செண்பகராமன்

- முதலாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், 1914 செப்டம்பர் 22 அன்று எஸ்.எம்.எஸ். எம்டன் என்கிற பிரம்மாண்ட ஜெர்மானியப் போர்க்கப்பல் சென்னை மீது குண்டுகளை வீசிக்கொண்டிருக்கிறது.
- பிறகு கேரளக் கடற்பகுதியில் நங்கூரமிட்ட அந்தக் கப்பல் பிரிட்டிஷ் கப்பல்களைத் தடுத்து சரமாரியாகத் தாக்கியழித்துக் கொண்டிருந்தது.
- இந்தத் தாக்குதலுக்குப் பின்னால், விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் இருந்திருக்க வேண்டும் என்று இந்திய மக்கள் நம்பினார்கள்.

### யார் இந்த செண்பகராமன்

- திருவனந்தபுரத்தின் தலைமைச் செயலகம் அருகில், இன்றைய ஏ.ஜி.எஸ். அலுவலகம் உள்ள இடத்துக்கு அருகே ஒரு சிறிய வீட்டில், வெங்கிடி என்று அறியப்பட்ட சிறிய குடும்பத்தில் பிறந்தார்.
- செண்பகராமன், அங்கிருந்த மாடல் பள்ளியில் படித்துவந்த சிறுவன் செண்பகராமன், ஆங்கிலேயருக்கு எதிரான முழக்கங்களை வகுப்பிலேயே எழுப்பியவர்.
- நாட்டிலேயே முதன்முதலாக ஜெய்ஹிந்த் என்று அந்தச் சிறுவன் எழுச்சியுடன் கோஷமிட்டதைக் கேட்ட தலைமை ஆசிரியர் மிரண்டுவிட்டார்.
- ஆஸ்திரியாவில் ஒரு கல்லூரியில் சேர்ந்த செண்பகராமன், அங்கு பொறியியல் பட்டயப் படிப்பை முடித்தார்.
- அரசியல் அறிவியலிலும், பொருளாதார அறிவியலிலும் விருதுகள் பெற்றார்.
- 12 மொழிகளில் புலமை பெற்றிருந்த அவர், ஜெர்மனியின் புகழ்பெற்ற ஆராய்ச்சி மையங்களில் பொறியாளராகப் பணியாற்றி வந்தார்.
- சுமார் 20 ஆண்டுகாலம் ஜெர்மனியில் வசித்தார் செண்பகராமன்.

### செண்பகராமனின் முயற்சிகள்

- இந்தியப் பெருங்கடலில் எம்டன் கப்பல் நின்றிருந்த இரண்டாம் மாதத்தில், ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில் தீவிர அரசியல் நடவடிக்கைகளில் செண்பகராமன் ஈடுபட்டிருந்தார் என்று சான்றுகள் கூறுகின்றன.

- ஜெர்மனியில் இருந்தபோது, செண்பகராமன் மற்ற இந்தியப் புரட்சி வீரர்களின் உதவி எம்டன் கப்பலுக்குக் கிடைத்திருக்க வேண்டும்.
- முதலாம் உலகப் போரில் நடுநிலைப்பாட்டுடன் இருந்த சுவிட்சர்லாந்தை மையமாகக் கொண்டு சுதந்திர இந்தியாவுக்கான ஆதரவாளரின் சங்கத்தை நிறுவினார் செண்பகராமன்.
- பெர்லினை மையமாகக் கொண்டு ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் 'புரோ இந்தியா' என்ற பெயரில் இந்திய விடுதலை ஆதரவு முன்னெடுப்புகளை அவர் தொடங்கினார்.

## புற்றுநோய்க்கு எதிரான முதல் தடுப்பூசி

### புற்றுநோய் உண்டாக்கும் வைரஸ்

- ஜெர்மானிய மருத்தவ விஞ்ஞானியான ஹொரால்ட் ஹாசன், மனித உயிரைப் பறிக்கும் புற்றுநோயின் ஆரம்பம் என்பது ஒரு சாதாரண வைரஸ் தொற்றாகவும் இருக்கலாம்.
- அது மனித உடலினுள் தங்கியிருந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு புற்றுநோயாக மாறலாம் என்பதை முதலில் கண்டறிந்து அறிவித்தார்.
- இத்தகைய வைரஸ் கிருமிகளில் ஏறத்தாழ இருநூறுக்கும் அதிகமான வகைகள் உள்ளன என்றாலும் அவற்றில் ஹ்யூமன் பேப்பிலோமா வைரஸ் (HPV) 16, 18, 31, 45 ஆகிய வகைகள் மட்டுமே புற்றுநோய்த் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை என்பதைத் தனது ஆராய்ச்சிகளின் மூலம் டாக்டர் ஹெரால்ட் 1973இல் கண்டறிந்தார்.
- ஹெச்.பி.வி என்பது ஒரு டிஎன்ஏ வைரஸ்.
- இதனால் உண்டாகும் புற்றுநோய்களில் செர்விகல் கேன்சர் எனும் கருப்பைவாய்ப் புற்றுநோயே இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளுக்கு இன்றளவும் பெரும் சவாலாக இருந்துவருகிறது.
- பொதுவாக, உடலுறவுக்குப் பின் ஏற்படும் இந்த ஹெச்பிவி வைரஸ் தொற்று பெரும்பாலான வேளைகளில் எந்தவொரு நோய் அறிகுறியையும் வெளிப்படுத்தாது.
- இருப்பினும், சில நேரங்களில் condyloma எனும் மருக்கள் இரு பாலருக்கும் உதடுகளிலும், பிறப்புறுப்புகளிலும் தோன்றி சாதாரணமாக மறைந்துவிடும்.
- ஆனால், ஆண்டுகணக்கான அறிகுறி இன்றி உடலில் தங்கும் இந்த ஹெச்.பி. 16, 19, 31, 45 வைரஸ் சில பெண்களுக்குக் கருப்பைவாயிலிலோ பிறப்புறுப்பிலோ புற்றுநோயை உண்டாக்கும்.
- ஆண்களின் உடலில் தங்கும் இந்த வைரஸ் பிறப்புறுப்பிலோ ஆசனவாயிலோ தொண்டையிலோ புற்றுநோயை உண்டாக்கும்.

### கருப்பைவாய்ப் புற்றுநோய்

- ஹெச்.பி.வி ஏற்படுத்தும் புற்றுநோய்களில் கருப்பைவாய்ப் புற்றுநோய் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்கிறது.
- இந்தியாவில் மட்டும் ஆண்டுதோறும் ஒரு லட்சம் பெண்கள் கருப்பைவாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள்.
- இந்தப் புற்றுநோயால் இந்தியாவில் மட்டும் ஒருமணி நேரத்திற்கு எட்டுப் பெண்கள், அதாவது எட்டு நிமிடங்களுக்கு ஒரு பெண் இறக்க நேரிடுகிறது என்று இந்தியப் புற்றுநோய் தடுப்பு அமைப்பு கூறுகிறது.
- கருப்பை வாய்ப் புற்றுநோய் ஆரம்பத்தில் எந்த அறிகுறிகளையும் வெளிப்படுத்துவது இல்லை என்பதால், நோய் முற்றிய மூன்றாம் நிலை அல்லது நான்காம் நிலையில்தான் அதன் பாதிப்பு கண்டறியப்படுகிறது.
- தாமதமான கண்டறிதல் காரணமாக, சில மாதங்களிலேயே பாதிக்கப்பட்டவர்கள் இறக்கவும் நேரிடுகிறது.

### ஹெச்பிவி தடுப்பூசி

- உண்மையில், கருப்பைவாயில் புற்றுநோயானது பாலியல் நோய்கள், புகைபிடித்தல், வாழ்க்கைமுறை மாற்றங்கள், சுற்றுச்சூழல் மாசு போன்ற பல காரணங்களால் ஏற்படலாம்.
- இருப்பினும், இவற்றையெல்லாம் விட முக்கியக் காரணியாக ஹெச்பிவி தொற்று உள்ளது.
- தற்போது கண்டறியப்பட்டிருக்கும் ஹெச்பிவி தடுப்பூசி, ஹெச்பிவி வைரஸால் ஏற்படும் புற்றுநோயைத் தடுக்கிறது.

- இந்த ஹெச்பிவி வைரஸ்களின் தாக்கம், 20லிருந்து 40 வயதுக்கு உட்பட்டவர்களையே பாதிக்கும் என்பதால், 20 வயதுக்கு முன்பே இந்தத் தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதே இந்நோயிலிருந்து முற்றிலும் காக்கும்.
- ஆஸ்திரேலியாவின் க்வீன்ஸ்லாண்ட் பல்கலைக்கழகத்தில், இயான் ஃப்ரேசர் எனும் ஆஸ்திரேலிய மருத்துவ விஞ்ஞானி ஹெச்பிவி கிருமிக்கு எதிரான இந்தத் தடுப்பூசியை 2006இல் கண்டுபிடித்தார்.
- இது வைரஸ் தொற்றுநோய்க்கான தடுப்பூசி என்பதாக மட்டுமல்லாமல், புற்றுநோய்க்கு எதிரான முதல் தடுப்பூசி எனவும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.
- இந்த ஹெச்பிவி தடுப்பூசி, மற்ற தடுப்பூசிகளைப் போல நோயைச் சிறிது உண்டாக்கி எதிர்ப்பாற்றலை உருவாக்குவதில்லை.
- அது நேரடியாக நோயெதிர்ப்பு ஆற்றலை அளிக்கிறது.
- இதன் காரணமாக அது வைரஸ் தொற்றை 99.7 சதவீதம் தடுக்கிறது.
- முக்கியமாக, கருப்பைவாய் புற்றுநோயையும், மற்ற பாதிப்புகளையும் 90% தடுக்கிறது.

### தடுப்பூசி வழங்கும் விதம்

- 9 - 14 வயதிலிருக்கும் பெண் குழந்தைகளுக்கு ஆறு மாத கால (0, 6) இடைவெளியில் இரண்டு முறையும், 15 - 26 வயதிலிருக்கும் பெண்களுக்கு, ஆறு மாதங்களில் (0,2,6) என மூன்று முறையும் இந்தத் தடுப்பூசி வழங்கப்படுகிறது.
- பெண்ணின் வயது கூடும்போதோ, திருமண வாழ்க்கைக்குப் பிறகோ இந்தத் தடுப்பூசியின் செயல்திறன் குறைகிறது என்பதால், பெண்கள் தங்கள் பதின்பருவத்திலேயே இதனைப் போட்டுக் கொள்ளவும் பரிந்துரைக்கப்படுகிறது.
- பெண்களைப் போலவே ஆண்களுக்கும் இது ஆசனவாய்ப் புற்றுநோய் உட்பட பல்வேறு பாதிப்புகளையும் தடுப்பதால், சமீபகாலமாக ஆண்களுக்கும் இந்தத் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது.
- இந்தத் தடுப்பூசியும் மற்ற தடுப்பூசிகளைப் போலவே தலைவலி, காய்ச்சல், தசைவலி, தலைச்சுற்றல் போன்ற சிறிய எதிர்வினைகளை உண்டாக்கும்.
- கர்ப்பிணிப் பெண்களும் அதீத ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டவர்களும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களும் இந்தத் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளக்கூடாது.

## குழந்தைகளைக் காப்போம்

- அமெரிக்கா, ஆஸ்திரேலயா, கென்யா, இலங்கை உட்பட்ட 100க்கும் அதிகமான நாடுகள் ஹெச்பிவி தடுப்பூசியைத் தங்களது தேசியத் தடுப்பூசித் திட்டத்தில் சேர்த்துள்ளன.
- அங்கே குழந்தைகளுக்கும் இந்தத் தடுப்பூசி வழங்கப்படுகிறது.
- இந்தியாவில் Gardasil (quadrivalent), Cervarix (bivalent) என இரண்டு வகையான தடுப்பூசிகள் கிடைக்கின்றன.
- ஆனால், ஓர் ஊசியின் விலை 4000 ரூபாய் என்கிற அளவில் இருக்கிறது.
- மக்கள்தொகை, ஊசியின் அதிக விலை போன்ற காரணங்களால், இந்தத் தடுப்பூசியை இந்தியாவில் நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்தது.
- ஆனால், தான் கண்டறிந்த செர்வார்க் தடுப்பூசியை வெறும் 400 ரூபாய்க்குள் வழங்க முடியும் என்று சீரம் இன்ஸ்டிடியூட் அறிவித்துள்ளது.
- குறைவான விலை, இந்தத் தடுப்பூசியை இந்தியா முழுவதும் வழங்குவதற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

## அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் இகா ஸ்வியாடெக் சாம்பியன்

- மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் சாம்பியன் பட்டம் வென்றார்.
- 4 கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது.
- அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் அவர் வெல்லும் முதலாவது பட்டமாகும் இது.

## காஷ்மீரின் குர்ஜார் முஸ்லிம் நியமன எம்.பி.யாக அறிவிப்பு

- ஜம்முகாஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்தை கடந்த 2019-ம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய அரசு ரத்து செய்தது.

- மேலும் அம்மாநிலத்தை ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என 2 யூனியன் பிரதேசங்களாக பிரித்தது. இதில் சட்டப்பேரவையுடன் கூடிய காஷ்மீரில் விரைவில் தேர்தல் நடைபெற உள்ளது.
- "இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், காலியாக உள்ள மாநிலங்களவை நியமன உறுப்பினர் பதவிக்கு குலாம் அலியை நியமனம் செய்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்".

## 2047ல் வளர்ந்த நாடாக மாறுமா இந்தியா?

- உலகின் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் பிரிட்டனைப் பின்னுக்குத் தள்ளி, இந்தியா 5-வது இடத்துக்கு முன்னேறி இருப்பது சர்வதேச கவனம் பெற்று இருக்கிறது.
- அடுத்த பத்தாண்டுகளில் இந்தியா இந்தப் பட்டியலில் 3-வது இடத்துக்கு முன்னேறுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

### 1. சுயசார்பு பொருளாதாரம்

- இந்தியா வளர்ந்த நாடாக மாறுவதற்கான பயணம் சுயசார்பு பொருளாதாரத்திலிருந்து தொடங்குகிறது.
- குண்டூசி முதல் ராக்கெட் வரை அனைத்தும் இந்தியாவில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதே சுயசார்பு திட்டத்தின் அடிப்படை நோக்கம்.
- இந்தியாவின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான இடைவெளி ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்தபடியே செல்கிறது. ஏற்றுமதியை விட இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்கிறது.
- முன்னேறும் நாடுகளின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருப்பது எரிசக்தி இறக்குமதி. எரிபொருள் இறக்குமதிக்கு அதிகம் செலவிட வேண்டியுள்ளதால் வளர்ச்சி திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்க முடியாத கையறு நிலையில் பல நாடுகள் உள்ளன.
- இந்தியா அதன் எரிபொருள் தேவையில் 85 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறது.
- தற்போது உலகம், மின் வாகனத்தை நோக்கி வேகமாக நகர்ந்து வருகிறது. இதனால், பேட்டரி சார்ந்த ஆராய்ச்சிகளில் வளர்ந்த நாடுகள் அதிக முதலீடுகள் செய்கின்றன.
- சீனா பேட்டரி தயாரிப்பில் உலக அளவில் முன்னிலை வகிக்கிறது. ஆனால், இந்தியா பேட்டரி தயாரிப்பிலும் அது தொடர்பான ஆராய்ச்சியிலும் மிகவும் பின்தங்கியே உள்ளது.
- கடந்த ஆண்டு லித்தியம் பேட்டரிகளின் இறக்குமதி 55 சதவீதமும், சோலார் உபகரண இறக்குமதி 102 சதவீதமும் உயர்ந்துள்ளன.
- இந்தியா தற்போது சேவைத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அதே அளவுக்கான முக்கியத்துவத்தை உற்பத்தித் துறைக்கும் கொடுக்க வேண்டும்.

### 2. தனிநபர் வருமானம்

- பிரிட்டனின் தனிநபர் வருமானத்துக்கும் இந்தியாவின் தனிநபர் வருமானத்துக்கும் மிகப்பெரிய இடைவெளி உள்ளது.
- பிரிட்டனில் தனிநபர் வருவாய் ஆண்டுக்கு 50,000 டாலராக உள்ள நிலையில், இந்தியாவில் அது வெறும் 2,200 டாலராக மட்டுமே உள்ளது.
- உலக வங்கியின் கூற்றுப்படி 12,000 டாலர் தனிநபர் வருமானம் உடையவை வளர்ந்த நாடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.
- அமெரிக்கா(70,000 டாலர்), சிங்கப்பூர் (70,000 டாலர்), ஜப்பான 40,000 டாலர்), கொரியா (35,000 டாலர்) ஆகிய நாடுகள் உலக வங்கி வரையறையை விட அதிகபட்ச தனிநபர் வருமானத்தைக் கொண்டிருக்கின்றன.
- 2047-ம் ஆண்டில் இந்தியா வளர்ந்த நாடாக மாற வேண்டுமென்றால், அதன் மொத்த தேசிய வருமான வளர்ச்சி விகிதம் அடுத்த 25 ஆண்டுகளுக்கு சராசரியாக 8.9% என்ற அளவில் வளர்ச்சி காண வேண்டும். இதற்கான வழிமுறையை திட்டமிட வேண்டிய கட்டாயத்தில் இந்தியா உள்ளது.

### 3. அடிப்படைப் பிரச்சனைகள்

- தேசிய வருவாயில் 57 சதவீதம் பொருளாதார ரீதியாக மேலடுக்கில் உள்ள 10 சதவீதத்தினரை சென்றடைகிறது. எஞ்சியுள்ளதில் 13 சதவீத வருவாயை மட்டுமே 50 சதவீத மக்கள் பகிர்ந்து கொள்கின்றனர் என உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை 2022-ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- அதேபோல், வேலையின்மை பிரச்சனையும் தீவிரமாக நிலவுகிறது.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் இந்தியா மிகவும் பின்தங்கிய இடத்தில் உள்ளது. மக்கள் மகிழ்ச்சிகரமாக வாழும் நாடுகளின் பட்டியலிலும், கருத்துச் சுதந்தரமிக்க நாடுகளின் பட்டியலிலும் இந்தியா பின்தங்கியே உள்ளது.
- பாலின பாகுபாடு, சுகாதார கட்டமைப்பு, குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து குறைபாடு என இந்தியா முன் இருக்கும் அடிப்படையான சவால்கள் ஏராளம்.
- பொருளாதார ரீதியாக வளர்வது மட்டும் வளர்ச்சி இல்லை. மக்களின் வாழ்க்கைத் தரத்தின் அடையாளம்தான் நாட்டின் உண்மையான வளர்ச்சியை எடுத்துக்காட்டக்கூடியது.
- அதனை நோக்கிய பயணம் வெற்றிகரமாக அமையும்பட்சத்தில், 2047-ல் வளர்ந்த நாடு எனும் இந்தியாவின் கனவு நனவாகும்!

## தேவை மொழிப் பல்கலைக்கழகங்களுக்கான சமநீதி

- தமிழ்நாட்டு உயர் கல்வி நிறுவனங்களுள் பல, தேசியத் தரவரிசைப் பட்டியலில் உயர்நிலை இடம் பிடித்திருப்பது தமிழ்நாட்டின் உயர்கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகளுக்குக் கிடைத்த நற்சான்றாகும்.

### மத்திய மொழி நிறுவனங்கள்

- இந்திக்கு மஹாராஷ்டிரத்தின் வார்தாவில் மகாத்மா காந்தி அந்தராஷ்டிரீய இந்தி விஸ்வ வித்யாலயா எனும் மத்தியப் பல்கலைக் கழகமும் (1997), மத்திய இந்தி இயக்ககமும் உள்ளன.
- உருதுமொழிக்கு மௌலானா ஆசாத் தேசிய உருதுப் பல்கலைக்கழகம் (1998) ஹைதராபாத்தில் செயல்பட்டு வருகிறது.
- இந்திய மொழிகளுக்கான இந்திய மொழிகளின் மத்திய நிறுவனம் (1969) மைசூரில் நிறுவப்பட்டுள்ளது.
- செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ள மொழிகளுள் தமிழுக்கு மட்டும் சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இயங்கி வருகிறது.
- ஆங்கிலம், அயலக மொழிகள் பல்கலைக் கழகம் (2007) ஹைதராபாத்தில் இயங்கிவருகிறது.
- சமஸ்கிருதத்துக்கு மத்திய - மாநில அரசுகளால் உருவாக்கப்பட்டுள்ள 18 பல்கலைக்கழகங்களுள் 2020 இல் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் வழியாக மத்திய சமஸ்கிருதப் பல்கலைக்கழகம் (டெல்லி), ஸ்ரீலால்பகதூர் சாஸ்திரி சமஸ்கிருத வித்யாபீடம் (டெல்லி), ராஷ்ட்ரீய சமஸ்கிருத வித்யாபீடம் (திருப்பதி) ஆகிய மூன்று சமஸ்கிருத நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், மத்தியப் பல்கலைக் கழகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன.
- இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளும் சமச்சீரான வளர்ச்சி பெறுவதை உறுதிப்படுத்த வேண்டியது மத்திய அரசின் கடமை.
- இந்தியமொழிகள் அனைத்துக்கும் மைசூரில் ஒரு மத்திய நிறுவனம் மட்டுமே உள்ள நிலையில், சமஸ்கிருதத்துக்கு மூன்று மத்தியப் பல்கலைக்கழகங்கள் உள்ளன.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளுக்கு உள்ள சிறப்பாய்வு மையங்களும் அந்தந்த மொழிகளின் செம்மொழிக் காலகட்ட மொழி, இலக்கியங்கள் போன்றவற்றை மட்டுமே ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட நிறுவனங்கள்.
- இந்நிறுவனங்களில் செம்மொழிகளின் தற்காலப் பயன்பாடு பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவோ திட்டமிட்டு மொழி வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதற்கோ பெரிய அளவில் வழிவகை இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டிஉள்ளது.

### எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள்

- பல்கலைக்கழகங்களுக்கு ரூசா (RUSA) என்று அழைக்கப்படும் ஒருங்கிணைந்த உயர் கல்வி வளர்ச்சித் திட்ட அமைப்பு, மாநில அரசின் (40%) உதவியுடன் உள்கட்டமைப்பு, ஆய்வு முதலானவற்றிற்கு நிதி வழங்கி வருகிறது.
- பல கூறுகளாகப் பிரித்து வழங்கப்படும் இந்த நிதியில், ஆய்வு உட்பட அனைத்துக் கூறுகளுக்கும் நிதியைப் பெறுவதற்கு தேசிய தரமதிப்பீட்டுக் குழுவால் (NAAC) பல்கலைக் கழகங்கள் சீர்தூக்கப்பட்டு, குறைந்த அளவாக ஏ எனும் தரநிலையில் 3.01 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
- தொலைநிலைக் கல்விப் படிப்புகளை வழங்க பல்கலைக்கழக மானியக் குழுவின் ஏற்பைப் பெறுவதற்கும் 'ஏ' தரம் கட்டாயமாகும்.

- இச்சீர்தூக்கலுக்கான மதிப்பீட்டு முறைகள் பல்வகைக் கல்வித் துறைகளைக் கொண்ட பொதுப் பல்கலைக் கழகங்களுக்கானவை. தற்போதைய நிலவரப்படி தமிழ்ப் பல்கலைக்கழகம் B+, கன்னடப் பல்கலைக்கழகம் B+, தெலுங்கு B, திராவிடப் பல்கலைக் கழகம் B என்ற அளவிலேயே தரச்சான்றுகளைப் பெற்றுள்ளன.
- தமிழ் உள்ளிட்ட மொழிப் பல்கலைக்கழகங்கள் சமஸ்கிருதப் பல்கலைக் கழகங்களைவிட ஆய்விலும் பிற அளவீடுகளிலும் தாழ்நிலையில் உள்ளதால்தான், அவற்றுக்கு 'ஏ' தரச்சான்று கிடைக்கவில்லை என்று கருதிவிட இயலாது.
- 'நாக்' அமைப்பு, சமஸ்கிருதப் பல்கலைக் கழகங்களுக்கென்று தனித்துவ மதிப்பீட்டு முறைகளை வகுத்துள்ளது.
- 18 சமஸ்கிருதப் பல்கலைக் கழகங்களுள் 6-க்கு ஏ+ தரச்சான்று கிடைத்துள்ளது.

### சிறப்புத் தகுதி

- சமஸ்கிருதப் பல்கலைக் கழகங்களுக்கு உருவாக்கப்பட்டுள்ளதுபோல தமிழ்ப்பல்கலைக்கழகம் உள்ளிட்ட மொழிப் பல்கலைக்கழகங்களுக்கும் 'நாக்' அமைப்பின் தனி மதிப்பீட்டு முறைகள் வகுக்கப்பட வேண்டும்.
- தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழைப் பரப்புவதில் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் மொழி ஆய்வுகளைத் தொய்வின்றி மேற்கொள்வதற்கும் மத்திய அரசின் நிதி போதிய அளவில் கிடைக்க ஏதுவாக சமஸ்கிருதத்துக்கு மூன்று மத்தியப் பல்கலைக்கழகங்களை உருவாக்கியிருப்பதற்கு இணையாக மாநில அரசின் ஒருங்கிணைப்புடன் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் சிறப்புத் தகுதி அளிக்கப்பட வேண்டும்.

## ஷாங்காய் மாநாடு

- சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா தஜிகிஸ்தான் ஆகிய 5 நாடுகள் இணைந்து கடந்த 1996-ம் ஆண்டு 'ஷாங்காய் பைவ்' என்ற பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- பின்னர், இந்த 5 நாடுகள் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய 6 நாடுகளின் தலைவர்கள் கடந்த 2001-ல் ஷாங்காய் நகரில் கூட ஆலோசனை நடத்தினர்.
- அப்போது அரசியல், பொருளாதார ரீதியாக இணைந்து செயல்படுவதற்காக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பை (எஸ்சிஓ) உருவாக்கினர்.
- இந்த அமைப்பில் முதலில் 6 நாடுகள் உறுப்பினராக இருந்தன. பின்னர் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய 2 நாடுகளும் 2017-ம் ஆண்டு இணைந்தன.
- ஐரோப்பிய, ஆசிய நாடுகளின் மொத்த நிலப்பரப்பில் 60 சதவீத நிலப்பரப்பு மற்றும் உலக மக்கள் தொகையில் ஏறத்தாழ 40 சதவீத மக்கள் தொகை இந்த அமைப்பின் உறுப்பு நாடுகளில் உள்ளது குறிப்பிடத்தக்கது.
- இது யூரேசியாவின் (ஐரோப்பா-ஆசிய நாடுகள்) அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்புக்கான அமைப்பாகும்.
- இந்த பிராந்தியம் பூகோள ரீதியிலும், மக்கள்தொகை அடிப்படையிலும் உலகின் மிகப்பெரிய பிராந்தியமாகும்.
- சுழற்சி முறையில் ஆண்டுக்கு ஒரு நாடு இந்த அமைப்புக்குத் தலைமை வகிக்கும். இவ்வாறு தலைமை வகிக்கும் நாடு, ஆண்டுதோறும் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டை தலைமை வகித்து நடத்தும்.
- இந்த உச்சி மாநாடு முடிந்ததும், எஸ்சிஓ அமைப்பின் ஓராண்டுக்கான தலைமைப் பொறுப்பை சுழற்சி அடிப்படையில் இந்தியா ஏற்க உள்ளது. இதன்படி, அடுத்த ஆண்டின் உச்சி மாநாடு டெல்லியில் நடைபெறும்.
- எஸ்சிஓ அமைப்பில் உறுப்பினராக 8 நாடுகளும், பார்வையாளராக ஆப்கானிஸ்தான், பெலாரஸ், ஈரான் மற்றும் மங்கோலியா ஆகிய 4 நாடுகளும் உள்ளன.
- மேலும், இந்த அமைப்பில் இணைவது குறித்து அர்மீனியா, அஜர்பை ஜான், கம்போடியா, நேபாளம், இலங்கை, துருக்கி ஆகிய 6 நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

### ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு

- ஜனநாயக மற்றும் சமமான சர்வதேச அரசியல் ஒழுங்கை வளர்ப்பதை நோக்கமாக கொண்டு அதை நோக்கி நகர கடந்த 2001-ல் உருவாக்கப்பட்டதுதான் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) ஆகும்.
- இந்த அமைப்பில் சீனா, இந்தியா, உஸ்பெகிஸ்தான், ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகியவை உறுப்பு நாடுகளாக உள்ளன.

- இதில் பார்வையாளராக ஈரான், ஆப்கானிஸ்தான், பெலாரஸ் மற்றும் மங்கோலியா போன்ற நாடுகள் உள்ளன.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 22-வது மாநாடு உஸ்பெகிஸ்தானின் சாமர்கண்ட் தொடங்கியது.
- உணவு, எரிபொருள் பாதுகாப்பு மற்றும் உரங்கள் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு நாம் தீர்வு காணும் வழியை கண்டுபிடிக்க வேண்டும்.
- உக்ரைனுடனான பிரச்சினையை ரஷ்யா பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

## வந்தே பாரத் ரயில்

- அகமதாபாத்-மும்பை இடையிலான வந்தே பாரத் ரயில் சோதனை ஓட்டம் வெற்றி பெற்றுள்ளது. இந்த ரயில் 491 கி.மீ தூரத்தை சுமார் 5 மணி நேரத்தில் கடந்தது.
- இந்த ரயிலின் வேகம் 52 விநாடிகளில் 100 கிலோ மீட்டரை தொட்டது. இந்த ரயில் அதிகபட்சம் மணிக்கு 180 கி.மீ வேகத்தில் பயணிக்கும்.
- அகமதாபாத், மும்பை வழித்தடத்தில் ஏற்கெனவே சதாப்தி மற்றும் தேஜஸ் ஆகிய விரைவு ரயில்கள் இயக்கப்படுகின்றன.
- இதே வழித்தடத்தில் புல்லட் ரயிலை இயக்கவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. புல்லட் ரயில் மணிக்கு 320 கி.மீ வேகத்தில் பயணிக்கும். இதன் மூலம் பயண நேரம் 2 முதல் 3 மணி நேரமாகக் குறையும்.
- ‘இந்தியாவில் தயாரிப்போம்’ திட்டத்தின் கீழ் வந்தே பாரத் ரயில்கள் தயாரிக்கப்படுகின்றன. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வந்தே பாரத் ரயில் வாரணாசி-புதுடெல்லி இடையே இயக்கப்படுகிறது.

## லம்பி ஸ்கின்

- கால்நடைகளை பாதிக்கும் தோல் கழலை (லம்பி ஸ்கின்) நோய்க்கு ஒரு மாதத்தில் மட்டும் 5,000 மேற்பட்ட விலங்குகள் பலியாகியுள்ளன.

### 2025-ம் ஆண்டுக்குள்

- கால்நடைகளுக்கு பாக்டீரியா தொற்றால் உண்டாகும் புரூசெலோசிஸ், பாதம், வாய் பகுதிகளை தாக்கும் நோய்களுக்கு எதிராக பாதுகாப்பை வழங்கும் வகையில் 100 சதவீதம் தடுப்பூசியை போட வேண்டும்.
- இந்த தசாப்தத்துக்குள் கால்நடைகளை இந்த வகை நோய்த் தாக்குதல்களில் இருந்து மீட்பதை இலக்காக கொண்டு செயல்பட வேண்டும்.

### பசு ஆதார் திட்டம்

- நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் விலங்குகளின் பயோமெட்ரிக் அடையாளங்களை சேகரிப்பதே இந்த திட்டத்தின் நோக்கம்.

### 70 சதவீதம் பேர் பெண்கள்

- இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் 70 சதவீதம் பேர் பெண்கள். அவர்களே இந்திய பால் பண்ணைத் தொழிலின் உண்மையான எஜமான்களாக விளங்குகின்றனர்.

## அமெரிக்க ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றார் அல்கராஸ்

- அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் 19 வயது வீரரான கார்லோஸ் அல்கராஸ் சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார்.
- மேலும் உலகத் தரவரிசையிலும் அவர், முதலிடத்தை பிடித்தார். 19 வயதான கார்லோஸ் அல்கராஸ் வெல்லும் முதல் கிராண்ட் ஸ்லாம் பட்டம் இதுவாகும்.
- இதன் மூலம் இளம் வயதில் கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற 2-வது வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் அல்கராஸ். இதற்கு முன்னர் ரபேல் நடால் கடந்த 2005-ம் ஆண்டு தனது 19 வயதில் பிரெஞ்சு ஓபனில் பட்டம் வென்றிருந்தார்.

## கிளவுட் கம்ப்யூட்டிங்

### மேகக் கணிமை

- அண்மைக் காலமாகத் தொழில்நுட்ப வளர்ச்சியில் மேகக் கணிமை (Cloud Computing) செயல்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. தேவைப்படும் இடத்தில் அனைவரும் இணையத்தைப் பயன்படுத்தி தகவல்களைப் பரிமாறிக் கொள்வதும், பயனர்களுக்கு மென்பொருளைத் தருவதும், சேமித்து வைத்துக் கொள்ளும் செயல்பாடுதான் மேகக் கணிமை.

- 'Computing' என்பது ஒரு செயல்பாடு அல்லது செயல்முறை. மேகக் கணிமை என்பது கணிமைத் திறனை (Computing service) குறைந்த செலவில் தேவைப்படும்போது மட்டும் இணையம் வழியாகப் பெறும் முறை.
- மேகமானது மழையைப் பொழிந்து, எப்படி எல்லோருக்கும் பயன்படுகிறதோ அதுபோல இணையமும் எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்கிற நோக்கத்தில் உருவானதே மேகக் கணிமை
- ஒரு தகவலை / தரவுகளை ஹார்ட் டிஸ்க், பென் டிரைவ், சி.டி.மெமரி கார்டு போன்ற புறநிலை சாதனங்களைப் (Physical device) பயன்படுத்தி சேமித்து வைக்க முடியும்.
- அதையும் தாண்டி தகவலை இணையத்திலும் சேமித்து வைக்க முடியும். இதுபோன்ற கணினி செயல்பாடுகளை இணையத்தை சார்ந்து செய்வதுதான் மேகக்கணிமை.

**இணையவழிச் சேவை**

- ஜிமெயில், கூகுள் காலண்டர், யாஹூ போன்ற இணையச் சேவைகளைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், நீங்கள் மேகக் கணிமை செயல்பாடுகளை பயன்படுத்துகிறீர்கள்.
- இருசக்கர வாகனம் அல்லது கார் ஓட்ட கற்றுக் கொள்வதற்காக அவற்றைப் புதிதாக வாங்காமல் வாடகைக்கு எடுத்து பயன்படுத்தும் அளவுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்துவது போன்றதுதான் மேகக் கணிமையின் செயல்பாடும்.
- ஒரு நிறுவனம் கணினிகளிலும், மென்பொருள்களிலும் கட்டமைப்பு ஒன்றை (Hardware, Software, Infrastructure) அமைக்காமல் பயன்பாட்டுக் கட்டண முறையில் தனது கணிமைத் தேவைகளைப் பல்வேறு இடங்களிலிருந்தும் கணிமை நிறுவனங்களிலிருந்தும் பெற இந்தத் தொழில்நுட்பம் உதவுகிறது.

**பல்வகை சேவைகள்**

- மேகக் கணிமை சேவைகளில் அடிப்படை உள்கட்டமைப்பைச் சேவையாகத் தருவது (IaaS), மென்பொருள் உருவாக்குநர்களுக்கான இயங்குதள சேவையாகத் தருவது (PaaS), மென்பொருட்களை / வலைச் செயலிகளைச் சேவையாகத் தருவது (SaaS) எனப் பல சேவைகள் உள்ளன.
- மேலும் கணிமை வளங்களை எங்கேயும் எப்போதும், நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் பெற முடியும்.
- கார், மோட்டார் சைக்கிள் தேவைப்படும்போது, உடனடியாக வாடகைக்கு எடுத்து பயன்படுத்துகிறோமோ, அதுபோல மேகக் கணிமையில் தேவைப்படும் கணிமையானது ஒரு வலைச் செயலியாக வழங்கப்படுகிறது.
- அதை நாம் எங்கிருந்து வேண்டுமானாலும், உலாவிக்கொண்டும் இயக்க முடியும்.
- ஒரு மணிநேர உபயோகத்திற்கு நாம் தேவையான பணத்தை கொடுக்கிறோம். அதுபோல, மேகக் கணினி நிறுவனங்கள் நாம் பயன்படுத்தும் கணிமை வளங்களை பொறுத்து கட்டணம் வசூலிக்கும்.

**இணைக்கும் சேவை**

- சன் மைக்ரோ சிஸ்டம், அமேசான், கூகுள், மைக்ரோசாப்ட், வி.எம்.வேர் போன்ற நிறுவனங்கள் இத்தகைய மேகக் கணிமை சேவையை வழங்குகின்றன.
- நமக்குத் தேவையான செயல்பாடுகளை இந்த நிறுவனங்களிடமிருந்து பெற்று நாம் செய்யும் செயல்முறையே மேகக் கணிமை.
- பல கணினிகளும் சேவையகங்களும் இணையத்தால் தொடர்புகொள்ளும் நுட்பமும் மேகக் கணிமையே.
- உதாரணமாக, நாம் நிறைய புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்பதற்காக, அனைத்து புத்தகங்களையும் நம்மால் வாங்க இயலாது.
- அதற்குப் பதிலாக நூலகங்களுக்கு சென்று, தேவையான புத்தகத்தை எடுத்துவந்து படித்த பிறகு அதை ஒப்படைத்து விடுவோம். இதுபோன்ற செயல்பாட்டு முறைதான் மேகக் கணிமை.
- இதில் இரண்டு அம்சங்கள் உண்டு. வலையிணைப்புக் கணிமை (Grid computing) என்பது பல்வேறு பயனர்கள் ஒரு வலையமைப்பில் இணைந்திருப்பார்கள். அவர்களுக்குள் மட்டுமே அவர்களால் எந்தவொரு செயலையும் (சேமிப்பு, செயல், தரவு செயல்பாடுகள்) செய்ய முடியும். பரிமாறிக்கொள்ள முடியும்.
- ஆனால் மேகக் கணிமை அப்படியல்ல. எங்கிருந்து வேண்டுமானாலும், யாருடன் வேண்டுமானாலும், எந்தவொரு செயலையும் இணையம் வழியாக மேற்கொள்ள முடியும்.

### உயர்நீதிமன்றத் தீர்ப்பு

- ஒருங்கிணைந்த ஆந்திரத்தில் மறைந்த முதல்வர் ராஜசேகர் ரெட்டி முஸ்லிம்களுக்கு 5% இட ஒதுக்கீடு வழங்கினார். ஆந்திரத்தில் ஏற்கெனவே 46% இடஒதுக்கீடு அமலில் இருக்கும் நிலையில், முஸ்லிம்களுக்கென 5% தனி இட ஒதுக்கீடு அளித்தால், மொத்த இடஒதுக்கீடு 51% ஆக உயரும்.
- அது உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானதாக அமையும் என்றும், புள்ளி விவரங்களும் சரியாக இருக்காது என்று கோரியும் 5% இடஒதுக்கீட்டை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது.
- உயர்நீதிமன்றம் இடஒதுக்கீட்டை ரத்து செய்து உத்தரவிட்டது. பிறகு புதிய ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, முஸ்லிம்களுக்கு 4% இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.
- இந்தப் பின்னணியில், 1982 அம்பா சங்கர் அறிக்கையின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 2007 இல் தமிழகத்தில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட இடஒதுக்கீடு எந்தளவுக்குச் சரியாக இருக்கும் என்ற கேள்வி உள்ளது.
- கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட 3.5% இடஒதுக்கீட்டை ஆராய்ந்த கல்வியாளர்கள், கிறிஸ்தவச் சமூகம் இழப்பைச் சந்திக்கக் கூடும் என்பதால், தங்களுக்கு இடஒதுக்கீடு தேவையில்லை என்று கூறி, உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும் என அரசிடம் கேட்டுக்கொண்டனர்.

### இழந்த வேலைவாய்ப்பு

- பிற்படுத்தப்பட்டோருக்கான 30% இடஒதுக்கீட்டில் 3.5%-ஐ ஒதுக்குவதற்குப் பதிலாக பொதுப் பட்டியலான 31% இடஒதுக்கீட்டில், தகுதி அடிப்படையில் தேர்வானவர்களையும் இணைத்து நியமனம் செய்யப்படுவதால், அத்தொகுப்பிலிருந்து கூடுதலாகக் கிடைத்த பணிகளும் கிடைப்பதில்லை.
- நிலுவையில் 100 நியமனங்கள் உள்ள இடத்தில் 3.5% அடிப்படையில் 3 பேர் மட்டுமே நியமிக்கப்படுவர். 0.5 இருப்பில் இருக்கும்.
- அடுத்த நியமனத்தின் போது அது 'கேரி பார்வேர்டு' முறையில் சேர்க்கப்பட்டு, 100 பேர் நியமனத்தில் 4 பேரை முஸ்லிமாக நியமிக்க வேண்டும். ஒரு நியமனத்தில் நிலுவையைச் சரிசெய்ய முடியாமல் போனால், அடுத்த நியமனத்தில் விடுபட்டதைச் சேர்த்து, அதே சமூகத்து ஆட்களை நியமிக்க வேண்டும் என்பது நீதிமன்ற வழிகாட்டுதலாகும். இப்படி எந்த விதிமுறைகளும் முறையாகப் பின்பற்றப்படாமலேயே முஸ்லிம்களுக்கான இடஒதுக்கீடு உள்ளது.

## உயிர்காக்கும் உறுப்பு தானம்

- 1950-ஆம் ஆண்டு வாக்கில் முர்ரே, மெரில் எனும் இரட்டையரில் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு உலகின் முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தனர்.
- மரபணு ரீதியாக இரட்டையர் ஒரே மாதிரியாக இருந்ததால் அவர்கள் இந்த அறுவை சிகிச்சைக்கு பின் எட்டு ஆண்டுகள் உயிர் வாழ்ந்தனர்.
- 1967-ஆம் ஆண்டில், பிரபல தென்னாப்பிரிக்க அறுவை சிகிச்சை நிபுணரான கிறிஸ்டியன் பெர்னார்ட் விபத்தில் மூளைச்சாவு அடைந்த 25 வயது இளைஞரின் இதயத்தை, இதயம் செயலிழந்த 50 வயது நபருக்குப் பொருத்தி உலகின் முதல் இதய மாற்று அறுவை சிகிச்சையை செய்தார்.
- தாமஸ் ஸ்டார்ஸ்ல் என்ற அமெரிக்க அறுவை சிகிச்சை நிபுணர் 1960ஆம் ஆண்டில் உலகின் முதல் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்தார்.
- எட்வர்ட் ஜிர்ம் என்ற வெனிஸ் நாட்டு கண் மருத்துவர் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இரண்டு மனிதர்களுக்கு இடையே முதல் வெற்றிகரமான விழிப்படல ஒட்டு (கார்னியல் கிராப்ட்) அறுவை சிகிச்சையை செய்தார்.
- உடலுறுப்புக் கொடையாளர்களில், மூளைச்சாவு அடைந்த கொடையாளர்கள், உயிருள்ள ரத்த சம்பந்த கொடையாளர்கள், ரத்த சம்பந்தமற்ற கொடையாளர்கள் (ஸ்வாப்) என மூன்று வகையினர் இருப்பதாக இந்திய தேசிய உறுப்பு - திசு மாற்று அமைப்பு கூறுகிறது.
- உயிருள்ள ரத்த சம்பந்த கொடையாளர் பிரிவின்கீழ், பெற்றோர், கணவன் அல்லது மனைவி, உடன்பிறந்தவர்கள், பிள்ளைகள், தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி போன்ற ரத்த உறவுகள் மட்டுமே தங்கள் உறுப்புகளை தானம் செய்ய முடியும்.
- கொடையாளர்களின் உடலுறுப்பு நோயாளியிடம் பொருந்தாத சந்தர்ப்பங்களில் மற்றொரு நோயாளிக்கு வழங்கப்படும். கொடையாளரின் உறுப்பைப் பரிமாற்றம் செய்து கொள்வதே பரிமாற்று உடலுறுப்பு (ஸ்வாப்) தானம்.

- உடலுறுப்பு தேவைப்படுவோரின் மேல் பற்று கொண்ட எவரும் தொடர்பில்லாத உயிருள்ள கொடையாளர் பிரிவின் கீழ் உடலுறுப்பு தானம் வழங்க இயலும்.
- இவர்கள் மருத்துவமனைக் குழுவினரால் அனுமதிக்கப்பட்டபின் இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநில அரசால் நியமிக்கப்பட்ட குழு இந்த உடலுறுப்பு தானம் வணிக ரீதியானது அல்ல என்று உறுதிப்படுத்த வேண்டும்.
- ஆனால், தானம் வழங்குவோரை முடிவு செய்யும் அதிகாரம் மருத்துவமனைக்கு வழங்கப்படுவதால் தொடர்பில்லாத உயிருள்ள கொடையாளர் பிரிவின் கீழ்வரும் கொடையாளர்களின் உடலுறுப்புகள் வர்த்தக ரீதியாக பயன்படுத்த வாய்ப்புகள் அதிகம் என வல்லுநர்கள் கூறுகின்றனர்.
- இந்தியாவில் ஆண்டுடொன்றுக்கு 8,000 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் மட்டுமே நடைபெறுகின்றன. ஆனால், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் ஆண்டுதோறும் சுமார் இரண்டு லட்சம் பேர் உருவாகின்றனர்.
- இதேபோல் 1,500 பேர் மட்டுமே கல்லீரல் மாற்று பெறும் சூழலில் வருடத்திற்கு புதிதாக 30,000 பேருக்கு கல்லீரல் மாற்று தேவைப்படுகிறது.
- இந்தியாவில் தானம் செய்யப்பட்ட உடல் உறுப்புகளில் 23% உறுப்புகள் மட்டுமே தேவைப்படும் நோயாளிகளுக்கு பொருத்தப்படும் நிலை இருப்பதாக சுகாதார அமைச்சகத்தின் தரவு ஒன்று கூறுகிறது.
- உயிருடன் இருக்கும் கொடையாளர்கள் உறுப்பு தானம் செய்வது எளிதாக இருக்கும் நிலையில், மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து உடலுறுப்பு தானம் பெற எடுக்கப்படும் முயற்சி இந்தியாவில் மிகக் குறைவு என்கிறது அந்தத் தரவு.
- மதம், கலாச்சாரம் போன்ற தனிப்பட்ட காரணங்கள் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடத்தில் சென்று சேர்வதைக் கடினமாக்குகின்றன.

## ககன்யான் திட்டம்

- விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டம்.
- முதலாவது சோதனை விண்கலம் நிகழாண்டு விண்வெளிக்குச் செலுத்தப்படவுள்ளது. அதனை அடுத்த ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்படவுள்ள 'வியோம் மித்ரா' என்ற பெண் உருவம் கொண்ட ரோபோ கண்காணிக்கும்.
- ககன்யான் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 4 விமானிகளை இந்திய விமானப்படை அடையாளம் கண்டுள்ளது. அவர்களுக்கு ரஷியாவில் அடிப்படை பயிற்சியளிக்கப்பட்டது.
- விண்வெளியின் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்படும் சோதனை விண்கலத்தின் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு 2024-இல் புவியின் சுற்று வட்டப் பாதைக்கு இரண்டு விண்வெளி வீரர்களை இஸ்ரோ அனுப்பிவைக்கும்.
- 2018 சுதந்திர தின உரையின்போது, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ரூ.10,000 கோடி மதிப்பிலான ககன்யான் திட்டத்தை பிரதமர் அறிவித்தார். நிலவுக்கு சந்திரயான்-3 விண்கலத்தை அடுத்த ஆண்டில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

### அரசியல் கட்சிகள்

- இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கும்போது அதில் அரசியல் கட்சிகள் பற்றிய எந்தக் குறிப்பும் சேர்க்கப்படவில்லை.
- இந்திய மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951-இன் மூலம்தான் அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையக் கட்டுப்பாட்டிற்குள் வருகின்றன.
- அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாத அளவுக்கு செயல்பட்டுக் கொண்டுள்ளன. அரசியல் கட்சிகள் என்பவை கட்சிக்காரர்களின் நிறுவனங்கள் அல்ல, அவை மக்களின் அமைப்புகள்.
- ஒரு நாட்டின் அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவதில் அந்த நாட்டு அரசியல் கட்சிகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

### ஊழல்

- ஊழலுக்கு வித்திடும் காரணிகள் இரண்டு. ஒன்று தேர்தல், மற்றொன்று ஆட்சி. முதலாவதாக, பொதுத்தேர்தலை முறைப்படுத்திவிட்டால், நெறிப்படுத்தி விட்டால் பெருமளவு ஊழல்கள் குறைந்துவிடும்.
- அடுத்து அரசியல் கட்சிகளின் தேர்தலையும் செயல்பாடுகளையும் கண்காணித்து முறைப்படுத்திவிட்டால் எஞ்சியிருக்கின்ற ஊழலும் நீங்கிவிடும். எனவே சீர்திருத்தம் தொடங்க வேண்டிய முதல் இடம் தேர்தல் களமே.

- நம் அரசியல் சாசன சட்டத்தில் தேர்தல் ஆணையம் என்பது ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பு. இதைத்தான் தேர்தல் ஆணையராக இருந்த டி.என்.சேஷன் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.
- அவர் தேர்தல் ஆணையம் குறித்து உருவாக்கிய பிம்பம் இன்று உடைத்தெரியப்பட்டு விட்டது.

**அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்**

- இன்றைய சூழலில் நம் நாட்டில் அரசியல் கட்சிகளை தேர்தல் ஆணையத்தின் மூலம் நெறிப்படுத்தத் தொடங்கிவிட்டால் பல கட்சிகள் காணாமல் போய்விடும்.
- இந்தியாவின் எதிர்காலத்தை நாசமாக்கிக் கொண்டிருப்பது அறமற்று வணிக நோக்கில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சில அரசியல் கட்சிகள்தான் என்பது அனைவரும் அறிந்த உண்மைதான்.
- குறிப்பாக, தாராளமயப் பொருளாதாரம் இந்தியாவில் கொண்டுவரப்பட்ட பிறகு, அரசியல் கட்சிகளை பெரும் செல்வந்தர்களும், வணிகர்களும், ஒப்பந்ததாரர்களும் ஆக்கிரமித்து விட்டனர்.
- இன்று பெருகிவிட்ட ஊழலைக் குறைக்காமல் இந்திய அரசியலையும், இந்திய மக்களாட்சியையும் காக்க இயலாது. இதைத்தான் உலக வங்கியிலிருந்து உள்ளூர் சீர்திருத்த ஆணையங்கள் வரை எடுத்துக் கூறுகின்றன.

**பொது மக்கள் நிலுவை**

- தேர்தல் ஆணையம் அங்கீகாரம் அளித்தால்தான் அரசியல் கட்சிகள் பொதுத்தேர்தலில் போட்டியிட முடியும். எனவே அரசியல் கட்சிகள் யாருடைய தனிப்பட்ட சொத்தும் அல்ல, அவை பொதுமக்களின் நிறுவனங்கள்.
- பொதுமக்களின் நிறுவனங்களை எப்படி அரசியல் சாசனத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனம் கண்காணிக்கிறதோ அதேபோல் அரசியல் கட்சிகளையும் கண்காணிக்க வேண்டும்.
- அந்தக் கண்காணிப்பு என்பது, முதலில் தேர்தல் ஆணையம் தேர்தலைக் கண்காணிப்பதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, இன்று அரசியல் கட்சிகள் பெருநிதிபெறும் நிறுவனங்களாக மாறிவிட்ட சூழலில் அரசியல் கட்சிகளை இந்திய கணக்காயத்தின் கீழ் கொண்டு வந்து தணிக்கை செய்திட வேண்டும்.
- இன்று நம் அரசியல் கட்சிகள், தங்களை தாங்களே நெறிப்படுத்திக் கொள்வதாகக் கூறி தேர்தல் நடத்துவதையும், நிதி நிர்வாகம் செய்வதையும், சடங்குகளாக்கி மக்களை ஏமாற்றுகின்றன.
- இதன் விளைவுதான் அரசியல் கட்சிகள் ஒருசிலரின் கைப்பாவையாக செயல்படுகின்றது.

**முடிவுரை**

- நம் அரசியல் கட்சிகளை நெறிப்படுத்தாத வரையில் நம் மக்களாட்சி குறைபாடுடையதாகவேதான் செயல்படும். இந்தச் சூழலை மாற்றிட மிக முக்கியமான தேவை அரசியல் கட்சிகளின் தேர்தலை தேர்தல் ஆணையமே நடத்துவதுதான்.
- அரசியல் கட்சிகள் மக்களின் நிறுவனங்களாக இருப்பதால் அவற்றை நெறிப்படுத்த வேண்டியது தேர்தல் ஆணையத்தின் கடமையாகும்.

## அரசியல் சாசன அமர்வு வழக்கு நேரலை ஒளிபரப்பு

- உச்சநீதிமன்றத்தில் அரசியல் சாசன அமர்வில் நடைபெறும் அனைத்து வழக்கு விசாரணையையும் நேரலை ஒளிபரப்பு செய்ய உத்தரவிடக் கோரி ஸ்வப்னில் திரிபாதி என்பவர் வழக்கு தொடுத்தார்.
- உச்சநீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணையை பொதுமக்கள் தங்கள் செல்போன், லேப்டாப் மற்றும் கணினிகளில் நேரலையாக காண முடியும்.

## குழந்தை பிறப்பு விகிதம் 10 ஆண்டுகளில் 20% சரிவு

- கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் குழந்தை பிறப்பு விகிதம் (ஜிஎஃப்ஆர்) 20% சரிவடைந்துள்ளது.
- இது குறித்து சாம்பிள் ரெஜிஸ்ட்ரேஷன் சிஸ்டம் (எஸ்ஆர்எஸ்)-2020 புள்ளிவிவரத்தில் கூறியிருப்பதாவது : ஜிஎஃப் ஆர் என்பது, 15 முதல் 49 வரையிலான வயதுடைய 1,000 பெண்களுக்கு ஓராண்டில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையை குறிக்கிறது.
- கடந்த 2008 முதல் 2010 வரையில் இந்தியாவில் சராசரி ஜிஎஃப்ஆர் விகிதம் 86.1-ஆக இருந்தது. இது 2018-20-ல் 68.7 ஆக (மூன்று ஆண்டு சராசரி) சரிவடைந்துள்ளது. ஜிஎஃப்ஆர் விகிதத்தின் சரிவு நகர்ப்புறங்களில் 15.6 சதவீதமாக உள்ள நிலையில், கிராமப்புறங்களில் 20.2% ஆக உள்ளது.

- ஜம்மு & காஷ்மீர் பொது குழந்தைப் பிறப்பு விகிதத்தில் அதிகபட்ச சரிவைக் (29.2) கண்டுள்ளது.
- எஸ்ஆர்எஸ் தரவுகளின்படி இந்தியாவில் மொத்த குழந்தைப் பிறப்பு விகிதம் (இனப்பெருக்க வயதில் ஒரு பெண்ணுக்கு குழந்தைப் பிறப்பு) 2 ஆகும்.
- அதன்படி, டிஎஃப்ஆர்-ல் பிஹாா் அதிகபட்ச அளவை (3.0) பதிவு செய்துள்ளது. டெல்லி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் குறைந்த டிஎஃப்ஆர் (1.4) பதிவாகியுள்ளன.

## பெங்களூருவில் ராக்கெட் இன்ஜின் உற்பத்தி மையம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் (இஸ்ரோ), எச்.ஏ.எல். நிறுவனத்தில் கிரையோஜெனிக் ராக்கெட் இன்ஜின் உற்பத்தி மையத்தை அமைத்து கொடுப்பது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கடந்த 2013-ம் ஆண்டு செய்திருந்தது.
- இதையடுத்து பெங்களூரு எச்.ஏ.எல் நிறுவனத்தில் 4,500 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.208 கோடி செலவில் ராக்கெட் இன்ஜின் உற்பத்தி மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்கா, பிரான்ஸ் ஜப்பான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளில் மட்டுமே கிரையோஜெனிக் இன்ஜின்களை தயாரிக்கும் மையங்கள் இயங்கி வருகின்றன.
- தற்போது இந்தியாவில் அதிவேக ராக்கெட் இன்ஜின்கள் தயாரிப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளதால், நாடு தற்சார்பு நிலையை நோக்கி முன்னேறும்.
- இதன் மூலம் கிரையோஜெனிக் இன்ஜினை தயாரிக்கும் 6-வது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

## ஆஷா பரேக்குக்கு தாதாசாகேப் பால்கே விருது

- இந்திய திரைத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருது, ஹிந்தி திரையுலக முதுபெரும் நடிகை ஆஷா பரேக்குக்கு (79) அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருது 2020-ஆம் ஆண்டுக்கானதாகும்.
- திரையுலக பிரபலங்களான ஆஷா போஸ்லே, ஹேமமாலினி, பூனம் தில்லான், உதித் நாராயண், டி.எஸ்.நாகா்பரணா ஆகியோர் அடங்கிய 5 உறுப்பினர்கள் குழு, தாதா சாகேப் பால்கே விருதுக்கு ஆஷா பரேக் பெயரை முடிவு செய்தது.
- ஹிந்தி திரையுலகில் செல்வாக்குமிக்க நடிகைகளில் ஒருவரான ஆஷாபரேக் கடந்த 1952-இல் தனது 10 வயதில் குழந்தை நட்சத்திரமாக திரைப்பயணத்தை தொடங்கினார்.
- பின்னர், 1959-இல் 'தில் தேகே தேகோ' ஹிந்தி படத்தில் ஷம்மி கபூருக்கு ஜோடியாக கதாநாயகியாக அறிமுகமானார்.
- அதன்பிறகு, 'கேரவன்', 'பியார் கா மௌசம்', 'தீஸ்ரி மன்ஸில்' உள்பட 95-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து, 50 ஆண்டுகளாக முக்கிய நடிகையாக வலம் வந்தார். அத்துடன், இயக்குநர் மற்றும் தயாரிப்பாளராகவும் தடம்பதித்தார்.
- இந்திய திரையுலகின் தந்தை எனப் போற்றப்படும் தாதா சாகேப் பால்கேவின் பெயரில் வழங்கப்படும் இந்த விருது, கடந்த 2019-இல் நடிகர் ரஜினிகாந்துக்கு வழங்கப்பட்டது.

## தேர்தலில் போட்டியிடுவது அடிப்படை உரிமை இல்லை

- தேர்தலில் போட்டியிடுவது அடிப்படை உரிமையும் இல்லை, சட்ட உரிமையும் இல்லை என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- மாநிலங்களவையில் காலியான இடங்களுக்கான தேர்தல் அறிவிக்கை கடந்த மே மாதம் வெளியிடப்பட்டது. அதில் போட்டியிட மனுதாக்கல் செய்த நிலையில், போதிய எண்ணிக்கையிலான முன்மொழிபவர்களும் வழிமொழிபவர்களும் இல்லை எனக் கூறி தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக தில்லி உயர்நீதிமன்றத்தில் ஒருவர் மனு தாக்கல் செய்தார்.
- மனுதாரர் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.
- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமும் (1950), தேர்தல் நடத்தை விதிகளும் (1961) குறிப்பிட்ட வேட்பாளரை வாக்காளர்கள் முன்மொழிய வேண்டும் என வலியுறுத்துகின்றன. அதனடிப்படையில் தேர்தல் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதை அடிப்படை உரிமை மீறலாகக் கோர முடியாது என்றனர்.

## ஞானவாபி மசூதி விவகாரம்

- உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோயிலுக்கு அருகே உள்ள ஞானவாபி மசூதியின் வெளிச்சுவரில் ஹிந்து கடவுள் சிலைகளைத் தரிசிக்க அனுமதிக்கக் கோரி தில்லியைச் சேர்ந்த ஐந்து பெண்கள் வாரணாசி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர்.

- வக்பு வாரியத்தின் கீழ் இந்த மசூதி வருவதாலும், பாபர் மசூதியைத் தவிர பிற வழிபாட்டு இடங்களில் சுதந்திரத்துக்கு முந்தைய நிலையே தொடர வேண்டும் என்ற வழிபாட்டு சிறப்புச் சட்டத்தாலும் இந்த வழக்கை நீதிமன்றம் விசாரிக்கலாகாது என்று மசூதியின் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.
- அவற்றில் முஸ்லிம்கள் தரப்பு மனுவை முதலில் விசாரித்த மாவட்ட நீதிபதி ஏ.கே.விஸ்வேஷ் எதிர் தரப்பினர் (ஹிந்துக்கள்) தொடுத்துள்ள மனுக்களை விசாரிக்க, வழிபாட்டு சிறப்புச் சட்டம், வக்பு வாரியச் சட்டம், காசி விஸ்வநாதர் கோயில் சட்டம் ஆகியவை தடையாக இல்லை.
- ஆகையால், அஞ்சுமன் இந் தஜாமியா மசூதி குழுவின் (முஸ்லிம்) சார்பில் கொடுக்கப்பட்டுள்ள மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

## நிக்சய் மித்ரா

- காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து கிடைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'நிக்சய் மித்ரா' திட்டம் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது.
- காசநோயை முற்றிலும் ஒழிப்பதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- நிக்சய் மித்ரா திட்டத்தின் இரண்டு அடிப்படையான நோக்கம், மக்கள் இயக்கத்துடன் காசநோயை முற்றிலும் ஒழிப்பது மற்றும் அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிதி மற்றும் சமூக ஆதரவை வழங்குவது ஆகியவை மட்டுமே. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜி 20 தலைமை

- சர்வதேச அளவில் பொருளாதார ஒத்துழைப்புக்காக உருவாக்கப்பட்டது, ஜி-20 அமைப்பு.
- இதில் இந்தியாவை தவிர, ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தோனேஷியா, இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, மெக்சிகோ, ரஷ்யா, சவுதிஅரேபியா, தென் ஆப்பிரிக்கா, துருக்கி, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன், ஐரோப்பிய யூனியனும் இடம்பெற்றுள்ளது.
- டிச.,1 முதல் 2023 நவ., 30ம் தேதி வரை, ஜி-20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்க உள்ளது. இந்த வாய்ப்பு முதன்முறையாக கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### சிறப்பு அழைப்பு

- இதன்படி, வங்கதேசம், எகிப்து, மொரீஷியஸ், நெதர்லாந்து, நைஜீரியா, ஓமன், சிங்கப்பூர், ஸ்பெயின், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளை இந்தியா சார்பாக சிறப்பு விருந்தினர்களாக அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இதைத்தவிர, சர்வதேச சோலார் ஒத்துழைப்பு, சர்வதேச பேரிடர் மீட்பு ஒத்துழைப்பு, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகிய அமைப்புகளுக்கும் சிறப்பு அழைப்பு விடுக்கப்படும்.

## அனைத்துச் சிறார்களுக்கும் தேவை ஊட்டச்சத்து

### தமிழகம் முன்னோடி

- சிறார்கள் பசியின்றிப் பள்ளிக்கு வருவதை உறுதி செய்வதோடு, ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைப்பதையும், ரத்தசோகையை நீக்குவதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

### ஆய்வுகள் அவசியம்

- ஆங்காங்கே கிடைக்கும் சிறுதானியங்களைப் பயன்படுத்தும் முறைகள் எனத் தொடர்புடைய ஆய்வுகள் அமையும்.
- காலை உணவைத் தயாரித்துப் பரிமாறும் பொறுப்பு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளிடம் தரப்பட்டுள்ளது.
- மதிய உணவுத் திட்டத்தைச் சமூக நலத்துறை செயல்படுத்தும்போது, காலை உணவுத்திட்டம் பள்ளி அளவில் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வேண்டும் ஊட்டச்சத்து

- பள்ளியில் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்துமிக்க உணவு கிடைப்பதை உறுதிசெய்வது அவசியம். தமிழகத்தில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 27.1% பேர் வளர்ச்சிக் குறைபாடு (வயதிற்கேற்ற உயரமின்மை) உடையவர்கள் என்றும், 57.4% குழந்தைகள் ரத்தசோகை உடையவர்களாக உள்ளனர் என்றும் தேசியக்குடும்பநல ஆய்வு-5 தெரிவிக்கிறது.

## போலிப் பல்கலைக்கழகங்கள்

- பல்கலைக்கழக மானியக் குழு சட்டம் 1956இன் பிரிவு 2(F), பல்கலைக்கழகம் என்றால் என்ன என்று வரையறுக்கிறது. பல்கலைக்கழகம் என்பது மத்திய (அரசு) சட்டம் அல்லது மாகாணச் சட்டம் அல்லது மாநிலச் சட்டம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினாலோ அல்லது அதன் கீழாகவோ நிறுவப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட கல்வி நிறுவனம்.
- யுஜிசி சட்டத்தின் பிரிவு 22 மத்திய அரசு, மாகாண அரசு, மாநில அரசு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம், அல்லது இந்தச் சட்டப்பிரிவின் 3இன் படி நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் அல்லது நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஆகியவை மட்டுமே மாணவர்களுக்குப் பட்டம் வழங்கும் உரிமையைப் பெற்றவை.
- மேற்கூறிய அளவுகோல்களை நிறைவேற்றாத எந்த நிறுவனமும் மாணவர்களுக்குப் பட்டம் வழங்குவதை யுஜிசியின் பிரிவு 23 தடை செய்கிறது.

### போலிப் பல்கலைக்கழகங்களை யுஜிசி எப்படிக் கண்டறிகிறது?

- யுஜிசியின் முறைகேடு தடுப்புப் பிரிவு (Anti Malpractice Cell) 1996 மே 30 இலிருந்து இயங்கி வருகிறது. யுஜிசி சட்டத்துக்கு எதிராக இருக்கும் அல்லது செயல்படும் அங்கீகாரம் பெறாத போலிப் பல்கலைக்கழகங்கள் தொடர்பான அனைத்து விவகாரங்களையும், இந்தப் பிரிவுதான் கையாள்கிறது.
- போலியான, அங்கீகாரமற்ற பல்கலைக் கழகங்களைத் தடுப்பதற்கு முறைகேடு தடுப்புப் பிரிவு மத்திய, மாநில அரசுகளின் வெவ்வேறு அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுகிறது.

### போலிப் பல்கலைக் கழகங்களாக அடையாளப்படுத்தப்பட்ட நிறுவனங்களை யுஜிசி என்ன செய்யும்?

- போலிப் பல்கலைக்கழகம் என்று அடையாளப்படுத்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் பட்டியலை ஊடகங்களிலும் பொதுமக்களுக்கான அறிவிப்புகளாகவும் வெளியிடும். தமது அதிகார வரம்புக்கு உட்பட்ட பகுதியில் இயங்கும் போலிப் பல்கலைக் கழகங்கள் மீது நடவடிக்கை எடுக்க மாநில அரசுகளின் தலைமைச் செயலர்கள், கல்வித்துறைச் செயலர்கள், முதன்மைச் செயலர்கள் ஆகியோருக்கு யுஜிசியிடமிருந்து கடிதங்கள் அனுப்பப்படும்.

### மாற்றப்பட்ட இலச்சினைகள், குழப்பும் பெயர்கள்

- சில போலிப் பல்கலைக்கழகங்களின் பெயர்கள், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் குழப்பிக்கொள்ளக்கூடிய வகையில் அவற்றின் பெயரை ஒத்ததாக இருக்கும்.
- எடுத்துக்காட்டாக டெல்லியில் இயங்கிவரும் 'Indian Institution of Science and Engineering' என்னும் கல்வி நிறுவனம் போலிப் பல்கலைக்கழகம் என்று இந்த ஆண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### மாணவர்கள் செய்ய வேண்டியவை

- ஒரு பல்கலைக்கழகம் போலியானதில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை என்றால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் யுஜிசியிடமிருந்து தகவலைக் கேட்டுப்பெறலாம். இதையெல்லாம் தாண்டி ஒரு கல்வி நிறுவனத்தில் சேர்ந்த பிறகு, அது போலியானது என்று மாணவருக்குத் தெரியவந்தால், அவர் அந்த நிறுவனம் உண்மைக்குப் புறம்பான தகவலை தனக்கு அளித்திருப்பதற்கான சான்றுடன் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-இன் கீழ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

## குஜராத்தில் செமிகண்டக்டர் தொழிற்சாலை

- இந்திய தொழில் நிறுவனமான வேதாந்தா மற்றும் தைவானின் மின்னணு பொருள்கள் தயாரிப்பு நிறுவனமான ஃபாக்ஸ்கான் இணைந்து குஜராத்தில் செமிகண்டக்டர் தொழிற்சாலை.
- கார் உள்ளிட்ட வாகனங்கள், கைப்பேசிகள், பிற மின்னணு சாதனங்களில் பயன்படுத்தப்படும் செமிகண்டக்டர் சிப்-கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதில்லை.
- மாறாக, இந்த சிப்களுக்காக இறக்குமதியை இந்தியா சார்ந்துள்ளது. உலகில் 8 சதவீத செமிகண்டக்டர் சிப்களை தைவான், சீனா, ஜப்பான் ஆகிய 3 நாடுகள் உற்பத்தி செய்கின்றன.
- இத்தகைய முதலீட்டின் மூலம் சிப்களை தயாரிக்கும் மையமாக இந்தியா திகழும் என்பதால் செமிகண்டக்டர் சிப்களுக்கு பிற நாடுகளைச் சார்ந்திருப்பதற்கான தேவை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அத்தியாவசிய மருந்துகள் தேசியப்பட்டியல்

- தேசிய அத்தியாவசிய மருந்து பட்டியல் 1996-ஆம் ஆண்டு முதன்முதலில் வெளியிடப்பட்டது. பின்னர் கடைசியாக 2015-ம் ஆண்டு இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- மீண்டும் இந்தப் பட்டியலை மறு ஆய்வு செய்ய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம், 2018-ஆம் ஆண்டு மருந்துகளுக்கான சுதந்திரமான தேசிய நிலைக் குழுவை (எஸ்.என்சிஎம்) அமைத்தது.
- எல்லோருக்கும் மருந்து, மலிவு விலை மருந்து என்பது பிரதமர் நரேந்திர மோடியின் நோக்கமாகும். இந்த அடிப்படையில் அனைத்து நிலைகளிலும் கட்டுப்படியான விலையில் தரமான மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், இந்த அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் முக்கியப் பங்காற்றி வருகிறது.
- பெண்டாமுஸ்டைன் ஹைட்ரோகுளோரைடு, இரினோடெதன் ஹெச்சிஜ டிரைஹைட்ரேட், லெனலிடோமைடு, லியூப்ரோலைடு அசிடேட் ஆகிய நான்கு முக்கிய புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளும், ஐவர்மெக்டின், முபிரோசின் மெரோபெனெம் போன்ற தொற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

## சிற்பி திட்டம்

- காவல்துறையை மக்களின் நண்பன் என்கிறோம். அதற்கேற்ப, மக்கள் அனைவரும் காவல்துறையின் நண்பர்களாக இருக்க வேண்டும்.
- காவல்துறையும் மக்களும் ஒன்றிணைந்து செயல்பட்டால் குற்றங்கள் குறையும் என்பதைவிட, குற்றங்களே நிகழாமல் தடுக்கப்படும்.
- ‘சிற்பி’ என்ற புதிய முன்னெடுப்பை காவல்துறை உருவாக்கியுள்ளது. சிற்பி என்பதற்கு Students in Responsible Police Initiatives (SIRPI) என்பதுதான் பொருள்
- சிறுவர்களை இளமைக்காலம் முதலே பொது ஒழுக்கம் உள்ளவர்களாகவும், சமூகப் பொறுப்பு உள்ளவர்களாகவும் ஆக்க இந்த திட்டம் பயன்படும்.
- குடும்ப உறுப்பினர்களின் கவனக்குறைவு, போதிய வருவாய் இல்லாமை, ஆதரவின்றி வளர்வது, வேலைவாய்ப்பின்மை போன்றவையே சிறுவர்கள் குற்றச் செயலில் ஈடுபட காரணமாக உள்ளன.
- இவற்றைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் அவர்கள் குற்றச்செயலில் ஈடுபடுவதை தடுக்க முடியும். இதுதான் இத்திட்டத்தின் நோக்கம்.
- போதைப்பொருள் ஒழிப்பு, குடிப்பழக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள், சட்டம் சார்ந்த விழிப்புணர்வு, அரசு சார்ந்த, அரசு சாரா அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்துதல், சுய ஆளுமைத்திறனை மேம்படுத்துதல், பெற்றோர் பேச்சை மதித்து நடத்தல், பொது மக்களுடன் தொடர்பு, இளம் வயதிலிருந்தே போக்குவரத்து விதிகளை கடைப்பிடிக்கச் செய்தல், மாநிலத்தின் செழுமை, வளர்ச்சியை கண்டு பெருமை கொள்ளச் செய்தல் ஆகிய பண்புகளை சிறார்களிடம் உருவாக்க வேண்டும்.
- மாணவர்களை நல்வழிப்படுத்தும் சிற்பி திட்டம் : சிறுவர்களைச் சமூக ஒழுக்கத்துடன் வளர்ப்பது கடமை
- இத்திட்டத்தில் மாணவர்களுக்குக் காவல் துறையினரால் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படும். போதை ஒழிப்பிலிருந்து பல்வேறு நன்னடத்தைகளைக் கற்பார்கள், தங்களைத் தாங்களே மேம்படுத்திக் கொள்வார்கள்.

### சில கேள்விகள்

- இந்தத் திட்டம் ஏன் அரசுப் பள்ளி மாணவர்களிடம் மட்டும் தொடங்கப்படுகிறது.
- வளரிளம் பருவம் (13 வயது) தொடங்கும்போது அவர்களுக்கு காவல்துறையினர் வழிகாட்ட வேண்டிய அவசியம் என்ன?

### கல்வியும் ஒழுக்கமும்

- ஒழுக்கமும் நன்னடத்தையும் தனியே கற்பிக்கப்படக் கூடியவையா? கல்விச் செயல்பாட்டுடன் விளையாட்டு, இலக்கியம், இசை, கலை. மாணவர் மன்றம், அறிவியல் மன்றம் போன்ற கல்வி இணைச் செயல்பாடுகளை ஆசிரியர்களே மேற்கொள்ளும்போதுதான் இவற்றைக் கற்பிக்க முடியும். அதற்குத் துணையாகச் சிறப்பு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.
- நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ள ஆசிரியர் காலிப்பணியிடங்களை நிரப்ப அரசு முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிமன்றம் சொல்லியும் அரசு இன்னும் நிரந்தர ஆசிரியர்களை நியமிக்கவில்லை.

- இந்தக் கற்றல்–கற்பித்தல் சிக்கலைச் சரிசெய்து கல்வித் துறையின் பணிதானே தவிர, காவல்துறை தலையிட வேண்டிய சட்டம் – ஒழுங்குப் பிரச்சினையில்லை என்பது வெளிப்படை.

**தடைதாண்டும் ஓட்டம்**

- அடிப்படையில் அரசுப் பள்ளிகளில் கற்கும் அடித்தட்டு மக்களின் குழந்தைகளின் கற்றல் செயல்பாடு என்பது ஒரு தடைதாண்டும் ஓட்டம் போன்றது.
- வறுமை, வசதியற்ற குடும்பச் சூழலை ஊக்குவிப்புக் காரணியாகக் கொண்டு கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் உண்டு.
- பதினெட்டு வயது நிரம்பாதவர்களைக் குழந்தைகள் என்றே சட்டம் சொல்கிறது; அந்த வயதுடையவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால்கூட அவர்களின் குழந்தை மாண்புக்கு ஊறு ஏற்படாமல் காவல்துறை அணுக வேண்டும்.

**துறை சார்ந்த அணுகுமுறை**

- அரசு, தனியார் என எந்தப் பள்ளியானாலும் குழந்தைகள், கற்றல் நலன் கருதி எடுக்கப்படும் அரசின் முக்கிய முடிவுகளும் திட்டங்களும் ஆசிரியர்கள், கல்வியாளர்கள், குறிப்பாகக் குழந்தைகள் மத்தியில் செயல்படுபவர்களைக் கொண்ட குழு அமைத்து விவாதிக்கப்பட வேண்டும்; அது அரசுக்குப் பரிந்துரையாக வழங்கப்பட்டு, அதன் பிறகே நிர்வாக ரீதியாக முடிவெடுக்கப்படவேண்டுமே தவிர, அரசாங்கமே தனிப்பட்ட முறையில் முடிவெடுத்து அதை நடைமுறைப்படுத்தக்கூடாது.

## பழங்குடியினர் பட்டியலில் நரிக்குறவர், குருவிக்காரர்

- தமிழகத்தில் குருவிக்காரர், நரிக்குறவர் உள்ளிட்ட சில சமூகத்தினர் தங்களை பழங்குடியினர் பிரிவில் சேர்த்து சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று போராடி வருகின்றனர்.
- பழங்குடியினருக்கு கிடைக்கும் அனைத்து சலுகைகளும் இனி நரிக்குறவர், குருவிக்காரர், ஹட்டி, பிரிஜியா சமூகத்தினருக்கும் கிடைக்கும்.
- ஹட்டி சமூகத்தைச் சேர்ந்த 1.60 லட்சம் மக்கள் பயனடைவர். ஹட்டி இன மக்கள் இமாச்சல பிரதேச மாநிலத்தில் அதிக அளவில் உள்ளனர்.
- அதேபோல, சத்தீஸ்கர் மாநிலத்தில் அதிக அளவில் உள்ள பிரிஜியா இனத்தவரும் பயனடைவர்.

## திரவிடியன் ஸ்டாக்கும் திராவிட மாடலும்

- அண்ணா காஞ்சிபுரம் சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த நிலையில், மாநிலங்களவை உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குச் சென்றார்.
- கன்னிப் பேச்சில் ஐ பிலாங் டு திரவிடியன் ஸ்டாக். ஐயம் ப்ரௌட் டு கால் மைசெல்ஃப் எ திரவிடியன் (நான் திராவிட இனத்தைச் சார்ந்தவன், திராவிடன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்பவன்) என்று கூறினார்.
- மாநில சுயாட்சி என்பது, திராவிட இயக்கத்தின் குரல் மட்டுமல்ல, திலகர் பூர்ண சுயராஜ்ஜியம் என்று குறிப்பிட்டதிலிருந்தே அது தொடங்குகிறது.
- காங்கிரஸின் லக்னௌ உடன்படிக்கை மோதிலால் நேரு தலைமையிலான காங்கிரஸ் காரிய கமிட்டியின் அறிக்கை ஆகியவற்றில் மாகாண ஸ்வராஜ்ஜியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவே மாநில சுயாட்சி ஆகும்.
- கலைஞர் கருணாநிதி மாநில சுயாட்சிக்காக ராஜமன்னார் குழுவை அமைத்து, அதன் அறிக்கையை 1974–இல் பெற்று, அன்றைய பிரதமர் இந்திராகாந்திக்கு அனுப்பி வைத்தார்.
- மாநில சுயாட்சியை கலைஞர் கருணாநிதி முன்னெடுத்து மாநிலங்களுக்கு தனிக்கொடி, மாநில முதலமைச்சர்கள் விடுதலை நாளான ஆகஸ்ட்–15இல் கொடியேற்றுதல் ஆகியவற்றை முன்னெடுத்தார்.
- தமிழக அரசில் 34 துறைகள் உள்ளன. இதில் சமூகநலத்துறை, புள்ளிவிவரத்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை இவற்றிலிருந்து அரசுக்கு அதகி அளவில் வருவாய் வருவதில்லை.
- மற்ற துறைகளிலிருந்துதான் தமிழக அரசு வருவாய் ஈட்ட வேண்டும்.

## பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினர்

- பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினருக்கு (இடபிள்யூஎஸ்) வழங்கப்பட்டுள்ள 10 சதவீத இடஒதுக்கீடானது இடஒதுக்கீட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள 50 சதவீத வரம்பை மீறவில்லை. மேலும் இதில் எந்த பாரபட்சமும் காட்டவில்லை என்று உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.



SURESH'

- மத்திய அரசு தரப்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் கே.கே.வேணுகோபால் கூறும்போது, பொதுப்பிரிவிலிருந்து ஏழைகளுக்கு மட்டும் இடஒதுக்கீடு வழங்குவதும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (இடபிள்யூஎஸ்) ஒதுக்கீட்டில் இருந்து எஸ்சி, எஸ்டி, ஓபிசி, எஸ்இபிசி பிரிவுகளை ஒதுக்குவதும் பாரபட்சமானது அல்ல.
- பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினருக்கு 10 சதவீத ஒதுக்கீட்டை வழங்குவது உச்சநீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பான 50 சதவீத உச்சவரம்பை மீறுவதாக அமையாது.
- இடஒதுக்கீட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள உச்சவரம்பை பொருளாதார ரீதியாக பின்தங்கிய பொதுப்பிரிவினருக்கு (இடபிள்யூஎஸ்) வழங்கப்பட்டுள்ள 10 சதவீத இடஒதுக்கீடானது மீறவில்லை. மேலும் இதில் எந்த பாரபட்சமும் காட்டப்படவில்லை என்று வாதிட்டார்.

## லக்கிம்பூர்

- உத்தர பிரதேசம் லக்கிம்பூர் பகுதியைச் சேர்ந்த சகோதரிகள் இருவருடைய வீட்டுக்கு அருகில் வசிப்பவர் சோட்டு. இவர் சுகைல், ஜுனைத் என்ற இரு வாலிபர்களுக்கு சகோதரிகளை அறிமுகம் செய்து வைத்துள்ளார்.
- இந்நிலையில் சகோதரிகள் இருவரையும், சுகைல் மற்றும் ஜுனைத் ஆகியோர் தங்கள் மோட்டார் சைக்கிளில் அருகில் உள்ள கரும்பு தோட்டத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.
- அவர்களுடன் ஹபிசுல் ரகுமான் என்பவரும் சென்றுள்ளார். சகோதரிகள் இருவரையும், சுகைல் மற்றும் ஜுனைத் ஆகியோர் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். அதன்பின் அவர்களை துப்பட்டாவால் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார்.
- தடயங்களை மறைக்க சுகைல் மற்றும் ஜுனைத் ஆகியோர் தங்களின் நண்பர்கள் கரிமுதீன் மற்றும் ஆரிப் ஆகியோரை உதவிக்கு அழைத்துள்ளனர்.
- பின்னர் இருவரது உடல்களை மரத்தில் தூக்கில் தொங்குவது போல் துப்பட்டாவில் கட்டி தொங்கவிட்டுள்ளனர்.

## மேக் இன் இந்தியா

- ஸ்டாக்ஹோம் இன்டர்நேஷனல் பீஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் அண்மையில் வெளியிட்ட புள்ளிவிவரத்தின்படி, உலகில் ஆயுதங்களை அதிகம் ஏற்றுமதி செய்யும் 25 நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பிடித்திருக்கிறது.
- உள்நாட்டு ஆயுத உற்பத்தி அதிகரித்து வருவதால் இந்தியாவின் ஆயுத இறக்குமதி 21% வரை சரிந்துள்ளது. சுமார் 780 வகையான ஆயுதங்கள், பாதுகாப்பு தளவாடங்களின் இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

## கட்டாய மதமாற்ற தடைச்சட்ட மசோதா

- மதமாற்ற தடைச்சட்ட மசோதா, யாருடைய மதச் சுதந்திரத்தையும் பறிக்க முற்படவில்லை. மாறாக, கட்டாயப்படுத்தி, ஆசைவார்த்தைகளைக் கூறி மதமாற்றம் செய்வதைத் தடுக்கவே முற்படுகிறது.
- கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்ய முடியாது என்று உச்சநீதிமன்றம் ஏற்கனவே கூறியுள்ளது.
- மதமாற்றம் செய்துகொள்வதில் எவ்வித தடையும் இல்லை. ஆனால், ஆசைகாட்டி கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்வதைத் தடுக்கவே இச்சட்ட மசோதா கொண்டுவரப்படுகிறது.
- அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 25-இன்படி இச்சட்ட மசோதா தாக்கல் செய்வது சரிதானா?

## எஸ்சிஓ தலைமைப் பொறுப்பை ஏற்றது இந்தியா

- ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை உறுப்பு நாடுகள் சுழற்சி முறையில் வகித்து வருகின்றன.
- நடப்பாண்டுக்கான தலைமைப் பொறுப்பை உஸ்பெகிஸ்தான் வகித்த நிலையில், 2023-ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா வெள்ளிக்கிழமை ஏற்றது. அதன்படி, அடுத்த ஆண்டுக்கான எஸ்சிஓ மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது.
- கடந்த 2017-ஆம் ஆண்டில் எஸ்சிஓ கூட்டமைப்பில் நிரந்தர உறுப்பினராக இணைந்த இந்தியா, முதல் முறையாக அக்கூட்டமைப்புக்குத் தலைமையேற்க உள்ளது குறிப்பிடத்தக்கது.
- தலைமைப் பொறுப்பை ஏற்ற இந்தியாவுக்கு சீன அதிபர் ஷிஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

## 10 ஆண்டுகளில் இந்தியா

### தாமரையின் ஆதிக்கம்

- 2014 மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 282 தொகுதிகளை வென்று ஆட்சியமைத்தது.
- இந்தத் தேர்தலில் பாஜக வென்றதன் மூலம், குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடி இந்தியப் பிரதமரானார். மோடியின் ஆட்சி மீது கடுமையான அதிருப்தியும் விமர்சனங்களும் வெளிப்பட்டாலும் 2019 மக்களவைத் தேர்தலில் முன்பைவிடக் கூடுதலாக 303 தொகுதிகளில் வென்று இரண்டாம் முறையாகத் தேஜகூ ஆட்சி அமைத்தது.

### செவ்வாயில் தடம் பதித்த இந்தியா

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) 2013 இல் அனுப்பிய மங்கள்யான் விண்கலம் முதல் முயற்சியிலேயே வெற்றிகரமாகச் செவ்வாயின் சுற்றுவட்டப் பாதையை அடைந்து, செவ்வாய்க் கோளின் ஒளிப்படங்களை அனுப்பியது.
- மிகக் குறைந்த செலவில் (ரூ.450 கோடி) செவ்வாய்க்கு விண்கலனை வெற்றிகரமாகச் செலுத்திய நாடு என்னும் பெருமை இந்தியாவுக்குக் கிடைத்தது.
- நிலவுக்கான இஸ்ரோவின் இரண்டாவது விண்கலமான சந்திரயான் 2, 2019 ஜூலை 22 அன்று விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால், இந்த விண்கலம் நிலவில் இறங்கி ஆய்வு மேற்கொள்ளும் இலக்கை அடையத் தவறியது.

### மதிப்பிழந்த ரொக்கப்பணம்

- ‘கறுப்பு பணத்தை ஒழிப்போம்’ என்னும் வாக்குறுதியை முதன்மையாக வைத்து ஆட்சிக்கு வந்தது பாஜக. 2016 நவம்பர் 8 அன்று இரவு 8 மணிக்கு நேரலையில் தோன்றிய பிரதமர் நரேந்திர மோடி ரூ.500, ரூ.1000 நோட்டுகள் அனைத்தும் உடனடியாக மதிப்பிழப்பதாக அறிவித்தார்.
- இந்த உயர் மதிப்பு நோட்டுகள் செல்லாமல் போவதால், வரி ஏய்ப்பு உள்ளிட்ட குற்றங்கள் மூலம் பதுக்கப்பட்ட கறுப்பு பணம் பொருளாதாரத்தை விட்டு வெளியேறும், தீவிரவாத நடவடிக்கைகளுக்கான நிதியாதாரம் தடுக்கப்படும் என்றும் மத்திய அரசு கூறியது.
- ஆனால், இந்த அதிரடி நடவடிக்கையால் நாடு முழுவதும் சிறுவியாபாரிகள் பெருத்த நஷ்டமடைந்தனர். மக்கள் அவதிப்பட்டனர்.
- தம்மிடம் இருந்த ரூபாய் நோட்டுகளை மாற்றுவதற்காக வங்கிகளுக்கு முன்பும் தினசரித் தேவைக்குப் பணம் எடுக்க ஏடிஎம்களிலும் நெடிய வரிசைகளில் மக்கள் காத்திருக்க நேரிட்டது.

### ஒற்றை வரிவிதிப்பு முறை

- ஒரே நாடு, ஒரே வரிவிதிப்பு முறை என்னும் முழக்கத்துடன் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறை 2017 ஜூலை 1 முதல் அமல்படுத்தப்பட்டது.
- இதன் மூலம் பொருட்கள் – சேவைகள் மீது மாநில அரசுகள் விதித்து வந்த வரிகளும் மறைமுக வரிகளும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட்டன.
- 0%, 5%, 12%, 18%, 28% ஆகிய ஐந்து வரி அடுக்குகளில் அனைத்துப் பொருட்கள், சேவைகள் மீதான மறைமுகவரிகள் உள்ளடக்கப்பட்டன.
- பெட்ரோலியப் பொருட்கள், மதுபானங்கள், மின்சாரம் ஆகியவை மட்டும் ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறைக்கு உட்படுத்தப்படாமல் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டிலேயே தொடர்கின்றன.

### உலுக்கும் பாலியல் வன்முறைகள்

- கடந்த பத்தாண்டுகளில் பாலியல் வன்புணர்வு, பாலியல் குற்றங்கள் இந்தியாவில் பன்மடங்கு அதிகரித்துள்ளன.
- டெல்லியில் 2012 டிசம்பரில் ஓடும் பேருந்தில் ஒரு மருத்துவ மாணவி, ஓட்டுநர் உள்ளிட்ட ஆறு பேரால் கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டார்.
- நிர்பயா என்றழைக்கப்பட்ட இந்தப் பெண்ணுக்கு நீதி வேண்டி நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. இதையடுத்து குற்றவாளிகள் ஆறு பேரும் கைது செய்யப்பட்டு ஐவருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது.
- ஒருவர் 18 வயதை நிறைவு செய்யாததால் குறைந்தபட்ச சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டார்.

- பாலியல் குற்றத்தில் ஈடுபடுகிறவர் 18 வயதுக்குக் கீழானவராக இருந்தாலும், அவர் 18 வயதைக் கடந்தவராகவே நடத்தப்பட வேண்டும் என்பது உட்பட பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டங்களில் மாற்றங்கள் நிகழ்வதற்கு நிர்பயா சம்பவம் காரணமானது.
- ஆனாலும் உத்தர பிரதேசத்தின் ஹாத்ரஸில் தலித் பெண், காஷ்மீரின் கத்வா பகுதியில் எட்டு வயதுச் சிறுமி எனப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் நாடு முழுவதும் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றன.

## அந்தஸ்தை இழந்த காஷ்மீர்

- ஜம்மு & காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்தை வழங்கிய அரசமைப்பின் கூறு 370-ம் மாநில அந்தஸ்தும் 2019 ஆகஸ்ட் 5 அன்று நீக்கப்பட்டது.
- ஜம்மு & காஷ்மீர், லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டன.
- காஷ்மீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்புச் சலுகைகள் பலவற்றை நீக்கி, அங்கு பிற மாநிலத்தவர் நிரந்தரச் சொத்து வாங்குவதற்கு வழிவகை செய்யும் இந்த நடவடிக்கையை காஷ்மீரின் மாநிலக் கட்சிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன.
- ஆனால், காஷ்மீரில் தீவிரவாதச் செயல்களைத் தடுக்கவும் இந்து பண்டிட்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினத்தவர் வாழ்வதற்கு வழிவகுக்கவும் இந்தச் சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியது. ஆனாலும் கொந்தளிப்பு நிலையிலிருந்து காஷ்மீர் இன்னும் விடுபடவில்லை.

## குடியுரிமையை மாற்றியமைக்கும் சட்டம்

- பாகிஸ்தான் வங்கதேசம், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட இந்தியாவின் அண்டை நாடுகளிலிருந்து மதவெறித் தாக்குதல்களின் காரணமாக வெளியேறி, 2014 டிசம்பர் 14-க்கு முன்பு குடியேறிய இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள், பார்சிகள் ஆகியோருக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கான இந்தியக் குடியுரிமை திருத்தச் சட்டம் - 2019 நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.
- இந்தப் பட்டியலில் இஸ்லாமியர்கள் இடம்பெறாமல் இருப்பதால் இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள் பலரின் இந்தியக் குடியுரிமை கேள்விக்குள்ளாகும் என்று நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன.
- டெல்லி ஷாகீன் பாகில் பல நூறு பெண்கள் சாலையில் அமர்ந்து நடத்திய போராட்டம் மாதக் கணக்கில் அமைதிவழியில் தொடர்ந்தது.

## வேளாண்மைச் சட்டம் பின்வாங்கல்

- இந்திய வேளாண்மை தொடர்பாக மூன்று புதிய சட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றியிருந்தது. இந்தச் சட்டங்கள் விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை நீக்கிவிடும்;
- விவசாயத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகரித்துவிடும் என்பது போன்ற பல்வேறு காரணங்களுக்காக நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த விவசாயிகள் கடுமையாக எதிர்த்தனர்.
- நாடு முழுவதும் அமைதிவழிப் போராட்டங்கள் நடைபெற்றன. குறிப்பாக, டெல்லியில் கூடிய பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் மாதக் கணக்கில் ஒரே இடத்தில் அமர்ந்து, புதிய சட்டங்களுக்கு எதிராகப் போராடினர்.
- 2021 நவம்பர் 19 அன்று பிரதமர் நரேந்திர மோடி மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறுவதாக அறிவித்தார்.

## பெருந்தொற்று என்னும் பேரிடி

- 2020 ஜனவரி 30 அன்று இந்தியாவில் கரோனா வைரஸ் தொற்று கொண்ட முதல் நபர் கண்டறியப்பட்டார். இன்று வரை கரோனா வைரஸ் முற்றிலும் நீக்கிவிடவில்லை.
- கரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக மார்ச் 22 அன்று நாடு முழுவதும் பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டது.
- இதையடுத்து வாழ்வாதாரம் இழந்து, தம் சொந்த மாநிலங்களுக்கு நடைபயணமாகச் சென்ற புலம்பெயர் தொழிலாளர்கள் பலர் கொடும்பசியாலும் விபத்துகளிலும் உயிரிழந்தனர்.
- இது தவிர, 2021இல் தொடங்கிய கரோனா இரண்டாம் அலையில் மருத்துவமனைகளில் இடம் கிடைக்கப் போராடும் அளவுக்கு சிகிச்சை தேவைப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்தது.
- வைரஸ் தாக்குதலின் வீரியத்தாலும் உரிய நேரத்தில் சிகிச்சை கிடைக்காமலும் பலர் உயிரிழந்தனர். இந்தியத் தயாரிப்பான கோவாக்ஸின், ஆக்ஸ்ஃபோர்டு-ஆஸ்ட்ரா ஸெனேகா கூட்டுத் தயாரிப்பான கோவிஷீல்டு ஆகிய தடுப்பூசிகளுக்கு இந்தியாவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- அனைவருக்கும் தடுப்பூசி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தைத் தாண்டி, இவ்விரு தடுப்பூசிகளால் இந்தியாவில் கரோனா தொற்று மரணங்களும் தொற்றின் தீவிரத்தன்மையும் பெருமளவில் கட்டுக்குள் வந்தன.

### சர்ச்சைக்குள்ளான கல்விக்கொள்கை

- தேசியக் கல்விக் கொள்கை 2020 அமலுக்கு வந்தது. 34 ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அரசு வகுத்துள்ள புதிய கல்விக் கொள்கை, இந்தியக் கல்வி அமைப்பை அடுத்த பத்தாண்டுகளுக்குள் முற்றிலும் மாற்றியமைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.
- பல மாநில அரசுகள் வரவேற்று இந்தக் கல்விக் கொள்கையை அமல்படுத்திவிட்டன. ஆனால், பள்ளி மாணவர்களுக்கு மூன்று மொழிகளைக் கற்பிப்பதைக் கட்டாயமாக்குவது, கல்லூரி இடைநிற்கும் மாணவர்களுக்கு அதற்கேற்ற சான்றிதழை வழங்குவது உள்ளிட்ட இந்தக் கொள்கையின் பல்வேறு பரிந்துரைகளைக் கல்வியாளர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

## 10 ஆண்டுகளில் சுற்றுச்சூழல்

### ஆயுள் பறிக்கும் காற்று மாசு

- நகரமயமாக்கல், தனியார் போக்குவரத்து, வைக்கோல் எரிப்பு, மின்சாரத்திற்காகப் புதைபடிவ எரிபொருட்களை எரித்தல் உள்ளிட்ட காரணிகளால் நாடு முழுவதும் காற்று மாசுபாடு அதிகரித்துள்ளது.
- கடந்த பத்தாண்டுகளில் இந்தியா முழுவதும் காற்றில் சராசரி நைட்ரஜன் டை ஆக்சைடு (NO2) செறிவு பெருமளவு அதிகரித்திருப்பதைத் தரவுகள் உறுதிசெய்கின்றன.
- பி.எம்.2.5 துகள்களின் செறிவின் அடிப்படையில் உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகராக புதுடெல்லி இருக்கிறது.
- தற்போதைய நிலை தொடர்ந்தால் டெல்லி மக்களின் ஆயுட்காலம் 10.1 ஆண்டுகளும், உத்தரப்பிரதேச மக்களின் ஆயுட்காலம் 8.9 ஆண்டுகளும், பிஹார் மக்களின் ஆயுட்காலம் 7.9 ஆண்டுகளும் குறையும்.

### திடக்கழிவு எனும் தீராப்பிரச்சினை

- இந்தியாவில் தினமும் 1.5 லட்சம் டன் குப்பை உற்பத்தியாகிறது. சென்னையில் மட்டும் தினமும் 6,000 டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது.
- திடக்கழிவு மேலாண்மை சிக்கல்கள் காரணமாக இந்தியா முழுவதும் திடக்கழிவு அகற்றும் தளங்களில் அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படுகின்றன.
- மும்பையில் தியோனார் குப்பைக் கிடங்கில் 2016இல் ஏற்பட்ட தீவிபத்து மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது.
- சென்னை பள்ளிக்கரணை பெருங்குடிக் குப்பைக் கொட்டும் வளாகத்தில் மீண்டும் மீண்டும் நிகழும் தீ விபத்துகளும் அவை ஏற்படுத்தும் பாதிப்புகளும் தொடர்கின்றன.

### ஞெகிழித் தடை இருக்கிறதா?

- ஞெகிழித் தடை குறித்த பல அறிவிப்புகளை மத்திய, மாநில அரசுகள் கடந்த ஆண்டுகளில் வெளியிட்டுள்ளன. இருப்பினும், சாக்கடைகள்-வடிகால்கள், ஆறு-வாய்க்கால்கள், தெரு-சாலைகள் என எங்கும் நீக்கமற ஞெகிழிக் கழிவு நிறைந்திருக்கிறது.
- நாம் குடிக்கும் தண்ணீரிலும், சுவாசிக்கும் காற்றிலும்கூட நுண்ஞெகிழித் துகள்கள் கலந்துவிட்டன. ஒரு முறை பயன்படுத்தப்படும் ஞெகிழிப் பொருள்களுக்கு எதிரான தடை 2019 இல் தமிழ்நாட்டிலும், 2022 ஜுலை 1 முதல் நாடு முழுவதும் விதிக்கப்பட்டது.
- ஆனால், நடைமுறையில் அவை இன்னும் கிடைத்துக் கொண்டிருப்பது தடை அறிவிப்பு குறித்த பெருங்கேள்விகளை எழுப்புகிறது.

### மனிதர்கள் ஏற்படுத்திய பேரழிவு

- காட்டை திருத்துதல், மலைப்பாங்கான நிலப்பரப்புகளில் வளர்ச்சி நடவடிக்கைகள் நிலச்சரிவுக்கு முக்கிய காரணி. மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் 2018, 2019இல் கடுமையான நிலச்சரிவுகள் ஏற்பட்டன.
- கனமழைக்குப்பிறகு, அடுத்தடுத்த ஆண்டுகளில் கேரளத்திலும், கர்நாடகத்தின் குடகு மாவட்டத்திலும் ஏற்பட்ட நிலச்சரிவு சார்ந்த அழிவு நாட்டையே உலுக்கியது.

- 2015இல் சென்னையில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளமும் அதனால் ஏற்பட்ட சேதமும் தீவிரமான ஒன்று. ஏரிகளையும் நீர் பிடிப்பு பகுதிகளையும் நகரமயமாதல் விழுங்கியதால் ஏற்பட்ட பாதிப்பு அது. அந்தப் பாதிப்பு இன்றும் தொடர்கிறது.

### தீவிரமடைந்து வரும் காட்டுத்தீ

- இந்தியாவில் ஏற்படும் 90 சதவீதக் காட்டுத்தீ நிகழ்வுகள் மனிதனால் உருவாக்கப்பட்டவை என்று டிராபிக்கல் ஃபாரெஸ்ட் சயின்ஸ் இதழில் வெளியான ஆய்வு தெரிவிக்கிறது.
- காடுகளை அழிப்பதற்காக உருவாக்கப்பட்ட தீ, புல் எரிப்பு, பயிர் எரிப்பு போன்றவற்றாலோ இவை நிகழலாம்.
- அதே நேரம், காலநிலை மாற்றம் காட்டுதீயைப் பரவலாக்கி வருவதையும் மறுக்க முடியாது. 2020இல் மிசோரமில் ஏற்பட்ட காட்டுத்தீ ஏற்படுத்திய அழிவின் வீரியம் அதிகம்.
- 2021 மார்ச் மாதத்தில், ஒடிசாவின் சிமிலிபால் உயிர்க்கோளக காப்பகத்தில் ஏற்பட்ட காட்டுத்தீ, அந்த மாநிலத்தின் 26 மாவட்டங்களுக்குப் பரவிப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

### கட்டுப்பாடற்ற பெருந்திட்டங்கள்

- வெளிப்படையாகவே சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பல பெரிய திட்டங்கள் இந்தியாவில் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
- உத்தரகாண்ட்டில் சர்ச்சைக்குரிய 825 கி.மீ சார் தாம் நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் அக்கறையை நிராகரிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வாதிடப்பட்டது.
- உத்தரகாண்ட்டில் 1000 மெகாவாட் தேஹ்ரி 11 அணை உட்பட ஏழு நீர்மின் திட்டங்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக மத்தியச் சுற்றுச்சூழல் அமைச்சகம் உண்மைகளைத் தவறாகச் சித்தரித்தது பின்னர் கண்டறியப்பட்டது.
- தமிழகத்தில் எட்டுவழிச் சாலை, நியூட்ரினோ ஆய்வகம், மீத்தேன் எரிவாயு கிணறுகள் போன்ற பல திட்டங்கள் கடுமையான எதிர்ப்பை இன்றும் சந்தித்து வருகின்றன.

### நீர்த்துப்போக வைக்கும் சட்டத்திருத்தங்கள்

- கடந்த எட்டு ஆண்டுகளில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் பல்லுயிர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் சட்டங்களில் பல்வேறு திருத்தங்களைச் செய்து வருகிறது.
- பெரும்பாலான தொழில்துறை திட்டங்களுக்கும், உள்கட்டமைப்பு திட்டங்களுக்கும் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுவதை வலியுறுத்தும் பிரிவுகளை, அந்தத் திருத்தங்கள் நீர்த்துப் போகச் செய்தன.
- வன (பாதுகாப்பு) சட்டம் 1980 இல் 2021 ஜுலையில் முன்மொழியப்பட்ட மாற்றம் சுற்றுச்சூழல் சுற்றுலாவை அனுமதிக்கும் நோக்கிலிருந்தது.
- பல்லுயிர் பாதுகாப்பு சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றம் வெளிநாட்டுப் பங்குகளை வைத்திருக்கும் இந்திய நிறுவனங்களுக்குச் சாதகமாக இருந்தது.

### காட்டைக் கொல்லுதல்

- 1947 உடன் ஒப்பிடும்போது இந்தியாவின் மக்கள்தொகை மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்துவிட்டது.
- பெருகிவரும் மக்கள்தொகைக்கு இடமளிக்கும் வகையில், ஒரு காலத்தில் மரங்கள் சூழ்ந்திருந்த பரந்த காட்டுப் பகுதிகள் காடழிப்பைச் சந்தித்துள்ளன.
- 29,000 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள காட்டு நிலங்கள் விவசாய நிலங்களாகவும் குடியிருப்புகளாகவும் மாற்றப்பட்டுள்ளன.
- தேசியத் தொலையுணர்வு மையம் (NRSC) வெளியிட்டுள்ள செயற்கைக்கோள் வரைபடங்கள் காடுகளின் அழிப்பை வெட்ட வெளிச்சமாக்கி உள்ளன.
- 2015-க்குப் பிறகு இந்தியக் காடுகளின் நிலை மிக மோசமாகச் சரிந்துவருவதையும் அதன் தரவுகள் உணர்த்துகின்றன.

### அதிகரிக்கும் மக்கள் குரல்

- சுற்றுச்சூழல் செயல்பாடுகள் கடந்த பத்தாண்டுகளில் மக்களின் உரிமைகள், வாழ்வாதாரத்திற்கான நிலக்கரிச் சுரங்கத்துக்கு எதிராகக் கடந்த செப்டம்பரில் சத்தீஸ்கரில், பழங்குடியின சமூகத்தினர் 300 கி.மீ. தூரம் அணிவகுத்து முன்னெடுத்த போராட்டம் உலக அளவில் கவனிக்கப்பட்டது.

- கோவா காட்டுப் பகுதிகளில் 40,000 மரங்களை வெட்டி வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராகவும், மும்பை மெட்ரோ ரயிலுக்காக ஆரே காட்டுப்பகுதி அழிப்புக்கு எதிராக, தமிழகத்தின் டெல்டா பகுதிகளில் மீத்தேன் எரிவாயு திட்டங்கள், மேகமலை நியூட்ரினோ திட்டம் போன்றவற்றுக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் தொடர்கின்றன.

### எரிசக்தி அதிர்ச்சி தராமல் இருக்க...

- மின்சாரமும் வாகனப் பயன்பாடும் நிலக்கரி, பெட்ரோல் உள்ளிட்ட மாசுபடுத்தும் ஆற்றல் அதிகாரங்களையே இன்றும் நம்பியுள்ளன. இதன் விளைவாக அதிகரிக்கும் பசுங்குடில் வாயு உமிழ்வு, உலகின் அழிவைத் துரிதப்படுத்தி வருகிறது.
- 2030க்குள் இந்தியா தனது ஆற்றல் தேவையின் 50 சதவீதத்தைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்களின் மூலம் பெறும் என்று அறிவித்திருக்கிறது.
- 2030இல் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் 450 ஜிகாவாட் என்கிற இலக்கை இந்தியா எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவின் காற்றாலை மின்னுற்பத்தித் திறனில் 25 சதவீதமும், தேசியப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் 15 சதவீதமும் தமிழ்நாட்டின் பங்களிப்பாக இருக்கின்றன.

## 10 ஆண்டுகளில் மருத்துவம்

### தொற்றா நோய்கள்

- இதய நோய், நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற தொற்றா நோய்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களையே அதிக அளவில் பாதிக்கின்றன.
- இந்திய அளவில் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் இருக்கிறது.
- தமிழ்நாடு சுகாதாரத்துறையின் செயல்திட்டங்கள், தொற்றா நோய்கள் குறித்தும், தேவைப்படும் வாழ்க்கைமுறை மாற்றங்கள் குறித்தும் விழிப்புணர்வை உருவாக்கியிருக்கின்றன.
- அந்த நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 'மக்களைத் தேடி மருத்துவம்' எனும் திட்டமும் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### கரோனா பெருந்தொற்று

- கரோனாவை எதிர்கொள்வதில் முதலில் சறுக்கிய இந்தியா, இரண்டாம் அலையின் கோரத்தாண்டவத்துக்குப் பின்னரே விழித்துக்கொண்டது.
- கரோனாவுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டதும், நாடு முழுவதும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தீவிரத் தடுப்பூசி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
- நாட்டிலுள்ள வயது வந்தோரில் 80 சதவீதத்திற்கும் மேலானோர் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.
- இதன் காரணமாக மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்திய மக்களிடம் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரித்திருக்கிறது. இந்திய அளவில் கேரளமும் தமிழ்நாடும் கரோனாவை எதிர்கொள்வதில் சிறப்பாகச் செயலாற்றின. இதன் காரணமாக பெரும் உயிரிழப்புகளும் தவிர்க்கப்பட்டன.

### எபோலா வைரஸ்

- எபோலா வைரஸ் 1976இல் கண்டறியப்பட்டாலும், 2014 – 2016 காலகட்டத்தில்தான் மிகப்பெரும் கொள்ளை நோயாக அது உருவெடுத்தது.
- ஆப்பிரிக்க நாடுகளில் ஆயிரக்கணக்கானோர் கொத்துக்கொத்தாய் மரணித்தார். எபோலாவின் தீவிரத்தைக் குறைத்து அதைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆனது.
- 2019 இறுதியில்தான் எபோலாவுக்கு எதிரான தடுப்பூசி கண்டறியப்பட்டது. இந்தியாவில் எபோலா பாதிப்பு ஏற்படவில்லை.
- ஒருவேளை இந்தியாவில் எபோலா பரவியிருந்தால், மக்கள்தொகைப் பெருக்கம், மக்கள் நெருக்கடி உள்ளிட்ட காரணங்களினால் பாதிக்கப்பட்டோரைத் தனிமைப்படுத்திச் சிகிச்சையளிப்பது மிகவும் கடினமாக இருந்திருக்கும்.

### மிஷன் இந்திர தனுஷ்

- இரண்டு வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் கர்ப்பிணிப் பெண்களையும் தாக்கும் தீவிர நோய்களைத் தடுக்கும் திட்டம் இது.
- டிஃப்தீரியா, கக்குவான் இருமல், டெட்டனஸ், காசநோய், போலியோ, ஹெபடைடிஸ் பி, தட்டம்மை ஆகிய ஏழு நோய்களுக்கு எதிராக முழுத் தடுப்பூசி செலுத்துவதை உறுதிப்படுத்தும் திட்டம் இது.
- 2014 இல் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில், ஜப்பானிய மூளைக்காய்ச்சல், ஹீமோபிலஸ் இன்ஃபுளுயன்ஸா வகை பி ஆகியவற்றுக்கான தடுப்பூசிகளும் தற்போது வழங்கப்படுகின்றன.

### புற்றுநோய்க்கு முதல் தடுப்பூசி

- புற்றுநோய்க்கு எதிராக ஹெச்பிவி வேக்சின் எனும் ஹியூமன் பேப்பிலோமா வைரஸ் தடுப்பூசி தற்போது கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தியாவின் முன்னணித் தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனமான சீரம் இன்ஸ்டிடியூட், மத்திய அரசின் பைராக் எனும் உயிரித் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழகம் ஆகியவை இணைந்து அதைக் கண்டறிந்துள்ளன.
- இந்தத் தடுப்பூசி அனைத்துப் புற்றுநோய் வகைகளையும் தடுக்காது என்றாலும், ஹெச்.பி.வி. வைரஸால் ஏற்படும் புற்றுநோயைத் தவிர்க்க உதவும்.
- முக்கியமாக, கருப்பைவாய் புற்றுநோயையும் மற்ற பாதிப்புகளையும் இந்தத் தடுப்பூசி 90 சதவீதம் தடுக்கும்.

### காப்பீட்டு வசதி

- தனியார், பொதுத்துறை நிறுவனங்கள், பல்வேறு காப்பீடுகளை வழங்கி வருவதன் காரணமாக, இன்று இந்தியாவில் சுகாதாரக் காப்பீடு அதிகரித்துள்ளது.
- 55 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் ஏதோ ஓர் உடல்நலக் காப்பீட்டைப் பெற்றுள்ளனர். பத்தாண்டுக்கு முன்னர் இருந்த எண்ணிக்கையைவிட இது பத்து மடங்கு அதிகம்.
- மத்திய அரசு வழங்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.
- தமிழகத்தில் ஏழைகளுக்கு வழங்கப்படும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டமும் பெரும் வெற்றியைப் பெற்ற திட்டமாக உள்ளது.

### மருத்துவச் சுற்றுலா

- மேம்பட்ட சிகிச்சை குறைவான கட்டணம், தரமான கவனிப்பு, ஆங்கில மொழிப் புலமை போன்ற சிறப்புகளின் காரணமாக உலக அளவில் பெரிதும் விரும்பப்படும் மருத்துவச் சுற்றுலாத் தலமாக இந்தியா இருக்கிறது.
- இந்திய அளவில் எடுத்துக்கொண்டால், தமிழ்நாடே இந்தியாவின் மருத்துவச் சுற்றுலா தலைநகராக இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து ஆண்டுதோறும் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் தமிழகத்திற்கு வருகின்றனர்.
- மருத்துவச் சுற்றுலாவை மேம்படுத்தும் விதமாக ‘இந்தியாவில் குணமடையுங்கள்’ என்கிற இணைய தளத்தைச் சுதந்திர தினத்தன்று மத்திய அரசு தொடங்கியுள்ளது.

### தொடரும் தொழுநோய்

- 2005 இல் தொழுநோய் கட்டுப்படுத்தப்பட்ட நாடாக இந்தியா அறிவிக்கப்பட்ட போதும், மத்தியச் சுகாதார அமைச்சகத்தின் தொழுநோய் பிரிவு, 2017 இல் இந்தியாவில் 135,485 புதிய தொழுநோயாளிகளைக் கண்டறிந்ததாகக் கூறியது.
- அவர்களில் பாதி நோயாளிகள் (67,160) பாதிப்பு முற்றிய நிலையில் கண்டறியப்பட்டதாக அது தெரிவித்தது. அதாவது, சராசரியாக ஒவ்வொரு நான்கு நிமிடங்களுக்கும் யாரோ ஒருவருக்குத் தொழுநோய் பாதிப்பு ஏற்படுவதை அந்தப் பிரிவு கண்டறிந்துள்ளது.

### காசநோய் ஒழிப்பில் சறுக்கல்

- உலகின் காசநோய் நோயாளிகளில் 27 சதவீதம் பேர் இந்தியாவில் உள்ளனர். 2025-க்குள் புதிய காசநோய் நோயாளிகளை ஒரு லட்சத்தில் 44 ஆகக் குறைக்கும் நோக்கில் திருத்தியமைக்கப்பட்ட தேசியக் காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தை இந்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

- ஆனால், அந்த இலக்கு எட்டப்படுவது சாத்தியமில்லை என்பதைத் தரவுகள் காட்டுகின்றன. 2017 ஆம் ஆண்டைவிட 2018 இல் குறைவான நோயாளிகள் கண்டறியப்பட்டாலும், 2025-க்குள் காசநோயை அகற்றுவதற்கான இலக்கை அடைவதற்கு வீழ்ச்சி விகிதம் போதுமானதாக இல்லை.

**மனநலப் பிரச்சினைகள்**

- லான்செட் மருத்துவ இதழின் 2016 அறிக்கையின்படி, அடுத்த பத்தாண்டுகளில் உலகில் உளவியல் சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்படுபவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும்.
- குடும்பங்களின் பிளவு, தனிமை, தொழில்நுட்பங்களின் வரவு, மேற்கத்தியக் கலாச்சாரத்தின் தாக்கம் போன்றவை மக்களிடையே மன அழுத்தம் ஏற்படுவதற்கான சாத்தியங்களை அதிகரிக்கின்றன.
- அடிக்கடி மன அழுத்தத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு உரிய மருத்துவ உதவி அளிக்கப்படாத பட்சத்தில், அது தற்கொலை வரை செல்வதற்குச் சாத்தியம் உண்டு.
- இந்தச் சவால்களை எதிர்கொள்ள மத்திய அரசு மனநலச் சுகாதாரச் சட்டத்தைக் கடந்த 2017 இல் அறிமுகப்படுத்தியது.

## குட்பை பெடரா

- சுவிட்சர்லாந்தின் பாஸல் நகரில் 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் 8-ம் தேதி பிறந்தார்.
- கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்று குவித்த டென்னிஸ் ஆளுமையான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் அடுத்த வாரம் 23-ம் தேதி தொடங்கும் லேவர் கோப்பை தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

**கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள்**

| | | |
|---|---|---|
| ஆஸ்திரேலிய ஓபன் | - | 2004, 2006, 2007, 2010, 2017, 2018 |
| பிரெஞ்சு ஓபன் | - | 2009 |
| விம்பிள்டன் | - | 2003, 2004, 2005, 2006, 2007, 2009, 2012, 2017 |
| அமெரிக்க ஓபன் | - | 2004, 2005, 2006, 2007, 2009, 2012, 2017 |
| மாஸ்டர்ஸ் தொடர் | - | 28 |
| ஏடிபி பைனல்ஸ் | - | 6 |
| டேவிஸ் கோப்பை | - | 1 |
| ஒலிம்பிக் தங்கம் | - | 1 (இரட்டையர் பிரிவு 2008) |

## அரசுப் பணியாளர்களின் சொத்து விவரங்கள்

- 2013-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட லோக்பால், லோக் ஆயுக்த சட்டமானது அனைத்து அரசுப் பணியாளர்களும் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31-ஆம் தேதி வரையிலான சொத்து விவரங்களை ஜுலை 31-ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறது.
- லோக்பால் சட்டத்தின் 44-ஆவது பிரிவின் கீழ் அரசுப் பணியாளர்கள் சொத்து விவரங்களைத் தாக்கல் செய்வதற்குரிய புதிய விதிகள் இன்னும் வகுக்கப்படவில்லை.
- லோக்பால் சட்டத்தின் அனைத்து விதிகளும் உடனடியாக நடைமுறைக்கு வருவதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். இதன் மூலமாக அரசுப் பணியாளர்கள் ஊழலில் ஈடுபடுவதைத் தடுக்க முடியும்.
- லோக்பால் சட்டம் இயற்றப்பட்டு 6 ஆண்டுகளுக்குப் பிறகே அந்த அமைப்பு முறைப்படி ஏற்படுத்தப்பட்டது. அதன் முதல் தலைவராகப் பொறுப்பேற்ற முன்னாள் நீதிபதி பினாகி சந்திரகோஸ் கடந்த மே மாதம் ஓய்வு பெற்றார்.
- புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான பணிகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. லோக்பால் அமைப்பின் 8 உறுப்பினர்களில் இரு பணியிடங்கள் கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக காலியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கரோனாவை வென்ற இந்தியா

- தடுப்பூசி தயாரிப்பில் இந்தியாவின் தனித்திறன், தடுப்பூசி செலுத்தும் பணிகளை டிஜிட்டல் மயமாக்கியது. பிரதமரின் வழிகாட்டுதலின்படி 100 கோடி மக்களுக்கும் உயிர்காக்கும் மருந்தை செலுத்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியது.

- தடுப்பூசி முகாம்களை நோக்கிச் செல்வதற்கு மக்களுக்கு உத்வேகம் அளித்தது என அனைத்து முனைகளிலும், இது வரை கண்டிராத பாடங்களைப் பயின்றோம், பல வெற்றிகளையும் பெற்றுள்ளோம்.
- நவீன அறிவியல் உலகின் சரித்திரத்தில் கரோனா தீநுண்மிக்கு எதிரான தடுப்பூசியை ஒரு வருடத்துக்கும் குறைவான காலகட்டத்தில் கண்டுபிடித்து பொதுமக்களுக்கு வழங்கிய நிகழ்வு மிகப்பெரும் சாதனையாக பதிவு செய்யப்படும்.
- சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா நிறுவனமானது துளியும் சோர்வடையாமல், 200 கோடிக்கும் மேம்பட்ட தடுப்பூசிகளை உற்பத்தி செய்தது.
- தடுப்பூசி செலுத்துவதற்கும், அதை முறைப்படுத்துவதற்கும் 'கோவின்' செயலி மிகப் பெரிய உறுதுணையாக அமைந்தது.
- அதன் பயனாக, பொதுமக்களுக்கு ஆன்லைன் வழியாக தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான சான்றிதழ்கள் வழங்கும் பணிகளும் மிகச் சிறப்பாக நடந்தேறின.
- இது மட்டுமின்றி மத்திய, மாநில அரசுகளின் ஒத்துழைப்பால் நாட்டின் மூலை, முடுக்குகளிலும் சென்று தடுப்பூசி செலுத்தும் பணிகள் நடைபெற்றன.
- மக்கள்தொகையில் உலகிலேயே இரண்டாவது பெரிய நாடாக திகழும் இந்தியாவில் 96.7 சதவீத பொதுமக்களுக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கிறது.
- 89.2 சதவீதம் பேர் இரண்டாம் தவணை தடுப்பூசியை செலுத்தியுள்ளனர். இதுவரை 18.7 கோடி முன்னெச்சரிக்கை தவணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.
- உலக அளவில் கரோனா தொற்றுக்கு எதிரான தடுப்பூசி திட்டங்களால் சுமார் 2 கோடி மரணங்கள் தடுக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவிலும் அத்தகைய சாதனை எட்டப்பட்டிருக்கிறது. பிரதமர் மோடி தலைமையில் கரோனா தொற்றுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது.
- நடவடிக்கைகள் மக்கள் இயக்கமாக மாறியிருப்பதையே இது பறைசாற்றுகிறது.

## மனைவியை கணவர் கட்டாயப்படுத்தி உறவு கொள்வதை குற்றமாக்க மனு

- இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 375-ஆவது பிரிவில் உள்ள விதிவிலக்கு 2-இன்படி, மனைவியைக் கட்டாயப்படுத்தி கணவர் பாலுறவு கொண்டால், அது பாலியல் வன்கொடுமை அல்ல.
- இந்த விதிவிலக்குக்கு எதிராக அனைத்திந்திய ஜனநாயக மகளிர் கூட்டமைப்பு ஆர்ஐடி அறக்கட்டளை மற்றும் தனிநபர்கள் சார்பில் தில்லி உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- அந்த மனுக்களில் இந்திய தண்டனைச் சட்டத்தின் 375-ஆவது பிரிவின் (பாலியல் வன்கொடுமை) கீழ், மனைவியின் சம்மதமில்லாமல் கணவர் பாலுறவு கொள்வது வன்கொடுமை அல்ல என அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்கு, கணவர்களால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும் திருமணமான பெண்களுக்கு பாகுபாடு காட்டுகிறது.
- கணவரால் மனைவி பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதை பாலியல் வன்கொடுமை என்றே அழைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.
- ஆனால் 375-ஆவது பிரிவின் விதிவிலக்கு 2 அரசமைப்புக்கு எதிரானது அல்ல என்று கூறி, விதிவிலக்கை ரத்து செய்ய நீதிபதி ஹரிசங்கர் மறுப்புத் தெரிவித்தார்.
- இரு நீதிபதிகளும் மாறுபட்ட தீர்ப்புகளை அளித்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## ஆறுதலுக்கு சில மாறுதல்கள்

- அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் (என்எல்இஎம்) வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் 384 மருந்துகள் இடம்பெற்றிருக்கின்றன.
- புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள், நுண்ணுயிரி எதிர்ப்புக்கான ஆன்டிபயாட்டிக் நோய்த்தடுப்பு மருந்துகள் உள்ளிட்ட 34 புதிய மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. முந்தைய பட்டியலில் இருந்து 26 மருந்துகள் அகற்றப்பட்டுள்ளன.
- அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் 1996ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 2015-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட பட்டியல் வெளிவந்தது.
- அந்தப் பட்டியலை மறு ஆய்வு செய்ய தேசிய நிலைக்குழு ஒன்றை 2018-ஆம் ஆண்டு மத்திய சுகாதார அமைச்சகம் அமைத்தது.

- பல்வேறு மருத்துவ நிபுணர்களுடன் நடத்தப்பட்ட விரிவான ஆலோசனைக்குப் பிறகு இப்போது தேசிய பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது.
- ஷெட்டியூல்ட் பட்டியலில் இல்லாத, விலை நிர்ணயம் செய்யப்படாத மருந்துகளின் விலையை ஆண்டுதோறும் 10% அதிகரிக்க மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு அனுமதி உண்டு.
- அதனால், அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலும், அரசின் தலையீடும் மருந்துகளின் விலையில் அவசியமாகிறது. 2015-க்குப் பிறகு புதுப்பிக்கப்பட்டிருக்கும் பட்டியலில் 354 மருந்துகள் உள்ளன.
- இவற்றின் விலை நிர்ணய அதிகாரம் தேசிய விலை நிர்ணய ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்பது மிகப்பெரிய ஆறுதல்.
- அதே நேரத்தில், புற்றுநோய் சிகிச்சைக்கான அதிக விலையும், வீரியமும் கொண்ட பல மருந்துகள் இப்போதும்கூட விலைகட்டுப்பாட்டுப் பட்டியலில் இல்லை.
- புற்றுநோய் சிகிச்சையில் புதிய மருந்துகளும், சிகிச்சை முறைகளும் அனுதினமும் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு ஏற்றாற்போல, மருந்து விலை கட்டுப்பாட்டுக்கான வழிமுறைகள் பட்டியலிலும் இல்லை; ஆணையத்தின் அதிகார வரம்பிலும் இல்லை.
- உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டிருக்கும் அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலில் அதிக அளவில் புற்று நோய்க்கான மருந்துகளை இணைக்க நாம் ஏன் தயங்குகிறோம், பின்தங்குகிறோம் என்கிற கேள்வி எழுகிறது.
- விலை உயர்ந்த புற்றுநோய் மருந்துகள் பலவும் இப்போதும்கூட சாமானியர்களுக்கு எட்டாக்கனியாக இருக்கும் நிலையில், அவற்றைப் பட்டியலில் சேர்க்காததால் நல்ல வாய்ப்பை ஆணையம் இழந்திருக்கிறது.

## தேசிய சரக்கு கையாளுகை கொள்கை

- போக்குவரத்துத்துறை சந்தித்து வரும் சவால்களுக்குத் தீர்வு காணும் வகையில் தேசிய சரக்கு கையாளுகை கொள்கை அமைந்துள்ளது.
- இக்கொள்கையானது சரக்குப் போக்குவரத்துக்கான செலவை 13-14 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மதிப்பில் இருந்து ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டு வரும்.
- நாட்டின் தொலைதூரப் பகுதிகளுக்கு சரக்குகளை எடுத்துச் செல்வதற்கான சிக்கல்களை இக்கொள்கை போக்கும்.
- சரக்குகளை எடுத்துச் செல்வதற்கு ஆகும் நேரத்தையும் செலவையும் குறைக்க தொழில்நிறுவனங்களுக்கு இக்கொள்கை உதவும்.
- போக்குவரத்துத்துறை எதிர்கொண்டுவரும் சவால்களுக்குத் தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல், பிஎம்துரிதசக்தி திட்டத்தையும் இக்கொள்கை ஊக்குவிக்கும்.

## கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

- இந்திய பொருள்களை சர்வதேச சந்தைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு அடிப்படைக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டியது அவசியம்.
- போக்குவரத்துக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதிலும் நவீனப்படுத்துவதிலும் தேசிய சரக்கு கையாளுகை கொள்கை முக்கியப் பங்கு வகிக்கும்.
- அத்தகைய நவீன வசதிகள் காரணமாக, இந்திய பொருள்கள் சர்வதேச சந்தைகளை எளிதில் சென்றடையும்.

### திறன் மேம்பாடு

- வணிகத் துறையிலும், இ-வே ரசீதுகளைச் செலுத்தும் இடங்களிலும் தொலைத்தொடர்பு ஆய்வுமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

### சரக்கு கையாளும் திறன் அதிகரிப்பு

- நாட்டில் உள்ள துறைமுகங்கள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக சரக்கு கையாளும் திறன் அதிகரித்துள்ளது.
- துறைமுக மேம்பாடு காரணமாக சரக்குக் கப்பல்களைக் கையாளும் சராசரி காலம் 44 மணி நேரத்தில் இருந்து 26 மணி நேரமாகக் குறைந்துள்ளது.

- சாகர்மாலா திட்டமான முக்கியத் துறைமுகங்களை ஒருங்கிணைப்பதோடு மட்டுமல்லாமல், அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தவும் வாய்ப்பளித்துள்ளது.
- அதனால் வர்த்தக வழித்தடங்களுடனான தொடர்பு வலுவடைந்து போக்குவரத்து வசதிகளுடன் மேம்பட்டுள்ளன.

## இந்தியாவில் மீண்டும் சிவிங்கிப் புலிகள்

- நமீபியாவில் இருந்து விமானம் மூலம் கொண்டுவரப்படும் 5 பெண் சிவிங்கிப் புலிகள், மற்றும் 3 ஆண் சிவிங்கிப் புலிகள், பிரதமர் மோடியால் மத்திய பிரதேச மாநிலம், குனோ தேசிய பூங்காவில் விடப்பட உள்ளன.
- உலக மக்கள் தொகையில் 17 சதவீதத்தைக் கொண்ட வளர்ந்த நாடுகள், உலகளாவிய கார்பன் வெளியீட்டில் 60 சதவீதம் அளவுக்கு காரணமாக உள்ளன.
- உலக மக்கள் தொகையில் இதே 17 சதவீதத்தைக் கொண்டுள்ள இந்தியா, வெறும் 4 சதவீதம் அளவுக்கே கார்பன் வெளியீட்டுக்கு பொறுப்பாகிறது. நமது நிலையான வாழ்க்கை முறையே இதற்கு காரணம்.
- உலகிலேயே வேகமாக ஓடக்கூடிய உயிரினமான சிவிங்கிப்புலிகள், ஒரு காலத்தில் இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன.
- ஆனால், நாட்டின் பல்வேறு பகுதிகளை ஆண்ட அரசர்கள், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் உள்ளிட்டோர் பொழுதுபோக்குக்காக அவற்றை பெருமளவில் வேட்டையாடியதால், சிவிங்கிப் புலிகளின் இனமே இந்தியாவில் அழிந்து போனது.
- நாட்டில் கடைசியாகக் காணப்பட்ட சிவிங்கபி புலி, இன்றைய சத்தீஸ்கர் பகுதியில் கடந்த 1947-இல் கண்டறியப்பட்டது. இந்தியாவில் இந்த இனம் முற்றிலும் அழிந்து விட்டதாக கடந்த 1952-இல் அறிவிக்கப்பட்டது.

### சிவிங்கிப்புலி – சிறுத்தை : வித்தியாசங்கள்

- சிறுத்தை மற்றும் சிவிங்கிப் புலி ஆகிய இரண்டும், மாமிச உண்ணிகள்தான். பார்க்க ஒரே மாதிரி இருந்தாலும், சில வேறுபாடுகளை கொண்டவை.
- சிவிங்கிப் புலி, சிறுத்தை இரண்டுமே பூனைக் குடும்பத்தை சேர்ந்த பெரிய விலங்குகள்.
- இரு விலங்குகளின் உடலிலும் கருப்பு புள்ளிகள் உள்ளன. ஆனால், சிவிங்கிப் புலியின் உடலில் உள்ள கருப்பு புள்ளிகள் முழுவட்ட வடிவில் இருக்கும். சிறுத்தைக்கு கருப்பு நிற புள்ளிகள் உடைந்து விரிசல் கொண்டதாக இருக்கும்.
- சிவிங்கி புலியின் இரு கண்களை ஒட்டி கண்ணீர் கோடுகள் இருக்கும். வட்ட முகம் கொண்டது. சிறுத்தை படர்ந்த முகம் கொண்டவை.
- சிவிங்கி புலியின் உடல் மெலிந்ததாகவும், வயிற்று பகுதி குறுகியும், நீண்ட கால்களும் கொண்டவை. மூக்கு துவாரங்கள் அதிகப்படியான ஆக்சிஜனை உள் இழுக்கும் திறன் கொண்டது. பெரிதான இதயம் வேகமாக ரத்தத்தையும், ஆக்சிஜனையும் விரைவாக உடல் முழுவதும் கொண்டு செல்லும். இதனால் அதிவேகமாக ஓடும். சிறுத்தை குட்டையான கால்களை கொண்டவை. சிவிங்கி புலியை விட குறைவான வேகத்தில் ஓடும்.

### 100 கி.மீ வேகம் ஆனா, பாவம்

- விலங்குகளிலேயே அதிவேகமாக ஓடக்கூடியது சிவிங்கிப் புலி. வெறும் 3 நொடியில் மணிக்கு 100 கி.மீ வேகத்தை தாண்டி விடும். தற்போதுள்ள விலையுயர்ந்த கார்கள் கூட இவ்வளவு குறைவான நேரத்தில் இந்த வேகத்தை எட்ட முடியாது.
- ஆனால், சிவிங்கி புலியின் இந்த 100 கிமீ வேகம் என்பது வெறும் 30 நொடிகள் வரை மட்டுமே நீடிக்கும். அதற்குள் அது தனது இரையை வேட்டையாடி விடும்.
- இல்லாவிட்டால், விட்டுவிடும். இரையை பிடித்ததும், சற்று ஓய்வெடுத்த பிறகுதான் அதை சாப்பிடும். அதற்குள் மற்ற விலங்குகள் வந்து சிவிங்கி புலியை விரட்டிவிட்டு இரையை திருடிக் கொள்ளும்.
- கழுகுகளுக்கு கூட சிவிங்கி புலிகள் பயப்படும். எனவே, இரையை மரத்தின் மீது கொண்டு சென்று சாப்பிடும் பழக்கம் கொண்டவை.

### சிவிங்கிப் புலியின் மறுவரவு

- வன விலங்குகள் இருப்பதால்தான் காடுகள் இன்னும் பாதுகாக்கப்படுகின்றன. காடுகள் இருப்பதால்தான் பல்லுயிர்ப் பெருக்கம் நடைபெறுகிறது. 'கடைசி மரமும் வெட்டி உண்டு, கடைசி நதியும் விஷமேறி, கடைசி மீனும் பிடிபட அப்போதுதான் உறைக்கும் இனி பணத்தைச் சாப்பிட முடியாது' என்பது வெறும் வார்த்தைகள் அல்ல வாழ்வியல் எதார்த்தம்.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது பருவ சமநிலைக்கும், பல்லுயிர்ப் பெருக்கத்துக்கும், புவி வெப்பமயமாதலைத் தடுப்பதற்கும் அத்தியாவசியம் என்பதை நாம் உணராமல் இருக்கிறோம்.
- வளர்ச்சிப் பணிகள் என்கிற பெயரில் காடுகள் அழிக்கப்படுவதாலும், நதிநீர்த் தடங்கள் ஆக்கிரமிக்கப்படுவதாலும் ஏற்படும் பாதிப்புகளை சமீப காலமாக நாம் கண்கூடாகக் காண்கிறோம்.
- ஆப்பிரிக்காவிலுள்ள நாம்பியாவிலிருந்து புலியின் தலை சின்னத்துடன் கூடிய சிறப்பு சரக்கு போயிங் விமானத்தில் அவை கொண்டுவரப்பட்டன.

### மொகலாயர் காரணம் / வனவிலங்குகள்

- மொகலாயர்களால் 'யூஸ்' என்று அழைக்கப்பட்ட சிவிங்கிப் புலிகள், அரண்மனைகளில் வளர்க்கப்பட்டன. வேட்டையாடப் போகும்போது மன்னர்களால் அவை வேட்டை நாய்கள் போல அழைத்துச் செல்லப்பட்டதாக குறிப்புகள் காணப்படுகின்றன.
- சத்தீஸ்கர் மாநிலத்தில் இருந்த கோரியா சமஸ்தானத்தின் ஜமீன்தாரான ராமானுஜ பிரதாப் சிங் தேவ், கடைசியாக இருந்த மூன்று சிவிங்கிப் புலிகளை 1947-இல் வேட்டையாடிக் கொன்றார்.
- 1952-இல் சிவிங்கிப் புலிகளை இனம் முற்றிலுமாக அழிந்துவிட்டது என்று மத்திய அரசு அறிவித்தது.

### பிரிட்டிஷ் காரணம்

- இந்தியாவில் சிவிங்கிப் புலிகள் அழிவதற்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் முக்கியக் காரணமாக இருந்தனர். காடுகளை அழித்து விவசாய நிலங்களாக மாற்றுவதற்கு பிரிட்டிஷார் திட்டமிட்டனர்.
- பெரும்பாலும் புல்வெளிகள் நிறைந்த வனப்பகுதிகள்தான் சிவிங்கிப் புலிகள் வாழ்விடங்கள். புள்ளி மான்கள், ஆன்டிலோப் அல்லது பிளாக் பக் இன மான்கள் உள்ளிட்டவைதான் அவற்றின் இரை. சிவிங்கிப்புலிகளை வேட்டையாடிக் கொல்பவர்களுக்கு பிரிட்டிஷ் அரசு சன்மான் வழங்கியது.
- அழிந்த இனமான சிவிங்கிப் புலிகளின் மறுவரவு என்று இப்போதைய 8 சிவிங்கிப் புலிகளை குறிப்பிட முடியாது. இவை இந்தியாவிலிருந்து அழிந்து போன ஆசிய சிவிங்கிப் புலிகளின் இனத்தைச் சேர்ந்தவை அல்ல.
- மத்தியப்பிரதேசம் குனோ வனவிலங்கு சரணாலயத்துக்கு கொண்டு வரப்பட்டிருப்பவை ஆப்பிரிக்க சிவிங்கிப் புலிகள்
- இப்போதைய புள்ளிவிவரப்படி, உலகத்தில் மொத்தம் 7,000 சிவிங்கிப் புலிகள்தான் காணப்படுகின்றன. அவற்றில் சுமார் 20 மட்டுமே ஆசிய சிவிங்கிப் புலிகள். அவை ஈரானில் மட்டும்தான் இருக்கின்றன. அவற்றிலிருந்து ஓரிரு சிவிங்கிப் புலியைக்கூட தரமறுத்துவிட்டது ஈரான்.

### குனோ தேசிய பூங்கா உலகளவில்

- இந்தியாவின் புல்வெளிகளையும், புதர் பகுதிகளையும் ஆப்பிரிக்க சிவிங்கிப் புலிகள் எப்படி ஏற்றுக் கொள்ளப் போகின்றன என்பதை வல்லுநர்கள் கூர்ந்து கவனிக்கின்றனர்.
- அவை இன்னும் குனோ தேசியப் பூங்காவில் நேரடியாக விடப்படவில்லை, 1.5 சதுர கி.மீ அளவுள்ள தடுப்புகளில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.
- ஒரு மாதத்துக்குப் பிறகு, 12 சதுர கி.மீ சுற்றளவுள்ள பகுதிகளுக்கு மாற்றப்படும். நான்கு மாதக் கண்காணிப்புக்குப் பிறகுதான் முழுமையாக சரணாலயத்தில் சுதந்திரமாக சுற்றித் திரிவதற்கு அவற்றை அனுமதிக்க இருக்கிறார்கள்.

### சிவிங்கிகள் வருகை

- இந்தியாவில் பெரும்பூனைக் குடும்பத்தின் அற்றுப்போன முதல் உயிரினம் இது. 1948-இல் மத்திய இந்தியாவின் சமஸ்தான ராஜா ராமானுஜ் பிரதாப் சிங் வேட்டையாடிய மூன்று ஆசியச் சிவிங்கிகளோடு இவற்றின் இந்திய அத்தியாயம் முடிவுக்கு வந்துவிட்டது.
- 1952 இல் மத்திய அரசால் முற்றிலும் அற்றுப்போன (Extincted) உயிரினமாக அறிவிக்கப்பட்டும் விட்டது.

### ஏன் குனோ தேசியப் பூங்கா?

- சிவிங்கிகளுக்கான விருப்ப இரைகள் இங்கே அதிகம்.
- ஷியோபூர் – ஷிவ்புரி திறந்தவெளிக் காடுகள் 21 சிவிங்கிகளுக்குப் போதுமானதாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஏற்கெனவே இந்நிலப்பரப்பில் நான்கு பெரும்பூனைக் குடும்பங்களும் (புலி, சிங்கம், சிறுத்தை, சிவிங்கி) இங்கே வாழ்ந்துள்ளன.

- 748 ச.கி.மீ. பரப்புடைய இந்தக் காட்டுப் பகுதியில் 2003-க்கு முன்பே 24 கிராமங்களில் வாழ்ந்த 1,500 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு விட்டன. அவர்களில் 90 சதவீதம் பேர் சஹரியா பழங்குடிகள்.
- கிர் காட்டுக்குப் பிறகு சிங்கங்களை இப்பகுதியில் அறிமுகப்படுத்துவதற்காக அவர்கள் வெளியேற்றப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு மாற்று இடம் வழங்கப்படவில்லை.
- இயல்பிலேயே மென்மையானதும் பிற விலங்குகள்போல் ஆக்ரோஷமாக சண்டையிடத் தெரியாதவை சிவிங்கிகள்.
- அத்தகைய சூழலில் தம்மைத் தற்காத்துக்கொள்ள அவற்றின் வேகம்தான் கைகொடுக்கின்றன.

## ஏற்றுமதி - இறக்குமதியை ரூபாயிலேயே மேற்கொள்ளலாம்

### வர்த்தகக் கொள்கையில் மத்திய அரசு திருத்தம்

- தற்போது இந்தியா அதன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியை பெரும்பான்மையாக டாலரில் மேற்கொண்டு வருகிறது. இதனால், இறக்குமதி அதிகமாகும் சமயத்தில் இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு குறைகிறது.
- மேலும், டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பும் வீழ்ச்சி அடைகிறது. இது தவிர, அமெரிக்காவால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ரஷ்யா, ஈரான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா வர்த்தகத்தில் ஈடுபடுவதும் சிக்கல் நிறைந்ததாக உள்ளது.
- இந்தச் சூழலை மாற்றி அமைக்கும் முயற்சியில் ரிசர்வ் வங்கி இறங்கியது. இந்திய வங்கிகள் வோஸ்ட்ரோ கணக்குகள் திறப்பதன் மூலம் வெளிநாடுகளுடன் ரூபாயிலேயே வர்த்தகம் செய்ய முடியும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்தது.
- வோஸ்ட்ரோ கணக்கு மூலம் இந்திய இறக்குமதியாளர்கள், அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை டாலருக்குப் பதிலாக ரூபாயிலேயே செலுத்த முடியும். அதேபோல் ஏற்றுமதியாளர்கள் அவர்களுக்குரிய தொகையை எதிர்நாட்டிலிருந்து ரூபாயிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

### வோஸ்ட்ரோ கணக்குகள்

- இந்தியா – ரஷ்யாவுடனான வர்த்தகத்தை ரூபாயில் மேற்கொள்ள விரும்பினால், இந்திய வங்கிகள் ரஷ்யாவில் உள்ள வங்கிகளில் சிறப்புக் கணக்கைத் திறக்க வேண்டும்.
- அந்தக் கணக்கில் ரஷ்ய நாணயமான ரூபிளில் ஒரு குறிப்பிட்டத் தொகையை வைப்புத் தொகையாக இந்திய வங்கிகள் செலுத்த வேண்டும்.
- அதேபோல், ரஷ்ய வங்கிகள் இந்திய வங்கிகளில் சிறப்புக் கணக்கைத் திறந்து ரூபாயில் ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பாகக் கொள்ளும். இந்தச் சிறப்புக் கணக்குகள் வோஸ்ட்ரோ கணக்குகள் என்று அழைக்கப்படுகின்றன.
- இந்திய இறக்குமதியாளர் ரஷ்யாவிடமிருந்து இறக்குமதி செய்யும்போது அதற்கான தொகையை அவர் தன்னுடைய இந்திய வங்கியில் ரூபாயில் செலுத்துவார். இந்தத் தகவல் சம்பந்தப்பட்ட ரஷ்ய வங்கிக்குச் செல்லும்.
- அதையடுத்து, அந்த ரஷ்ய வங்கியில் இந்திய வங்கி வரவு வைத்துள்ள ரூபிள் கணக்கிலிருந்து ரஷ்ய ஏற்றுமதியாளருக்கான தொகை வழங்கப்பட்டுவிடும்.
- இந்திய ஏற்றுமதியாளர் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யும்போது ரஷ்யாவில் உள்ள இறக்குமதியாளர் அதற்கான தொகையை ரஷ்ய வங்கியில் செலுத்திவிடுவார்.
- அதையடுத்து இந்திய வங்கியில் ரஷ்ய வங்கிக் கொண்டிருக்கும் ரூபாய் வைப்பிலிருந்து அந்த ஏற்றுமதிக்கான தொகை உரியவருக்குக் கொடுக்கப்பட்டுவிடும்.

## மாநில பல்கலைக் கழகங்களின் தன்னாட்சி

- மாநில பல்கலைக் கழகங்களின் வேந்தராக ஆளுநரின் அதிகாரத்தைக் குறைக்கும் மசோதா கேரள சட்டப்பேரவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.
- பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்க முடியாது என்பதை தெளிவாக தெரிவித்துவிட்டேன்.
- அவ்வாறு அனுமதிப்பது பல்கலைக்கழகம் அரசின் தலையீட்டுக்கு ஆளாகும் நிலை உருவாகிவிடும். மேலும் இந்த விவகாரம் தொடர்பாக எனக்கு முதல்வர் எழுதிய கடிதத்துக்கு, 'பல்கலைக்கழக நியமனங்களில் எந்தவித தலையீடும் இருக்காது' என்று உறுதியளித்திருந்தேன்.

## நிலவு வெளிச்சம்

- ஒரு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள், பணிநேரம் முடிந்ததும் அந்த நிறுவனத்துக்குத் தெரியாமலேயே மற்றொரு நிறுவனத்தில் பணியாற்றுவதுதான் 'மூன்லைட்டிங்' என்றழைக்கப்படுகிறது.
- ஏற்கனவே கூடுதல் பகுதிநேர வேலை என்று பரவலாக அறியப்பட்டாலும், நிறுவனத்துக்குத் தெரியாமல் இன்னொரு இடத்தில் வேலை பார்ப்பது அண்மைக் காலமாகத்தான் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.
- அதனால்தான், சூரிய ஒளிக்குப் பிறகு நிலவு வெளிச்சத்தைப் பெறுவதைக் குறிப்பதுபோல் 'மூன்லைட்டிங்' என்ற பெயரில் அது பரவலாக குறிக்கப்படுகிறது.
- பணியாளர்களின் வேலைத்திறன், சேவை உற்பத்தி ஆகியவை மூன்லைட்டிங்கால் மிகவும் குறைந்து போகும்.

## தமிழுக்குத் தாய்மொழி எது?

- எல்லா மொழிகளுக்கும் தாய் சமஸ்கிருதம்தான். ஆகவே, அம்மொழியைத் தேசிய மொழியாக அறிவிக்குமாறு நாடாளுமன்றத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று தொடுக்கப்பட்ட வழக்கை உச்சநீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு சமீபத்தில் தள்ளுபடி செய்தது.
- 1757 பிளாசிப் போருக்குப் பின் வங்காளத்தில் வரி வசூலிக்கும் உரிமையைப் (திவானி) பெற்ற ஆங்கிலேயர்கள், இந்தியாவை ஆட்சி செய்யத் தலைப்பட்டனர்.
- மக்களை ஆள வேண்டுமெனில் அவர்களின் மொழிகளின் மீது தமக்கு ஆளுகை வேண்டும் என்பதை ஐரோப்பியர்கள் உணர்ந்திருந்தனர்.
- மொழி பெயர்க்கும் துபாஷிகளை முழுமையாக நம்ப முடியாது என்கிற அனுபவத்தில், இந்திய மொழிகளைத் தாமே கற்க முறையான ஏற்பாடுகளைச் செய்தனர்.
- இந்திய மொழிகளைப் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு கற்றுக்கொடுக்கும் நோக்கில், பொ.ஆ. (கி.பி.) 1800 இல் வில்லியம் கோட்டைக் கல்லூரியைக் கொல்கத்தாவில் தொடங்கினர். இங்கு அராபியம், பாரசீகம், சமஸ்கிருதம், இந்தி, உருது, வங்காளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி மொழிகள் பயிற்றுவிக்கப்பட்டன.
- தென்னிந்திய மொழிகளை ஆங்கில அதிகாரிகளுக்குக் கற்பிக்கச் சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி 1812இல் தொடங்கப்பட்டது.
- 1806இல் 'ஹெயிலிபரி கல்லூரி'யை இங்கிலாந்தில் தொடங்கினர். இந்தியாவுக்குச் செல்லும் அதிகாரிகளுக்கு இந்திய மொழிகளும் பண்பாட்டுக் கூறுகளும் கற்பிக்கப்படலாயிற்று.
- சமஸ்கிருதத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இங்கு பயின்றவர்கள் சமஸ்கிருதம் இந்திய மொழிகளுக்குத் தாய்மொழி என்கிற உணர்வில் இந்தியாவுக்கு அதிகாரிகளாக வந்து சேர்ந்தனர்.
- இந்தத் தாக்கம் இன்றுவரை தொடர்வதன் வெளிப்பாடுதான் ஐ.ஏ.எஸ்., அதிகாரி வஞ்சாரா தொடுத்த வழக்கு.

### மொழி முகமூடி

- தென்னிந்திய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவாகவில்லை; அவை தனித்த இயல்புடையன என்று கால்டுவெல்லுக்கு முன்பே கூறிய அறிஞர் எல்லீஸ் தலைமையிலான குழு சென்னைக் கல்விச் சங்கத்தைச் சார்ந்தது என்பதை வரலாறு காட்டுகிறது.
- எல்லீஸ் முன்வைத்த கருத்தை மேலும் வளர்த்தெடுத்து, சமஸ்கிருதம் தென்னிந்திய மொழிகளை மெருகூட்டப் பயன்பட்டிருக்கலாம்.
- ஆனால், இவற்றின் இருப்பு தேவையில்லாதது என்பதையும் பிற்காலத்தில் சமஸ்கிருதக் கலப்பு நிகழ்ந்திருந்தாலும், அது இவற்றின் வேர்ச்சொற்களோடு தொடர்பு கொள்ளவில்லை என்பதை ஒப்பிலக்கணத்தின் அடிப்படையில் வலுவாக நிறுவினார் கால்டுவெல்.
- இந்திய ஆரிய மொழிக் குடும்பத்திலிருந்து எந்த அளவு திராவிட மொழிகள் விலகி நிற்கின்றன என்பதை வெளிப்படுத்திய கால்டுவெல், அதே அளவு சித்தியன் (Scythian)அல்லது துரானியன் (Turanian) மொழிக் குடும்பங்களோடு திராவிட மொழிகளுக்கு உள்ள உறவைச் சான்றுகளோடு கால்டுவெல் விளக்குகிறார். இக்கருத்து இன்னும் விரிவாக ஆய்வு செய்யப்படாமல் நிற்கிறது.

## நேரடி வரி வசூல்

- நாட்டின் நிகர நேரடி வரி வசூல் ரூ.7,00,669 கோடியை எட்டியுள்ளது.
- 2021-ம் ஆண்டு செப்டம்பர் 17-ம் தேதி வரையில் வசூலான ரூ.5,68,147 கோடியுடன் ஒப்பிடும்போது 23.33 சதவீதம் அதிகமாகும்.
- மொத்த வரி வசூலில் கார்ப்பரேட் வரிகளின் பங்களிப்பு ஏறக்குறைய பாதி அளவுக்கு அதாவது ரூ.3,68,484 கோடியாக இருந்தது.
- தனிநபர் வருமான வரி மற்றும் பங்கு பரிவர்த்தனை வரி வசூல் ரூ.3.3 லட்சம் கோடியாக இருந்தது.
- ஒட்டுமொத்த வரி வசூலில் டிடிஎஸ் எனப்படும் மூல வரி பிடித்தம் ரூ.4.34 லட்சம் கோடியாகவும், சுயமதிப்பீட்டு வரியின் பங்களிப்பு ரூ.77,164 கோடியாகவும் இருந்தது.

## தலைமை வழக்கறிஞர்களுக்கும் வயது வரம்பு

- நாட்டின் மிக உயர்ந்த சட்ட அலுவலர் பொறுப்பான அட்டர்னி ஜெனரல் பணிக்கு ஏற்கெனவே அந்தப் பதவியில் இருந்தவரை மறுமுறையும் நியமிக்கும் வழக்கம் சரியானதா என்ற விவாதம் தற்போது எழுந்துள்ளது.
- அட்டர்னி ஜெனரலாகப் பதவி வகிக்கும் கே.கே.வேணுகோபால், 90 வயதைக் கடந்தவர் என்பது, உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்கள் நீண்ட காலமாகச் செலுத்திவரும் அபரிமிதமான செல்வாக்கின் அடையாளமாகவும் பார்க்கப்படுகிறது.
- அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப்படும் வழக்கறிஞர் ஒருவர். உச்சநீதிமன்றத்தின் நீதிபதி ஆவதற்கான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று இந்திய அரசமைப்பு தெளிவாக வரையறுத்துள்ளது.
- அதே வேளையில், அட்டர்னி ஜெனரலின் பதவிக்காலம் குடியரசுத் தலைவரது விருப்பத்தின்படியே தீர்மானிக்கப்படுகிறது. அதாவது, மத்திய அரசு விரும்பும் வரைதான் அட்டர்னி ஜெனரல் தனது பதவியில் நீடிக்க முடியும்.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசு, நீதிமன்றத்தில் தனது தரப்பை எடுத்துவைக்க மூத்த வழக்கறிஞர் ஒருவரைத் தம் விருப்பப்படி தலைமை வழக்கறிஞராக நியமித்துக் கொள்வதை இந்திய அரசமைப்பு ஏற்றுக்கொள்கிறது.
- ஆனால், உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு ஓய்வுபெறும் வயதைத் தீர்மானித்த அரசமைப்பு, அதே தகுதிகளோடு அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப்படுபவர்களுக்கு ஓய்வுபெறும் வயதையோ பதவிக்காலத்தையோ தீர்மானிக்கவில்லை.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு இந்திய அரசமைப்பு அளித்துள்ள முக்கியத்துவம் என்று இதை நேர்மறையாகவும் கொள்ளலாம். ஆனால், தகுதியான பல மூத்த வழக்கறிஞர்கள் பணியாற்றும் உச்சநீதிமன்றத்தில், குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் அட்டர்னி ஜெனரலாக நீண்ட காலம் பணியாற்ற வாய்ப்பளிப்பது சரியான அணுகுமுறையாக இருக்க முடியாது.

## ஹைட்ரஜன் ரயில்

- ரயில் தயாரிப்பில் அடுத்த பெரிய நிகழ்வாக ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் வரும் சுதந்திர தின நாளான 2023 ஆக.15-ல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- உலகின் முதல் ஹைட்ரஜன் ரயில் ஜெர்மனியில் கடந்த மாதத்தில்தான் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்தியாவில் ஹைட்ரஜனை எரிபொருளாக கொண்டு இயக்கப்படும் ரயிலை ஓராண்டு காலத்துக்குள் அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- சென்னை ஐசிஎஃப்பில் தயாரிக்கப்பட்ட வந்தே பாரத் ரயில் உலகின் தலைசிறந்த 5 ரயில்களுள் ஒன்றாக சமீபத்தில் கண்டறியப்பட்டது.
- மணிக்கு 180 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடிய இந்த ரயில் சிறிய குலுங்கல்கூட இல்லாமல் மிக சொகுசாக பயணிக்க ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டது.
- ஜப்பானின் புல்லட் ரயில் 100 கி.மீ. வேகத்தை 55 நொடிகளில் எட்டும் நிலையில், வந்தே பாரத் வெறும் 52 நொடிகளில் அந்த வேகத்தை எட்டிவிடும்.

## என் தோழி திட்டம்

- தெற்கு ரயில்வேயில் இயக்கப்படும் விரைவு ரயில்களில் தனியாக பயணிக்கும் பெண்களின் பாதுகாப்புக்காக, ‘மேரி சஹேலி’ எனப்படும் என் தோழி அமைப்பு 2020-ல் தொடங்கப்பட்டது.

- சென்னை, திருச்சி, சேலம், மதுரை, பாலக்காடு, திருவனந்தபுரம் ஆகிய 6 ரயில்வே கோட்டங்களில் ஆர்.பி.எஃப். பெண் அதிகாரிகள், காவலர்கள் அடங்கிய 17 குழுக்கள் உருவாக்கப்பட்டன.
- ரயில் புறப்படுவதற்கு முன்பாக, தனியாக பயணிக்கும் பெண்களின் தகவலைச் சேகரித்து, அவர்களிடம் நேரடியாக சென்று அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? எங்கு செல்கிறார்கள்? அவர்களின் முகவரி உள்ளிட்ட தகவல், பின்னர் பயணத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் ரயில்வே பாதுகாப்புப்படையின் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ள கட்டணமில்லா தொலைபேசி எண்ணை (139) வழங்குவார்கள்.

## அமெரிக்க-தலிபான் பரஸ்பரம் கைதிகள் விடுவிப்பு

- தலிபான் அமைப்பைச் சேர்ந்த நபரை சிறையில் இருந்து அமெரிக்கா விடுவித்த நிலையில், அமெரிக்க கைதி ஒருவரை தலிபான் அமைப்பினர் விடுவித்தனர்.
- இந்தக் கைதிகள் பரிமாற்றம் சிறப்புமிக்கது. அமெரிக்கா-தலிபான்கள் இடையேயான உறவில் புதிய சகாப்தம்தொடங்கியுள்ளது.
- இரு நாடுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை நடைமுறைகளுக்கும் இது வழிவகுக்கும்.
- அனைத்துப் பிரச்சனைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காண முடியும் என்பதை இந்த நடவடிக்கை வெளிக்காட்டியுள்ளது.

## பாஜகவில் இணைந்தார் அமரீந்தர் சிங்

- பாட்டியாலா அரசக் குடும்பத்தைச் சேர்ந்தவரும், முன்னாள் ராணுவ கேப்டனுமான அமரீந்தர் சிங், மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியால் காங்கிரஸுக்கு அழைத்துவரப்பட்டவர். அக்கட்சி சார்பில் இருமுறை பஞ்சாப் முதல்வராகப் பதவி வகித்துள்ளார்.
- காங்கிரஸ் தலைமையுடன் ஏற்பட்ட பிரச்சனையால், முதல்வர் பதவியில் இருந்து விலகியதுடன், கட்சியில் இருந்தும் அவர் வெளியேறினார்.
- இதையடுத்து, பஞ்சாப் லோக் காங்கிரஸ் எனும் புதிய கட்சியை தொடங்கிய அமரீந்தர், இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற பஞ்சாப் பேரவைத் தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டார்.
- ஆனால், அவரது கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியுற்றனர்.
- இந்தச் சூழலில் பாஜகவில் இணைந்துள்ள அமரீந்தர், தேச பாதுகாப்புக்கான பாஜகவின் உறுதிப்பாடுதான், அக்கட்சியில் சேர முக்கிய காரணம் என்று குறிப்பிட்டார்.

## உலகத் தூய்மை எரிசக்தி செயலமைப்பு

- மத்திய அமைச்சரவை, பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் (யுஎன்எஃப்சிசிசி) தெரிவிக்கப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புக்கு ஒப்புதல் அளித்தது.
- தேசிய ஹைட்ரஜன் இயக்கத்தை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார். இந்த இயக்கம், அரசின் பருவநிலை இலக்குகளை எட்டுதல், இந்தியாவை பசுமை ஹைட்ரஜன் குவிமையமாக மாற்றுதல் ஆயவற்றுக்கு உதவி செய்வதை நோக்கமாகக் கொண்டது.
- இது 2030-ஆம் ஆண்டுக்குள் 5 மில்லியன் டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி என்ற இலக்கை எட்ட உதவும்.
- கிளாஸ்கோவில் கடந்த 2021 நவம்பரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு நாடுகளின் மாநாட்டில் 26-ஆவது அமர்வில், ஐந்து அமிர்த கூறுகளை பஞ்சாமிர்தம்) உலகிற்கு வழங்கி பருவநிலை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த இந்தியா கேட்டுக் கொண்டது.
- இந்தியாவை ஜீரோ கரிமத்தை நோக்கி நகர்த்துவதற்கு எந்த ஒரு அமைச்சகமும் பொறுப்பேற்காது இருந்த நிலையில், சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம், மரபு சாரா எரிசக்தி அமைச்சகம், கனரக தொழில்கள் அமைச்சகம் உள்ளிட்டவை கலப்பின, மின் வாகனங்கள் உற்பத்தி உள்ளிட்ட வேகமான தத்தெடுப்பை தற்போது செயல்படுத்துகிறது.

## லோக்பால்

- லோக்பால் மற்றும் லோக் ஆயுக்த சட்டம் 2013-இன் படி, கடந்த 2019-ஆம் ஆண்டு லோக்பால் அமைப்பு செயல்பாட்டுக்கு வந்ததுடன், அதன் தலைவரும் பிற உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

- ஊழல் புகார்களை விசாரணை செய்யும் பிரிவு மற்றும் வழக்கு நடத்தும் பிரிவு அமைக்கப்படுவது குறித்தான பதிலில், இவ்விரு பிரிவுகளின் தலைவர் பதவியிடங்கள் காலியாக உள்ளன.
- தற்போது, விசாரணை மற்றும் வழக்கு நடத்தும் பிரிவுகள் ஏற்படுத்தப்படவில்லை. இத்தகைய பணிகளை மத்திய புலனாய்வு முகமை (சிபிஐ) மற்றும் மத்திய ஊழல் கண்காணிப்புக் குழு (சிவிசி) மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- லோக்பால் அமைப்பானது தலைவர், நீதித்துறையைச் சார்ந்த 4 உறுப்பினர்கள் மற்றும் நீதித்துறையைச் சாராத 4 உறுப்பினர்களைக் கொண்டது.
- லோக்பாலின் முதல் தலைவர் நீதிபதி பினாகி சந்திரகோஷ், கடந்த மே 27-ஆம் தேதி ஓய்வு பெற்றதையடுத்து நிரந்தர தலைவர் இன்றி லோக்பால் அமைப்பு செயல்பட்டு வருகிறது.
- மேலும், நீதித்துறையைச் சார்ந்த 2 உறுப்பினர் பதவியிடங்களும் 2 ஆண்டுகளுக்கு மேலாக காலியாக உள்ளன.

## அரசியல் கட்சிகள் ரொக்க நன்கொடைக்கு வரம்பு

- தேர்தல் நிதியில் கருப்புப் பணத்தின் புழக்கத்தை ஒழிக்க அடையாளம் தெரியாத நபர்களின் நன்கொடைகளுக்கான வரம்பை ரூ.20,000-இல் இருந்து ரூ.2,000-ஆக குறைக்கவும், ரொக்க நன்கொடைகளுக்கான அதிகபட்ச வரம்பை ரூ.20 கோடியாக நிர்ணயிக்கவும் மத்திய சட்ட அமைச்சகத்துக்கு தேர்தல் ஆணையம் கடிதம் எழுதியுள்ளது.

### தனி வங்கிக் கணக்கு

- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மேற்கொள்ளும் செலவினததில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவர, ரூ.2,000-க்கும் அதிகமாக மேற்கொள்ளப்படும் அனைத்துச் செலவுகளுக்கும் எண்ம பரிவர்த்தனைகள், பணம் பெறுபவரின் பெயரில் காசோலை பரிவர்த்தனைகள் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றும் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### வெளிநாட்டு நன்கொடைகள்

- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, அரசியல் கட்சிகளின் நிதியில் வெளிநாட்டு நன்கொடைகள் ஊடுருவாமல் இருப்பதை உறுதி செய்ய தேர்தல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மரண தண்டனையை குறைக்கலாம்?

- ஒரு வழக்கில் அதிகபட்ச தண்டனையாக மரண தண்டனையை எதிர்கொள்ளும் குற்றவாளியின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு. அது எப்படி, எப்போது விசாரிக்கப்பட வேண்டும் என்பதில் தெளிவு மற்றும் சீரான அணுகுமுறையைப் பெற, இந்த விவகாரத்தை ஒரு பெரிய அமர்வு மூலம் விசாரிப்பது அவசியம் என்று கருதுகிறோம்.
- மரண தண்டனைக்குரிய வழக்குகளில் ஒரு குற்றவாளிக்கு எந்தெந்த சூழ்நிலைகளில் அந்த தண்டனையைக் குறைக்கலாம்.
- அதற்கு எந்த மாதிரியான காரணிகளை கருத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்பது தொடர்பான நெறிமுறைகளை 5 நீதிபதிகள் அமர்வு வகுக்க வேண்டும்.
- மரண தண்டனை என்பது திரும்ப பெற முடியாதது. மேலும் இந்த வழக்கின் குற்றவாளிகளுக்கு அனைத்து வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும்.

### மரண தண்டனை

- குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் ஏன் மரண தண்டனைக்குரியவர் என்பதை விளக்குவதற்கு அரசுத் தரப்புக்குப் போதுமான வாய்ப்பிருக்கும் நிலையில், அவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு தனக்கு மரண தண்டனை ஏன் வழங்கப்படக் கூடாது என்பதற்கான காரணங்களை முன்வைக்க குற்றவாளிக்குப் போதுமான அவகாசம் கிடைப்பதில்லை.
- இந்த விஷயத்தில் குற்றவாளி தரப்பு தம் வாதத்தை முன்வைப்பதற்கான அசலான, அர்த்தம்மிக்க, பயனுள்ள வாய்ப்பு வழங்கப்படுவது குறித்து அரசமைப்பு அமர்வு தெளிவுபடுத்த வேண்டும் என்று தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு கூறியுள்ளது.
- இந்தியாவில் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி அரிதிலும் அரிதான குற்றங்களுக்கு மட்டுமே மரண தண்டனை வழங்கப்படுகிறது.

- அரிதிலும் அரிதான குற்றம் எது என்பது குற்றத்தின் தன்மையை மட்டும் வைத்து முடிவெடுக்கப்படக் கூடாது என்பதையும் குற்றவாளிகள் சமூகப் பொருளாதார பின்னணி, அவருடைய மனநிலை உள்ளிட்ட விஷயங்களையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் பிந்தைய தீர்ப்புகளில் உறுதி செய்துள்ளது.
- மரண தண்டனை குறித்து முடிவெடுப்பதற்கு முன்பு குற்றவாளி வளர்ந்த சூழல், கல்வி, சமூக-பொருளாதார சூழ்நிலைகள் போன்ற விஷயங்களை விசாரணை நீதிமன்றங்கள் ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை அரசமைப்பு அமர்வு வழங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## மின்னணுக் கழிவு மேலாண்மை

- உலகளவில் சீனா, அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக மின், மின்னணுக் கழிவுகளை அதிகளவு உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா இருக்கிறது.

### பாதிக்கப்படும் தொழிலாளர்கள்

- உற்பத்தியாளரோ பயனாளிகளோ மின்னணுக் கருவிகளையும் அதன் உதிரி பாகங்களையும் பழுதுநீக்கிப் பயன்படுத்த முடியாது என்று ஒதுக்கும் அல்லது தூக்கி எறியும் பொருட்கள் மின்னணுக் கழிவாகக் கருதப்படுகின்றன.
- வானொலிப் பெட்டி, அனைத்து வகையான கணினி மற்றும் அதோடு தொடர்புடையவை, குளிரூட்டிகள், குளிர் சாதனப் பெட்டி, கேமரா, இசைக்கருவிகள், கைபேசி-திறன்பேசி, அவற்றுடன் தொடர்புடையவை, பென்டிரைவ், மின்னணுக் கடிகாரங்கள், மின்னணுப் பொம்மைகள், சமையலறையில் பயன்படுத்தப்படும் ஏனைய மின்னணுக் கருவிகள், மருத்துவப் பரிசோதனைக்காகப் பயன்படுத்துகின்ற கருவிகள் என மின்னணுக் கழிவுகளுக்கான ஆதாரங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.
- இந்தக் கழிவுப் பொருட்களைச் சேகரிப்பவர்கள், சேகரித்த பொருட்களின் பாகங்களைப் பிரித்தெடுப்பவர்கள்; கழிவுப் பொருட்களின் தன்மையின் அடிப்படையில் மறுசுழற்சி செய்பவர்கள் என மூன்று வகையான பணியாளர்கள் மின்னணுக் கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

### மறுசுழற்சி சாத்தியமா?

- ஒரு நிறுவனம் எவ்வளவு மின்னணுச் சாதனங்களை விற்பனை செய்கிறதோ அதற்கு இணையான அளவில் மின்னணுக் கழிவை அடையாளம் கண்டு, சேகரித்து, மறுசுழற்சி செய்வதற்கான முயற்சியில் இறங்க வேண்டும்.
- அப்படி விற்பனை செய்த பொருட்களின் அளவுக்கு மின்னணுக் கழிவை மறுசுழற்சி செய்திருக்கிறார்கள் என்பதற்கான சான்றிதழை ஓர் ஆவணமாக வைத்திருக்க வேண்டும்.
- மின்னணுக் கழிவு மேலாண்மைக்கான புதிய விதிமுறைகளின்படி, உற்பத்தியாளர் ஒவ்வொருவரும் தாங்கள் விற்பனை செய்த மின்னணுப் பொருட்களின் மூலம் ஏற்பட்ட கழிவில் 60% மறுசுழற்சி செய்திருக்க வேண்டும்.
- 2024இல் அது 70% ஆகக் கூடியிருக்க வேண்டும். 2025 இல் அது 80% ஆக உயர வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.
- மின்னணுக் கழிவு பெரும்பாலும் பாதுகாப்பற்ற சூழலில், வசதி குறைவான இடங்களில்தான் மறுசுழற்சி செய்யப்படுகிறது.
- ஒருசில பொருட்களை மறுசுழற்சி செய்யும்போது அதற்கு அதிக செலவும், சுற்றுச்சூழலுக்கு மோசமான பாதிப்பும் ஏற்படும். ஞெகிழி, தாமிரம், கண்ணாடி போன்றவற்றுக்கான மறுசுழற்சிக் செலவுகள் குறைவு.
- ஆனால் ஒரு சில மின்னணுக் கழிவுகளின் மறுசுழற்சிக்குத் தொழில்நுட்பரீதியாகவும், மனித உழைப்பு அடிப்படையிலும் அதிக செலவும் நேரமும் ஆகும். இவற்றுக்கு இந்தப் புதிய விதிமுறைகளில் தெளிவான விளக்கங்கள் இல்லை.

### வழிகாட்டும் குழு

- இந்தப் புதிய விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுவின் தலைவராக மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் இருப்பார்.
- அதோடு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திலிருந்து ஒருவரும், செய்தி-தொழில்நுட்ப அமைச்சகத்திலிருந்து ஒருவரும் இருப்பார்கள்.
- மேலும் உற்பத்தியாளர்கள், மறுசுழற்சியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களும் இருப்பார்கள். ஆனால், மின்னணுக் கழிவு குறித்து ஆய்வு செய்கின்ற ஆய்வாளர்களும், அறிவியல் வல்லுநர்களும், பொதுமக்களும் இந்தக் குழுவில் பிரதிநிதிகளாகச் சேர்க்கப்படவில்லை.

- உற்பத்தியாளர்கள் மலிவான, தரமற்ற பொருட்களை உற்பத்தி செய்வதைத் தவிர்த்து, தரமான பொருட்களை உற்பத்தி செய்தால் மின்னணுக் கழிவை ஆரம்பக் கட்டத்தில் ஓரளவு குறைக்கலாம்.
- எந்தவொரு மின்னணுக் கருவியையும் பயன்படுத்தி விட்டுத் தூக்கி எறிவதற்கு முன்பாக, பழுது நீக்கி அதன் பயன்பாட்டை நீட்டிக்கப் பயனாளிகள் முயல வேண்டும்.
- மின்னணுக் கழிவை மறுசுழற்சி செய்வதற்குப் போதுமான உள்கட்டமைப்பு வசதிகளையும், நவீனத் தொழில்நுட்ப வசதிகளையும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மின்னணுக் கழிவு மேலாண்மை விதிமுறைகளை மறுஆய்வுக்கு உட்படுத்தி சுற்றுச்சூழலுக்கும் மனிதர்களுக்கும் பயன்தரும் வகையில் அதை மாற்றியமைப்பது பூமிக்கு மட்டுமல்ல, இங்கு வாழப்போகும் மனிதர்களுக்கும் சேர்த்தேதான் நன்மை பயக்கும்.

## போக்சோ விசாரணையில் வரவேற்கத்தக்க மாற்றம்

- பதினெட்டு வயதுக்கு உட்பட்ட சிறார் மீதான பாலியல் வன்முறையைத் தடுப்பதற்கான போக்சோ சட்டத்தின் கீழ் பதியப்படும் பாலியல் குற்ற வழக்குகளைக் கண்காணிப்பதற்கான சிறப்புக் குழுக்களைத் தென்மண்டல ஐஜி அஸ்ரா கார்க் உருவாகியுள்ளது வரவேற்கத்தக்கது.
- வழக்கு பதியப்படுவது, நீதிமன்ற விசாரணை, வழக்கு குறித்த தகவல்களைப் பாதிக்கப்பட்ட சிறார் – அவர்களின் பெற்றோருக்குத் தெரிவித்தல், குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருதல் ஆகிய அனைத்தையும் இந்தக் குழு தொடர்ந்து கண்காணிக்கும்.
- இவற்றின் பயனாகத் தென்மாவட்டங்களில் போக்சோ குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்ய காவல் நிலையத்துக்குச் செல்லும் பெற்றோர் பாதுகாவலர் காவல் நிலையத்தில் மரியாதையுடனும் மனிதநேயத்துடனும் நடத்தப்படுவதோடு, பாதிக்கப்பட்ட சிறாரின் உரிமைகள், வழக்கு பதியப்படும்போது அவர்களிடம் விவரிக்கப்படும்.
- முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 24 மணி நேரத்துக்குள் மாவட்டக் குழந்தைகள் நலக் குழுவுக்கு விவரங்கள் தெரிவிக்கப்படும்.
- இதன் மூலம் பாதிக்கப்பட்ட சிறார் சிறப்பு நிவாரணங்களுக்கு உரியவர்களாக இருந்தால், அவற்றை உடனடியாகப் பெறச் செய்வதற்கான பணிகளைக் குழந்தைகள் நலக் குழுவால் தொடங்கிவிட முடியும்.
- மேலும், பாதிக்கப்பட்ட சிறாரின் சூழ்நிலையைப் பொறுத்து வழக்கு விசாரணை முழுவதும் அவருக்குத் துணையாகக் குழந்தைகள் நலக் குழுவைச் சேர்ந்த ஒருவரைக் காவல் துறையின் மூலம் நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மேலும், குற்றம்சாட்டப்பட்டவர்களின் பிணை மனுவின் விசாரணையின்போது, அது குறித்துப் பாதிக்கப்பட்டவருக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும்.
- பாதிக்கப்பட்டவர் 16 வயதுக்குக் கீழானவராக இருந்தால் அவருடைய தரப்பைச் சேர்ந்த ஒருவர் பிணை மனுவின் மீதான விசாரணையின்போது நீதிமன்றத்துக்கு வந்து தமது தரப்பை விவரிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- குற்றவாளிகளைத் தண்டிப்பதைத் தாண்டி பாதிக்கப்பட்ட சிறார்களின் மறுவாழ்வுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அணுகுமுறை மாற்றம் காவல்துறையிடம் மட்டுமல்லாமல் அரசு, குடிமைச் சமூகம் என அனைவரிடமும் ஏற்பட வேண்டும்.

## பஜ்ரங் புனியா

- செர்பியாவின் பெல்கிரேடு நகரில் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான 65 கிலோ எடைப்பிரிவில் வெண்கல பதக்கத்துக்கான ஆட்டத்தில் இந்தியாவின் பஜ்ரங் புனியா விளையாடுகிறார்.
- உலக மல்யுத்த சாம்பியன் ஷிப்பில் பஜ்ரங் புனியா பதக்கம் வெல்வது இது 4வது முறையாகும். இதற்கு முன்னர் 2013-ம் ஆண்டு வெண்கலப் பதக்கமும், 2018-ம் ஆண்டு வெள்ளிப் பதக்கமும், 2019-ம் ஆண்டு வெண்கலப் பதக்கமும் வென்றிருந்தார் பஜ்ரங் புனியா.
- இதன் மூலம் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் 4 முறை பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் பஜ்ரங் புனியா.

## ஈரானில் பெண்களின் போராட்டம்

- ஈரானில் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். அந்த நாட்டில் 9 வயதுக்கு மேம்பட்ட சிறுமிகள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது.

- பெண்கள் ஆடை அணியும் விதத்தை கண்காணிக்க காஸ்த் எர்ஷாத் என்ற சிறப்பு பிரிவு போலீஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- அவர்கள் நாடு முழுவதும் பொது இடங்களில் சோதனை நடத்தி ஹிஜாப் அணியாத பெண்கள், முஸ்லிம் முறைப்படி, ஆடை அணியாத பெண்களை கைது செய்து வருகின்றனர். கைது செய்யப்பட்டவர்களுக்கு ஒழுக்கநெறி பாடங்கள் கற்பிக்கப்படும்.
- ஈரானின் மேற்கில் அமைந்துள்ள குர்திஸ்தான் மாகாணம், சஹிஸ் நகரை சேர்ந்த மாஷா அமினி (22) கடந்த 13-ம் தேதி தலைநகர் தெஹ்ரானில் உள்ள உறவினரை சந்திக்க குடும்பத்துடன் சென்றார்.
- அப்போது சிறப்பு படை போலீஸார், மாஷா அமினியை வழிமறித்தனர். அவர் முறையாக ஹிஜாப் அணியவில்லை என்று குற்றம் சாட்டி கைது செய்து வேனில் அழைத்துச் சென்றனர்.
- போலீஸ் காவலில் அவர் மிகக் கொடூரமாக தாக்கப்பட்டார். இதில் கோமா நிலைக்கு சென்ற அவர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.
- நாடு முழுவதும் பெண்கள் சாலை, தெருக்களில் திரண்டு ஹிஜாபுக்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.
- ஆடை நெறிமுறைகளை மீறும் பெண்கள் உடனடியாக கைது செய்யப்படுவார்கள் என்பது தெரிந்தும் ஈரான் பெண்கள் துணிச்சலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## டாலருக்கு பதில் ரூபாய்-ரூபிளில் வர்த்தகம்

- ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதற்கும் உலக நாடுகள் தடை விதித்துள்ளன. இந்தநிலையில், அமெரிக்க டாலரில் வர்த்தகம் செய்வதை தவிர்த்து உள்நாட்டு கரன்ஸிகளில் பரஸ்பர வர்த்தகத்தை மேற்கொள்வது குறித்து ரஷ்யாவும், இந்தியாவும் பரிசீலித்து வந்தன.
- அதன் முதல் படியாக, யெஸ் வங்கி மற்றும் ரஷ்யாவின் பீட்டர்ஸ் பர்க் சோஷியல் கமர்சியல் வங்கி (பிஎஸ்சிபி) ரூபாய்-ரூபிள் வழியாக இருதரப்பு வர்த்தகத்தை சாத்தியமாக்கும் முயற்சியில் முதல் முறையாக ஈடுபட்டுள்ளன.
- இந்தியா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த ஏற்றமதி, இறக்குமதியாளர்கள் தங்களது சொந்த கரன்ஸிகளில் வர்த்தகம் செய்துகொள்ள ஏதுவாக, ரூபாய்-ரூபிள் கணக்கை யெஸ் வங்கியுடன் நாங்கள் தொடங்கியுள்ளோம்.
- இந்தியாவுடன் வர்த்தகம் செய்து வரும் 36 ரஷ்ய நிறுவனங்கள் பரஸ்பரம் ரூபாய்-ரூபிளில் பணம் செலுத்துவதால் நாங்கள் இந்த பரிவர்த்தனையை முன்னெடுத்துள்ளோம் என்றார்.

## செயற்கைக்கோள்கள்

- பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் அதிகபட்சம் 1,750 கிலோ வரை மட்டுமே செயற்கைக் கோள்களை செலுத்த முடியும். ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 4,000 கிலோ வரை செலுத்தலாம்.
- இந்நிலையில், இங்கிலாந்தை சேர்ந்த ஒன்வெப் நிறுவனத்துடன் இஸ்ரோவின் என்எஸ்ஐஎல் (New Space India Limited) நிறுவனம் 2 ராக்கெட் ஏவுதலுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
- முதல் கட்டமாக, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் மூலம் 36 செயற்கைக் கோள்கள் அக்டோபர் 22-ம் தேதி செலுத்தப்பட உள்ளன.
- இதற்காக ஒன்வெப் நிறுவன செயற்கைக் கோள்கள் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றை ராக்கெட் பாகத்துடன் பொருத்தும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- 2-வது கட்டமாக, ஒன்வெப் நிறுவனத்தின் செயற்கைக் கோள் 2023 ஜன.23-ம் தேதி செலுத்தப்படும். அதற்கிடையே 3 பிஎஸ்எல்வி ராக்கெட் ஏவுதல் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

### பொதுசேவை, திறன் மேம்பாட்டு மையம்

- மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மிகப் பழமையான நிறுவனமாகும். இந்நிறுவனம் கல்வி சார்ந்த நடவடிக்கைகளை அண்ணா பல்கலையுடன் இணைந்து செயல்படுத்துகிறது.
- தோல் தொழில் துறையில், வடிவமைத்தல், தயாரித்தல், சந்தைப்படுத்துதல் போன்ற பல்வேறு செயல்கள் முன்பு போல இல்லாமல் டிஜிட்டல் வடிவில் மாற்றப்பட்டுள்ளது.
- மேலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படுகிறது. இதற்குத் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்த வேண்டும். நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முக்கியத் துறையாகத் தோல் துறை திகழ்கிறது.

- இத்துறையில் தற்போது 44 லட்சம் தொழிலாளர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கையை 60 லட்சமாக உயர்த்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- இதற்காக சென்னை, டெல்லி, மும்பை, ஆக்ரா உட்பட 10 நகரங்களில் பொது வசதி மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- இதன் மூலம், தோல் தொழில்துறையில் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்த முடியும். மேலும், இளம் நிபுணர்கள் இத்துறையில் தொழில்நுட்பம், புத்தாக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தி வேலை தேடுவோராக இல்லாமல், வேலை உருவாக்குவோராக மாற வேண்டும்.

## குடியரசுத் தலைவர் தேர்தலில் மூன்று குறைபாடுகள்

### குடியரசுத் தலைவர் பதவி

- நமது அரசியல் சாசனத்தை வடிவமைத்த சிற்பிகள், குடியரசுத் தலைவர் பதவிக்கு மிகுந்த மதிப்பளித்துள்ளனர்.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு எதேச்சதிகாரமாகச் செயல்படும்போது அதைத் தடுக்கவும், முறைப்படுத்தவும் அதிகாரமுள்ளதாக குடியரசுத் தலைவர் பதவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

### குடியரசுத்தலைவர் தேர்தல்

- அரசியல் சாசனத்தின் 324-ஆவது பிரிவின் கீழ், இந்திய தேர்தல் ஆணையத்தால் குடியரசுத் தலைவர் தேர்தல் நடத்தப்படுகிறது.
- நாடாளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்களும் மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களும் தில்லி, புதுச்சேரி ஆகிய யூனியன் பிரதேச சட்டப்பேரவைகளின் உறுப்பினர்களும் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள்.
- (அரசியல் சாசனத்தின் 54-வது பிரிவு). விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒவ்வொரு வாக்காளரும் (எம்.பி., எம்.எல்.ஏ.) தனது வாக்கை ரகசியமாகப் பதிவு செய்கிறார். அரசியல் சாசனத்தின் 55(3)ஆவது பிரிவு.

### மூன்று முரண்பாடுகள்

1. தற்போதைய மக்கள் தொகையைக் கணக்கில் கொள்ளாமல் 1971 மக்கள் தொகை பதிவேட்டின் அடிப்படையில் வாக்காளரின் விகிதாசார பிரதிநிதித்துவ மதிப்பு கணக்கிடப்படுதல்.
2. அனைத்து யூனியன் பிரதேசங்களுக்கும் சமமான மதிப்பு அளிக்கப்படாதது.
3. நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு ஒரே சீராக இல்லாதிருப்பது.

### 2031 வரை தொடரும் 1971 மக்கள் தொகை அடிப்படை

- குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் வாக்குகள் சமமான மதிப்பு உடையவையாக இருக்க வேண்டும்.
- ஆனால், இத்தேர்தலில் வாக்களிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் வாக்கு மதிப்பு ஒவ்வொரு மாநிலத்திலும் தற்போதைய மக்கள்தொகை அடிப்படையில் கணக்கிடப்படாமல், 1971-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்புப் பதிவேட்டின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இது முதல் முரண்பாடாகும்.
- ஒரு மாநில சட்டப்பேரவை உறுப்பினரின் வாக்குமதிப்பு என்பது, அந்த மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகையை அம்மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுத்து, அந்த மதிப்பை ஆயிரத்தால் வகுத்துக் கிடைப்பதாகும்.
- இதில் மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகையாக கருத்தில் கொள்ளப்படுவது 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை பதிவேட்டிலுள்ள எண்ணிக்கையாகும்.
- ஐம்பது ஆண்டுகளில் நமது மாநிலங்கள் பலவும் மக்கள்தொகையில் பலத்த ஏற்ற இறக்கங்களைச் சந்தித்துள்ளன. அதற்கேற்ற வகையில், மாநிலங்களின் மாறிய மக்கள்தொகை இதில் கணக்கில் கொள்ளப்படாதது, பொதுமக்களின் வாக்கு மதிப்பைக் குறைப்பதாகும்.
- 2031-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி நடந்தேறும் வரை குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் வாக்குமதிப்பு 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை பதிவேட்டின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

## யூனியன் பிரதேசங்களுக்கு மதிப்பில்லை

- குடியரசுத் தலைவர் தேர்தலில் நாட்டு மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவ வாக்கு மதிப்பு இருக்க வேண்டும்.
- நாட்டிலுள்ள 28 மாநிலங்களின் மக்களுக்கும் முழுமையான பிரதிநிதித்துவ வாக்கு மதிப்பு தற்போது இருக்கிறது.
- இம்மாநிலங்களில் பிரதிநிதிகளாக எம்.பி.க்களும், எம்.எல்.ஏ.க்களும் இத்தேர்தலில் வாக்களிக்கின்றனர். ஆனால் எட்டு யூனியன் பிரதேசங்களில் தில்லி, புதுச்சேரி ஆகிய பகுதிகளில் மட்டுமே சட்டப்பேரவைகள் உள்ளதால், அங்குள்ள எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கின்றனர்.
- பிற ஆறு யூனியன் பிரதேசங்களில் சட்டப்பேரவைகள் இல்லாததால் அங்கு தேர்வாகும் எம்.பி.க்கள் மட்டுமே இத்தேர்தலில் வாக்களிக்க முடிகிறது. இதுவும் நியாயமற்றதாகும்.
- உதாரணமாக, 2019-ஆம் ஆண்டு வரை மாநிலமாக இருந்த ஜம்மு-காஷ்மீர், மாநில மறுசீரமைப்புச் சட்டத்தால் இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுவிட்டது.
- முந்தைய குடியரசுத் தலைவர் தேர்தல்களில் ஜம்மு-காஷ்மீர் எம்.எல்.ஏக்களும், எம்.பி.க்கள் போலவே வாக்களித்தனர். ஆனால் இம்முறை, அந்த வாய்ப்பை அவர்கள் இழந்துவிட்டார்கள். இது அப்பகுதி மக்களின் இழப்பாகும்.

## எம்.பி.க்களின் வாக்கு மதிப்பு சீராக இல்லை

- குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கும். எம்.பி.யின் வாக்கு மதிப்பு நாடு முழுவதும் 708 ஆக உள்ளது. சராசரியாக 22.29 லட்சம் மக்களின் பிரதிநிதியாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கும் வகையிலேயே அவர்களின் வாக்குமதிப்பு கணிக்கப்படுகிறது.
- ஆனால் நடைமுறையில், பெரிய மாநிலங்களுக்கும் சிறிய மாநிலங்களுக்கும் இடையே எம்.பி.தேர்தலில் மாறுபாடு உள்ளது.
- மாநில மறுசீரமைப்பால் 2019-இல் மாநில அந்தஸ்தை இழந்த ஜம்மு-காஷ்மீரில் மீண்டும் சட்டப்பேரவை அமைக்கப்படவில்லை.
- இம்முறை குடியரசுத் தலைவர் தேர்தலில் ஜம்மு-காஷ்மீர் தனது எம்.எல்.ஏ.க்களின் வாக்குரிமையை இழந்துவிட்டது.
- 1992-லும் இப்பகுதி எம்.எல்.ஏ.க்கள் தேர்தலில் வாக்குரிமையை இழந்திருந்தனர்.
- அரசியல் காரணங்களுக்காக சட்டப்பேரவை கலைக்கப்பட்ட குஜராத் (1974), அஸ்ஸாம்(1982), நாகாலாந்து (1992) ஆகிய மாநிலங்களும், அச்சமயங்களில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தல்களில் எம்.எல்.ஏ.க்களின் வாக்குரிமையைப் பயன்படுத்த இயலவில்லை.
- குடியரசுத் தலைவராக இருப்பவரின் பதவிக்காலம் நிறைவடையும் முன்னரே அப்பதவிக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அரசியல் சாசனப்பிரிவு 62(1) கூறுகிறது.
- அதன்படியே தேர்தலும் நடத்தப்படுகிறது. அதே சமயம், குடியரசுத் தலைவரைத் தேர்வு செய்யும் எம்.எல்.ஏ.க்களை, கலைக்கப்பட்ட சட்டப் பேரவைகளுக்கு தேர்வு செய்யப்படுவதையும் உறுதிப்படுத்துவது அரசின் கடமையல்லவா?

## இந்தியாவில் பெரும்பூனைகளின் நிலை

- இந்தியத் துணைக்கண்டத்தில் ஆசியச் சிவிங்கிப் புலிகள் அற்றுப்போய் 70 ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் துணை இனமான ஆப்பிரிக்கச் சிவிங்கிப்புலிகள் செப்டம்பர் 17 அன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.
- ஆப்பிரிக்காவின் நமீபியாவிலிருந்து 8,000 கி.மீ-க்கு அப்பாலுள்ள இந்தியாவுக்குக் கண்டம் தாண்டிச் சிறப்பு விமானத்தில் கொண்டுவரப்பட்ட எட்டு சிவிங்கிப் புலிகள் (ஐந்து பெண், மூன்று ஆண்), மத்திய பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- வங்கப்புலி, ஆசியச் சின்னம், சிறுத்தை, ஆசியச் சிவிங்கிப்புலி என நான்கு பெரும்பூனைகள் முன்பு ஒரே வாழிடத்தைக் கொண்டிருந்த இடமாகக் குனோ திகழ்கிறது.
- இந்தியாவின் கடைசிச் சிவிங்கிப்புலி 1947-இல் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியாவில் சிவிங்கிப்புலிகள் முற்றிலும் அற்றுப்போய்விட்டதாக 1952இல் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

- இந்தியாவில் ஆப்பிரிக்கச் சிவிங்கிப்புலியை அறிமுகப்படுத்தும் திட்டம் 2009 இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியால் முன்மொழியப்பட்டது. அதைத் தொடர்ந்து ரூ.39 கோடி மதிப்பீட்டில் 'சிவிங்கிப்புலி செயல்திட்டம்' 2021இல் வெளியிடப்பட்டது.
- அதன்படி, 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிவிங்கிப்புலிகளை இந்தியாவில் அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

**சிங்கம்**

- இந்தியாவில் குஜராத் வனப் பகுதியான கிர் தேசியப் பூங்காவில் மட்டுமே சிங்கங்கள் வசிக்கின்றன. 2015-ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தியாவில்523 சிங்கங்கள் இருந்தன.

**புலி**

- இந்தியாவின் தேசிய உயிரினமான வேங்கைப் புலிகளின் பாதுகாப்பும் கவலையளிக்கும் விதமாகவே உள்ளது. தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் தரவுகள்படி, 2012 முதல் 2021 டிசம்பர் 30 வரையிலான 10 ஆண்டுகளில் 984 புலிகள் இறந்துள்ளன.

**பனிச்சிறுத்தை**

- மனிதச் செயல்பாடுகளால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தின் விளைவால் துருவப் பகுதிகளும் பனிப் பிரதேசங்களும் முதன்மையான பாதிப்பை எதிர்கொண்டிருக்கின்றன.
- இந்தியாவில் இமயமலைப் பகுதிகளில் குறைந்துவரும் பனி, இந்தியப் பெரும்பூனைகளில் ஒன்றான பனிச்சிறுத்தையின் வாழ்வை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

**சிறுத்தை**

- இந்தியாவில் சிறுத்தைகளின் எண்ணிக்கை கடந்த 100 ஆண்டுகளில் 75-90% வரை குறைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தியாவில் தற்போது வாழ்ந்துவரும் பெரும்பூனைகளில் சிறுத்தைகள் மட்டுமே ஓரளவுக்கு அதிக எண்ணிக்கையில் உள்ளன.

## வெறுப்புப் பேச்சுகளைத் தடுக்க சட்டம்

- செய்தித் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகளில் வெறுப்புணர்வு பேச்சுகள் தொடர்பான காணொலிகள் ஒளிபரப்பப்படுவது குறித்து அதிருப்தி தெரிவித்து நீதிபதிகள் கூறியதாவது :
- அமெரிக்காவில் இருப்பது போன்ற ஊடக சுதந்திரம் நம் நாட்டில் இல்லைதான்.
- தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகள் பார்வையாளர்களுக்கு அவசியம் என்றபோதும், அது எல்லைக்கோட்டை தாண்டாமல் இருக்க வேண்டும்.
- அரசியல்வாதிகள் வருவார்கள் போவார்கள். ஆனால், ஊடகம் போன்ற அரசியல் சாசன அமைப்புகள் என்றும் நிலைத்திருக்கக்கூடியவை.
- வெறுப்புணர்வு பேச்சுகளை தொடர்ந்து ஒளிபரப்பியே ஒருவரே கொல்லலாம் என்பதுதான் அதன் அர்த்தமாகும். ஊடகம் அல்லது சமூக ஊடகங்களில் எந்தவித தணிக்கையுமின்றி ஒளிபரப்பப்படுகிறது.
- ஆகையால், அதில் பணியாற்றும் நெறியாளர்களுக்குத்தான் வெறுப்புணர்வு பேச்சுகள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதில் முக்கியப் பொறுப்புள்ளது.
- வெறுப்புணர்வு பேச்சுகள் விஷம் போன்றவை; அவற்றைத் தடுப்பதில் மத்திய அரசு உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்று நீதிபதிகள் வலியுறுத்தினர்.

## கடற்பசு பாதுகாப்பகம்

- தமிழகத்தில் அழிந்துவரும் நிலையில் உள்ள மிக அரிதான கடற்பசு (Dugong) இனத்தையும், அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு மன்னார் வளைகுடா, பாக்.விரிகுடா பகுதியில் 'கடற்பசு பாதுகாப்பகம்' அமைக்கப்படும்.

- அதை செயல்படுத்தும் வகையில், 448 சதுர கி.மீ பரப்பளவில் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய பாக். விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகமாக அறிவித்தது.
- உலகின் மிகப்பெரிய தாவர வகை கடல் பாலூட்டிகளான கடற்பசுக்கள், முதன்மையாக கடற்புற்களை உண்டு வளர்ந்து வருகின்றன.
- கடற்பசு இனங்களை பாதுகாப்பதால், கடல் பகுதிகளுக்கு அடியில் உள்ள கடற்புற்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், வளிமண்டல கார்பனை அதிக அளவில் நிலைப்படுத்தவும் உதவுகிறது.
- கடல்புல் படுகைகள் வணிகரீதியாக மதிப்புமிக்க பல மீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு இனப்பெருக்கம் செய்ய ஏதுவாகவும், உணவளிக்கும் இடமாகவும் உள்ளது.
- பாக்.விரிகுடாவை ஒட்டிய கரையோர மக்கள் கடற்பசுக்களை பாதுகாப்பதன் அவசியத்தைப் புரிந்துகொண்டு, பலமுறை மீன்பிடி வலையில் சிக்கிய கடற்பசுக்களை இம்மீனவர்கள் வெற்றிகரமாக கடலில் விடுவித்துள்ளனர்.
- வனவிலங்குகள் பாதுகாப்பு சட்டப்படி, அட்டவணை 1-ன் கீழ் கடற்பசு இனங்கள் பாதுகாக்கப்படுகின்றன.
- தற்போது சுமார் 240 கடற்பசுக்கள் மட்டுமே இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- பெரும்பான்மையான கடற்பசுக்கள் தமிழகத்தின் கடற்கரையில் (பாக்.விரிகுடா) காணப்படுகின்றன.

## நார்த் சேனலை கடந்து சாதனை

- நார்த் சேனலானது, வடக்கு அயர்லாந்தையும், ஸ்காட்லாந்தையும் இணைக்கும் 42 கி.மீ. தூரமுள்ள நீரிணை பகுதியாகும். இதை அவர்கள் 14 மணி நேரம் 38 நிமிடங்களில் கடந்துள்ளனர்.

## கைதிகளுக்கு அனுமதி

- பஞ்சாபில், முதல்வர் பகவந்த் மான் தலைமையில் ஆம் ஆத்மி ஆட்சி நடக்கிறது. இங்கு, சிறைகளில் உள்ள கைதிகள், தங்கள் மனைவி அல்லது கணவருடன் தனி அறையில் இரண்டு மணி நேரம் செலவிட அனுமதி.
- சிறையில் நீண்ட காலமாக உள்ள நன்னடத்தை உடைய கைதிகளுக்கு மட்டுமே இந்த சலுகை.
- கொடூர குற்றங்களைப் புரிந்தவர்கள், ரவுடிகள், அபாயகரமான கைதிகள், பாலியல் குற்றம் புரிந்தவர்கள் ஆகியோருக்கு இந்த சலுகை வழங்கப்படாது.
- இதன் வாயிலாக அவர்களின் திருமண பந்தம் மற்றும் பிணைப்பு அதிகரிக்கும்; கைதியிடம் ஒழுக்கமும், நன்னடத்தையும் கூடும்.
- இத்தகைய அனுமதி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.

## 23 ஆண்டுகளில் முதல் முறை

- இந்திய மகளிர் அணி, தொடரைக் கைப்பற்றியிருக்கிறது. கடந்த 1999-க்குப் பிறகு அந்நாட்டில் கிரிக்கெட் தொடர் ஒன்றை இந்திய அணி கைப்பற்றியது இதுவே முதல் முறையாகும்.
- இந்திய கேப்டன் ஹர்மன்பிரீத் கௌர் ஆட்டநாயகி ஆனார்.

## அடையாள எண்கள்

- நவீன தொழில்நுட்ப வசதிகளின் வருகை, கைப்பேசி பயன்பாடு அதிகரிப்பு, அதிகரித்துள்ள இணைய சேவை வசதிகள் உள்ளிட்டவற்றின் காரணமாக இணையவழி பணப் பரிவர்த்தனைகள் அதிகரித்து வருகின்றன.

### அதிகரிக்கும் மோசடிகள்

- இணையவழி பணப்பரிவர்த்தனைகள் அதிகரித்து வரும் அதே வேளையில், இணையவழி பணமோசடிகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன.
- அதைத் தடுப்பதற்கான ஒரு வழியாக 'டோக்கனைசேஷன்' என்ற வங்கி அட்டைகளுக்கு 'அடையாள எண்களை' வழங்கும் நடைமுறையை இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அமல்படுத்தியுள்ளது.

### 'அடையாள எண்' என்பது

- புதிய நடைமுறையின்படி வாடிக்கையாளர்கள் இணையவழி வர்த்தக நிறுவனங்களில் பொருள்களை வாங்கும்போது தொகையைச் செலுத்துவதற்காக வங்கி அட்டையின் விவரங்களை நேரடியாகப் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை.

- ஒவ்வொரு வங்கி அட்டைக்கும் குறிப்பிட்ட அடையாள எண் வழங்கப்படும். அந்த எண்ணை மட்டுமே வழங்கி பயணத்தைச் செலுத்தினால் போதுமானது.
- இதன் மூலமாக மூன்றாவது நபர்கள் வாடிக்கையாளர்களின் வங்கி சார்ந்த தரவுகளைச் சேமித்து வைப்பது தடுக்கப்படும். வாடிக்கையாளர்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

### அடையாள எண் பெறும் முறை

- இணையவழி வர்த்தக நிறுவனங்கள் மூலமாகவே வங்கி அட்டைகளுக்கான 'அடையாள எண்ணை' பெற முடியும். அதன் மூலமாக அனுப்பப்படும் கோரிக்கை வங்கி அட்டையை வழங்கிய நிறுவனத்துக்குச் சென்றடையும்.
- வங்கி அட்டை, இணையவழி வர்த்தக நிறுவனம், பயன்படுத்தப்படும் சாதனம் (கைப்பேசி அல்லது கையடக்கக் கணினி) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு 'அடையாள எண்' வழங்கப்படும்.

### அடையாள எண் பெறவில்லை எனில்...

- வங்கி அட்டைக்கான அடையாள எண் நடைமுறை அக்டோபர் 1–ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ள நிலையில், இணையவழி வர்த்தக நிறுவனங்கள் ஏற்கெனவே சேமித்து வைத்துள்ள வாடிக்கையாளர்களின் வங்கி அட்டை சார்ந்த விவரங்களை அதற்குள் அழித்துவிட வேண்டியது கட்டாயமாகும்.
- அக்டோபர் 1–ஆம் தேதிக்குப் பிறகு வங்கி அட்டை சார்ந்த விவரங்களை அந்நிறுவனங்களால் சேமித்து வைக்க முடியாது.
- அடையாள எண்ணைப் பெறாத வாடிக்கையாளர்கள், ஒவ்வொரு முறை பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளும்போதும் வங்கி அட்டை சார்ந்த விவரங்களைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

## துறைமுகங்கள் வரைவு மசோதா

- இந்திய துறைமுகங்களுக்கான திருத்தப்பட்ட வரைவு மசோதாவில் மாநில அரசின் சில கருத்துகள் சேர்க்கப்பட்டு இருந்தாலும், மாநில அரசுகளால் சிறப்பாக நிர்வகிக்கப்படும் சர்வதேச மற்றும் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாக அச்சம் உண்டாகிறது.
- பெரியதல்லாத துறைமுகங்களை மையப்படுத்தும் இந்த வரைவு மசோதா, மாநில அரசின் சிறப்பு முயற்சிகளை நீர்த்துப் போகச் செய்துவிடும்.
- இதில் மிக முக்கியமான மாற்றம் எதுவென்றால், கடல்சார் மாநில மேம்பாட்டு கவுன்சிலை (எம்.எஸ்.டி.சி.) சிறு துறைமுகங்களுக்காக அமைப்பதுதான்.
- தற்போது ஆலோசனைகளை மட்டுமே வழங்கி வரும் அந்த கவுன்சில், இனி நிரந்தரப் பணியாளர்களைக் கொண்ட ஒழுங்குமுறை அமைப்பாக மாறுவது, மாநில அரசின் அதிகாரங்களையும், உரிமைகளையும் ஆக்கிரமிப்பதாக அமைந்துவிடும்.
- எம்.எஸ்.டி.சி.க்கு 5 செயலாளர்கள், ஒரு இணைச் செயலாளர் மற்றும் நிர்வாகிகளை மத்திய அரசு நியமிக்கும் நிலையில், அந்த துறைமுகத்திற்கான செயலாளர் பொறுப்பில் இருக்கும் மாநில அதிகாரியை ஒதுங்கச் செய்துவிடும்.
- ஜி.எஸ்.டி. கவுன்சில் போல் எம்.எஸ்.டி.சி.யும் ஒரு ஆலோசனை கவுன்சில் போலத்தான் செயல்பட வேண்டும்.
- அதில், மாநில அரசின் அமைச்சர்கள்தான் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அதிகாரிகள், சிறப்பு அழைப்பாளர்களாக மட்டும் இருக்க வேண்டும்.

### அதிகாரத்தை பாதிக்கும்

- மாநில கடல்சார் வாரியங்களின் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு அதிகாரம் தற்போது மாநில அரசுகளின் வசம்தான் உள்ளன.
- ஆனால் மாநில அரசின் இந்த மேல்முறையீட்டு அதிகாரம், பெரிய துறைமுகங்களுக்காக மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும் மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களுக்கு போய்விடும்.
- இது மாநிலத்தில் உள்ள துறைமுகம் தொடர்பான சொந்த பிரச்சனைகளை மாநில அரசே தீர்க்கும் அதிகாரத்தை பாதிக்கச் செய்யும்.
- எனவே, எம்.எஸ்.டி.சி. தொடர்பாக வரைவு மசோதாவில் உள்ள பிரிவுகள் அனைத்தும் நீக்கப்பட்டு, அந்த அமைப்பு முன்பு உள்ளது போன்று ஆலோசனை அமைப்பாக மட்டுமே இருக்கச் செய்ய வேண்டும்.
- மாநில கடல்சார் வாரியங்கள் குறித்த அம்சங்களும் நீக்கப்பட வேண்டும்.

### அனுபவப் பேராசிரியர்கள்

- பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) அனுபவ அறிவுப் பேராசிரியர்கள் (Professor of Practice) என்ற ஒரு புதிய வகைப் பேராசிரியர்களை உயர் கல்வி நிறுவனங்கள் பணியமர்த்திக் கொள்ளலாம் எனப் பரிந்துரைத்திருக்கிறது.
- பொதுக்கல்வியோடு தொழிற்கல்வியை இணைத்து கல்வியையும் தொழில் நிறுவனங்களையும் ஒருங்கிணைக்க தேசியக் கல்விக் கொள்கையின் (2020) இத்திட்டம் வழிவகுக்கும் என்கிறது யுஜிசி.

### நோக்கங்கள் என்னென்ன?

- தொழில் நிறுவனங்கள், சமூகம் ஆகியவற்றின் தேவையையொட்டி படிப்பு வகைகள், பாடத்திட்டம் உருவாக்குதல்; தொழில் நிறுவன நிபுணர்களுடன் இணைந்து ஆய்வுத் திட்டங்கள், ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- பொறியியல், அறிவியல், தொழில்நுட்பம், தொழில் முனைவு, வர்த்தகம், சமூக அறிவியல், ஊடகம், இலக்கியம், நுண்கலை, குடிமைப்பணி, ராணுவம், சட்டம், பொது நிர்வாகம் ஆகிய தளங்களிலிருந்து தகுதி வாய்ந்தோரை உயர் கல்வி நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளலாம்.
- தகுதிமிகு நபர்களை உயர் கல்வி நிறுவனங்கள் இணைத்துக் கொள்வதன் மூலம் அனுபவ வழிக் கற்றல், ஆய்வு, பயிற்சி, திறன் வளர்ப்பு, விரிவாக்கப் பணிகளில் இவர்களை ஈடுபடுத்தலாம்.

### தகுதிகள் என்னென்ன?

- மேற்சொன்ன துறைகளில் 15 ஆண்டுகள் பணி அனுபவம் அல்லது அனுபவ அறிவு.
- இவர்களுக்கு உயர்கல்வித் தகுதி இல்லாவிட்டாலும், தங்களுடைய தொழில் திறன்மிக்கவராக இருந்தாலே போதும், மேலே குறிப்பிட்ட வேலையையும் பொறுப்பையும் செய்யக்கூடிய திறனைப் பெற்றிருக்க வேண்டும்.

### பணியும் பொறுப்புகளும்

- படிப்பு வகைகள், பாடத்திட்டம் உருவாக்குதல்
- நிறுவனத்திற்கேற்பப் புதிய படிப்புகளை உருவாக்குதல், பாடம் நடத்துதல்
- மாணவர்களுக்குப் புதியன கண்டுபிடித்தல், தொழில்முனையத் திட்டம் தயாரிக்க வழிகாட்டுதல்.
- கல்வி–தொழில் இரண்டுக்கும் கூட்டை உருவாக்குதல்.
- கல்வி நிறுவனங்களில் ஏற்கெனவே பணியாற்றும் துறைப் பேராசிரியர்களோடு இணைந்து பயிலரங்கம், கருத்தரங்கம், சிறப்பு உரைகள், பயிற்சி ஆகியன நடத்துதல்.
- பேராசிரியர்களுடன் இணைந்து ஆய்வுத் திட்டங்கள் தயாரித்தல், ஆலோசனை அளித்தல்.

### பொதுவான வரையறைகள்

- இவ்வகைப் பேராசிரியர்களுக்கு குறிப்பிட்ட காலம் மட்டுமே பணி வழங்க வேண்டும். முதற்கட்டமாக ஓர் ஆண்டு. அவர்களின் செயல்பாட்டைப் பொறுத்து, மேலும் மூன்று ஆண்டுக்காலம் நீட்டிக்கலாம்.
- இவ்வகைப் பேராசிரியர்களால் பல்கலைக்கழக கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது.
- பணியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் இதில் சேர்க்கப்பட மாட்டார்கள்.
- ஒரு உயர் கல்வி நிறுவனத்தில் இவர்களின் எண்ணிக்கை மொத்த பேராசிரியர்களின் எண்ணிக்கையில் 10 சதவீதத்தைக் கடக்கக் கூடாது.

### யாரெல்லாம் பயன்படுத்தலாம்?

- தொழிற்சாலைகளின் நிதி ஆதரவோடு வருபவர்கள்; தொழில் நிறுவனங்களால் பணிக்குத் தேர்வு செய்யப்பட்ட பின் கிடைக்கும் திறன் வளர்ப்புப் பணியைப் படிக்கும் போது இவர்கள் வழங்குவார்கள். இதனால் இரு தரப்பினரும் நன்மை பெறுகிறார்கள். இதற்கு நிறுவனங்களே பொறுப்பேற்றுக் கொள்ளலாம்.
- உயர் கல்வி நிறுவனம் சுயமாக ஈட்டிய நிதி ஆதரவோடு கௌரவ அடிப்படையில், பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ பணியில் சேர்பவர்களுக்கு உயர் கல்வி நிறுவனமே வழங்குதல் என்பதை தேசியக் கல்விக் கொள்கை மூலம் சாத்தியப்படுத்தலாம்.

- அதாவது, கல்விக்கொள்கை பல்வகைப்படிப்பு, முழுமையான படிப்பு என்ற வகையில் வாய்ப்பு தருவதால், அதன் அடிப்படையில் தங்களுடைய நிதி வளங்களில் இருந்தே வழங்கலாம்.
- கௌரவ அடிப்படையில் பணிக்கு வருவோருக்குக் கல்வி நிறுவனமே தனது நிதி ஆதாரத்திலிருந்து மதிப்பூதியம் வழங்கலாம்.

**எப்படித் தேர்வு செய்யப்படுவர்?**

- துணைவேந்தர், உயர் கல்வி நிறுவன இயக்குநர்கள் இந்நிபுணர்களை நியமிக்கலாம்; அல்லது
- துணைவேந்தர்கள் / இயக்குநர்களுக்குத் தங்களது தகுதியைக் குறிப்பிட்டு நிபுணர்களே விருப்பத்தைத் தெரிவித்து, மனு செய்து பதவி பெறலாம்.
- இவ்வாறு பெறப்பட்ட விருப்ப மனுக்களிலிருந்து இரண்டு மூத்த பேராசிரிகள், தலைசிறந்த வெளிநபர் ஆகியோர் கொண்ட தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, கல்விப் பேரவை / செயற்குழு / சட்டரீதியான அமைப்புகள் தீர்மானித்து முடிவெடுக்க வேண்டும்.

**சாத்தியமும் பிரச்சினைகளும்**

- ஏற்கெனவே இணைப்புப் பேராசிரியர்கள் (Adjunct Professors), கௌரவப் பேராசிரியர்கள் (Honorary Professors), வருகைதரு பேராசிரியர்கள் (Visiting Professors) என தகுதி உள்ளவர்கள் இதே வழிமுறைகளின்படி அரசு நிதி ஆதாரத்துடன் பல்கலைக்கழகம், கல்லூரிகளில் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் நிலை என்னாகும்?
- தகுதி உள்ளவர்களை நீக்கிவிட்டு, அனுபவ அறிவு மட்டும் இருந்தால் போதும் என உயர் கல்வி போதிப்பதற்கு உரிய தகுதியற்றவர்களை அனுபவப் பேராசிரியர்களாக நியமிப்பது என்பதே தங்களுக்குத் தேவையான நபர்களை மட்டுமே நியமிப்பதற்கு வழிவகுக்கும் ஒரு முறையல்லவா?
- பல பல்கலைக் கழகங்களில் முறையான ஜனநாயக அமைப்புகள் இல்லவே இல்லை. எனவே, தேர்வு செய்கிறவர்கள் தமக்குச் சாதகமானவர்களை நியமிக்கவே இது வழிசெய்யும் அல்லவா?
- இவர்களுக்கான ஊதியத்தைத் தொழில் நிறுவனங்களோ, தங்களது சுயநிதியின் மூலம் கல்வி நிறுவனங்களோ வழங்கலாம் எனப்படுகிறது.
- அப்படியானால் யுஜிசி எதுவும் வழங்காது. எத்தனைத் தொழில் நிறுவனங்கள் நான்கு ஆண்டுகளுக்கு இவர்களுக்கு ஊதியம் வழங்கும் அல்லது பல்கலைக்கழக சுயநிதியில் இருந்து வழங்குவது என்பது மாணவர்களிடம் இதற்கென தனிக்கட்டணம் வசூலிக்கும் நிலைக்குத் தள்ளவிடாதா?
- ஏற்கெனவே நிதி ஆதாரத்துடன் செயல்பட்ட தகுதிமிக்க நபர்களுடன் நடத்தப்பட்ட திட்டத்தை வலிந்து மாற்ற இந்தத் திட்டம் முயல்கிறதா?

## விண்மீன் பிறக்கும் முறை

**ஓராயன் நெபுலா**

- பூமிக்குச் சுமார் 1350 ஒளியாண்டு தொலைவில் எம் 42 எனப்படும் ஓராயன் நெபுலா எனும் பெரும் விண்மேகம் உள்ளது.
- சூரியனைப் போல இரண்டாயிரம் மடங்கு நிறை கொண்ட இந்த மேகத்தின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு ஒளி செல்வதற்கு 24 ஆண்டுகள் எடுக்கும். அதாவது 24 ஒளியாண்டு அகலம் உடையது இந்த மேகம்.
- விண்மீன்களுக்கு இடையே உண்மையில் வெற்றிடம் இல்லை. ஆறுமுகம் கொண்ட தாயக்கட்டை அளவு கொண்ட ஒரு கனசதுர சென்டிமீட்டர் வெளியில் (Space) ஓர் அணு என்ற வீதத்தில் பொருளின் அடர்த்தி இருக்கும்.
- ஓராயன் நெபுலாவில் சராசரியாகக் கனசதுர சென்டிமீட்டருக்கு ஆயிரம் அணுக்கள் என்ற விகிதத்தில் உள்ளது.
- வெறும் ஆயிரம் அணுக்கள் என்ற அடர்த்தி (Density) எப்படிச் சூரியன் போன்ற விண்மீனில் கனசதுர சென்டிமீட்டருக்கு நூறு செப்டில்லியன் என்ற அளவுக்கு அடர்த்தி கொண்ட பொருளாகத் திரட்சி பெற்றது என்பது வானியலில் ஒரு புதிர்தான்.

**ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி**

- கருப்பையில் உருவெடுக்கும் மகவைக் கண்களால் காண முடியாது என்றாலும், ஸ்கேன் கருவி மூலம் காண முடியும் அல்லவா. அதுபோல தூசு தும்பு நிறைந்திருக்கும் விண்மேகப் பகுதியில் உருவாகும் இளம் விண்மீன்களை வெறும் தொலைநோக்கி கொண்டு கண்டுவிட முடியாது.

- ஆனால், உருவெடுக்கும் விண்மீன் கருஉமிழும் அகச்சிவப்புக் கதிர்களை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியில் உள்ள படக்கருவி இனம் காணும்.
- கடந்த செப்டம்பர் 11 அன்று ஓராயன் நெபுலாவில் விண்மீன்கள் உருவாகும் பகுதியை இதன் அகச்சிவப்புக் படக்கருவி படம் பிடித்ததன் மூலம் விண்மீன் பிறப்பின் நான்கு கட்டத்தை ஆய்வாளர்கள் இனம் கண்டுள்ளனர்.

**முதற் கட்டம்**

- இழை போன்ற வடிவில் கூடுதல் அடர்த்தி கொண்ட பகுதி உருவாதல். ஏற்கெனவே உருவான நான்கு விண்மீன்கள் உமிழும் துகள்கள் சூறைக்காற்றைப் போல பரவி, ஓராயன் மேகத்தின் மீது மோதும்போது அதிர்வலைகளின் காரணமாக அங்கும் இங்கும் இழைகள் போன்ற திரள் அமைப்புகள் உருவாகின்றன.
- மேசையின் மீது ஊதினால் தொகுப்பாகத் தூசு திரள்வதுபோல இந்த இழையில் கன சென்டிமீட்டருக்குப் பத்து லட்சம் அணுக்கள் என்கிற அளவுக்குப் பொருள்களின் அடர்த்தி இருக்கும்.
- ஓரிடத்தில் கூடுதல் பொருள்கள் நெருக்கமாக இருந்தால், அவற்றின் மொத்த ஈர்ப்புவிசையின் அளவு கூடும். எனவே, அவை மேலும் மேலும் அண்டை அயலில் உள்ள பொருள்களைத் தம்முள் இழுக்கும் இதுவே கருவுறுதல் கட்டம்.

**இரண்டாம் கட்டம்**

- விண்மீனும் அதனைச் சுற்றி கோள்கள் திரளும் பகுதியும் உருவாதல். இழை போன்ற பகுதியில் ஒப்பீட்டு அளவில் கூடுதல் அடர்த்தி கொண்ட பகுதி அருகில் உள்ளப் பொருள்களைக் கவர்ந்திழுத்து, மேலும் அடர்த்தி உள்ள பகுதியாகத் திரளும்.
- பள்ளம் நோக்கி பாய்ந்து செல்லும் நீரைப்போலக் கூடுதல் ஈர்ப்பு விசை கொண்ட இந்தப் பகுதியை நோக்கி அருகில் உள்ள பொருள்கள் சென்று, இந்த மேகத்துண்டு சூரியக் குடும்பம் அளவுக்குப் பெரிதாக உருவாகும்.

**மூன்றாம் கட்டம்**

- விண்மீன் கரு உருவாதல். மேகத்துண்டின் மையத்தில் ஈர்ப்பு விசையின் காரணமாக மேலும் மேலும் அடர்த்தி கூடும். ஒரு கட்டத்தில் கனசதுர சென்டிமீட்டருக்குச் சுமார் செப்டில்லியன் அணுக்கள் என்ற அளவுக்கு அடர்த்தி கூடும்போது, விண்மீன் கரு வடிவம் பெறுகிறது.
- விண்மீன் கருவைச் சுற்றி பந்து போல மேகத்துண்டு படர்ந்திருக்கும். HST-10 எனும் இந்த விண்மீன் கரு வளர்ந்து வருவதை இங்கே நாம் காணலாம்.

**நான்காம் கட்டம்**

- விண்மீனின் மையத்தில் அழுத்தம் – வெப்பத்தின் காரணமாக ஹைட்ரஜன் அணுக்கள் பிணைந்து ஹீலியம் உருவாகும் அணுக்கரு பிணைவு ஏற்படும் விண்மீன் தானே ஒளிரத் தொடங்கும்.
- ஈர்ப்பு விசையால் மேலும் மேலும் மையத்தில் அடர்த்தி கூடி, இறுதியில் கனசதுர சென்டிமீட்டருக்கு நூறு செப்டில்லியன் என்கிற அளவுக்கு அடர்த்தி கூட குழந்தை விண்மீன் குடும்பம் தன் கோள்களுடன் உருவாகும்.
- கருப்பையிலிருந்து குழந்தை வெளியே வருவது போல, பிறந்த விண்மீன் வீசும் கதிரில் கூடு போல அதனைச் சுற்றியிருந்த தூசு தும்புகள் அடித்து வெளியேற்றப்பட்டு, விண்மீன் வெளிப்படும். இங்கே ஓராயன் நெபுலாவில் பிரசவமாகிய ஓராயன் A தீட்டா 2 எனும் விண்மீனைக் காணலாம்.

## பிஎஃப்ஐ

- கேரளாவில் செயல்பட்டு வந்த நேஷனல் டெவலப்மென்ட் பண்ட், கர்நாடகாவைச் சேர்ந்த கர்நாடக ஃபோரம் ஃபார் டிக்னிட்டி, தமிழகத்தைச் சேர்ந்த மனித நீதி பாசறை ஆகிய அமைப்புகள் இணைந்து கடந்த 2006-ம் ஆண்டு நவம்பர் மாதம் பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்பைத் தொடங்கின.
- டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பிஎஃப்ஐ அமைப்புக்கு 24 மாநிலங்களில் கிளைகள் உள்ளன.
- கேரளாவில் பேராசிரியர் ஜோசபின் கைகள் வெட்டப்பட்ட சம்பவம், டெல்லி ஷாகின் பாக் போராட்டம், உத்தரப் பிரதேசத்தின் கான்பூர், பிரயாக்ராஜ், சஹாரன்பூர் கலவரம், கர்நாடகா ஹிஜாப் கலவரம், ராஜஸ்தானின் உதய்பூரில் கண்ணையா லால் கொலை மற்றும் கேரளா, கர்நாடகாவில் பல்வேறு கொலை வழக்குகளில் பிஎஃப்ஐ அமைப்புக்கு தொடர்பிருப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது.
- ஜார்க்கண்ட் மாநிலத்தில் மட்டும் பிஎஃப்ஐ அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

- பிஹார் தலைநகர் பாட்னாவுக்கு பிரதமர் மோடி சென்றபோது, அவரைக் கொல்லத் திட்டமிட்டதாக 3 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கும், பிஎஃப்ஐ அமைப்புக்கும் தொடர்பு.

## P.M.துரித சக்தி திட்டம்

- மக்களின் அன்றாட வாழ்க்கை, அத்தியாவசியப் பொருள்களின் சரக்குப் போக்குவரத்தைச் சார்ந்திருக்கிறது. இப்போதைய நிலையில், ஜிடிபியில் 14% முதல் 15% வரை சரக்குப் போக்குவரத்துக்கான செலவு காணப்படுகிறது. அதை ஒற்றை இலக்கத்துக்கு குறைப்பதுதான் தேசிய சரக்குக் கையாளுகை கொள்கையின் இலக்கு.
- சாலை மார்க்கமான சரக்குப் போக்குவரத்தைக் குறைத்து ரயில் மூலமாகவும், நீர்வழித் தடங்கள் மூலமாகவும் கொண்டு செல்ல முடிந்தால் போக்குவரத்துச் செலவு கணிசமாகக் குறையும்.
- ஜப்பானும், ஜெர்மனியும் அதை நடைமுறைப்படுத்தியிருக்கின்றன. அந்த நாடுகளில் சரக்குப் போக்குவரத்துக்கான செலவு, ஜிடிபியில் 8% மட்டுமே. ஐந்து ஆண்டுகளில் இந்தியாவையும் அந்த நிலைக்குக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதுதான் சரக்குக் கையாளுகை கொள்கையின் நோக்கம்.
- போக்குவரத்துத்துறை எதிர்கொண்டு வரும் சவால்களுக்குத் தீர்வு காண்பதோடு, பி.எம்.துரித சக்தி திட்டத்தை இக்கொள்கை ஊக்குவிக்கும்.
- போக்குவரத்து செலவையும், சேமிப்பு கிடங்குகளின் செலவையும் குறைப்பதுடன், எண்ம முறையிலான நடவடிக்கைகள் மூலம் லஞ்ச ஊழலோ, கால விரயமோ இல்லாமல் சரக்குப் போக்குவரத்தை விரைவுபடுத்துவதும் அரசின் திட்டம்.
- நவீன போக்குவரத்து வசதிகளால் மட்டுமே இந்தியப் பொருள்கள் சர்வதேச சந்தைகளைச் சென்றடைய முடியும். ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக இந்தியாவை உருவாக்க மோடி அரசு திட்டமிட்டிருக்கும் நிலையில், தங்குதடையில்லா சரக்குப் போக்குவரத்து அத்தியாவசியமாகிறது.
- பி.எம்.துரித சக்தி திட்டம், துறைமுகங்களை ஒருங்கிணைத்து அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தும் 'சாகர் மாலா' திட்டம் ஆகியவற்றைத் தொடர்ந்து தனது அரசின் தேசிய சரக்கு கையாளுகை கொள்கையை இப்போது வெளியிட்டிருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.
- அதிகரித்துக்கொண்டே போகும் எரிசக்தி செலவும், சுங்கக் கட்டணமும் அதன் இலக்குக்குத் தடைகள் என்பதையும் அரசு உணர வேண்டும்.

## ஹிலாரி மான்ட்டல்

- புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரும், இருமுறை புக்கர் பரிசை வென்ற முதல் பெண்ணுமான ஹிலாரி மான்ட்டல் காலமானார். அவருக்கு வயது 70.
- சிறந்த ஆங்கில புதினங்களுக்கு அறிவிக்கப்படும் 'புக்கர் பரிசை' இருமுறை வென்ற முதல் பெண் இவராவார். இவரது படைப்புகள் அனைத்தும் பிரிட்டனின் சரித்திர சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை.
- உல்ஃப் ஹால் என்ற புதினம் கடந்த 2009-ஆம் ஆண்டும், பிரிங் அப் தி பாடீஸ் என்ற அவரின் மற்றொரு நாவல் கடந்த 2012-ஆம் ஆண்டும் புக்கர் பரிசு பெற்றன.

## ஐ.நா. சீர்திருத்தத்துக்குத் தடை

- ஐ.நா. அமைப்புகளின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மை இல்லாததே அவற்றின் சீர்திருத்தத்துக்குத் தடையாக இருப்பதாக இந்தியா, பிரேஸில், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளைக் கொண்ட ஜி4 கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

## நீரில்லாத நாள்

- 2018 ஏப்ரல் 12 ஆம் தேதி 'டே ஜீரோ'
- 'டே ஜீரோ' என்றால், அன்று முதல் கேப் டவுன் நகரக் குழாய்களில் தண்ணீர் வராது என்பது பொருள். கேப் டவுன் நகர மக்களுக்கு இனி குடிப்பதற்கு நீர் கிடைக்காது என்கிற செய்தியைக் கேட்டதும் உலகமே சற்று பதற்றமடைந்தது.
- கேப் டவுனுக்குத்தானே தண்ணீர் கிடைக்காது, அதற்கு உலகம் ஏன் பதற்றமாக வேண்டும் என்று கேட்கலாம். அதற்குக் காரணம் இருந்தது. கேப் டவுனைத் தொடர்ந்து உலகின் பல நகரங்கள் ஏன், நம் பெங்களூரு உட்பட 'டே ஜீரோ' பட்டியலில் இணையக் காத்திருக்கின்றன. அதனால்தான் அந்தப் பதற்றம்.

### மறைநீர் ஏற்றுமதி

- ஓர் ஆரஞ்சுப் பழத்தின் மறைநீர் அளவு ஏறத்தாழ 80 லிட்டர். 2017இல் மேற்கு கேப் டவுன் மாநிலத்தில் 2,31,000 டன் ஆரஞ்சுப் பழங்கள் ஏற்றுமதியாகின. அதன் மறைநீர் அளவு 11,500 கோடி லிட்டர்.

- சொந்த நகரத்துக்குத் தண்ணீர் இல்லாதபோது மறைநீர் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தி இருந்தால் அந்நகரம் 'டே ஜீரோ' நெருக்கடிக்கு ஆளாகியிருக்காது.

## ஆபரேஷன் மேக சக்ரா

- இணையத்தில் நடைபெறும் சிறாருக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கையில், பாதிக்கப்பட்டவர்கள், குற்றவாளிகள், மேலும் இக்குற்றத்தில் தொடர்புடைய பிற நபர்கள் உலகில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால், இக்குற்றங்களைக் கட்டுப்படுத்த சர்வதேச அளவில் பல்வேறு சட்ட அமலாக்க முகமைகளின் ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

## சப்தகோசி அணை திட்டம்

- நேபாளத்தில் உற்பத்தியாகி பிதார் வழியே இந்தியாவுக்குள் நுழையும் சப்தகோசி நதியில் அணை கட்டுவது தொடர்பான பணிகளை முன்னெடுக்க கூட்டத்தின் போது முடிவெடுக்கப்பட்டது.
- அணை கட்டுமானம் சார்ந்த பணிகள், நீர்த்தேக்கப் பகுதிகள், சமூக, சுற்றுச்சூழல் தாக்கங்கள் உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.
- இந்தியா-நேபாளம் இடையே கடந்த 1996 ஆம் ஆண்டில் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தின் கீழ் மஹாகாளி நதி, அதன் கிளை நதிகள் உள்ளிட்டவற்றை மேம்படுத்துவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது.

## க்வாட் நாடுகள்

- இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் 'க்வாட்' கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ளன.
- இணையவழி குற்றங்களைத் தடுப்பதற்காக கூட்டமைப்பின் நாடுகள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம்.
- வெளிப்படைத்தன்மை நிறைந்த பாதுகாப்பான இணையவெளியை ஏற்படுத்துவதற்கு நாடுகள் உறுதியேற்கின்றது.

### பெரும் பாதிப்பு

- இணையவழி குற்றங்களானது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சியையும் பாதுகாப்பையும் பாதிக்கின்றன.
- தேசியப் பாதுகாப்பு, நிதித்துறை, தொழில் நிறுவனங்கள், இணையக் கட்டமைப்புகள், தனிநபர்களின் தரவுகள் உள்ளிட்டவையும் இணையவழி குற்றங்களால் பாதிக்கப்படுகின்றன.
- இணையவழி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள கூட்டமைப்பு நாடுகள் உறுதி ஏற்கின்றன.

## தேர்தல் ஆணையத்தின் பிடி இறுகட்டும்

- இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கட்சிகள் 6, அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகள் 54, பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படாத கட்சிகள் 2,796 என மொத்தம் 2,858 கட்சிகள் இருக்கின்றன. இவற்றில் 2 சதவீதக் கட்சிகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள்
- நாட்டில் சாதி, மதம், இனம், பிரிவு எனத் தங்கள் அடையாளத்தை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடிய 'அடையாள அரசியல்' செய்யும் சிறு கட்சிகள் அல்லது 'லெட்டர் பேட்' கட்சிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதற்குக் கடிவாளம் இடப்பட வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும், தேர்தல் அரசியலில் பங்கெடுக்கும் கட்சிகளும் பொதுவாக ஆண்டுதோறும் தேர்தல் ஆணையம் எதிர்நோக்கும் ஆண்டுவாரியான தணிக்கை ஆவணங்கள் தொடங்கி பங்களிப்பு அறிக்கை, தேர்தல் செலவின அறிக்கை, அலுவலக நிர்வாகிகள் விவரம், வங்கிக் கணக்கு உட்பட நிதி பரிவர்த்தனை தொடர்பான விவரங்கள் அடங்கிய அறிக்கைகளை அளிப்பது வரை ஆணையத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்றன.
- ஆனால், இதில் எதையும் பூர்த்தி செய்யாத, தேர்தலிலும் பங்கெடுக்காத 'லெட்டர் பேட்' கட்சிகளின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை இல்லை.
- இதுபோன்ற சூழலில் இக்கட்சிகளின் தரவுகளைத் தேர்தல் ஆணையம் பராமரிப்பதும் தேவையற்ற ஒன்று. வெறுமனே கட்சிப் பெயரை வைத்துக்கொண்டு வசூலில் ஈடுபடுவது, தேர்தல் நேரத்தில் பெரிய கட்சிகளை ஆதரிக்கும் சாக்கில் பலன்களை எதிர்பார்ப்பது எனப் பல சிறு கட்சிகளின் மீது குற்றச்சாட்டுகள் உள்ளன.

- 2018-19 நிதியாண்டில் அங்கீகரிக்கப்படாத கட்சிகளில் 3.39 சதவீதம், அதாவது 78 கட்சிகள் மட்டுமே தேர்தல் ஆணையத்துக்கு அறிக்கை அளித்துள்ளன என்பதிலிருந்து 'லெட்டர் பேட்' கட்சிகள் மீது தேர்தல் ஆணையத்தின் பிடி இறுக வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

## வையத் தலைமை கொள்வோம்

- இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளை உள்ளடக்கிய நாற்கர கட்டமைப்பின் (க்வாட்)
- சாமர்கண்ட் மாநாட்டைத் தொடர்ந்து எஸ்சிஓ அமைப்பின் தலைமைப் பொறுப்பை சுழற்சி முறையில் இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. அடுத்த ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதி வரை அந்த அமைப்புக்கு இந்தியா தலைமை வகிக்கும்.
- ஐ.நா.வின் முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பொறுப்பையும் வரும் டிசம்பரில் சுழற்சி முறையில் இந்தியா ஏற்கிறது.
- ஜி20 மாநாட்டை இந்தியா தலைமையேற்று நடத்த இருப்பதால், அந்த அமைப்பின் செயல்திட்டத்தை வகுப்பதற்கான வாய்ப்பு இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது.
- பொதுவாக ஜி20 அமைப்பு என்பது ஏனைய அமைப்புகளிலிருந்து சற்று வித்தியாசமானது. இதில், வளரும் நாடுகள், வளர்ந்த நாடுகள் என்ற பேதமில்லை.
- இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் சம அந்தஸ்தை பெறுகின்றன. ஆகையால், அமைப்பின் செயல்பாடுகளில் மேலை நாடுகள் அதிக ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பதையும், பெரிய பொருளாதார சக்திகள் தங்களின் எதிர்பார்ப்புகளைத் திணிக்காமல் இருப்பதையும் இந்தியா உறுதிப்படுத்த வேண்டும்.

## ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு திட்டம்

- மத்திய அரசு சார்பில் கடந்த 2018-ம் ஆண்டு செப்டம்பர் 23-ம் தேதி ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி, ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரை காப்பீடு வழங்கப்படுகிறது.

### டிஜிட்டல் சுகாதாரத் திட்டம்

- பொதுமக்களின் உடல்நிலை தொடர்பான அனைத்து விவரங்களும் ஒரே டிஜிட்டல் அட்டையில் சேமித்து வைக்கப்படும்.
- மருத்துவரை சந்தித்து ஆலோசனை கேட்கும் நோயாளி, இனி காகித ஆவணங்களை எடுத்துச் செல்லத் தேவையில்லை. டிஜிட்டில் அட்டை மூலம் நோயாளியின் உடல் நிலை தொடர்பான அனைத்து விவரங்களையும் மருத்துவர் எளிதாகக் அறிந்து கொள்ள முடியும்.
- தேசிய அளவில் 'ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம்' என்ற பெயரில் தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டம் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது.

## பூமியில் 20 ஆயிரம் லட்சம் கோடி எறும்புகள்

- டைனோசர் காலத்தில் இருந்தே பூமியில் எறும்புகள் வாழ்வது உறுதி செய்யப்பட்டு உள்ளது.
- அண்டார்டிகா, கிரீன்லேண்ட், ஐஸ்லாந்து மற்றும் குறிப்பிட்ட சில தீவுகளைத் தவிர்த்து உலகின் அனைத்து பகுதிகளிலும் எறும்புகள் வாழ்கின்றன.
- தற்போது உலகம் முழுவதும் 15,700-க்கும் மேற்பட்ட எறும்பு இனங்கள் உள்ளன.
- பூமியில் வாழும் மொத்த எறும்புகளின் எடை, பறவைகள், பாலூட்டிகளின் எடையை விட அதிகமாகும்.
- பூமியில் தற்போது வாழும் மனிதர்களின் எடையில் சுமார் 20 சதவீதம் அளவுக்கு எறும்புகளின் எடை உள்ளது.
- உலகின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாப்பதில் எறும்புகளின் பங்களிப்பு மிக முக்கியமானது. அவை மண்ணை வளப்படுத்துகின்றன.
- அதாவது மண்ணில் காற்று உட்புகுவதற்கான பணியை எறும்புகள் மேற்கொள்கின்றன. இதன் மூலம் செடி, மரங்களின் வேர்களுக்கு நீர் மற்றும் ஆக்சிஜன் எளிதாக கொண்டு செல்லப்படுகிறது.
- விதைகளை மண்ணுக்கு அடியில் எறும்புகள் எடுத்துச் செல்கின்றன. அங்கு விதைகளின் மேற்புறத்தில் உள்ள 'எலையோசோம்' பகுதியை எறும்புகள் உணவாக உட்கொள்கின்றன.
- இதன்காரணமாக விதைகளில் இருந்து செடிகள் மிக எளிதாக முளைக்கின்றன.

- பூமியில் பூச்சியினங்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதில் எறும்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எறும்புகள் இல்லையென்றால் பூச்சிகளின் இனப்பெருக்கம் அதிகரித்து பெரும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கு வழிவகுத்துவிடும்.

## முடிவுக்கு வருகிறதா கோவிட்-19?

- உலகளாவிய கோவிட் பெருந்தொற்று முடிவுக்கு வரும் காலம் கண்ணுக்குத் தெரிவதாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ராஸ் அதனாம் கேப்ரியேசஸ் தெரிவித்துள்ளார்.
- இந்தியாவில் பெரும்பாலான மக்கள் இரண்டு தவணைத் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்ட பிறகு, கோவிட் குறித்துப் பெரிதாகக் கவலைப்பட வேண்டியதில்லை என்கிறார் மூத்த வைராலஜி நிபுணர் ககன்தீப் காங்.
- புதிய வேற்றுருவால் மக்களுக்கு ஆங்காங்கே தொற்று ஏற்படும்போதும் அது தீவிரமடையவில்லை என்பது முக்கியமானது.
- தடுப்பூசி செலுத்திக் கொண்டதால் மக்களிடையே நோய்த் தடுப்பாற்றல் அதிகரித்திருப்பதும் இதற்குக் காரணம் என்கிறார் ககன்தீப் காங்.
- புதிய வேற்றுரு, அதன் தீவிரமான பரவல், மக்களின் உடல்நிலையில் அது ஏற்படுத்தும் தீவிரப் பாதிப்பு இவை மூன்றும் ஒருசேர நிகழ்ந்தால் மட்டுமே மீண்டுமொரு கரோனா அலை உருவாவதற்கு வாய்ப்பு உள்ளது.
- மார்ச் 2020 முதல் பதிவாகிவரும் கோவிட்-19 இறப்புகளில் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் மிகக் குறைவாக இறப்புகள் பதிவாகியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருக்கிறது இது நம்பிக்கை அளிக்கும்விதமாக இருக்கிறது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் கோவிட் தொற்று குறித்து மக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. அந்த நோயைக் கையாள்வதில் மருத்துவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.
- நோய்ப் பரவலும் அதன் தீவிரமும் மட்டுப்பட்டிருக்கும் நிலையில், புதிய அலை குறித்த தேவையற்ற அச்சங்களை விடுத்து, மக்களிடையே பரவிவரும் இதர பருவகால நோய்களில் கவனத்தைச் செலுத்துவதே தற்போது அவசர, அவசியத்தேவை.

## தில்லி - டாக்கா நட்புறவு!

- நல்ல வேலிகள் நல்ல அண்டை வீட்டுக்காரர்களைத் தருகின்றன என்பது ராபர்ட் பிராஸ்ட்டின் வெளியுறவுக் கொள்கை குறித்த கருத்து.
- 1947 பிரிவினையின் போதே தொடங்கிவிட்ட பிரச்சனைதான் என்றாலும்கூட, வங்கதேசப் பிரிவினைக்குப் பிறகு இருநாட்டு உறவுக்கும் இடையே நதிநீர்ப் பிரச்சனை சுமூகமாக உறவு ஏற்படாமல் தடுத்து வந்தது.

### தீஸ்தா நதிநீர் பிரச்சனை

- இந்தியாவிலிருந்து வங்கதேசம் வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் 54 நதிகள் கலக்கின்றன. அவை எல்லாமே கங்கை, பிரம்மபுத்ரா நதிகளின் கிளை நதிகள்.
- அவற்றின் மிக முக்கியமானது தீஸ்தா. மேற்கு வங்க மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல் தீஸ்தா நதிநீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது என்பதால், இந்த அரசு முறைப் பயணத்திலும் பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.
- தீஸ்தா நதிநீர்ப் பிரச்சனை எந்த அளவுக்கு வங்கதேச அரசியலில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறதோ, அதே போல மேற்கு வங்க மாநில அரசியலிலும் முக்கியத்துவம் பெறுகிறது.
- காவிரி நதிநீர்ப் பிரச்சனையில் கர்நாடகம் கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதுபோல, மம்தா பானர்ஜி தலைமையிலான மேற்கு வங்க அரசும் தீஸ்தா நதிநீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு காண ஒத்துழைக்க மறுக்கிறது.

### குஷியாரா நதிநீர்ப் பிரச்சனை

- தீஸ்தா நதிநீர் குறித்த பேச்சுவார்த்தை தொடரும் நிலையில், இந்தியா வங்கதேசத்துக்கு சில சலுகைகளை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.
- வங்கதேசத்தின் தேவைகளையும் உணர்வுகளையும் இந்தியா மதிக்கிறது என்பதை உணர்த்தும் விதத்தில் குஷியாரா நதிநீர் பிரச்சனைக்கு பிரதமர் ஷேக் ஹசீனாவின் விஜயத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.
- 1996 கங்கை நதிநீர் ஒப்பந்தத்துக்குப் பிறகு கையொப்பமாகும் அடுத்த ஒப்பந்தம் குஷியாரா நதிநீர் ஒப்பந்தம்தான். பரக் நதியின் கிளை நதியான குஷியாரா, அஸ்ஸாம் வழியாகப் பாய்ந்து வங்கதேசத்துக்குள் நுழைந்து வங்காள விரிகுடாவை அடைகிறது.

- இந்த ஆண்டு வங்கதேசத்தில் மிகப்பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. குறிப்பாக அஸ்ஸாமின் கீழ்ப்பகுதியும், வங்கதேசத்தின் சில்ஹட் பகுதியும் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டன.
- இரண்டு நாடுகளுக்கும் இடையே வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துவதிலும், வேளாண்மை தொடர்பாகவும் கூடுதல் நட்புறவும், புரிதலும் தேவை என்பதை அது உணர்த்தியது.
- கடந்த ஒரு நூற்றாண்டாக பரக் நதியில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக அந்த நதியின் பெரும்பான்மையான தண்ணீர் குஷியாரா மூலம் இப்போது பாய்கிறது.
- குறைந்த அளவுதான் சுர்மா நதிக்குச் செல்கிறது. அதனால் மழைக்காலங்களில் கடுமையான வெள்ளப்பெருக்கு, அதிக தண்ணீர் தேவைப்படும் ஏனைய பருவங்களில் குஷியாராவில் தண்ணீர் வறட்சியும் காணப்படுகிறது. இந்தப் பிரச்சனைக்கு தற்போதைய ஒப்பந்தம் ஓரளவுக்குத் தீர்வு அளிக்கும்.

### குஷியாரா ஒப்பந்தம்

- இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையே கையொப்பமாகி இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, குளிர்காலத்திலும், கோடைக்காலத்திலும் 2,500 கன அடி தண்ணீரை குஷியாராவில் திறந்துவிட இந்தியா ஏற்றுக்கொண்டிருக்கிறது.
- அதன் மூலம் 10,000 ஹெக்டேர் விளைநிலங்களும், 10 லட்சத்துக்கும் அதிகமான மக்களும் பயனடைவார்கள். சில்ஹட் பகுதியில் உள்ள கால்வாய்கள் மூலம் அந்தப் பகுதி நெல் விவசாயிகள் பயனடைவார்கள்.

### எரிசக்தி பிரச்சனை

- ராம்பால் என்கிற இடத்தில் இரண்டு பில்லியன் டாலர் செலவில் அமைக்கப்படும் அனல்மின் நிலையத்துக்கு இந்திய 1.6 பில்லியன் டாலர் உதவி அளிக்க ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- ராம்பால் அனல்மின் நிலையத்தின் முதல் யூனிட் செயல்படத் தொடங்கினால் வங்கதேசத்தின் மின்சாரத் தேவை ஓரளவுக்கு ஈடுகட்டப்படும்.

## காமன்வெல்த் வரலாற்றில் நிலைக்குமா?

### காமன்வெல்த் என்றால் என்ன?

- காமன்வெல்த் நாடுகள் என்பவை 56 நாடுகள் அடங்கிய ஒரு குழு. இந்த நாடுகள் பெரும்பாலும் முன்பு பிரிட்டனால் ஆளப்பட்டவை. பிரிட்டிஷ் அரசின் குடியேற்றங்கள் என்றும் சொல்லலாம்.
- காமன்வெல்த்தின் பெரும்பாலான உறுப்பு நாடுகள் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களில் உள்ளன. சில பசிபிக் நாடுகளும் இதில் அடக்கம்.
- காமன்வெல்த் நாடுகளில் பல வளர்ந்துவரும் பொருளாதார நிலையில் உள்ளன. ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகள் காமன்வெல்த்தின் வளர்ந்த நாடுகள்.

### காமன்வெல்த் நாடுகளும் பிரிட்டன் முடியாட்சியும்

- உலகெங்கும் பிரிட்டனின் முடியாட்சி ஆளுகைக்கு உட்பட்ட பல நாடுகளில் மக்களாட்சி மலர்ந்த காலகட்டத்தில் அரசியாக இருந்தவர் இரண்டாம் எலிசபெத். அவருடைய காலத்தில், அவருடைய கண்முன்னே, அந்த நாடுகளின் சமூகப் பொருளாதாரச் சூழலில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது.
- பிரிட்டன் முடியாட்சியுடனான வரலாற்று உறவுகளிலிருந்து விடுபடவும், மக்களாட்சியை நிறுவவும் பல நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. 2021-ல் பிரிட்டன் மன்னர்/அரசியை அரச தலைவர் பதவியிலிருந்து நீக்கிய 18ஆவது நாடானது பார்படாஸ்.
- மன்னருக்குப் பதிலாகத் தலைமைப் பதவியில் ஒரு தேசிய அரசாங்கச் செயலாளரை பார்படாஸ் நியமித்தது.

### உறுப்பு நாடுகளின் பார்வை

- பரந்த காமன்வெல்த் குழுவின் உறுப்பினர்களாக இந்தியா உள்ளிட்ட பிற தெற்காசிய நாடுகள் உள்ளன. காமன்வெல்த் குழுவின் கூட்டங்கள் மூலமாக, அதன் உறுப்பு நாடுகளிடையே கொள்கை ஒருங்கிணைப்பு வலுவாக வளர்ந்து வருகிறது என்பதை மறுக்க முடியாது.

### முடிவுக்கு வருகிறதா முடியாட்சி

- ஆஸ்திரேலியாவைப் பிரிட்டன் முடியாட்சியிலிருந்து படிப்படியாக விடுபட்டு, முழுமையான குடியரசாக மாறும் பணியைத் தொடங்குவதற்காக ஆஸ்திரேலியப் பிரதமர் ஆண்டனி அல்பானீஸ் தலைமையிலான அரசாங்கம் ஜுன் 2022 இல் மாட் திஸ்லெத்வைட் என்னும் அமைச்சரை நியமித்தது.

- அதிகாரப்பூர்வமாக பிரிட்டன் முடியாட்சியுடனான உறவுகளைத் துண்டிப்பது குறித்த வாக்கெடுப்பு அங்கே இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ளது.
- நியூசிலாந்தின் பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன் தனது நாடு மன்னர் சார்லஸை ஆதரிக்கும் என்று கூறியுள்ளார். அதே நேரத்தில் நியூசிலாந்து 'உரிய நேரத்தில்' குடியரசாக மாறும் என்று அவர் கூறியுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## முப்படை தலைமை தளபதி அனில் சவுகான்

- இந்திய ராணுவத்தின் முப்படைகளும் இணைந்து செயல்படுவதற்காக, முப்படை தலைமை தளபதி பதவி உருவாக்கப்பட்டது.
- நாட்டின் முதல் முப்படை தலைமை தளபதியாக ஜெனரல் பிபின் ராவத் கடந்த 2020-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி பதவி ஏற்றார். இந்நிலையில், தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூர் அருகே நேரிட்ட ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கி, கடந்த ஆண்டு டிசம்பர் 15-ம் தேதி பிபின் ராவத் உயிரிழந்தார்.
- புதிய முப்படை தலைமை தளபதியாக ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் அனில் சவுகானை மத்திய அரசு நியமித்துள்ளது. இவர், ராணுவ விவகாரத் துறையின் செயலாகவும் செயல்படுவார் என்று பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- ராணுவத்தில் இவர் ஆற்றிய சேவைக்காக பரம் விசிஷ்ட் சேவா, உத்தம் யூத் சேவா, அதி விசிஷ்ட் சேவா, சேனா மற்றும் விசிஷ்ட் சேவா பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

## புதிய அட்டர்னி ஜெனரலாக ஆர்.வெங்கடரமணி

- அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.வெங்கடரமணி, அரசியலமைப்பு சட்டம், சுற்றுச்சூழல், தீர்ப்பாயம், குழந்தைகள் மற்றும் பெண்கள் உரிமை, வரிச்சட்டங்களில் நிபுணத்துவம் பெற்றார். இவர், மத்திய சட்ட ஆணையத்தின் உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.
- கடந்த 1977-ம் ஆண்டு தமிழ்நாடு பார்கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்து 1979-ம் ஆண்டு முதல் உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பி.பி.ராவிடம் ஜூனியராக சேர்ந்து பணியாற்றியுள்ளார்.
- உச்சநீதிமன்றத்தில் 42 ஆண்டுகளாக மூத்த வழக்கறிஞராக பணியாற்றியுள்ளார்.
- வெங்கடரமணியை புதிய அட்டர்னி ஜெனரலாக நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உத்தரவு பிறப்பித்தார்.

## கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டம்

- இந்த திட்டங்களின் கீழ், ரேஷன் அட்டைதாரர்களுக்கு, ஒருவருக்கு மாதம் 5 கிலோ என்ற வீதத்தில் உணவு தானியங்களை இலவசமாக வழங்கப்பட்டன. இத்திட்டம் தொடக்கத்தில் 2020 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான 3 மாதங்களுக்கு அறிவிக்கப்பட்டது.
- அக்டோபர் முதல் டிசம்பர் வரை அடுத்த 3 மாதங்களுக்கு பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் 80 கோடி பேருக்கு இலவசமாக உணவு தானியங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஏழாவது கட்டமாக பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

## தேசிய விளையாட்டுப் போட்டி

- 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் குஜராத்தில் தொடங்குகின்றன.
- குஜராத்தில் உள்ள அகமதாபாத், காந்தி நகர், சூரத், வதோதரா, ராஜ்கோட், பாவ்நகர் ஆகிய 6 நகரங்களில் நடைபெறுகிறது.
- இந்த விளையாட்டில் 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 7 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். மொத்தம் 36 விளையாட்டுகளில் போட்டி நடைபெற உள்ளது.

## காலனி மனப்பான்மையை களைதல்

### அடிமை மனநிலையிலிருந்து விடுதலை

- 1500க்கும் மேற்பட்ட பழமையான மற்றும் பொருத்தமற்ற சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.
- இந்திய கடற்படைக்கொடி காலனித்துவ சுவடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டது.
- பட்ஜெட் தாக்கல் தேதி மாற்றப்பட்டது, பொது மற்றும் ரயில்வே பட்ஜெட்கள் இணைக்கப்பட்டன.

- விஐபி கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி, அரசு வாகனங்களில் சிகப்பு விளக்குகள் பயன்படுத்தப்படுவது ஒழிக்கப்பட்டது.

### அனைத்து அமைப்புகளிலும் ஊழலில் இருந்து விடுதலை

- இடைத்தரகர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. பயனாளிகள் நேரடியாக ஆதரவைப் பெறுகிறார்கள்.
- போர்டல் மூலம் குறைகளுக்கு உடனடி தீர்வு
- வருமான வரி மற்றும் அமலாக்கத்துறை போன்ற அமைப்புகள் ஊழலில் ஈடுபடுவோருக்கு எதிராக செயல்படுகின்றன.

### குப்பை கூளங்கள் மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கில் இருந்து விடுதலை

- தூய்மை இந்தியா இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியது. தூய்மை ஒரு வாழ்க்கை முறையாக மாறுகிறது.
- ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிற்கு எதிராக இந்தியா ஒன்றுபட்டது. அனைத்து வயதினரும் இதில் பங்களிக்கின்றனர்.

### ரசாயனமில்லாத விவசாயம்

- நாடு முழுவதும் விவசாயிகள் இயற்கை விவசாய முறைகளை பின்பற்றி வருகின்றனர்.
- இயற்கை விவசாயத்துறை வளர்ச்சியடைகிறது.

## பிஎஃப்ஐ உட்பட 9 அமைப்புகளுக்கு 5 ஆண்டுகள் தடை

- உத்தரப் பிரதேச மாநிலம் அலிகர் நகரில் இந்திய இஸ்லாமிய மாணவர்கள் இயக்கம் (சிமி) கடந்த 1977-ல் தொடங்கப்பட்டது. இந்தியாவை இஸ்லாமிய நாடாக மாற்ற வேண்டும் என்பதே இதன் நோக்கமாக இருந்தது.
- இந்திய அரசுக்கு எதிராகச் செயல்பட்டு வந்த இந்த அமைப்பை, 2001-ம் ஆண்டில் மத்திய அரசு தடை செய்தது.
- இந்நிலையில், பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா (பிஎஃப்ஐ) அமைப்பு கடந்த 2006-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. சிமி அமைப்பின் மறு அவதாரம் என்றழைக்கப்பட்ட பிஎஃப்ஐ அமைப்புக்கு 24 மாநிலங்களில் கிளைகள் உள்ளன.
- சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் (1967) 3-வது பிரிவின்கீழ், பிஎஃப்ஐ மற்றும் கேம்பஸ் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா (சிஎஃப்ஐ) உள்ளிட்ட அதன் 8 துணை அமைப்புகளும் தீவிரவாத அமைப்புகள் என அறிவிக்கப்படுகிறது.
- இந்த 9 அமைப்புகளுக்கும் 5 ஆண்டுகளுக்குத் தடை விதிக்கப்படுகிறது. இந்த தடை உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது.

### தடை செய்யப்பட்ட அமைப்புகள்

- ரிஹாப் இந்தியா ஃபவுண்டேஷன் (ஆர்ஐஎஃப்), கேம்பஸ், ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா (சிஎஃப்ஐ), அனைத்து இந்திய இமாம்கள் கவுன்சில் (ஏஐஐசி), நேஷனல் கன்ஃபெடரேஷன் ஆஃப் ஹியூமன் ரைட்ஸ் ஆர்கனைசேஷன் (என்சிஎச்ஆர்ஓ), நேஷனல் விமன்ஸ் ஃப்ரன்ட் ஜுனியர் ஃபிரன்ட், எம்பவர் இந்தியா ஃபவுண்டேஷன் மற்றும் ரிஹாப்ஃபவுண்டேஷன் (கேரளா) ஆகியவை தடை செய்யப்பட்ட துணை அமைப்புகளாகும்.

### எதனால் தடை விதிப்பு?

- பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு 1993-இல் தொடங்கப்பட்ட தேசிய மேம்பாட்டு முன்னணி (என்டிஎஃப்), கர்நாடகஃபோரம் பார் டி கினிடி என்ற இரு அமைப்புகளையும் இணைத்து டிசம்பர் 16, 2006-இல் பிஎஃப்ஐ தொடங்கப்பட்டது.
- குடியுரிமை சட்டத் திருத்தத்துக்கு (சிஏஏ) எதிராக நாடு முழுவதும் நடைபெற்ற வன்முறை ஆர்ப்பாட்டத்தில் அவர்களின் பங்கு, கட்டாய மதமாற்றம், முஸ்லிம் இளைஞர்களை ஒருமுகப்படுத்துதல், பணப் பரிவர்த்தனை மோசடி, தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு, சமூக நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஆகிய காரணங்களால் தடை விதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
- முஸ்லிம் மதத்துக்கு எதிராகப் பேசும் ஹிந்து அமைப்பு தலைவர்களைக் குறிவைத்து கொல்லவும், அரசுக்கு எதிரான கருத்துகளைப் பரப்புவதற்கும்தனிக் குழுக்களை அந்த அமைப்பு வைத்துள்ளதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

### தடையால் என்னவாகும்?

- தடை விதிக்கப்பட்டுள்ள அமைப்புகளின் சொத்துகள், வங்கிக் கணக்குகள் மற்றும் அவர்களின் வழக்கமான செயல்பாடுகள் முழுமையாக முடக்கப்படும். தடைக்கான அரசாணை பிறப்பிக்கப்பட்ட 30 நாள்களுக்குள் தீர்ப்பாயத்தை உருவாக்கி, இந்த சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான காரணங்கள் உள்ளதா என விசாரிக்கப்படும். தீர்ப்பாயத்தில் பிஎஃப்ஐயும் வாதிடலாம்.

- 5 ஆண்டுகளுக்கு இந்தத் தடை உத்தரவு அமலில் இருக்கும். தேவைப்பட்டால் அரசு இதை நீட்டிக்கவும் செய்யலாம். இந்தத் தடை உத்தரவில் தொடர்புடையவர்கள் 14 நாள்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதியை அணுகி முடக்கப்பட்ட தமது நிதி, சட்டவிரோதச் செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாது என மனு அளிக்க வேண்டும். அதன் மீது மாவட்ட நீதிபதிதான் முடிவு எடுப்பார்.

## மோசடி பத்திர பதிவு ரத்து

- போலி, ஆள்மாறாட்டம் போன்ற காரணங்களின் அடிப்படையில், மோசடியாகப் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை பதிவுத்துறையே ரத்து செய்ய அதிகாரம் அளிக்கும்.
- சட்ட மசோதா கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு, கடந்த ஆகஸ்ட் 6-ம் தேதி குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- நில அபகரிப்பு செய்து, மோசடியாக பத்திரப்பதிவு செய்யப்பட்டது குறித்து மாவட்டப் பதிவாளர்களால் புகார் மனு பெறப்படும் பட்சத்தில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களை விசாரித்து, பதிவு செய்யப்பட்ட பத்திரம் போலியானது என்று கண்டறிந்தால், அதை ரத்து செய்ய மாவட்டப் பதிவாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- இந்த உத்தரவின் மீது பதிவுத் துறைத்தலைவரிடம் ஒரு மாதத்துக்குள் மேல் முறையீடு செய்யலாம். இதன் மூலம் போலி பத்திரப்பதிவை அறவே ஒழிக்க, சட்டத்தின் துணையுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### சிறைத்தண்டனை

- ஆவணங்களை முறையாக பரிசீலிக்காமல் உள்நோக்கத்துடன் போலியாக பதிவு செய்தால் சம்பந்தப்பட்ட ஆவணதாரர்கள் மற்றும் பதிவு அலுவலர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்து சிறைத் தண்டனை வழங்க சட்டத் திருத்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- அதன்படி, முறைகேடாக பதிவுகளை செய்த அலுவலருக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

## பாதுகாப்பான கருக்கலைப்பு செய்து கொள்ள உரிமை

- அனைத்துப் பெண்களுக்கும் பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வமான கருக்கலைப்புக்கு உரிமை உள்ளது.
- இந்த விஷயத்தில் திருமணமான பெண்கள் மற்றும் திருமணம் ஆகாதபெண்களுக்கு இடையே வேறுபாடு காட்டுவது அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது.
- திருமணமாகாத பெண்களும், ஒருமித்த உறவின் விளைவாக ஏற்பட்ட கர்ப்பத்தை 24 வாரங்களுக்குள் கருக்கலைப்பு செய்துகொள்ளலாம்.
- இதற்கான சட்டப்பூர்வ உரிமை அவர்களுக்கு உள்ளது. தேவையற்ற கர்ப்பத்தை கலைக்க ஒரு பெண்ணின் திருமண நிலையை காரணம் காட்ட முடியாது.
- தனியாக வாழும் அல்லது திருமணம் ஆகாத பெண்களுக்கு தேவையற்ற கர்ப்பத்தை கலைக்கும் உரிமை உள்ளது. இதை பறிப்பது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது.

## சிம்கார்டு வாங்க போலி ஆவணங்களை வழங்கினால் ஓராண்டு சிறை

- சிம்கார்டு மற்றும் ஓடிடி சேவைகளுக்கு போலி ஆவணங்களை தயாரித்து வழங்கினால் ஓராண்டு சிறை அல்லது ரூ.50,000 அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனையாக விதிக்க இந்திய தொலைத்தொடர்பு வரைவு மசோதா 2022-ன் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- குறிப்பாக, தொலைத்தொடர்பு சேவைகளை பயன்படுத்தி நடைபெறும் இணைய (சைபர்) குற்றங்களை தடுக்க இந்த மசோதாவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மாற்றம் ஏற்றம் தரும்

### வீட்டோ அதிகாரம்

- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் நோக்குடன் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் தொடங்கப்பட்டது.
- அதில் அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ஆகிய ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ளன. இந்த நாடுகளுக்கு பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டுவரப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் ரத்து செய்யும் 'வீட்டோ' அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## நிரந்தரமற்ற நாடுகள்

- இந்த ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் தவிர, இரு ஆண்டுகள் பதவிக்காலம் கொண்ட நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளாக 10 நாடுகள் உள்ளன. இந்தியா 2021 முதல் நிகழாண்டு இறுதி வரை நிரந்தரமற்ற உறுப்பு நாடாக செயல்பட்டு வருகிறது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகளைக் கடந்து விட்ட நிலையில், நிரந்தர உறுப்பு நாடுகளாக இடம்பெற ஜி-4 எனப்படும் இந்தியா, பிரேஸில், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் முயன்று வருகின்றன.
- தற்போதைய கட்டமைப்பின்படி, பூகோள-அரசியல் ரீதியான பிரதிநிதித்துவம் பாதுகாப்பு கவுன்சிலில் இல்லை; இது தவறானது, அநீதியானது என்று இந்தியா கூறி வருகிறது.
- நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளை அதிகரிக்க வேண்டும். வீட்டோ அதிகாரத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட சீர்திருத்தக் கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.
- நிரந்தரமற்ற உறுப்பு நாடாக இதுவரை எட்டுமுறை இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு. அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டாவது நாடு, பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் நாடு என ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இடம்பெற இந்தியாவுக்கு ஏராளமான தகுதிகள் உள்ளன.
- உலகம் முழுவதும் சச்சரவு நிகழும் நாடுகளில் நிறுத்தப்பட்டுள்ள ஐ.நா. அமைதி காக்கும் படைக்கு ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளைவிட இருமடங்கு படைவீரர்களை இந்தியா அனுப்பியுள்ளது.
- நிரந்தர உறுப்பு நாடுகளைப் போலவே, அணு ஆயுத வல்லமையையும் இந்தியா பெற்றிருக்கிறது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கத்தைப் பொறுத்தவரை அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அதற்கு ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் 10 நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளில் 9 நாடுகளும் ஆதரவளிக்க வேண்டும்.
- இந்தியாவை பாதுகாப்பு கவுன்சிலில் சேர்ப்பதற்கு சீனா தவிர ஏனைய நாடுகள் அனைத்தும் ஆதரவளித்து வந்தன.
- அமெரிக்காவின் முந்தைய அதிபர்கள் பராக் ஒபாமா, டொனால்ட் டிரம்ப் ஆகியோரின் நிர்வாகத்தில் இந்தியாவை பாதுகாப்பு கவுன்சிலில் சேர்ப்பதற்கு ஆதரவு தெரிவித்த நிலையில், இப்போது அதிபர் ஜோ பைடன் நிர்வாகத்தில் இந்த நிலைப்பாடு சற்று மாறியுள்ளது.
- அதன்படி, பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் கொண்டவர ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்தாலும், வீட்டோ அதிகாரத்தை ஐந்து நாடுகள் தவிர பிற நாடுகளுக்கு வழங்குவதற்கு உடன்படவில்லை.
- இஸ்ரேலுக்காக 1972 முதல் அமெரிக்கா 42 முறை தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது. 2011-ஆம் ஆண்டு முதல் சிரியா தொடர்பான தீர்மானத்தை ரஷியாவும் சீனாவும் நான்கு முறை வீட்டோவை பயன்படுத்தி ரத்து செய்துள்ளன. ஐ.நா. சபையில் உறுப்பு நாடாக தைவானை சேர்ப்பதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.
- வீட்டோ அதிகாரம் இல்லாமல் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்கிற இப்போதைய அமெரிக்காவின் நிலைப்பாடு ஏற்புடையதல்ல.
- அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம், விரிவான அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தம் ஆகியவற்றில் இந்தியா கையொப்பமிடாததைக் காரணம் காட்டி பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவை சேர்க்கக்கூடாது என சில நாடுகள் செய்யும் விவாதம் அர்த்தமற்றது. சீர்திருத்தப் பேச்சுவார்த்தையை தடுத்து வரும் சில நாடுகள் இவ்வாறு பிரச்சாரம் மேற்கொண்டுள்ளன.
- பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவைச் சேர்க்க 1950-இல் அமெரிக்காவும், 1955-இல் சோவியத் ரஷியாவும் அழைப்பு விடுத்தன. ஆனால், பனிப்போர் அரசியல் காரணமாக அப்போது அந்த வாய்ப்பை இந்தியா நிராகரித்தது.
- இப்போது உலகளாவிய சூழல் மாறிவிட்டது. மூன்றாம் உலக நாடுகளுக்குத் தலைமை வகிக்கும் இந்தியா, பாதுகாப்பு கவுன்சிலில் இடம் பெறுவது காலத்தின் கட்டாயம்.

## உக்ரைனின் 4 பிராந்தியங்கள் ரஷியாவுடன் இணைப்பு

- உக்ரைனின் மேலும் 4 பிராந்தியங்கள் ரஷியாவுடன் அதிகாரப்பூர்வமாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.
- லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், கெர்சான், ஸ்போரிஷியா ஆகிய நான்கு பிராந்தியங்களிலும் நடைபெற்ற பொது வாக்கெடுப்பில், ரஷியாவுடன் தங்கள் பகுதிகளை இணைத்துக் கொள்ள பிராந்திய மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

# 02 மாநில நிகழ்வுகள்

## தமிழகத்தில் சதுப்பு நிலங்களைக் காப்போம்

### தமிழ்நாடு

- தமிழ்நாட்டில் உள்ள நான்கு சதுப்புநிலக் காடுகளும் இடம்பெற்றுள்ளன. அவை, ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இரு பறவைகள் சரணாலயங்களான, சித்தரங்குடி பறவைகள் சரணாலயம் (260.47 ஹெக்டேர்), கஞ்சிரான்குளம் பறவைகள் சரணாலயம் (96.89 ஹெக்டேர்), கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் தேரூர் பறவைகள் சரணாலயம் (94.23 ஹெக்டேர்), திருவாரூர் மாவட்டம் வடுவூர் பறவைகள் சரணாலயம் (112.64 ஹெக்டேர்) ஆகிய நான்கு சதுப்புநிலக் காடுகளுக்கு ராம்சர் சாசன அங்கீகாரம் கிடைத்துள்ளது.
- ஏற்கெனவே, திருநெல்வேலி மாவட்டம், கூந்தன்குளம் பறவைகள் காப்பகம், இராமநாதபுரம் மாவட்டம், மன்னார் வளைகுடா கடல்சார் உயிர்க்கோளகக் காப்பகம், ஈரோடு மாவட்டம், வெள்ளோடு பறவைகள் காப்பகம், செங்கல்பட்டு மாவட்டம், வேடந்தாங்கல் பறவைகள் காப்பகம், கரிக்கிலி பறவைகள் சரணாலயம், திருவாரூர் மாவட்டம், உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் காப்பகம், சென்னையில் பள்ளிக்கரணை சதுப்புநிலம், கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்தை அடுத்த பிச்சாவரம் சதுப்புநிலம் ஆகியவை ராம்சர் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- சிதம்பரம் அருகே வங்ககடலையொட்டி அமைந்துள்ள பிச்சாவரம் உலகின் இரண்டாவது பெரிய அலையாத்தி காட்டுப்பகுதியாகும்.
- தமிழகத்திற்கு அடுத்து, உத்தர பிரதேசத்தில் 10 சதுப்பு நிலக்காடுகள் உள்ளன. புதிதாக இணைக்கப்பட்டுள்ள 11 சதுப்பு நிலக்காடுகளில் ஒடிஸாவில் மூன்றும், ஜம்மு-காஷ்மீரில் இரண்டும், மத்திய பிரதேசத்தில் ஒன்றும், மகாராஷ்டிரத்தில் ஒன்றும் அடங்கும்.

## அரசு பள்ளிகள் மீது அக்கறை தேவை

- தமிழகத்தில் 2,500 அரசுப் பள்ளிகளில் கழிவறை வசதிகள் கூட இல்லை. 20 பேருக்கு ஒரு சிறுநீர் கழிவறையும், 50 பேருக்கு ஒரு மலக்கழிவறையும் இருக்க வேண்டும் என ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.
- கரோனா பெருந்தொற்றால் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்தாலும் எதிர்வரும் காலங்களில் சேர்க்கையை அதிகரிக்கவும், சேர்க்கை பெற்றவர்களைத் தக்க வைக்கவும் அடிப்படை வசதிகளை செய்து தருவது காலத்தின் கட்டாயமாகும்.
- அடுத்ததாக, பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரண்டாம் வகுப்பை முடிக்கும் மாணவர்கள் தொடர்ந்து கல்லூரியில் சேருவதை விடுத்து, தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் சேருவது அதிகரித்து வருகிறது.
- உயர்நிலைப் பள்ளியைக் காட்டிலும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

## 'புதுமைப்பெண்' திட்டம்

- அரசுப் பள்ளிகளில் படித்து பட்டப்படிப்பு உள்ளிட்ட உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் 'புதுமைப்பெண்' திட்டம்.
- ஏழைப் பெண்களின் திருமணத்துக்கு தாலிக்கு தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் வகையில், தமிழக அரசின் சார்பில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது.
- சமீபத்தில் இத்திட்டம் மூவலூர் ராமாமிர்தம் உயர்கல்வி உதவித் திட்டமாக மாற்றப்பட்டது.
- இத்திட்டத்தின்படி, 6 முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்விக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்துக்காக ரூ.698 கோடியை ஒதுக்கியது.

- இத்திட்டத்தின் கீழ், பட்டம், பட்டயம், தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும்வரை மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.
- இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும் இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம்.
- புதுமைப்பெண் திட்டம் என பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த புதிய திட்டம், ஆசிரியர் தினத்தன்று தொடங்கப்படுகிறது.
- டெல்லி அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மாதிரிப் பள்ளிகள்

## தேசியக் குற்றவியல் ஆவணக் காப்பகம் (என்சிஆர்பி)

- தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் முந்தைய ஆண்டைக் காட்டிலும் சுமார் 40% அதிகரித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.
- என்சிஆர்பி ஆண்டறிக்கைகள், பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையிலேயே தயாராகின்றன.
- குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைப் பொறுத்தவரையில், பாதிப்புக்கு ஆளானவர்கள் சட்டரீதியான நடவடிக்கைகளை நாடுவதற்கு தயக்கம் காட்டும் நிலை இன்னமும்கூடத் தொடரும் நிலையில், கடந்த ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை என்பது ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காட்டிலும் கூடுதலாக இருக்கவும் வாய்ப்புள்ளது.
- தமிழ்நாட்டில் 2021-இல் மட்டும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 6,604 பதிவாகியுள்ளன. பாதிக்கப்பட்டவர்களில் பெண் குழந்தைகளே அதிகம்.
- 2020இல் இந்த எண்ணிக்கை 4,338 ஆக இருந்தது. 2021-இல் பதிவானவற்றில் 4,465 வழக்குகள் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 இன் (போக்சோ) கீழ் பதிவாகியுள்ளன.
- 69 குழந்தைகள் கொலை செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களில் 3 பேர் வல்லுறவுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். மேலும், குழந்தைகளைப் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்குவதற்கு உடந்தையாக இருத்தல், குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர், இணையக் குற்றங்கள், கொலைமுயற்சி, காயப்படுத்துதல் என்ற பல்வேறு நிலைகளில் இக்குற்றங்கள் நடத்தப்பட்டுள்ளன.
- சென்னை பெருநகரத்தைப் பொறுத்தவரையில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 2021இல் மொத்தம் 546 பதிவாகியுள்ளன. அவற்றில், போக்சோ சட்டத்தின் கீழ் பதிவானவை 435 வழக்குகள்.
- குழந்தைத் திருமணங்களைத் தடுத்து நிறுத்துவதில் மாவட்ட நிர்வாகங்களும் கடத்தப்பட்ட குழந்தைகளை உடனடியாக மீட்பதில் காவல் துறையும் விரைந்து செயல்படுகின்றன.
- குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரசு சார்பில் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றபோதும், பெருந்தொற்றுக்குப் பிறகு குழந்தைகள் இத்தகைய குற்றங்களால் பாதிக்கப்படுவதும் பலியாவதும் அதிகரித்துள்ளது.
- பெண்களுக்கு எதிரான குற்றங்களைப் போலவே, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களிலும் பாதிக்கப்பட்டவரையே குற்றத்துக்குக் காரணமாகச் சித்தரிக்கும்போது மனநிலை ஒன்றும் நிலவுவது ஆபத்தானது.
- இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு அதுவே ஆதரவாகவும் அமைந்துவிடுகிறது. குற்றச் செயல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வைக் குழந்தைகளிடம் பெற்றோர்களும் கல்வி நிறுவனங்களும் வழங்குவது குறைந்தபட்சப் பாதுகாப்புக்கு வழிவகுக்கும்.
- இவ்விஷயத்தில், பள்ளிக் கல்வித் துறைக்கும் பெரும்பங்கு இருக்கிறது. அதே நேரத்தில், குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்பதிலும் வழக்கு விசாரணைகளில் ஏற்படும் காலதாமதங்கள் அவர்களுக்கு எந்த வகையிலும் சாதகமாகிவிடக்கூடாது என்பதிலும் நீதித்துறை உரிய கவனத்தை அளிக்க வேண்டும்.
- தமிழக அரசின் சமூக நலத்துறை சார்பில், 'புதுமைப்பெண்' என்ற பெயரில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின்கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்விக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்பட உள்ளது.
- மாதந்தோறும் 7-ம் தேதி மாணவிகளின் வங்கிக்கணக்கில் இந்த உதவித்தொகை செலுத்தப்படும்.

- பெண்ணுக்கு மாதம் ரூ.1,000 கிடைப்பதால் கல்லூரிக்குள் நுழைவர். இதன் மூலம் தமிழகத்தின் கல்வி வளர்ச்சி, படித்தவர் எண்ணிக்கை அதிகரிக்கும்.
- தற்போது, முதல்கட்டமாக ரூ.171 கோடியில் 25 மாநகராட்சி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.
- பள்ளியின் கட்டிடங்கள் நவீனமயமாக்கப்படும். கற்றல் செயல்பாடுகளுடன் சேர்த்து கலை, இலக்கியம், இசை, நடனம், செய்முறை அறிவியல், விளையாட்டு ஆகிய அனைத்து திறமைகளும் மாணவர்களுக்கு உருவாக்கப்படும்.
- பேராசிரியர் அன்பழகனார் பெயரிலான பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.7,500 கோடியில் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட இருக்கின்றன.

### காவல்துறையும் மாவட்ட நிர்வாகமும்

- சட்டம் – ஒழுங்கைப் பராமரிப்பதில் மாவட்ட நிர்வாகத்திற்கும், காவல்துறைக்கும் உள்ள கடமைகள் குறித்து சட்டம் கூறுவது என்ன? இவ்விரு துறைகளும் அவரவர் பொறுப்புகளை உணர்ந்து செயல்படுவதில், நடைமுறை சிக்கல் ஏதேனும் உள்ளதா? உளவுத் தகவல்கள் மாவட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு உடனுக்குடன் கொண்டு செல்லப்படுகிறதா? இவை போன்ற கேள்விகள் குறித்த ஆய்வு, தற்போதைய சூழலில் சட்டம் – ஒழுங்கை மேம்படுத்த வழிகாட்டியாக அமையும்.
- இந்தியாவில் காவல் அமைப்பை ஏற்படுத்துவதற்காக ஆங்கிலேயர்கள் 1861-ஆம் ஆண்டில் இந்திய காவல் சட்டத்தை இயற்றினர்.
- இச்சட்டத்தின்படி, மாவட்ட நிர்வாக நீதிபதி என்றழைக்கப்படும் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதல்படியும், பொதுவான கட்டுப்பாட்டின் கீழும் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கும் மாவட்ட காவல் நிர்வாகம் செயல்பட வேண்டும்.
- மாவட்டத்தில் நிலவும் சட்டம் – ஒழுங்கு குறித்து ஆய்வு மேற்கொண்டு, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க காவல் அதிகாரிகளுக்குத் தேவையான நிர்வாக ரீதியான ஆலோசனை, ஆதரவு போன்றவற்றைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு மாவட்ட ஆட்சியருக்கு உண்டு.
- மாவட்டத்தில் பதற்றமான சூழல் உருவாகி, சட்டம் – ஒழுங்கு சீர்குலையும் நிலை ஏற்படும் என மாவட்ட நிர்வாகம் கருதினால், நான்கு நபர்களுக்கு மேல் பொதுஇடங்களில் கூடக்கூடாது என்ற 144 தடை ஆணையைப் பிறப்பிக்கும் அதிகாரம், மாவட்ட நிர்வாக நீதிபதி என்ற முறையில் மாவட்ட ஆட்சியருக்கு உண்டு.
- பொது அமைதிக்கு கேடு விளைவிக்கும் வகையில் செயல்படும் கொடுங்குற்றவாளிகளை குண்டர் சட்டத்தின் கீழ் விசாரணையின்றி ஓராண்டு காலம் சிறையில் அடைக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு உண்டு.
- மாவட்டத்தில் பொது அமைதியை சீர்குலைக்கும் சட்டம் – ஒழுங்கு பிரச்சனைகள் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆலோசனை மேற்கொள்ள வேண்டும்.
- மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்கும் இளம் ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு, அவர் பணிபுரியும் மாவட்டத்தில் புகைந்து கொண்டிருக்கும் சட்டம் – ஒழுங்கு பிரச்சனை குறித்த முழு விவரம் தெரியாமல் இருப்பதும் உண்டு.
- இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், அனுபவம் வாய்ந்த காவல் உயரதிகாரிகள் மாவட்ட ஆட்சியரிடம் கருத்து பரிமாறிக் கொள்வதும், ஒத்துழைப்புடன் சட்டம் – ஒழுங்கு பிரச்சனைகளை எதிர்கொள்வதும் கடந்த காலத்தில் நடைமுறையில் இருந்து வந்தன.
- ஒவ்வொரு கிராம நிர்வாக அதிகாரியும், கிராம உதவியாளரும் தாங்கள் பணிபுரியும் பகுதியில் உளவுத் தகவல்களைத் திரட்டி, மாவட்ட ஆட்சியருக்கு வட்டாட்சியர் மூலமாகத் தெரியப்படுத்தும் பழக்கம் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகிறது.
- சட்டம் – ஒழுங்கு பாதுகாப்புப் பணிக்கான திட்டமிடுதல் மாவட்ட நிர்வாகத்தை பாதுகாப்பு பணியில் ஒருங்கிணைத்தல், பாதுகாப்புப் பணியின்பொழுது ஏற்படும் எதிர்பாராத திருப்பங்களுக்கு ஏற்ப களப்பணியில் ஈடுபடும் காவல் அதிகாரிகள் – காவலர்களுக்கு முறையான அறிவுரைகளை உடனுக்குடன் வழங்குதல் போன்றவற்றில் காவல் உயரதிகாரிகளின் பங்களிப்பும் உளவுத்துறையின் வழிகாட்டுதலும் அவசியமானவை ஆகும்.

### 2013ம் ஆண்டு தீர்ப்பு என்ன?

- தேர்தலில் வெற்றி பெற்ற திமுக, இது போன்ற இலவசங்களை விநியோகிக்க சட்டப்படி அனுமதி உண்டு. இது போன்ற இலவசங்களை வழங்குவதற்கான வாக்குறுதியை அல்லது விநியோகத்தை லஞ்சம் அல்லது ஊழலாக கருத முடியாது.

- இலவசங்களை விநியோகிப்பது மக்களின் வாழ்க்கையை நேரடியாக மேம்படுத்தும் என்பதால், அத்தகைய விநியோகம் என்பது மாநில அரசின் கொள்கை முடிவை சார்ந்தது.
- இதை அமல்படுத்தும்போது அதன் நிதி ஆதாரங்களை பரிசீலிக்க அரசுக்கு முழு சுதந்திரம் உள்ளது. இதில் நீதிமன்றம், தலையிட முடியாது.

### இலவசம் அளித்த பயன்கள்

- தமிழகத்தில் வழங்கப்பட்ட இலவச வண்ண தொலைகாட்சியால், பட்டி தொட்டிகளிலும்கூட மக்கள் தினமும் நடக்கும் நாட்டு நடப்புகள், பொது அறிவை மேம்படுத்தி பயன் அடைந்தனர்.
- இலவச சைக்கிளால் மாணவர்களின் கல்வித்தரம் மேம்பட்டது. கூலித்தொழில் செய்யும் அவர்களின் பெற்றோர்கள் கண்ணீர் துடைக்கப்பட்டது.
- இலவச லேப்டாப்கள் மூலம் கணினி அறிவை வளர்த்த மாணவர்கள், உயர்கல்வி, ஆராய்ச்சி படிப்புகளுக்கு செல்கின்றனர்.
- இலவச மின்சாரத்தால், விவசாயிகள் நிம்மதியாக விவசாயம் செய்கின்றனர். ஒரு பிடி சோற்றை நிம்மதியாக சாப்பிடுகின்றனர்.
- இலவச மருத்துவ காப்பீட்டு திட்டத்தால் ஏழை, எளிய மக்களுக்கு உயர்தர சிகிச்சை கிடைக்கிறது. இதில், பல லட்சக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டு உள்ளன.
- மாணவர்களுக்கு வழங்கும் சத்துணவு திட்டத்தால் அவர்களின் ஊட்டச்சத்து பாதுகாக்கப்பட்டு உள்ளன. தற்போது இலவச காலை சிற்றுண்டியும் அளிக்கப்படுகிறது.
- அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணத்தால், பல இடங்களில் குடும்பங்களுக்கு மாதம் ஒரு பெரும் செலவு குறைக்கப்பட்டு உள்ளது.
- இலவச அரிசியால் பட்டினி கொடுமை ஒழிக்கப்பட்டுள்ளது.
- இதுபோன்று இன்னும் பல்வேறு ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தும் இலவச திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

## தனியார் உயர்கல்வி : நெறிப்படுத்துமா அரசு

### தமிழக உயர் கல்வியும் தனியார் துறையும்

- தமிழகத்தில் அரசுக் கல்லூரிகள் உட்பட மொத்தம் உள்ள 2,610 கல்லூரிகளில் 2,002 சுயநிதிக் கல்லூரிகளும் 251 அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகளும் உள்ளன.
- கடந்த ஆண்டு நிலவரப்படி, இக்கல்லூரிகளில் மொத்தமாக 22,75,290 மாணவர்கள் பயில்கின்றனர்.
- இதில் சுயநிதிக் கல்லூரிகளில் 13,29,622 மாணவர்கள் உதவிபெறும் தனியார் கல்லூரிகளில் 4,82,160 மாணவர்களும் பயில்கின்றனர்.
- தமிழக உயர்கல்வித் துறையில் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்கைத் தெளிவாக எடுத்துக்காட்டும் இந்தப் புள்ளிவிவரங்களின்படி 80%க்கும் மேலான மாணவர்கள் தனியார் கல்லூரிகளில்தான் படிக்கின்றனர்.
- கல்வியின் முக்கியப் பங்காளர்களான ஆசிரியர்களும் மாணவர்களும் இத்தகைய தனியார் கல்வி நிறுவனங்களில் சந்திக்கும் பிரச்சனைகளும் சவால்களும் ஏராளம்.
- தமிழக தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் அரசு நிர்ணயித்த தொகையைவிட அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும் மாணவர் சேர்க்கையில் இடஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை என்றும் பலர் குற்றம் சாட்டுகின்றனர்.
- மேலும், போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்றி, தேவைக்கேற்ற ஆசிரியர்களும் இல்லாமல் பெரும்பாலான கல்லூரிகள் செயல்படுவதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.
- இக்கல்வி நிறுவனங்களில் ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நவீன அடிமைகளைப் போல் நடத்தப்படுவது அறியப்பட்ட ஒன்றுதான்.
- முனைவர் பட்டம் பெற்றும் ரூபாய் எட்டாயிரத்திற்கும் குறைவாக ஊதியம் பெறும் நிலையே உள்ளது. சில பொறியியல் கல்லூரிகளில் 3, 6 மாதங்களுக்கு ஒருமுறை சம்பளம் வழங்கும் நிலை உள்ளது.
- தனியார் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்கள் எந்த நேரத்திலும் முன்னறிவிப்பின்றிப் பணியிலிருந்து நீக்கப்படலாம் என்கிற அபாயத்துடன் பணிபுரிகின்றனர்.

### சமூக இழுக்கு

- அலுவலகப் பணிகளைப் பார்க்க ஆசிரியர்கள் நிர்ப்பந்திக்கப்படுவது, இக்கல்வி நிறுவனங்களில் இயல்பான ஒன்றாகும்.
- அனுமதிக்கப்பட்ட 12 நாள் சாதாரண விடுப்பைக்கூட எடுக்க முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர் என்பதுதான் எதார்த்தம்.

### தீர்வு என்ன?

- கல்லூரிக் கல்வி இயக்குநரகமும் அதன் மண்டல அலுவலகங்களும் தமிழகத்திலுள்ள 908 கலை, அறிவியல் கல்லூரி, 620 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்தும் கண்காணிப்பு அமைப்புகளாகும்.
- ஆனால், இவை தங்கள் பணியைச் சரிவரச் செய்யாததன் விளைவால் அரசு வகுத்துள்ள விதிகளை மீறி மாணவர்களிடம் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
- நம்முடைய கண்காணிப்பு அமைப்புகளின் குறைபாடுகளைக் களைந்து உடனடியாக மேம்படுத்த வேண்டும். கல்லூரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இந்த அலுவலகங்களின் எண்ணிக்கையும் அதன் பணியாளர்களும் அதிகரிக்கப்பட வேண்டும்.
- தமிழ்நாடு தனியார் கல்வி ஒழுங்காற்றுச் சட்டம் 1976 சுயநிதிப்பிரிவு, சுயநிதிக் கல்லூரிகளுக்கும் பொருந்தும் வகையில் சில மாற்றங்களை உடனடியாகச் செய்ய வேண்டியது அவசியம்.
- மேலும், தற்காலிக ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்களை நியமிப்பதை விடுத்து நிரந்தரப் பணியாளர்களை மட்டுமே அரசு நியமிக்க வேண்டும்.

### ஊதியம் நியாயமா?

- ஒரே வேலைக்கு இரண்டு விதமான ஊதியம் வழங்குவது அநீதியாகும். எனவே, அரசு – அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணிபுரியும் நிரந்தர ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு இணையாக சுயநிதிக் கல்லூரி, பிரிவுகளில் பணிபுரிபவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும்.
- அது அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் பெறும் ஊதியத்தில் 70% ஆவது இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இத்துடன் அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் நிரந்தரப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விடுப்பு, சமூகப் பாதுகாப்பு போன்ற அனைத்தும் சுயநிதிக் கல்லூரி பிரிவுகளில் பணிபுரியும் அனைவருக்கும் எந்தத் தடையுமின்றி கிடைக்கச் செய்வது அவசியமாகும்.

## இலவசங்கள் : தமிழ் மரபு சொல்வது என்ன ?

- தமிழ்நாட்டில் கடந்த 100 ஆண்டுகளாக இலவசத் திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.
- பசியைத் (தீப்பிணி) என்கிறது திருக்குறள்; பசிநோய் தீர்ப்பவர் யாராயினும் அவரைப் 'பசிப்பிணி மருத்துவர்' என்று கொண்டாடச் சொல்கிறது புறநானூறு (173), 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது மணிமேகலையின் அறைகூவல், பாரதியோ, 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று கொந்தளிக்கிறார்.

### நீதிக்கட்சியின் முன்னெடுப்பு

- சென்னை மாநகராட்சிப் பள்ளியில் இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தது. பின்னர் இதே வழியில் முதல்வர் காமராஜர், மதிய உணவுத் திட்டத்தை 1955 இல் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தியபோது, பாரதி பிறந்த எட்டயபுரத்தில் தொடங்கிவைத்தார்.
- மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்ட இரண்டே ஆண்டுகளில் பள்ளி செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை ஐந்து லட்சத்திலிருந்து பத்து லட்சமாக உயர்ந்தது.
- இலவச மதிய உணவுத் திட்டத்தை எம்.ஜி.ஆர். 'இலவச சத்துணவுத் திட்ட' மாக்கினார். மு.கருணாநிதி சத்துணவில் முட்டை சேர்த்தார்.
- ஜெயலலிதா பயறு, பருப்பு என சத்துப் பொருட்களைச் சேர்த்தார். பாடநூல்கள் மட்டுமின்றி, மாணவர் சீருடை, எழுதுபொருள், புத்தகப் பை, மடிக்கணினி, மிதிவண்டி, இலவசப் பேருந்துப் பயண அட்டை என 14 விதமான பொருள்களாகத் தொடர்கிறது.

### அறிஞர் பாராட்டு

- மு.கருணாநிதி ஆட்சிக் காலத்தில் (1972) பொது விநியோகக் கழகம் தொடங்கப்பட்டது. 1975 இல் அனைத்து குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

- அரசு மானியத்தால் குறைந்த விலையில் ஏழை மக்கள் பயனடையும் வகையில் அரிசி, எண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்குவதும் இலவசம் சார்ந்த மக்கள் நலத் திட்டங்கள்தான்.

## இடஒதுக்கீடு

- தமிழ்நாடு அரசுப் பணிகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டுவரும் நடைமுறையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், முதன்மை அமர்வு அளித்துள்ள தீர்ப்பு போட்டித் தேர்வர்களின் நெடுநாள் கோரிக்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.
- பொதுப் பிரிவிலும் சமூக அடிப்படையிலான இட ஒதுக்கீடு பூர்த்தியாகாத நிலையில் மட்டுமே பெண்களுக்கான இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். அதுவும், பெண்களுக்கு எத்தனை இடங்கள் குறைவாக உள்ளதோ அந்த அளவுக்கு மட்டுமே அவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.
- இத்தீர்ப்பானது, ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட நியமனங்களைப் பாதிக்காது. எனினும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தேர்வுகள், முடிவுகளுக்காகக் காத்திருக்கும் தேர்வுகள் ஆகியவற்றில் இத்தீர்ப்பு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்.
- வேலைவாய்ப்பில் பின்பற்றப்படும் இடஒதுக்கீடு, பதவி உயர்வுக்குப் பொருந்தாது என்றும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகளில் தொடர்ந்து வலியுறுத்திவருகிறது.
- இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு அரசுப் பணிகளில் உரிய பிரதிநிதித்துவம் இல்லை என்ற சூழலில் மட்டுமே பதவி உயர்விலும் இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்பது உச்ச நீதிமன்றம் விதித்திருக்கும் நிபந்தனை.
- தமிழக அரசு வேலைவாய்ப்பில் பிரத்யேகமாக 30% வழங்கியது.

### பெண்கள் இடஒதுக்கீடு

- 1989-ம் ஆண்டு தி.மு.க. தலைவர் கருணாநிதி, தமிழ்நாட்டில் அரசு பணிகளில் பெண்களுக்கு 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கிட ஒரு சட்டத்தை கொண்டுவந்து அமல்படுத்தினார்.
- சட்டசபையில் இப்போது பெண்களுக்கு 40 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் வகையில் சட்டசபையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால், இன்றும் ஆணை பிறப்பிக்கப்படவில்லை.
- 2013, 2021, 2022-ம் ஆண்டுகளிலும், இதுபோல வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்கை கடந்த 7-ந் தேதி ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி முனிஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி என்.மாலா ஆகியோர் விசாரித்து ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கினர்.
- இந்திய அரசியல் சட்டம் அரசு பணிகளில் பெண்களுக்கென தனியார் இடஒதுக்கீடு அளிப்பதை அனுமதிக்கவில்லை. மாறாக அரசியல் சட்டம் 16(2) ஆண்-பெண் என அரசு பணிகளில் வேறுபாடு அளிப்பதை தடை செய்துள்ளது.
- மேலும், இது சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக்கும் எதிரானது. தமிழ்நாடு, அரசு பணியாளர் தேர்வாணையம் முதலில் பெண்களுக்கு 30 சதவீத இடங்களை மொத்தமாக வழங்கிவிடும், மீதமுள்ள 70 சதவீத இடங்களில் சமூக ஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு செய்யும்போது, அதிகமாக பெண்கள் தேர்ச்சிபெற்று விடுகிறார்கள்.
- இதனால் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெறாத ஆண்கள் ஏமாற்றம் அடைகிறார்கள். எடுத்துக்காட்டாக, கால்நடை மருத்துவர் தேர்வில் பின்பற்றப்பட்ட தவறான நடைமுறை காரணமாக 337 மதிப்பெண் பெற்ற ஆண் தேர்வு பெறாத நிலையில், 279.25 மதிப்பெண் பெற்ற பெண் தேர்ச்சி பெற்றுள்ளார்.
- எனவே, தமிழ்நாடு அரசு தேர்வாணையம் முதலில் 69 சதவீத அடிப்படையில், சமூக ரீதியான இடஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும்.
- அதில் 30 சதவீத இடஒதுக்கீடு அளவு பெண்கள் தேர்ச்சி பெற்றுவிட்டால் தனியாக இதற்கென 30 சதவீத இடஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
- 30 சதவீத இடம் இல்லையென்றால், அந்த அளவு பெண்கள் தேர்வாகும் பட்டியலில் கடைசியில் இருக்கும் குறைந்த மதிப்பெண்கள் பெற்றவர்களை, தேர்வு பட்டியலில் இருந்து நீக்கிவிடலாம் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

### 7.5% உள் இடஒதுக்கீடு

- அரசுப் பள்ளி மாணவர்களின் டாக்டர் கனவை நனவாக்கி வரும் 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டின்படி இந்த ஆண்டு 569 பேர் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்பில் சேரும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.
- அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கும் தமிழக அரசு இடஒதுக்கீடு வழங்க வேண்டும்.

- 2020-ம் ஆண்டு அப்போதைய அதிமுக அரசு, மருத்துவப் படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டை கொண்டு வந்தது. படிப்புக்கான முழுச் செலவையும் தமிழக அரசே ஏற்பதாக அறிவித்தது.
- தொடர்ந்து, பொறியியல், கால்நடை, ஆயுஷ், சட்டம் வேளாண் படிப்புகளுக்கும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டை அடுத்து வந்த திமுக அரசு அமல்படுத்தியது.

### 10 சதவீத இடஒதுக்கீடு

- பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட வகுப்பினருக்கு (இடபிள்யுஎஸ்) கல்வி, வேலைவாய்ப்புகளில் 10 சதவீதம் இடஒதுக்கீடு அளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பை உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு ஒத்தி வைத்தது.
- 10 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தப்பிரிவு 103-க்கு எதிர்ப்பு தெரிவித்து 40-க்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

### தமிழகம் சார்பில்....

- பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்து இடஒதுக்கீடு அளிக்கக்கூடாது என்றும், 10 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்ய முடிவு செய்வதற்கு முன்பு, இந்திரா சஹானி வழக்கின் தீர்ப்பை பார்க்க வேண்டும்.
- தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வழங்கப்படும் 50 சதவீத இடஒதுக்கீட்டுக்கு பாதிப்பில்லாமல் மீதமுள்ள 50 சதவீத இட ஒதுக்கீட்டில் இருந்து 10 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

### தவறு

- அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கு பிரத்யேகமாக 30சதவீத இடஒதுக்கீடு வழங்கி தமிழக அரசு கடந்த 2016-ம் ஆண்டு சட்டம் இயற்றியது. அதன்படி, 30 சதவீத இடங்கள் பெண்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும். எஞ்சிய 70 சதவீத இடங்களிலும் தகுதியான பெண்களை தேர்வு செய்யலாம் என்று அதில் கூறப்பட்டிருந்தது.
- தமிழகத்தில் 69 சதவீத இட ஒதுக்கீடு அமலில் உள்ளது. அதனுடன் இந்த 30 சதவீதமும் சேர்ந்தால், மொத்த இட ஒதுக்கீடு 99 சதவீதம் ஆகிவிடும்.
- இட ஒதுக்கீடு என்பது 50 சதவீதத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். அரிதாக கூடுதல் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்சநீதிமன்ற 9 நீதிபதிகள் அமர்வு கடந்த 1992-ம் ஆண்டு உத்தரவிட்டது. அந்த தீர்ப்புதான் தற்போது வரை அமலில் உள்ளது.
- சமூக ரிதியான இட ஒதுக்கீட்டுக்குள்தான் மாற்றுத்திறனாளிக்ள, விளையாட்டு வீரர்கள், பெண்கள் உள்ளிட்டோருக்கு வீரர்கள், பெண்கள் உள்ளிட்டோருக்கு உள் இடஒதுக்கீடு வழங்க வேண்டும். அதை தாண்டி இடஒதுக்கீடு வழங்க கூடாது என்று உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது.
- தமிழக அரசும், டிஎன்பிஎஸ்சியும் பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு வழங்கியது துரதிர்ஷ்டவசமானது தவறானது.
- டிஎன்பிஎஸ்சி நிர்வகாம் முதலில் இந்த 30 சதவீத இடஒதுக்கீட்டை பூர்த்தி செய்துவிட்டு, அதன் பிறகு சமூக ரீதியிலான இடஒதுக்கீட்டுக்குள் சென்றுள்ளது. இதனால், அரசுத் துறைகளில் ஏராளமான பெண்களுக்கு வேலை கிடைத்துள்ளது. அதே நேரம், தகுதியானவர்களுக்கான வேலைவாய்ப்பை ஒருபோதும் மறுக்க கூடாது.
- முதலில் 69 சதவீத இடஒதுக்கீடு நீங்கலாக உள்ள 31 சதவீத பொது பிரிவில் மதிப்பெண் அடிப்படையில் தகுதியானவர்களை தேர்வு செய்ய வேண்டும். அதன் பிறகு, 69 சதவீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும். இந்த 69 சதவீதத்துக்குள்தான் பெண்களுக்கான 30 சதவீத இடஒதுக்கீடும் இருக்க வேண்டுமே தவிர, தனியாக கொடுக்க கூடாது.
- 30 சதவீத இடஒதுக்கீடு மூலம் இதுவரை பணியில் சேர்ந்த பெண்களின் பணி நியமனத்தை ரத்து செய்ய விரும்பவில்லை. இனிமேல், இடஒதுக்கீடு தொடர்பாக உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள நடைமுறையை பின்பற்றி பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும். அதற்கேற்ப திருத்தம் கொண்டுவர வேண்டும்.

### தமிழ்நாட்டில் பெண்களுக்கு 30 சதவித இடஒதுக்கீடு

- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்பி.எஸ்.சி) மூலம் அரசு பணிக்கான வேலைவாய்ப்பில் மொத்த இடங்களில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கி தமிழ்நாடு அரசு கடந்த 2016-ம் ஆண்டு சட்டம் கொண்டு வந்தது.

- இந்த சட்டத்தின்படி, 30 சதவீத இடங்கள் பெண்களுக்கு வழங்க வேண்டும். மதிப்பெண் தகுதி அடிப்படையில் மீதமுள்ள 70 சதவீத இடங்களிலும் பெண்கள் தேர்வு செய்யப்படலாம் என்று கூறப்பட்டு இருந்தது.

**சமூக இட ஒதுக்கீடு**

- பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கியது சட்டவிரோதம், இதன் மூலம் ஏற்கனவே 69 சதவீத இடஒதுக்கீட்டுடன், இந்த 30 சதவீதத்தை சேர்த்தால், மொத்தம் 99 சதவீதமாகி விடும்.
- சுப்ரீம் கோர்ட்டு 9 நீதிபதிகள் கொண்ட முழு அமர்வு 1992-ம் ஆண்டு பிறப்பித்த தீர்ப்பின் படி, மொத்த இடங்களில், 50 சதவீதம் மிகாமல் இடஒதுக்கீடு வழங்க வேண்டும். அரிதாக கூடுதல் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று கூறியுள்ளது.
- சமூக ரீதியான இடஒதுக்கீட்டுக்குள்தான், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பிற பிரிவினர்களுக்கு உள்ஒதுக்கீட்டு வழங்க வேண்டும். அதை மீறி ஒதுக்கீடு வழங்கக் கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு அளித்துள்ளது. சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசும், டி.என்.பி.எஸ்.சி., நிர்வாகமும் செயல்பட்டது துரதிருஷ்டவசமானது தவறானது.
- டி.என்.பி.எஸ்.சி., யும், தமிழ்நாடு அரசும் முதலில் பெண்களுக்கு 30 சதவீத இடங்களை வழங்கிவிட்டு, அதன் பின்னர் சமூக ரீதியான இடஒதுக்கீட்டை பின்பற்றியுள்ளது. இதனால், அரசு வேலை வாய்ப்பில் ஏராளமான பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பில் வகுத்துள்ள நடைமுறையை பின்பற்றி இடஒதுக்கீட்டு பட்டியலை தயாரிக்க வேண்டும்.

## பசுமைப் பட்டாசு ஆய்வுக்கூடம்

- சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தவிர்க்க வலியுறுத்தி, பசுமைப் பட்டாசுகளைத் தயாரிக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன் பேரில் 'நீரி' பசுமைப் பட்டாசுகளை தயாரிப்பதற்கான பார்முலாவை அறிக்கையாக தயார் செய்து வழங்குகிறது.
- 'நீரி' அமைப்பு பட்டாசு வெடிக்கும்போது 30 சதவீதம் புகை குறைவாக இருக்கும் வகையிலான பசுமைப் பட்டாசு தயாரிப்பு குறித்த பார்முலாவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.
- அதனடிப்படையில் பட்டாசு தயாரிப்பாளர்கள் நீரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு, பார்முலாவைப் பெற்று பசுமைப் பட்டாசு தயாரித்து வருகின்றனர்.
- நீரி அமைப்பினர், சிவகாசி அருகேயுள்ள ஆமத்தூர் தனியார் பொறியியல் கல்லூரியில் 2019 ஆகஸ்ட் 22 ஆம் தேதி தனது ஆய்வுக்கூடத்தை அமைத்தனர்.
- இதில் பட்டாசில் செலுத்தும் வேதியியல் பொருள்களின் தன்மை, திறன் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்யப்படும் என 'நீரி' அறிவித்தது. ஆனால் அந்த ஆய்வுக்கூடம் இது நாள் வரை பயன்பாட்டுக்கு வரவில்லை. பொருத்தப்பட்ட இயந்திரங்கள் காட்சிப் பொருளாகவே உள்ளன.
- இந்நிலையில் நீரி அமைப்பினர் சிவகாசி அருகே வெற்றிலையூரணி பகுதியில் பட்டாசு ஆய்வுக்கூடம் அமைக்க 5 ஏக்கர் நிலத்தை, கையகப்படுத்தியுள்ளனர். தற்போது அந்த இடத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் பட்டாசு ஆய்வுக்கூடம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## முஸ்லிம் உள் இடஒதுக்கீடு

- 2006 சட்டப்பேரவைத் தேர்தலின்போது, முஸ்லிம்களுக்கான தனி இடஒதுக்கீட்டுக்கு ஆணையம் அமைத்தது அ.தி.மு.க.
- மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு, 2007 செப்டம்பர் 15 அன்று பிற்படுத்தப்பட்டோருக்கான 30% இடஒதுக்கீட்டில் உள் இடஒதுக்கீடாக 3.5%-ஐ முஸ்லிம்களுக்கும், 3.5%-ஐக் கிறிஸ்தவர்களுக்கும் வழங்கியது.
- இதைச் செயல்படுத்துவதற்கு ஆய்வு மேற்கொண்டு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதிபதி ஜனார்த்தனம் ஆணையத்துக்கு அரசு உத்தரவிட்டது.
- முன்னதாக 1982 இல் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அம்பா சங்கர் தலைமையில் அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு, இடஒதுக்கீடு தொடர்பாக அரசுக்குச் சில பரிந்துரைகளை வழங்கியிருந்தது.
- அந்த அறிக்கையின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் தனி இடஒதுக்கீடு வழங்கலாம் என ஜனார்த்தனம் ஆணையம் பரிந்துரைத்தது.

## போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு

- தமிழ்நாட்டில் போதைப்பொருள்கள் புழக்கம் அதிகரிப்பதைத் தடுக்கும் வகையிலும், போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுபவர் மீது நடவடிக்கை எடுக்கும் வகையிலும், போதைப் பொருள் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 10 ஆண்டுகளில் தமிழ்நாடு

### வரலாற்றைத் திருத்திய கீழடி

- இந்திய வரலாற்றை முற்றிலும் மறுவாசிப்புக்கு உட்படுத்துவதற்கான கட்டாயத்தை மதுரையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கீழடியில் கண்டறியப்பட்ட பண்டைத் தமிழினத்தின் வரலாற்று எச்சங்கள் உருவாக்கின.
- வைகைக் கரையில் 2,200 ஆண்டுகளுக்கு முன்பு நாகரிகம் சிறந்து விளங்கியதற்கான சான்றுகள் கீழடி அகழாய்வில் கிடைத்தன.
- தமிழக அகழாய்வுகளில் இதுவே மிகப்பெரிய அளவில் நடைபெற்ற ஒன்று. சிலப்பதிகாரம், பரிபாடல், மதுரைக்காஞ்சி போன்ற இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கல்மணிகளும் சங்க காலம் குறிப்பிடும் பல தொல்பொருட்களும் அதிகளவில் இங்கு கிடைத்திருக்கின்றன.
- ‘தமிழி’ எனப்படும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள பல ஓடுகளும் கண்டறியப்பட்டன.
- தொல்லியல், வரலாறு சார்ந்த பேரார்வத்தைத் தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல், தமிழ் நாகரிகம் குறித்த ஆவலை உலகெங்கிலும் கீழடி தட்டியெழுப்பியது.
- இந்திய வரலாறு தெற்கிலிருந்து எழுதப்படும் காலம் வெகுதூரம் இல்லை என்பதற்கான முன்னறிப்பாகக் கீழடி அகழாய்வு விளங்குகிறது.

### தமிழகம் திரண்ட போராட்டம்

- 2017 போராட்டத்தின் ஆண்டாகத் தொடங்கியது. ஜல்லிக்கட்டுத் தடைக்கு எதிராகச் சென்னை மெரினாவில் இளைஞர்கள் பற்ற வைத்த போராட்டத் தீ உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது.
- அதன்பிறகு ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான சட்டப் போராட்டத்தை மாநில அரசு தொடங்கியது. ஓ.பன்னீர் செல்வம் தலைமையிலான அப்போதைய அரசு, டெல்லி சென்று ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான ஒப்புதலுடன் திரும்பியது.
- ஆனால், முழுமையான சட்டத் திருத்தம் வேண்டும் என மெரினாவில் இளைஞர்கள் எதிர்க்குரல் கொடுக்க, போராட்டத்தைக் காவல்துறை முடிவுக்குக் கொண்டுவந்த விதம் ஒரு கறையாகத் தமிழக வரலாற்றில் பதிவானது.

### காவிரி இறுதித் தீர்ப்பு

- தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினையான காவிரி நதி நீர் பங்கீட்டு விவகாரத்தில், உச்சநீதிமன்றம் 2018 பிப்ரவரி 16 அன்று இறுதித் தீர்ப்பு வழங்கியது.
- 1990இல் உச்சநீதிமன்ற உத்தரவின்பேரில் காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு, 17 ஆண்டுகளுக்குப் பிறகு அளிக்கப்பட்ட இறுதி உத்தரவைக் கர்நாடகம் செயல்படுத்தாத நிலையில், அதை எதிர்த்து மீண்டும் உச்சநீதிமன்றம் சென்றது தமிழகம்.
- 11 ஆண்டுகளுக்குப் பிறகு காவிரி நீரில் தமிழகத்துக்கு 177.25 டிஎம்சி தண்ணீர் வழங்க உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதேபோல், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என 2006இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் கேரளம் கண்டுகொள்ளவில்லை.
- தமிழக அரசின் சட்டப் போராட்டத்தால் 2014 இல் மீண்டும் அதை உறுதிப்படுத்தியது உச்சநீதிமன்றத் தீர்ப்பு.

### இயற்கைப் பேரழிவு?

- தானே (2011), நீலம் (2012) மடி (2013), வார்தா (2016), ஒக்கி (2017), கஜா (2018) ஃபனி (2019) எனக் கடந்த 12 ஆண்டுகளில் சிறிதும் பெரிதுமாகப் பல புயல்கள் தமிழ்நாட்டைப் புரட்டிப் போட்டிருக்கின்றன.
- பருவநிலை மாற்றத்தின் விளைவுகளில் ஒன்றாக முந்தைய காலங்களைவிடப் புயல்கள் தீவிரமடைந்திருப்பதும் புயல்களுக்கு இடையிலான இடைவெளி குறைந்திருப்பதும் மக்களின் வாழ்விலும், அரசாங்கத்தின் பல நிலைகளிலும் கடும் விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

- இயற்கைப் பேரிடர் என்பதைத் தாண்டி மோசமான உள்கட்டமைப்பு, அரசு நிர்வாகச் சீர்கேடுகள் போன்ற காரணங்களால் சென்னைப் பெருவெள்ளம் போன்ற பேரிடர்களும் நிகழ்கின்றன.

**போராட்ட முன்மாதிரி**

- கூடங்குளம் அணு உலைக்கு எதிராக 2011 செப்டம்பரில் தொடங்கிய போராட்டம், சமரசமற்ற சமகால மக்கள் போராட்டத்துக்கான முன்மாதிரியை இந்தியாவுக்கு உணர்த்தியது.
- 1000 நாட்களுக்கும் மேலாகப் போராடிய மக்களைக் காவல்துறை கொண்டு ஒடுக்கியது அரசு. அணுஉலை முற்றுகையை அறிவித்து, கடற்கரை வழியே பேரணியாக வந்த இடிந்தகரை மக்களைக் காவல்துறை அடித்து நொறுக்கியது.
- போராட்டக்காரர்கள் மீது குண்டர் சட்டம், தேசத் துரோக வழக்குகள் பாய்ந்தன. ஆனால், எதிர்ப்புகளால் கூடங்குளம் அணு உலையின் செயல்பாடுகள் நிறுத்தப்படவில்லை.

**பலி கொண்ட ஸ்டெர்லைட்**

- தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்துக்கு எதிராகவும் ஆலையை நிரந்தரமாக மூடக்கோரியும் நடைபெற்றுவந்த போராட்டம் 100வது நாளை எட்டியதால், பேரணியாகச் சென்று தங்கள் கோரிக்கையை மனுவாக மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கப் போராட்டக் குழுவினர் முடிவெடுத்தனர்.
- இந்தப் பேரணிக்குத் தடைவிதித்து, 144 தடை உத்தரவை மாவட்ட நிர்வாகம் பிறப்பித்தது. தடையை மீறி 2018 மே 22 அன்று பேரணி சென்ற மக்கள் மீது, போலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 பேர் பலியானார்கள்.
- தமிழக வரலாற்றில் விடுதலைக்கு முன்னும் பின்னரும் நடைபெற்ற போராட்டங்களில், போலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டால் இத்தனை பேர் உயிரிழந்தது இதுவே முதன்முறை.

**கூட்டு மனசாட்சிக்கு ஒரு கேள்வி**

- தேசிய அளவில் சமூக நீதியை முன்னெடுத்த தமிழ்நாட்டுக்குக் களங்கமாகக் கடந்த பத்தாண்டுகளில் பரவலாகியிருக்கின்றன சாதி ஆவணப் படுகொலைகள்.
- பட்டியல் இனத்தவரை மற்ற சாதியினர் திருமணம் செய்துகொள்ளும்போது சாதி மறுப்புத் திருமணங்களை ஏற்க முடியாத குடும்பத்தினர் கொலை செய்யும் நிலைக்கு சென்றுவிடுகின்றனர்.
- இந்தப் போக்கு தமிழ்நாட்டின் கூட்டு மனசாட்சியைக் கேள்விக்கு உட்படுத்துகிறது. இந்தப் பிரச்சனையில் நாடகக் காதல் என அரசியல்வாதிகள் அறிக்கை விடுவதும், அதற்குப் பதிலளிக்கும் விதமாகத் திரைப்படங்கள் வெளியாகும் சூழலும் எழுந்திருக்கிறது.

**ஒரு மறைவும் தீராத சர்ச்சைகளும்**

- 2016 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த ஜெயலலிதா, உடல்நலக் குறைவு காரணமாக 2016 செப்டம்பர் 22 அன்று சென்னை அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
- தொடர்ந்து 75 நாட்கள் தீவிர சிகிச்சைக்குப் பிறகு டிசம்பர் 5 ஆம் தேதி இரவு அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.
- அதைத் தொடர்ந்து கூவத்தூரில் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஜெயலலிதாவின் மரணத்தை ஆராய நீதிபதி ஆறுமுகசாமி ஆணையம் அமைக்கப்பட்டது. அதிமுக இரட்டைத் தலைமை விவகாரம் என இன்று வரை தொடர்கின்றன சர்ச்சைகள்.

**கருணாநிதி மறைவு**

- தமிழகத்தின் முதல்வராக ஐந்து முறை பதவி வகித்த மு.கருணாநிதியின் மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவாக வரலாற்றில் பதிவானது.
- அரசியல், இலக்கியம், திரைப்படம், நாடகம், இதழியல் எனப் பல்வேறு துறைகளில் அழியாதத் தடம்பதித்து தமிழ்மொழி, மாநில முன்னேற்றத்துக்குப் பெரும்பங்காற்றியவர்.
- கருணாநிதியின் மறைவைத் தொடர்ந்து, திமுக தலைவராகப் பொறுப்பேற்ற அவரது மகன் மு.க.ஸ்டாலின், 2021 சட்டமன்றத் தேர்தலில் திமுக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து தமிழக முதல்வரானார்.

**நீட் எதிர்ப்பு**

- +2 பொதுத்தேர்வில் 1,200-க்கு 1,176 மதிப்பெண்கள் பெற்ற அரியலூர் மாணவி அனிதாவின் (17) மருத்துவப் படிப்புக் கனவு, நீட் தேர்வால் கலைந்து போனது.

- நீட் தேர்வை எதிர்த்து அனிதா நடத்திய சட்டப் போராட்டம் தோல்வியில் முடிந்ததால், மனமுடைந்த அனிதா தற்கொலை செய்துகொண்டார்.
- நீட்டுக்கு எதிராகப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். இப்போதும் நுழைவுத் தேர்வுக்கு முன்பாகவும், நுழைவுத்தேர்வு முடிவுகள் வெளியாகும் காலத்திலும் தற்கொலைகள் தொடர்வது வேதனை.

## மதுரையில் டைடல் பூங்கா

- சுங்கடிச் சேலைகள், ஆயத்த ஆடைகள், வீட்டு உபயோக பிளாஸ்டிக் பொருட்கள், அப்பளம், ஆகிய தயாரிப்புகளுக்கு மதுரை பெயர் பெற்றது.
- தமிழகத்தில் புவிசார் குறியீடு பெற்ற 42 பொருட்களில், 18 பொருட்கள் தென்தமிழகத்தைச் சேர்ந்தவை. இதே பகுதியைச் சேர்ந்த மேலும் 14 பொருட்கள் புதிதாக புவிசார் குறியீடு பெற விண்ணப்பித்துள்ளன.
- நாட்டில் எளிமையாகத் தொழில்புரிதல் பட்டியலில் 14-வது இடத்தில் இருந்த தமிழ்நாடு தற்போது 3-ம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. முதல் இடத்தைப் பிடிப்பதே நமது இலக்கு.
- அதேபோல, ‘ஸ்டார்ட் அப் இந்தியா’ வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் தமிழகம் பல படிகள் முன்னேறியுள்ளது. சிறந்த புத்தொழில் செயல்பாடுகளுக்கான ‘லீடர்’ அங்கீகாரத்தை தற்போது பெற்றிருக்கிறது.
- 2030-ம் ஆண்டுக்குள் தமிழகத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்னும் இலக்கை அடைய, ஏற்றுமதி வர்த்தகம் முக்கியமாகும்.
- தகவல் தொழில்நுட்பப் புரட்சியை தமிழகத்தின் இரண்டாம், மூன்றாம் நகரங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக கோவையில் டைடல் நிறுவனம் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்கியுள்ளது.
- மேலும், திருப்பூர், விழுப்புரம், தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம், வேலூர் மற்றும் உதகை ஆகிய இடங்களில் புதிதாக டைடல் பூங்காக்களை தமிழக அரசு உருவாக்கி வருகிறது.
- மதுரை மாட்டுத்தாவணியில் ரூ.600 கோடியில் டைடல் பூங்கா அமைக்கப்படும்.

## சூழலியல் அபாயம்

- நினைவிடம் அமையும் இடத்தில் இருந்து 650 மீட்டர் தொலைவில் கடலில், 137 அடி உயரத்துக்கு கருணாநிதி நினைவாக, 80 கோடி ரூபாயில், பேனா சின்னம் அமைக்க, தமிழக அரசு முடிவு செய்தது.
- இதற்கு மாநில கடலோர ஒழுங்குமுறை ஆணையத்திடம், பொதுப்பணித்துறை விண்ணப்பித்தது.
- கடலில் கட்டுமானங்கள் மேற்கொள்ள, மாநில அளவில் அனுமதி வழங்க முடியாது.
- எனவே, இந்த விண்ணப்பத்தை சில நிபந்தனைகள் அடிப்படையில், மத்திய கடலோர ஒழுங்குமுறை மண்டல மேலாண்மை ஆணையத்துக்கு அனுப்ப, மாநில ஆணையம் பரிந்துரைத்தது.

## தமிழகம் - மேகாலயா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல அவசர சிகிச்சை பயிற்சி, உயிர்காக்கும் மயக்கவியல் திறன் பயிற்சி மற்றும் மீயொலி கருவி ஆகிய பயிற்சிகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 ஆகிய முன்மாதிரி திட்டங்களின் செயல்பாட்டையும், தமிழகத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள்
- தமிழகத்திலுள்ள உயர் மருத்துவ சேவைகளான ரோபாடிக் அறுவை சிகிச்சை, புற்றுநோய் உயர் கதிர்வீச்சு சிகிச்சை, குறைந்த செலவில் முழு உடல் சிறப்பு பரிசோதனை போன்ற திட்டங்களையும், அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழக கிடங்கு ஆகியவற்றையும் பார்வையிடுகின்றனர்.
- “மேகாலயா சிறிய மாநிலம் தமிழகத்தில் சுகாதாரத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன. தமிழகத்துடன் மருத்துவ சிகிச்சை முறைகளை பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம் எங்கள் மாநில மக்களுக்கு தரமான சிகிச்சை அளிக்க முடியும்” என்றார்.

## 10 உயர்கல்வி நிறுவனங்கள்

- தமிழகத்தில் பள்ளிக் கல்வியை முடித்து உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்கள் 51.4 சதவீதம். தேசிய அளவில் இந்த விகிதம் இன்னும் 30ஐ எட்டவில்லை.

**அண்ணா பல்கலைக்கழகம்**

- ஆராய்ச்சி, வளர்ச்சி செயல்பாடுகளில் முன்னில வகிக்கும் இந்தப் பல்கலைக் கழகத்தைப் பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2012-2017) 'University with Potential for Excellence' ஆகப் பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகரித்தது.

**கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி**

- தொற்றுநோய் மருத்துவம் குறித்த பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான உலகப் புகழ்பெற்ற மையமாக இக்கல்லூரி திகழ்கிறது.
- இந்திய அரசின் நிதியுதவியுடன் ஸ்டெம் செல் ஆராய்ச்சியும் இக்கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

**ஐஐடி**

- மத்தியக் கல்வி அமைச்சகம் வெளியிடும் தேசியக் கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசையில் (என்.ஐ.ஆர்.எஃப்) தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக முதலிடம் பிடிக்க வந்துள்ளது.
- புகழ்பெற்ற சர்வதேச அளவிலான க்யூ.எஸ்., தரவரிசைப் பட்டியலிலும் தொடர்ந்து இடம்பிடிக்கும் இந்தியக் கல்வி நிறுவனங்களில் ஒன்றாக இது திகழ்கிறது.

**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்**

- கோவையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் இந்த வேளாண்மைக் கல்வி நிறுவனம் 1971இல் தனிப் பல்கலைக் கழகமாக அங்கீகரிக்கப்பட்டது.

**ஐஐஎம்**

- இந்தியாவின் 11ஆவது இந்திய மேலாண்மைக் கல்விக் கழகமாக (ஐஐஎம்) 2011இல் திருச்சியில் தொடங்கப்பட்டது.

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்**

- சென்னையில் தமிழக அரசு இந்தப் பல்கலைக் கழகத்தை 1997இல் தொடங்கியது. தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளும் இந்தப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன.

**என்.ஐ.டி**

- ஐ.ஐ.டி.க்குப் பிறகு பொறியியல், தொழில்நுட்பக் கல்வியில் பிராந்திய அளவில் தரமான கல்வியை வழங்கி வருகின்றன. தேசியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (என்ஐடி) 1964இல் திருச்சியில் என்.ஐ.டி தொடங்கப்பட்டது.

**மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்**

- யுஜிசியால் வழங்கப்படும் 'Potential for Excellence' அந்தஸ்தைப் பெற்ற 15 இந்தியப் பல்கலைக் கழகங்களில் இதுவும் ஒன்று. 2021 இல் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவையின் (NAAC) A++ என்னும் உச்சநிலை அங்கீகாரத்தைப் பெற்றது.

**அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை**

- சித்த மருத்துவம் மற்றும் அது சார்ந்த கல்விக்கென்று தமிழக அரசால் முதன்முறையாகத் (1965) இக்கல்லூரி தொடங்கப்பட்டது.

**மாநிலக் கல்லூரி, சென்னை**

- 1840 இல் தொடங்கப்பட்ட இந்தியாவின் மிகப் பழமையான அரசுக் கலைக் கல்லூரிகளில் இதுவும் ஒன்று. இக்கல்லூரியில் கிட்டத்தட்ட 5 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். தேசியத் தரவரிசைப் பட்டியலில் கல்லூரிகளுக்கான பிரிவில் 2022இல் மூன்றாம் இடம்பெற்றுள்ளது.

## இணையவழி விளையாட்டுகளைத் தடை செய்ய அவசர சட்டம்

- இணையவழி விளையாட்டுகளைத் தடுக்க புதிய சட்டம் இயற்றுவது தொடர்பாக தமிழக அரசுக்கு அறிவுரை வழங்க சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- பள்ளி மாணவர்கள் மீது இணையவழி விளையாட்டுகள் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி பள்ளிக்கல்வித்துறை வாயிலாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு, பொதுமக்களிடம் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட கருத்துகள், கலந்தாலோசனைக் கூட்டங்கள் வாயிலாக பெறப்பட்ட கருத்துகளுடன் சட்டத்துறை ஆலோசனையையும் பெற்று அவசரச் சட்டம் தயாரிக்கப்பட்டது.

**அதிமுக அரசின் அவசரச் சட்டம்**

- இணையவழி ரம்மி விளையாட்டுக்கு கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் தடை விதிக்கப்பட்டது. இதற்கான சட்டத்துக்கு அப்போதைய ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் ஒப்புதல் அளித்தார்.
- இந்தச் சட்டத்தின்படி, இணையவழியில் ரம்மி விளையாடுவோருக்கு ரூ.5 ஆயிரம் அபராதமும், ஆறு மாதங்கள் சிறைத் தண்டனையும் அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
- ரம்மி விளையாட்டை நடத்தும் நிறுவனப் பொறுப்பாளர்கள் ரம்மி விளையாட்டரங்கம் வைத்திருந்தால் ரூ.10 ஆயிரம் அபராதமும், இரு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கவும் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது.
- இந்தச் சட்டத்தை ரத்து செய்யக்கோரி, சில தனியார் நிறுவனங்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன.

- வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்றம், இணையவழி ரம்மி விளையாட்டுக்கு தடை விதித்து பிறப்பிக்கப்பட்ட சட்டத்தை ரத்து செய்தது.
- மேலும், இணையவழி விளையாட்டுகளுக்கு ஒட்டுமொத்தமாக தடை விதிக்க முடியாது எனவும், புதிய சட்டம் கொண்டு வர தமிழ்நாடு அரசுக்கு எந்தத் தடையும் இல்லை எனவும் உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

## முதல்வரின் புத்தாய்வு திட்டம்

- திறன்மிகு இளைஞர்களின் ஆற்றல், திறமையை பயன்படுத்தி நிர்வாக செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம்.
- நமது இளைஞர்களின் ஆற்றலைப் பயன்படுத்தி, அரசு நிர்வாகத்தின் செயல்பாட்டை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். அரசின் திட்டங்கள், அவற்றின் குறிக்கோள்களை முழுமையாக அடையவும், குக்கிராமம் வரை அதன் பயன் மக்களைச் சென்று சேரவும் இது உதவும்.
- நீர்நிலைகளை மேம்படுத்துதல், வேளாண் உற்பத்தி வளர்ச்சி, அனைவருக்கும் வீடு, கல்வித் தரத்தை உயர்த்துதல், அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர்களை வளர்த்தெடுத்தல் முதலிய 12 முக்கிய துறைகளில் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்கள் கவனம் செலுத்தவுள்ளனர்.
- அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திராவிட மாடல் திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், அவற்றின் வெற்றிக்கு பங்களிக்கவும் ஒரு மிகச் சிறந்த வாய்ப்பு.

## சில்லறைப் பணவீக்கம்

- தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படுவதே விலையேற்றம் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்று மாநிலத் திட்டக்குழு துணைத்தலைவர் ஜெயரஞ்சன் தெரிவித்துள்ளார்.
- ஏழைகளைப் பெரிதும் பாதிக்கும் விலைவாசி உயர்வு, அவர்கள் வருமானத்தில் 70%-ஐ உணவுக்காகச் செலவிடும் நிலைக்குத் தள்ளும்.
- இந்நிலையில், வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளவர்களும், அவர்களுக்கு அடுத்த நிலையில் இருப்பவர்களும் 50 முதல் 60% வரை உணவுப்பொருட்களைப் பொதுவிநியோகத் திட்டத்திலிருந்து (அன்னயோஜனா திட்டம்) பெறுவதால், அவர்களின் குடும்பச் செலவில் 35% வரை குறைகிறது. தமிழ்நாட்டில் உணவுப் பொருள் விலையேற்றம் கட்டுக்குள் இருப்பதற்கான முக்கியக் காரணம் இதுவே.
- நுகர்வோர் விலைக் குறியீட்டெண் (சிபிஐ) அடிப்படையில் கணக்கிடப்படும். நாட்டின் சில்லறைப் பணவீக்கம், தொடர்ந்து 8ஆவது மாதமாக ரிசர்வ் வங்கியின் நிர்ணய வரம்பான 6%-க்கும் அதிகமாகவே உள்ளது கவனிக்கத்தக்கது.
- உலக நாடுகளில் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பும் தொடர்ந்து மிகக் கடுமையாக சரிந்து கொண்டிருப்பது விலைவாசி உயர்வு குறித்த அச்சத்தை மக்களிடம் நிலைபெறச் செய்துள்ளது.
- பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்து மக்களை அச்சத்திலிருந்து விடுவிக்கும் நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும்.
- இறந்தவர் வசித்த பகுதியில் உள்ள தாசில்தாரிடம், வாரிசு சான்றிதழ் கேட்டு ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.
- ஒரு வேளை, அவர் அந்த முகவரியில் 6 மாதத்துக்கும் குறைவாக வசித்திருந்தால், ஓராண்டுக்கு அதிகமாக வசித்த பகுதியின் தாசில்தாரிடம் இருந்து அறிக்கை பெற வேண்டும்.
- இறந்தவர் திருமணம் ஆனவராக இருந்தால், அவரது தந்தை, தாய், துணை மகன், மகளின் பெயர்கள் சான்றிதழில் இடம் பெறலாம்.
- திருமணம் ஆகாதவராக இருந்தால், தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகளின் பெயர் இடம் பெறலாம். அதே நேரம், இறந்த ஒருவருக்காக வேறொருவர் சான்றிதழ் பெற வேண்டுமானால், இறப்பு சான்றிதழ், 7 ஆண்டுகளுக்கு மேல் காணாத நிலையில் இறந்துவிட்டதாக சம்பந்தப்பட்ட நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவு, இறந்தவரின் ஆதார், வாக்காளர் அட்டை, பாஸ்போர்ட், வங்கி புத்தகம், ஓட்டுநர் உரிமம், பென்ஷன் உத்தரவு உள்ளிட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

- அதேபோல, இறந்தவருடனான உறவு தொடர்பாக, திருமண பதிவுச் சான்று, பாஸ்போர்ட், வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை, சாதிச்சான்று, ஓட்டுநர் உரிமம், பிறப்புச் சான்று, பள்ளி மாற்றுச்சான்று உள்ளிட்ட ஏதேனும் ஒரு ஆவணத்தை அளிக்கலாம்.
- ஒருவேளை, வயது வந்த வாரிசு இல்லாத பட்சத்தில் மைனர் வாரிசுக்காக பாதுகாவலர், சகோதரர், சகோதரி வாயிலாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.
- இறந்தவர் குழந்தையை தத்தெடுத்திருந்தால், அவருக்கான வாரிசு சான்றிதழை வழங்குவதற்கு முன்பு, அவர் சட்டப்படி தத்தெடுக்கப்பட்டவரா என்பதை தாசில்தார் உறுதி செய்ய வேண்டும்.

## தென்மண்டல கவுன்சில் கூட்டம்

- மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில், தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் புதுச்சேரி, லட்சத்தீவு, அந்தமான் யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள், மாநில காவல்துறை தலைவர்கள் பங்கேற்ற, 30-வது தென் மண்டல கவுன்சில் கூட்டம் கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகேயுள்ள கோவளத்தில் நடைபெற்றது.
- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இக்கூட்டத்தை தொடங்கி வைத்தார்.
- மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி என்பதுதான் எங்கள் தத்துவம்.
- வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது, கல்விக் கட்டமைப்பை வலுப்படுத்துவது, தொழில்துறை ஒருங்கிணைப்பு தொடர்பாக, தூதரகங்கள், அமைச்சகங்கள், முகமைகள், வெளிநாடுகள் ஆகியவற்றுடன் மாநில அரசுகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ள, மத்திய வெளியுறவு அமைச்சகத்தில் தேவையான அனுமதி, தடையில்லாதச் சான்று பெறுவதில் அதிக தாமதம் நிலவுகிறது. இதை எளிமைப்படுத்தும் வகையிலான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க வேண்டும்.
- சுற்றுச்சூழலுக்கு இணக்கமான வகையில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி உற்பத்தியை ஊக்குவிப்பதில் தமிழக அரசு முன்னோடியாக உள்ளது. எனவே, மத்திய மின் சட்டம் 2022-ஐ திரும்பப் பெற்று, மாநில விநியோக உரிமத்தின்படி மலிவு விலையில் மக்களுக்கு மின் விநியோகம் செய்ய அனுமதிக்க வேண்டும்.
- உள்நாட்டுப் பாதுகாப்பில் முன்னணியில் உள்ள தமிழ்நாடு, தொடர் கண்காணிப்பு மூலம், சட்டம் – ஒழுங்கைப் பராமரித்து, சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாத்து வருகிறது. எனினும், உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான நிகழ்நேர தகவல்களை, தென் மாநில உளவுத் துறைத் தலைவர்கள் பகிர்ந்துகொள்வது அவசியம். அதன் மூலம் உளவுத் துறைத் தலைவர்கள் பகிர்ந்து கொள்வது அவசியம். அதன் மூலம் உளவுத் துறைத் தலைவர்கள் சிறப்பாக ஒருங்கிணைந்து செயல்பட முடியும்.

## ஏற்றம் தரும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

- கிராமப்புறப் பெண்களின் கைகளில் நேரடியான பணப்புழக்கம் குறைவு.
- அவர்களின் வருவாய்க்கு வழிசெய்யும் அவர்களது திறமைக்குக் களம் அமைத்துத் தரவும் உருவாக்கப்பட்டது மகளிர் சுயஉதவிக் குழு திட்டம்.
- 80களில் இது தொடங்கப்பட்டாலும் 90களில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பரவலாக அறியப்பட்டது.
- தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் இது செயல்படுத்தப்படுகிறது.
- இதன்கீழ் கிராமங்கள்தோறும் எட்டு முதல் பத்துப் பெண்கள் கொண்ட தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.
- குழுவில் இருக்கும் பெண்கள் தொழில் தொடங்க குறைந்த வட்டியில் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.
- சிறுதொழில் பயிற்சி, கைவினைக் கலை பயிற்சி போன்றவையும் வழங்கப்படுகின்றன.
- சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் தங்கள் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாட்டையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.
- சுகாதாரக் கணக்கெடுப்பு, கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஓய்வூதியம் உள்ளிட்ட வங்கிப் பரிவர்த்தனை தொடர்பானவற்றிற்கு உதவுதல் போன்றவற்றிலும் இவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.
- இந்தியா முழுவதும் 60 லட்சத்துக்கும் அதிகமான மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளன.
- இவற்றில் ஆறு கோடிக்கும் அதிகமான பெண்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.
- கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இவர்களது பங்களிப்பு அளப்பரியது.
- முகக்கவசம், கிருமிநாசினி தயாரிப்பு போன்றவற்றில் இவர்களே அதிகமான ஈடுபட்டனர்.

- 27 மாநிலங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் அதிகமான மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இந்தப் பணிகளில் ஈடுபட்டன.
- மகளிர் சுயஉதவிக் குழுவினர் மேற்கொள்ளும் தொழில்களில் உணவகத் தொழில் முக்கியமானது.
- நாடு முழுவதும் பத்தாயிரத்துக்கும் அதிகமான உணவகங்களை இவர்கள் நடத்திவருகிறார்கள்.
- கேரளப் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்துக்காக அம்மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட குடும்பஸ்ரீ திட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னோடித் திட்டமாகக் கருதப்படுகிறது.

## முதல் மகளிர் காவல் நிலையம்

- தமிழகத்தில் முதன்முறையாக 1974இல்தான் காவல் துறையில் பெண்கள் சேர்க்கப்பட்டனர்.
- திமுக ஆட்சி நடைபெற்றுவந்த அந்தக் காலத்தில் சென்னை மாநகரக் காவல்துறையில் பெண் காவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.
- பெண் துணை ஆய்வாளர், தலைமைக் காவலர், 20 பெண் காவலர்கள் இப்படிச் சேர்க்கப்பட்டார்கள்.
- அடுத்தடுத்த ஆண்டுகளில், மாநிலம் முழுவதும் மகளிர் காவல் படைகள் உருவாக்கப்பட்டன.
- 1992இல் தமிழகத்தில் அதிமுக ஆட்சி நடைபெற்றபோது காவல் துறையில் புதிய அத்தியாயம் தொடங்கியது.
- நாட்டுக்கே முன்னோடியாக அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கப்பட்டது.
- சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கப்பட்டது.
- ஒரு பெண் காவல் ஆய்வாளர், 3 பெண் துணை ஆய்வாளர்கள், 6 பெண் தலைமைக் காவலர்கள், 24 பெண் காவலர்களால் அந்தக் காவல் நிலையம் நிர்வகிக்கப்பட்டது.
- படிப்படியாக மாநிலம் முழுவதும் இந்தக் காவல்நிலையங்கள் விரிவுபடுத்தப்பட்டன.
- பாலியல் சார்ந்த புகார்களை ஆண் காவலர்களிடம் பெண்கள் தெரிவிப்பது கடினமாக இருக்கும் என்கிற எண்ணத்திலும் இந்தக் காவல் நிலையங்களுக்குப் பெரும் வரவேற்பு கிடைத்தது.
- அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கி 30 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், தற்போது தமிழகத்தில் 222 (சென்னையில் 31 உள்பட) அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன.
- தமிழகம் முழுவதும் பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் தொடங்கி பெண் காவலர்கள் வரை 20,859 பேர் பணியாற்றி வருகிறார்கள்.

## போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு

- தமிழ்நாட்டில் போதைப்பொருள்கள் புழக்கம் அதிகரிப்பதைத் தடுக்கும் வகையிலும், போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுபவர் மீது நடவடிக்கை எடுக்கும் வகையிலும், போதைப் பொருள் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- போதைப் பழக்கத்தால் சீரழிந்து கிடக்கிற மாணவர்களையும், இளைஞர்களையும் மீட்டெடுக்க வேண்டிய பெரும்பணி அரசுக்கு உள்ளது.
- மாணவர்கள் படிக்கும் காலத்தில் நல்ல ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்ளாவிட்டால் அவர்களுக்காக செலவழித்த பணம் நாட்டுக்கே பெரும் இழப்பாகிவிடும் என்று அண்ணல் காந்தியடிகள் கூறியுள்ளார்.
- போதைப்பொருள் பிரச்சனை என்பது உள்ளூர் பிரச்சனையாக இல்லாமல் உலகம் தழுவிய பிரச்சனையாக விஸ்வரூபம் எடுத்துள்ளது.
- உலக நாடுகள் எல்லாம் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு படாத பாடுபடுகின்றன. கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டும் போதைப் பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.
- உலக நாடுகளில் 43 கோடி பேர் போதைப் பொருள்களை பயன்படுத்துகின்றனர் என்றும், அவர்களில் 3.6 கோடி பேர் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி உள்ளனர் என்றும் 1.1 கோடி பேர் ஊசி மூலம் போதைப் பொருளை உடலில் செலுத்திக் கொள்ளுகின்றனர் என்றும் ஐ.நா.அறிக்கை மேலும் கூறுகிறது.
- கடந்த 24 ஆண்டுகளில் கஞ்சா எனப்படும் போதைப் பொருளின் பயன்பாடு 4 மடங்காக உயர்ந்துள்ளது என்றும். அதைப் பயன்படுத்தும் இளவயதினரில் 40% பேர் அப்பழக்கம் உடல் நலத்திற்கு கேடு என்பதை உணரவில்லை என்றும் அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

- 18 ஆண்களுக்கு ஒரு பெண் மது அருந்தும் பழக்கம் உடையவராக இருக்கிறார் என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.
- தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 45% ஆண்கள் மது அருந்தும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கின்றனர்.
- கரோனா பெருந்தொற்றின் தாக்கம் கடுமையாக இருந்த 2020-ஆம் ஆண்டில் 9,169 பேர் மது, போதைப் பொருள் பழக்கத்தின் விளைவாகத் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.
- அதாவது ஒரு மணி நேரத்திற்கு ஒருவர் மது, போதைப் பொருள்களின் பயன்பாடு காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

## நூற்றாண்டில் பசிப்பிணி போக்கிய பாதை

- 1922 : சென்னை மாநகராட்சியில் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள ஆரம்பப் பள்ளியில் சோதனை முயற்சியாக மதிய உணவுத் திட்டம் தொடக்கம்.
- 1925 : சென்னை மாநகராட்சி முழுமைக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது.
- 1956 : தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மதிய உணவுத் திட்டம் துவக்கப்பட்டது.
- 1962 : தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களும் மதிய உணவுத் திட்டப் பயனாளர்களாக சேர்க்கப்பட்டனர்.
- 1984 : 6-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- 1989 : பள்ளி செல்லும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இரு வாரங்களுக்கு ஒருமுறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- 1998 : 2 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டம் அறிமுகம்.
- 2006 : 2 வயது மதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் இருமுறை முட்டை திட்டம் தொடக்கம்.
- 2007 : 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் மூன்று முறை முட்டை திட்டம் அறிமுகம்.
- 2010 : 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அனைத்து பள்ளி வேலைநாள்களிலும் முட்டை வழங்கும் திட்டம் துவக்கம்.
- 2014 : பயனாளிகளுக்குப் பலவகை கலவை சாதம் மசாலா முட்டையுடன் வழங்கும் திட்டம் நடைமுறை.
- 2022 : பள்ளி மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி திட்டம் தொடக்கம்.

## தனியார் பள்ளிகளுக்கு தனி இயக்குனரகம்

- தொடக்க கல்விக்கு தனி டி.இ.ஓ., நியமிக்க வேண்டும் என, பள்ளிக் கல்வி கமிஷனர் கடிதம் எழுதியுள்ளார். மாநிலம் முழுதும், 5,159 தனியார் நர்சரி, பிரைமரி பள்ளிகள் உட்பட, 42 ஆயிரத்து 500 பள்ளிகள் தொடக்க கல்வியின் கீழ் செயல்படுகின்றன.
- பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குனரகத்தின் கீழ், 8,200 சுயநிதி பள்ளிகள் செயல்படுகின்றன. இவை அனைத்தும், தனியார் பள்ளி இயக்குனரகம் உருவாக்கப்பட்டு, அதன் நிர்வாகத்தில் சேர்க்கப்பட உள்ளன.
- மாநில கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான எஸ்.சி.இ.ஆர்.டி., மற்றும் தனியார் பள்ளிகள் இயக்குனரகத்துக்கு, தலா ஒரு கூடுதல் இணை இயக்குனர் பதவி மற்றும் தலா ஒரு துணை இயக்குனர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது.
- சமக்ர சிக்ஷா என்ற ஒருங்கிணைந்த கல்வி திட்ட இயக்குனரகத்தில் இருந்து, இரண்டு இணை இயக்குனர் பணியிடங்கள், தொடக்க கல்வி மற்றும் எஸ்.சி.இ.ஆர்.டி.,க்கு மாற்றப்படுகின்றன.
- புதிதாக நேரடி நியமனம் பெற்ற, டி.இ.ஓ.,க்கள், தொடக்க கல்வி டி.இ.ஓ.க்களாக நியமிக்கப்படுகின்றனர். அவர்கள், இரண்டு ஆண்டுகள் இந்த பணிகளை கவனிப்பர், பின், இடைநிலை கல்விக்கு மாற்றப்படுவர்.
- தனியார் பள்ளி டி.இ.ஓ.,க்கள், அனைத்து சுயநிதி, பிளே ஸ்கூல்கள், நர்சரி, பிரைமரி பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், சி.பி.எஸ்.இ., பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பாடத்திட்ட சுயநிதி பள்ளிகள் அங்கீகாரம் மாணவர்களிடம் கட்டண வசூல்

குறித்த கண்காணிப்பு, அடிப்படை கட்டமைப்பு குறித்த சான்றிதழ் ஆய்வுகளை கவனிப்பர்.

- மாவட்ட சி.இ.ஓ.,க்கள் அனைத்து அரசு மற்று வார்கள். இக்குழுவின் நடவடிக்கைகள் குறித்த விதிகள் 1997 ஆம் ஆண்டிலேயே அறிக்கையிடப்பட்டுவிட்டன.

## புதிய மின்கட்டணம்

- வருடாந்திர மின் கட்டண விகிதம், ஆறு சதவிகிதம் வரை உயர்த்தப்படலாம் எனத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (TNERC) சில வாரங்களுக்கு முன் அறிவித்தது.
- உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்க முடியாமல், தமிழ்நாடு மின்உற்பத்தி – பகிர்மானக் கழகம் (TANGEDCO) கடனில் உழன்று கொண்டிருக்கும் நிலையில், முன்னெடுக்கப்பட்டிருக்கும் இந்த நடவடிக்கை வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்டதே.
- வருடந்தோறும் மின் கட்டணம் மறுபரிசீலனை செய்யப்படாமல் போனதே தமிழ்நாடு மின் உற்பத்தி – பகிர்மானக் கழகத்தின் நிதிநிலை மோசமடைந்ததற்கு முக்கியக் காரணம். அதன் காரணமாக, சராசரி வருமானம் சராசரி விநியோகச் செலவுக்கு இடையிலான இடைவெளி அதிகரித்துவிட்டது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான உத்தரவாதங்கள் புதிய கட்டண விகித அறிவிப்பில் அதிகமாக அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், நிலைத்த ஆற்றலுக்கான எதிர்காலத் திட்டம் இல்லை.
- அதிகரிக்கக்கூடிய மின்சாரத் தேவையில் 87 சதவிகிதத்தை அனல்மின் நிலையங்களைக் கொண்டே பூர்த்தி செய்ய தமிழ்நாடு மின்உற்பத்தி – பகிர்மானக் கழகம் திட்டமிடுகிறது.
- வெறும் 13 சதவிகிதத்தை மட்டும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வழிகளில் பெறத் திட்டமிட்டுள்ளது. அறிவிக்கப்பட்டிருக்கும் நிலக்கரி மின்நிலையங்கள் செயல்படத் தொடங்கினால், தமிழ்நாடு மின்கழகத்துக்கு அவை அதிகச் செலவை ஏற்படுத்தும்.
- வரும் ஆண்டுகளில் நுகர்வோர் பயன்படுத்தும் மின்சாரத்தின் விலை உயரும்.
- தமிழ்நாடு மின்கழகத்தின் 1,890 மெகாவாட் நிலக்கரி மின்நிலையங்கள் 30 வருடங்கள் பழமையானவை, பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டாக வேண்டியவை. மின் கழகத்தின் 4,320 மெகாவாட் நிலக்கரி மின்நிலையங்களில் பயன்படுத்தப்படும்.
- எரிபொருளில் இருந்து சல்ஃபர் டை ஆக்சைடு நீக்கப்பட்டு, மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். அது மின்சாரத்துக்கான செலவை மேலும் அதிகரிக்கும்.
- மின்துறை அமைச்சகம் விதித்துள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கொள்முதல் பொறுப்புகளின்படி, தமிழ்நாடு மின் கழகத்துக்கான ஆற்றலில் 35.9 சதவீதத்தை 2026-27 ஆம் நிதியாண்டுக்குள், புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் வழியே பெற்றாக வேண்டும்.
- நிலக்கரி மின் நிலையங்களைக் காட்டிலும் பெரியளவிலான சூரிய ஆற்றல் – காற்றாலைத் தொழில் நுட்பங்களின் உற்பத்திக் கட்டணம் மலிவாகி வருகிறது. அவை தொடர்ந்து வேலைவாய்ப்புககளை உருவாக்குகின்றன.
- புதிய அனல்மின் நிலையங்களைக் கட்டுவதில் இருக்கும் அபாயங்கள், மாநிலத்தின் நீண்டகால ஆற்றல் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு வலுவான உத்தியை உருவாக்குவது பயனுள்ளதாக இருக்கும்.
- உற்பத்தி, விநியோகம், சேமிப்பு, மேற்கூரை சூரிய ஆற்றல், பசுமை ஹைட்ரஜன் – காற்றாலை ஆகியவற்றை ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தச் சூழலை உள்ளடக்கிய திட்டமிடலும் ஆராய்ச்சியும் தமிழ்நாட்டின் ஆற்றல் எதிர்காலத்தைச் சரியாகக் கணிப்பதற்கும் காலநிலை நெருக்கடி எதிர்ப்புக் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் உதவியாக அமையும்.